கழக வெளியீடு:—௫௬௭

# வில்லியம் மாரிஸ்

# கதைக் கொத்து

MADURAI UNIVERSITY LIBRARY.
20 DEC 1972
MADURAI-2.

வேலூர்
க. ப. சந்தோஷம்
எழுதியது

:: திருநெல்வேலித் தென்னிந்திய ::
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
திருநெல்வேலி :: சென்னை-1.

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிட்.,

# இதன்கண் அடங்கியவை


க. அரசாளப் பிறந்த மகன் 1-8

உ. வையகத் துறக்கம் 1-9

1. செருக்கினுற் சிறப்பிழந்த மன்னன்
2. பொற்கனிகள்
3. கற்பழிந்த காலணி
4. ஞாயிற்றின் கீழுந் திங்களின் மேலும்
5. தையல் நாயகம்

ங. இளஞ்சேய்க் கோல்லி 1-9


76118

கழக வெளியீடு: ௧௪௧

# அரசாளப் பிறந்த மகன்

வேலூர்

க. ப. சந்தோஷம், பி.ஏ., எல்.டி.

எழுதியது.

[Approved by the Madras Text-Book Committee, for class use Non-detailed study, Vide Fort St. George Gazette, Part I, page 33, & Part II, page 109, dated 22-5-51.]

:: திருநெல்வேலித் தென்னிந்திய ::
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி, :: சென்னை-1.

*Fourth Edition*: *May*, 1936
*Reprints*: *June* 1942, *May* 1945, *July* 1946, *May* 1950, *March* 1951, *July* 1951.

(All Rights Reserved)

*Published by*:

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY, :: MADRAS-1.

*Head Office*:

24, EAST CAR STREET :: THIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras - 1.

# முன்னுரை

இச் சிறு நூல், அரசநிலை எய்தப் பிறந்த மனிதன் (The Man born to be a King) என்ற ஆங்கிலக்கதையைத் தமிழுக் கேற்றவாறு அமைத்து மொழிபெயர்த்ததாகும். சிறுவர்கள் பயிலத்தக்க முறையில் இஃது எளிதாக எழுதப்பட்டிருக்கிறது. கதையின் போக்கு செவ்வையாகத் தோன்றுமாறு இடையிடையே தலைப்புக்கள் அமைக்கப்பெற்றிருக்கின்றன.

திருமூலம் என்ற ஓர் ஏழை மகன் ஒரு மடத்தில் நன்கு கல்வி பயின்று, எல்லோராலும் உயர் மகனென்று ஏற்றுக்கொள்ளப்பட்டு, அரசன் மகளை மணந்து, ஆட்சிக்குரியவனானது பற்றி இந்நூல் கூறுகிறது. இதைக் கற்கும் சிறுவர்கள் அரசர்களாகாவிடினும், திருமூலத்தைப்போல் நன்கு கற்பார்களாயின், உயர் நிலைக்கு வருவது திண்ணம்.

க. ப. சந்தோஷம்

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | துறவி அரசனுக்கு வருவது கூறல் ... | 1 |
| 2. | வேந்தன் வேட்டைக்குப் போதல் .... | 5 |
| 3. | ஆளப்பிறந்த குழவியை அண்ணல் காணல்... | 9 |
| 4. | குழவியைக் கொற்றவன் கொல்ல முயலுதல்.... | 12 |
| 5. | வளர்த்த தந்தையை வளவன் காணல் .... | 15 |
| 6. | சிறுவனைக் கொல்லச் சூரனை அனுப்புதல் .... | 19 |
| 7. | சூரன் வினைமுடித்தல் ... | 25 |
| 8. | வானமலரை வளர்மனைக் கனுப்புதல் .... | 29 |
| 9. | மடத்தலைவர் மன்னனைக் காணல் .... | 32 |
| 10. | திருமூலம் திருமுகங் கொண்டேகல் ... | 37 |
| 11. | திருமூலம் பெருமனையைச் சேர்தல் .... | 41 |
| 12. | கண்வளர் காளையைக் கார்குழல் காணல் ... | 44 |
| 13. | கொலைக்கடிதம் மணக்கடிதமாதல் ... | 47 |
| 14. | துறவியின் வாக்கு நிறைவேறுதல் ... | 51 |

# அரசாளப் பிறந்த மகன்

## 1. துறவி அரசனுக்கு வருவது கூறல்

பழைய காலத்திலே ஓர் அரசன் இருந்தான். அவனுடைய நாடு மிகச் செழிப்புடையதா யிருந்தது. ஆதலால் அவனுடைய செல்வம் மேன்மேலும் பெருகியது. மேலும் அவனது நாட்டில் போர் என்பதே கிடையாது. ஆதலால் குடிகள் மிகவும் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தார்கள்.

அரசன் இளவயதுடையவனாயினும் கல்வி கேள்விகளில் மிரம்ப விருப்பமுடையவனாயிருந்தான். அறிவாளிகளை அவன் தன்னிடத்தில் அழைத்து அவர்களிடமிருந்து பல உண்மைகளையும், நுட்பங்களையும் அறிந்துகொண்டான். இந்தக் காரணத்தால் அரசனுக்கு வயது குறைந்திருந்தாலும் திறமை நிறைந்திருந்தது.

ஒருநாள் வேந்தன் தனது நாட்டிலுள்ள கல்விமான்களை ஒன்றுகக் கூட்டி அவர்களுக்கு விருந்து செய்தான். இந்த விருந்துக்கு வந்தவர்களில் ஏறக்குறைய எல்லோரும் அரசனுக்குத் தெரிந்தவர்களே. ஆனால், அவர்களுக்குள் கூரிய விழிகளையுடைய ஒரு புது மனிதன் இருந்தான். அரசன் அவனைப் பார்த்து, அவனிடமிருக்கும் அறிவைப் பெற நினைத்து, விருந்து முடிந்தவுடன் அவனைத் தன்னிடம் வரக் கட்டளையிட்டான்.

அவன் வந்தபொழுது அரசன் அவனை நோக்கி, "நீ வந்ததைப் பற்றி நான் களிப்புறுகின்றேன். எந்தக்

கல்வித் துறையில் நீ வல்லவன் என்பதை அறிய விரும்புகிறேன். பழைய காலத்து வரலாறுகளைக் குறித்துப் பாடுவாயோ? பண்டை நாள் நடந்த போர்களைப்பற்றி முறையாகச் சொல்லுவாயோ? ஆகாயத்து நட்சத்திரங்களின் நுட்பங்களை அறிவாயோ? அல்லது, இரும்பு முதலிய உலோகங்களைப் பொன்னாக மாற்றுவாயோ?'' என்று கேட்டான்.

அப்பொழுது கல்விமானாகிய அந்தத் துறவி அரசனை நோக்கி, "வேந்தனே! அநேக ஆண்டுகளாக நான் எனது அறிவை அதிகப்படுத்த முயன்றும், நான் அறிந்தது ஒரு சிறிதே! ஒரு காலத்தில் நான் ஓர் இடையனாயிருந்தேன். இப்பொழுது என்னுடைய நிலை இடையனாயிருந்ததைவிட உயர்ந்ததென்று நான் சொல்லமாட்டேன். அது போகட்டும்; நட்சத்திரங்களின் நிலைகளையும், அவற்றின் நிலைகள் மாறுவதால் வரும் பலன்களையும் நான் நன்றாய் அறிவேன். இதில் நான் அறிந்த சில உண்மைகளை உனக்குத் தெளிவாகக் கூறவே இன்று இந் நகருக்கு வந்திருக்கின்றேன். நீ இறந்த பிறகு உனக்குப் பின் எவன் அரசனாய்வருவான் என்பதை உனக்குச் சொல்லப் போகிறேன்,'' என்றான்.

அரசன் இதைக் கேட்டு, மிகுந்த பரபரப்புடையவன் ஆனான். "அப்படியானால் அதைப்பற்றி எனக்கு உடனே சொல்,'' என்று மன்னன் ஆவலுடன் கேட்டான்.

"மன்னனே! நீ பிறந்த குடும்பம் மிகப் பழமையானதுதான். உனது அரச பரம்பரை கால் தவறாமல் வந்துகொண்டிருக்கிறது. ஆனால், நான் சொல்வதை உற்றுக்கேள். நீ பிறந்த அரச குடும்பம், நீ இறந்த பிறகு

ஒரு முடிவிற்கு வந்துவிடும். உனக்குப் பிறகு இந்த அரசாட்சிக்கு வருகிறவன், அரச பரம்பரையிற் பிறந்தவனுயிருக்கமாட்டான். என்னைப்போல் அவனும் எவரும் அறியாத ஒரு குடும்பத்தில் பிறந்தவனுயிருப்பான்," என்று கிரக ஞானி மொழிந்தான்.

இது செவியிற் பட்டவுடனே மன்னனுக்கு மிகுந்த வருத்தம் உண்டாயிற்று. ஆனால், அவன் துறவி சொன்னதை முழுவதும் நம்பிவிடவில்லை. அதில் ஏதாவது சூது இருக்கலாமென்று எண்ணி, "துறவியே! நீ சொன்னபடியே நடந்தாலும் நடக்கலாம். ஆனால், இதை நான் நம்புவதற்கு நீ ஓர் அடையாளம் காட்டவேண்டும்; அல்லது வேறு எவருக்குந் தெரியாத செய்தி ஒன்றை நீ எனக்குச் சொல்லவேண்டும். அப்படிச் செய்வாயானால் உனக்கு ஏராளமான செல்வமும் உயர்ந்த பதவியும் நான் தருவேன்," என்றான்.

இவ்வாறு பேசிய அரசனைத் துறவி நோக்கி, "அரசனே! நீ சொல்வதற்கு உடன்படுகிறேன். நமது அருகில் நிற்பவர்களை எல்லாம் இங்கிருந்து போய்விடும்படி உத்தரவிட்டால், நெடுநாளாய் யாரும் அறியாதபடி மறைக்கப்பட்டிருக்கும் செய்திகளை நான் எடுத்துச் சொல்வேன். அதன் பிறகு, இப்பொழுது நான் கூறியதை நீ நம்பினுல் நல்லது; நம்பாவிட்டால், என்ன செய்வது? அதுவும் நல்லதுதான். உன்னிடமிருந்து பொருள் பெற விரும்பி நான் வரவில்லை," என்றான்.

கல்விமான் சொன்னவண்ணம் அரசன் தன்னைச் சூழ நின்றவர்களைப் போய்விடும்படி உத்தரவிட்டான். பிறகு அரசனும் துறவியுஞ் சேர்ந்து அரண்மனையிலுள்ள ஒரு தோட்டத்துக்குச் சென்றார்கள். இருவரும் தனியே

சென்றவுடன் அரசன் தன்னுடன் இருந்தவனை நோக்கி, "நண்பனே, நீ சொல்லத் தொடங்கிய அறிவில்லாத செய்தியை முடித்துவிடு. அதற்குப் பரிசாக இந்தப் பொற் சங்கிலியை நீ பெற்றுக்கொள்," என்றான்.

"நீ சொல்வது சரி; நான் கற்றது சிறிது. அதுவும் நீ சொல்லுகிறபடி மடமையாகும். நீ இறுதி வரையில் அறிவுடையவனாயிரு. உனக்கு நேரப்போகிறதைத் தடுப்பதற்கு ஒன்றும் செய்யாதே. ஆனால், நான் சொல்வதைக் கேள். இதோ நமக்குமுன் இருக்கிற இந்த மரத்தடியில் ஏறக்குறைய ஒரு வருடத்திற்குமுன் ஒரு மனிதன் உனது கையிலிருந்து ஒரு பொற் பாத்திரத்தை வாங்கினான். அப் பொற்பாத்திரத்தில் மது இருந்தது. உன் கையிலிருந்து அதனை வாங்கி மதுவை உண்டபின் அந்த மனிதன் இந்த மரத்தடியிலேயே விழுந்து இறந்தான். அவன் நெடுநாள் உனது சேவகத்திலிருந்து உன்னுடைய மறைவுகளையெல்லாம் நன்றாக அறிந்திருந்தான். அவன் உயிரோடிருந்தால் அதனால் உனக்குக் கெடுதி வரலாம் என்று நினைத்து மதுவில் நஞ்சைக் கலந்து நீ கொடுத்தாய். அவன் அதை வாங்கிக் குடித்து இறந்துபோனான். இச் செய்தி உன்னைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது," என்றான் துறவி.

"நீ சொல்வது உண்மை. அந்தச் செய்தி எனக்கு மட்டுமே தெரியும். ஆனால் ஒன்று சொல்லுகிறேன்; கேள். இவ்விடத்தில் நாம் இருவரும் தனியே இருக்கிறோம். நீ என்னைக் கொல்லப்போகிறாய் என்று நான் கூச்சலிட்டால் என்னுடைய போர்வீரர்கள் ஓடிவந்து உன்னைக் கொன்றுவிடுவார்கள். அப்படி நான் செய்வதை உன்னால் தடுக்கக்கூடுமோ?" என்று மன்னன் கேட்டான்.

அந்தத் துறவி அரசன் சொன்னதைக்கேட்டுச் சற்றும் அஞ்சாதவனாய், "நான் இன்னுஞ் சிலகாலம் உயிரோடிருக்கவேண்டும் என்பது என் தலைவிதி. ஆகையால், உன்னுடைய பயமுறுத்தலுக்கு நான் அஞ்சமாட்டேன். இதைப்பற்றி மேலும் பேசவேண்டியதில்லை. நான் போய் வருகிறேன். இன்று உனக்கு நான் சொன்னதை நன்றாகக் கருத்தில் வை," என்று மொழிந்து, அரசனை நின்ற விடத்திலேயே விட்டுவிட்டுச் சென்றான். அவன் அறிவித்ததைப் பற்றி அரசன் ஆழ்ந்து யோசனை செய்யலானான்.

## 2. வேந்தன் வேட்டைக்குப் போதல்

இதற்குப்பின் அநேக நாட்கள் சென்றன. துறவி சொன்ன செய்தி வரவர அரசன் மனத்திலிருந்து நீங்கி விட்டது. அவன் ஓர் அரசகுமாரியை மணந்து அகமகிழ்ச்சியுடன் இருந்தான். திருமணமாகி ஒருவருடமான பிறகு, வேனிற்காலத்தில் அரசன், தன் பரிவாரங்களுடன் காட்டிற்குச்சென்று வேட்டையாடினான். பற்பல விலங்குகளை வேட்டையாடியபின், மத்தியான வேளையில் மிகச்சிறந்த கலைமான் ஒன்று அரசன் கண்ணிற்பட்டது. அவன் தன்னுடன் இருந்தவர்களைக் கூவியழைத்து, "இதுபோன்ற மானை இதற்குமுன் நான் பார்த்ததில்லை. இதை எளிதில் நாம் கொல்லமுடியாது. அஃது எவ்வளவு தூரம் போனாலும் நாம் பின்தொடர்வோம். சாயுங்காலமாகி இரவு வந்தாலும் அதை விடலாகாது," என்று கூறித் தான் ஏறியிருந்த குதிரையைச் செலுத்தினான். மன்னன் செலுத்திய குதிரை அதிக வேகமாய்ப் பாய்ந்து சென்றது. அவன் திரும்பிப்பாராமலே மானைத் துரத்திக்கொண்டு நெடுந்தூரம் போனான். வேகத்தில் இணையற்ற அவனது குதிரையுடன் மற்றக் குதிரைகள் ஓடமுடியவில்லை. ஆகை

யால் பொழுதுபோகும் வேளையில் அரசன் தன்னந் தனியனாய் நின்றான்.

என்ன செய்வதென்று அவன் நினைத்துக்கொண்டிருக்கும்பொழுதே எங்கும் இருள்வந்து மூடிற்று. நெருங்கி வளர்ந்த காட்டு மரங்களிடையே தான் வந்தவழியையும் கண்டுபிடிக்க அவனுக்குக் கூடவில்லை. தன்னுடன் வந்தவர்கள் எவரும் அருகில் இருப்பதாகவும் அவனுக்குத் தெரியவில்லை. தரையிற்படுத்து இரவுப்பொழுதை எப்படியாவது கழிக்கவேண்டும் என்ற தீர்மானத்துடன் அவன் குதிரையைவிட்டு இறங்கினான். இறங்கி, படுப்பதற்கு வசதியான இடந் தேடிக்கொண்டிருக்கும்பொழுது தூரத்தில் ஒரு வெளிச்சம் அவனுக்குத் தெரிந்தது. குதிரையைக் கடிவாளத்தைப் பற்றி நடத்திக்கொண்டு வெளிச்சத்துக்கு நேராக அவன் சென்றான்.

சென்ற அரசன் கடைசியில் ஒரு சிறிய குடிலில் இருந்து அந்த வெளிச்சம் வருவதைக் கண்டான். அந்தக் குடிலுக்குள் நுழைந்து அதிலுள்ள ஏழைமக்கள் கொடுக்கக்கூடிய உணவைப்பெறலாமென்று அவன் எண்ணினான்.

அப்பொழுது பருத்து வளர்ந்த ஒரு மனிதன் குடிலின் வாயிலில் வந்து நின்றான். அவன் கோபித்துச் சண்டை செய்யும் இயற்கையுடையவன்போல் தோன்றினான். மன்னன் அவனை நோக்கி, "நண்பனே! கடவுள் உனக்கு நன்மை புரிவாராக! நான் வழிதப்பி இங்கு வந்திருக்கிறேன். உண்பதற்குச் சிறிது உணவும், உறங்குவதற்கு இடமும் எனக்குத் தருதல்வேண்டும்," என்றான். அப்பொழுது வாயிலில் நின்றவன், "என்னுடைய மனைவி பிள்ளைபெற வேதனைப்படுகிறாள். இந்த வேதனையில் அவள் இறந்துவிடுவாள்போல் இருக்கிறது. ஆகையால் நீ

யாராயிருந்தாலும் குடிலிற்குள் வரலாகாது. பிறகு சுமப்பதற்கென்று நான் ஒரு கழுதையை வைத்திருக்கிறேன். அந்தக் கழுதை இன்று இங்கு இல்லை. ஆகையால் அதை அடைத்துவைக்கும் இடம் வெறுமையாயிருக்கிறது. நீ அங்கே போய்ப் படுத்துக்கொள்; உனக்கு வேண்டிய உணவை நான் கொண்டுவருகிறேன்,'' என்று சொன்னான்.

“அவ்வளவுதான் எனக்கு வேண்டியது. இவ்வளவு உதவி செய்ததற்காகப் பொழுது விடிந்தபின், ஏதாவது பிரதியுபகாரஞ் செய்கிறேன்,'' என்று மன்னன் கூறினான். அந்த மனிதனோ, “பதிலுதவி எதுவும் எனக்கு வேண்டாம். இப்பொழுது நான் படுகின்ற துன்பத்தில் பிரதியுபகாரம் என்ற பேச்சே வெறுப்பாயிருக்கிறது,'' என்று கூறிச் சிறிது அன்னமுந் தண்ணீருங் கொண்டுவந்து நாட்டை ஆள்கின்றவனுக்குக் கொடுத்தான். கழுதை கட்டுமிடத்திற் குதிரையைக் கட்டிவிட்டு ஒருபுறத்தில் அரசன் படுத்துக்கொண்டான்.

படுத்து ஏறக்குறைய ஒருமணி நேரம் ஆனபின், அரசன் திடுக்கென்று விழித்துக்கொண்டான். அவனுடைய காதில் “எடுத்துக்கொள்; எடுத்துக்கொள்,'' என்று ஒரு சத்தம் கேட்டது. இஃது அவன் கண்ட ஒரு கனவில் நடந்திருக்கவேண்டும். ஆனால், “எடுத்துக்கொள்; எடுத்துக்கொள்,'' என்ற வார்த்தைகளைத்தவிர வேறு எதுவும் அவன் நினைவுக்கு வரவில்லை. தான் கேட்ட சத்தம் கனவிற் பிறந்ததோ, அல்லது மறைந்து நின்ற ஒருவர் சொல்லக் கேட்டதோ என்பதை அறியும்படி வேந்தன் வாளை உருவிக்கொண்டு காட்டில் அங்குமிங்கும் நடந்து பார்த்தான். ஒருவரையும் அவன் காணவில்லை. குடிலுக்குள் குடியானவனுடைய மனைவி பிரசவ வேதனைப்படுங்

குரலையுங், காட்டிலுள்ள நரி முதலானவைகள் போடுங் கூச்சலையுந் தவிர வேறு ஒன்றையும் அவன் கேட்கவில்லை. அச்சத்துடன் அவன் மறுபடியும் வந்து படுத்துக்கொண்டான். படுத்துச் சிறிது நேரமானபின், மற்றும் ஒரு முறை அவன் நடுக்கத்துடன் விழித்து எழுந்தான். அப்போது அவன் செவியில், "கொடுத்துவிடு; கொடுத்துவிடு," என்ற சொற்கள் ஒலித்தன. மன்னனுடைய மனத்திற் பெரிய குழப்பம் உண்டாயிற்று. தான் கேட்ட சத்தம் எங்கிருந்து வந்தது என்று அவனுக்கு விளங்கவில்லை; சீக்கிரத்தில் அவன் மறுபடியும் படுத்துக்கொண்டான். நல்ல நித்திரையில் அவனுக்கு ஒரு கனவு தோன்றியது. அந்தக் கனவில் அரண்மனைக்குவந்த துறவி அரசனருகில் வந்து நின்றான். அவன் கேலியாக நகைத்து, "எடுத்துக் கொள், அல்லது கொடுத்துவிடு. எப்படியானாலும் ஒன்று தான். அடுத்திருக்கின்ற குடிலிலே இன்று பிறந்திருக்கிற குழந்தை உனக்குப்பின் இந்த நாட்டிற்கு வேந்தனாவான்," என்று சொன்னான்.

இந்தச் சொற்களைக் கேட்டு மன்னன் விழித்து மிகவும் அஞ்சினான். மறுபடியும் உறங்கக்கூடாதென்று அவன் உறுதி செய்துகொண்டபோதிலும் விரைவில் அவனுக்கு நல்ல உறக்கம் உண்டாயிற்று. இந்த நித்திரையில் ஒரு கனவும் அவனுக்குத் தோன்றவில்லை. பொழுது விடிந்து சூரியன் உதயமாகும் வரையில் அவன் எழுந்திருக்கவுமில்லை. அதற்குப்பின் அவன் குடிசைக்கு நேராக நடந்தான்.

# 3. ஆளப்பிறந்த குழவியை அண்ணல் காணல்

குடிலுக்குள் நுழைந்த அரசன் வருத்தந்தரும் ஒரு காட்சியைக் கண்டான். சென்ற இரவில் தன்னை வரவேற்ற ஏழை மனிதன் பெரிய துக்கத்துடன் முழங்காலில் நின்று ஒரு கட்டிலின்மேல் கவிந்துகொண்டிருந்தான். அந்தக் கட்டிலில் அவனுடைய மனைவி இறந்து கிடந்தாள். பிணமாய்க் கிடந்த தாய்க்கும் உயிரோடிருந்த தந்தைக்கு மிடையே அழகிய ஆண் குழந்தை ஒன்று கிடந்தது. இந்தக் குழந்தையைப் பார்த்த மன்னனுக்கு மிகக் கோப முண்டாயிற்று. இந்தக் குழந்தையே அவனுக்குப் பின் அரசனாக வேண்டும் என்று கனவில் அவனுக்கு அறிவிக் கப்பட்டது. ஆகையால் மன்னன் அளவிடமுடியாத எரிச்சலும் வருத்தமும் அடைந்தான். அந்த வீட்டில் எந்தப்பக்கம் திரும்பினாலும் வறுமையின் குறிகளே காணப்பட்டன. "வறுமை நிறைந்த வீட்டில் வசிக்கும் ஏழைக் குடியானவனுக்குப் பிறந்த ஒரு மகனா எனக்குப் பின் அரசனாவது?" என்று மன்னன், தனக்குள்ளே சொல்லிக்கொண்டான்.

இந்த விதமாக மன்னன் நினைத்துக்கொண்டிருக்கையில், தூரத்திலிருந்து வந்த ஒரு சத்தங்கேட்டது. முந்தின நாள் அரசனுடன் வேட்டைக்கு வந்தவர்கள் அவனைத் தேடிக்கொண்டு வந்த சத்தம் அது. வேந்தன் அதை உடனே அறிந்துகொண்டான். தானிருக்குமிடம் அவர்களுக்குத் தெரியும்படி அவனும் ஓர் ஓசை உண்டாக்கினான். சிறிது நேரத்தில் அவர்கள் எல்லோரும் மிகுந்த மகிழ்ச்சியுடன் அரசனிருக்குமிடத்தில் வந்து சேர்ந்தார்கள். அந்த வீட்டிலுள்ள ஏழை மனிதன் அங்கு வந்து கூடியவர்களின் அழகிய ஆடைகளையும், அணிகளையும்

பார்த்து ஆச்சரியப்பட்டான். புதிதாக வந்தவர்கள், முந்தின நாள் தன் வீட்டுக்கு விருந்தாளியாக வந்தவனை வாழ்த்தி வணங்குவதைக் கண்டு அந்த ஏழை மனிதன் மிகவும் மயங்கி நின்றான். இவற்றையெல்லாம் பார்த்த பின் தன் வீட்டிற்கு வந்தவன் அரசனாயிருக்க வேண்டுமென்று அக்குடியானவனுக்குத் தெரிந்தும் அவன் ஒன்றும் பேசாது வாளாவிருந்தான்.

மன்னன் தன்னுடன் வந்து சேர்ந்தவர்களை நோக்கி, "இந்தக் குடியானவன் நேற்றிரவு நான் இங்கு வந்த பொழுது, உண்ண உணவும் உறங்க இடமும் கொடுத்து உதவி செய்தான். அவனுக்கு நான் மிகவும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்பொழுது அவனுடைய நிலைமை இரங்கத் தக்கதாயிருக்கிறது. அவனுடைய மனைவி நேற்றிரவே ஒரு பிள்ளையைப் பெற்றபின் இறந்து விட்டாள். அவன் நமக்குச் செய்த உதவிக்குப் பதிலாகத் தாயற்ற இந்தக் குழந்தையை நான் எடுத்து வளர்ப்பேன். இந்தக் குழந்தை தரித்திரம் நிறைந்த இந்த வீட்டைவிட்டு மாடமாளிகைகளுக்குக் கொண்டு போகப்பட்டுப் பட்டுடையணிந்து, போரில் வல்லவனாகி அரசனுடைய சேவகத்தில் உயர்ந்த பதவிக்கு வருவான்," என்று மொழிந்து குடியானவனைக் கூப்பிட்டு, "இஃது உனக்கு விருப்பந்தானா?" என்று கேட்டான்.

அதற்கு அவன், "அரசே, என்னுடைய மனைவி இறந்து போனதனால் இந்தக் குழந்தையை நான் வைத்துக் காப்பாற்றுவது முடியாது. எனக்கு ஒரு மகன் பிறந்தால் அவன் வளர்ந்தபின் எனக்கு உதவியாயிருப்பானென்று எதிர்பார்த்திருந்தேன். இப்பொழுது ஒரு மகன் பிறந்தும் அவனை நான் வளர்க்கக் கூடாதவனாயிருக்கிறேன்.

குழந்தையைத் தாங்களே எடுத்துக்கொள்ளுங்கள். நான் இவ்விடத்தைவிட்டு வேறு எங்கேயாகிலும் போகிறேன்," என்று புகன்றான். "நான் நினைத்தது நிறைவேறினது," என்ற எண்ணமுடையவனாய் மன்னன் தன்னுடன் இருந்தவர்களை ஏவி, அந்தக் குழந்தையைக் கொண்டு வருமாறு கட்டளையிட்டான். இதற்கிடையில், அரசன் ஒரு பண முடிப்பை எடுத்துக் குழந்தையின் தகப்பனுக்குக் கொடுத்தான். அவன் அதைப் பெற்றுக்கொண்டு, குழந்தையை ஒரு பெட்டியில் வைத்து மன்னன் ஏவிய ஆள் வசம் அதைக் கொடுத்தான். அரசனும் அவனுடைய பரிவாரங்களும் குதிரைகள்மேல் ஏறிக்கொண்டு குழந்தையுடன் அவ்விடத்தை விட்டு நீங்கினார்கள்.

அவர்கள் போனபின் குழந்தையின் தகப்பன் தன் மனைவியின் சவத்தைச் சுடுகாட்டிற்குக் கொண்டுபோய், நடத்தவேண்டிய கிரியைகளை நடத்திவிட்டு, வேறொரு நாட்டிற்குப் போய்விட்டான்.

காட்டிலிருந்து நாட்டிற்குச் சென்றுகொண்டிருந்த அரசனுடைய எண்ணம் பலவிதமாகச் சென்றது. யோசனையில் ஆழ்ந்தவனாய் அவன் போய்க்கொண்டிருக்கும் வழியில் ஓர் ஆற்றங்கரை யருகே வந்து சேர்ந்தான். ஆற்றின்மேல் ஒரு பாலமிருந்தது. இங்கு வந்தவுடன் தன்னோடு வந்தவர்களைக் கூப்பிட்டு, "நீங்கள் இனிமேல் முன்னே போகலாம். இப்பொழுது வழி எனக்கு நன்றாகத் தெரியும். நான் வேறு வழியாகப்போய் நாட்டு வளத்தைப் பார்க்க விரும்புகிறேன். குழந்தை வைத்துக் கொண்டிருக்கிற சூரன் மட்டும் என்னுடன் வருவான். இந்தக் குழந்தையை வளர்ப்பதற்கு யாராவது ஒருவரைக் கண்டுபிடிக்கவேண்டும். ஆற்றங்கரை வழியே சென்றால்

அங்கே யாராவது மனிதர்கள் இருப்பார்கள். தகுந்த ஓர் ஆளைப் பார்த்து அவனிடம் குழந்தையைக் கொடுத்து விட்டு வருகிறேன். இந்தப் பாலகன் நன்ருக வளர்ந்து பெரியவனுன பின் மேலான பதவிக்கு வந்தாலும் வரு வான். நான் இந்த வழியாகச் செல்கிறேன்; நீங்கள் அந்த வழியாகப் போகலாம்,'' என்று மொழிந்தான்.

## 4. குழவியைக் கொற்றவன் கொல்ல முயலுதல்

அரசன் இட்ட கட்டளைப்படி எல்லோரும் பாலத் தின் வழியாக அப்பாற் சென்ருர்கள். அவர்கள் மறைந்து போகும்வரையும் அரசன் அவர்களைக் கவனித்துக் கொண்டு நின்ருன். அவர்கள் மறைந்தபின் வேந்தன் சூரனைக் கூப்பிட்டுப் பெட்டியைத் தன்னிடம் கொண்டு வரச் சொன்னுன். பெட்டி ஒரு துணியால் மூடப்பட் டிருந்தது. அதை நீக்கிப் பார்க்க, ஒரு பக்கத்தில் சிவப்பு மையால் எழுதப்பட்ட ஒரு சிங்கத்தின் உருவந் தெரிந்தது. அரச அடையாளமாகிய சிங்கவுருவம் பெட்டி யில் எப்படி வந்தது என்று அரசன் சிந்தித்தான். குழந் தையின்மேல் எவ்வகையான அடையாளமும் இல்லை.

இப்பொழுது அரசன் யோசனை செய்வதை விட்டுச் சூரனை நோக்கி, "நீயும் உன்னுடைய முன்னோர்களும் எப்பொழுதும் அரசபக்தி யுள்ளவர்களாய் இருந்திருக் கிறீர்கள். இதுவரையில் நீ எனக்கு நல்ல ஊழியம் செய்திருக்கிருய். இன்னும் அப்படியே செய்வாயென்று நம்புகிறேன். இப்பொழுது உனக்கு ஒன்று சொல்லப் போகிறேன். என் அருகில் வந்து அதைக் கவனமாய்க் கேள்,'' என்ருன். அரசனுடைய சொல்லைக்கேட்டு, அதிகக் களிப்படைந்த சூரன், அவனருகிற் சென்ருன். தன் மனதிலிருந்து ஒன்றையும் ஒளிக்காமல் வேந்தன்

எல்லாவற்றையும் சூரனுக்கு வெளியிட்டான்; ஏறக் குறைய இரண்டு ஆண்டுகட்குமுன் ஒரு துறவி தன் அரண்மனைக்கு வந்ததையும், அத் துறவி தனக்குச் சொன்னதையும், பிறகு காட்டிற் படுத்துக்கொண்டிருக்கும் பொழுது தான் கண்ட கனவையும், அதில் துறவி மறுபடியும் வந்து கூறியதையும், வேந்தன் எடுத்துச் சொன்னான். "பேர் ஊர் இல்லாத இந்தக் குழந்தை எனக்குப்பின் என்னுடைய அரசினை ஆளப்போகிறான். ஆனால், அதை நான் தடுக்கப்போகிறேன். நீ இந்தப் பெட்டியுடனே குழந்தையை ஆற்று நீரில் விட்டுவிடு; எனக்குப் பின் இவன் வேந்தனாக வேண்டுமானால், கடவுளே அவனைக் காப்பாற்றி வளர்க்கட்டும்," என்றான்.

இதுகேட்ட சூரன், "அரசே! தாங்கள் சொல்வது சரிதான். குழந்தையை ஆற்றில் எறியும் பழி என்மேலிருக்கட்டும். இதைவிடக் கொடிய பழி செய்யச் சொன்னாலும் தங்கள் பொருட்டு நான் செய்வேன். ஆனால், ஒன்றைக் கருத்தில் வைக்கவேண்டும். ஒன்றும் அறியாத இந்தப் பாலகனை நாம் ஆற்றில் போட்டபின், நீரில் மூழ்கி இவன் இறந்து போகாவிட்டால், அப்பொழுது என்ன செய்வீர்கள்? அதற்கு மேலும் அவனைக் கொல்ல வழிதேடுவீர்களோ? ஆற்றிலிருந்து அவன் உயிர் தப்பினால் அதற்குமேல் அவனை ஒன்றுஞ் செய்யலாகாது," என்றான். "ஆம் ஆம்; நீ சொல்வது உண்மைதான். இப்பொழுது நீ இவனை எறிந்துவிடு; இனி வருவது வரட்டும். ஆற்றில் பெட்டி மிதந்து சென்று தலைகீழாய்ச் சாய்ந்து விடுவதை நான் பார்த்தால்......" என்று வேந்தன் சொல்லப்போகும்பொழுது அவர்களிருவரும் பாலத்தண்டையில் வந்து நின்றார்கள். பாலத்தின் இருபுறங்களிலும் பிடிச்சுவர் கட்டப்பட்டிருந்தது. சூரன்

பெட்டியைத் தூக்கிப் பிடிச்சுவர்க்கப்புறம் கீழே விட்டான். நீரில் விழுந்த பெட்டியிலிருந்து குழந்தையின் அழுகுரல் கேட்டது. பெட்டி ஆற்றில் சாய்ந்து சுழன்று சென்றது.

அரசன் அதன்பின் தன் அரண்மனைக்கு நேராகச் சென்றான். தன் எதிரியாகிய அந்தக் குழந்தை இறந்து விடுமோ இல்லையோ என்ற சந்தேகம் அவனுக்கு இருந்தது. அவன் சூரனுடன் ஏதேதோ பேசிக்கொண்டு போனான். அரசன் தன் அரண்மனையை அணுகி வரும் பொழுது ஒருவன் ஓடோடியும் வந்து வேந்தனுக்கு ஓர் அழகிய பெண் குழந்தை பிறந்திருப்பதை அறிவித்தான். மன்னனுக்குப் பெண் குழந்தை பிறந்ததும், காட்டில் குடியானவனுக்கு ஆண் குழந்தை பிறந்ததும் ஏறக்குறைய ஒரே காலத்தில்தான். காட்டில் பிறந்த குழந்தையைத் தன் மகனாக எடுத்துக்கொண்டாலும், அல்லது ஏற்ற வயதுடையவனாகும்பொழுது அவனுக்குத் தன் மகளைக் கலியாணம் செய்து கொடுத்தாலும் இரண்டும் ஒன்றுதான். ஏனென்றால், எதைச் செய்தாலும் அரசுரிமை காட்டிற் பிறந்த மகனுக்கே போகும். மகள் பிறந்ததைக் கேட்ட மன்னன், மிக மகிழ்ந்து, காட்டில் தான் கண்ட கனவையும் மற்ற செய்திகளையும் மறந்துவிட்டான். சில வேளைகளில் அவைகளைப் பற்றிய நினைவு வந்தபோதிலும் அவைகளை உடனே தன் மனத்தை விட்டு நீக்கினான்.

நாட்கள் கடந்தன; மாதங்கள் சென்றன; ஆண்டுகள் கழிந்தன. அரசர்கள் எப்படித் தங்கள் வாழ்நாளைக் கழிக்கின்றார்களோ அப்படியே இந்த அரசனுந் தன் காலத்தைக் கழித்தான். காட்டில் தன்னந் தனியனாய்ப் படுத்துக்கொண்டு அரசன் கனவுகள் கண்டதிலிருந்து பதினான்கு வருடங்கள் கடந்துவிட்டன.

## 5. வளர்த்த தந்தையை வளவன் காணல்

ஒருநாள் காலைப் பொழுதில் வேட்டைக்காரர்களின் ஆரவாரமும், நாய்களை அழைக்குங் குரல்களும், குதிரைகளின் கனைப்பும் எங்கும் ஒலிக்க, அரசன் வேட்டையாடச் சென்றான். சென்றவன், முன் கூறப்பட்ட ஆற்றங்கரை யருகில் இருந்த ஓர் அழகிய தோட்டத்தில் வந்து சேர்ந்தான். நடுப்பகல் வேளையாயிற்று. வெப்பம் அதிகரித்தது. அரசன் குளிர்ந்த நிழலுள்ள அத்தோட்டத்திலேயே இருக்க விரும்பினான். அந்தத் தோட்டத்திற்குச் சொந்தக்காரனும் சிறிது செல்வமுடையவனுமாகிய சோலையப்பனை அரசன் அழைத்துச் சோலையில் தான் இருக்க விரும்புவதைத் தெரிவித்தான். அவன் வந்து அரசனை வணங்கி வேண்டிய பணிவிடைகள் செய்ததுமன்றி, நறுமணம் வீசும் பல நிறமுடைய பழங்களும், கறந்த பாலும், புதிய தேனுங் கொண்டுவந்து கொடுத்தான்.

அரசன் சோலையப்பனைப் புன்னகையுடன் உற்று நோக்கினான். ஏனென்றால், அவன் குறுகிய கைகால்களுடன் பருத்துச் சரிந்த தொந்தியுடையவனா யிருந்தான். அவனருகில் கரிய பெரிய விழிகளும், நீண்ட கைகளும், இனிய முகமும், அஞ்சாப் பார்வையுமுடைய சிறுவன் ஒருவன் நின்றான். சிறுவனுடைய உடலமைப்பையும் முகத் தோற்றத்தையுங் கண்டு வியந்த வேந்தன், "பயிர்த்தொழில் புரியும் இந்தச் சோலையப்பனுக்கு இச் சிறுவன் மகனாயிருக்க முடியாது," என்று தனக்குள்ளே நினைத்தான். அதன் பின் அவன் சிரித்துக்கொண்டே, சோலையப்பனைக் கூப்பிட்டு, "உன் அருகில் நிற்கின்ற இப் பையனைப் பெற்ற தாய் உனது வீட்டில் இருக்கின்றாளோ?

அதை நான் அறிய வேண்டும். உனக்கும் இச் சிறுவனுக்கும் பார்வையில் ஒற்றுமையில்லை. ஒருவேளை இவன் தன்னுடைய தாயைப்போன்ற தோற்றம் உடையவனுயிருக்கிருனே என்று பார்க்க விரும்புகின்றேன்," என்றுன்.

"ஆண்டவனே! அப்படியே என் மனைவியைக் கொண்டு வருகிறேன். அவளைத் தாங்கள் பார்க்கவேண்டிய சட்டாயமில்லை. இச் சிறுவன் என் மனைவிக்குப் பிறக்கவில்லை. பதினுன்கு வருடங்களுக்கு முன் இவனை யாரோ ஒரு பெட்டியில் வைத்து ஆற்றிற் போட்டுவிட்டார்கள். அவன் எங்கள் கையில் வந்து சேர்ந்தான்," என்று சோலையப்பன் விடை பகர்ந்தான்.

இதைக் கேட்டவுடன் முன் நடந்த செய்திகள் அரசன் நினைவிற்கு வந்தன; உடனே துன்பத்தினுல் அவன் முகஞ் சோர்ந்தது. அவற்றைப்பற்றி அரசன் எண்ணிக்கொண்டிருக்கும்பொழுது சோலையப்பன் அவ்விடத்தை விட்டு ஏகினுன்; சிறுவன் மட்டும் அங்கேயே நின்றுகொண்டிருந்தான். அவனை உற்றுப் பார்க்கப் பார்க்க அரசனுடைய உள்ளத்தில் ஒருவிதமான அச்சம் உண்டாயிற்று. என்ன செய்வதென்று அவனுக்குத் தெரியவில்லை. தாகத்தினுல் தொண்டை வறண்டவன் போல் அரசன் ஒரு பொற்கலத்திலிருந்த நீரைப் பருகினுன். இச்சமயத்தில் சோலையப்பன் தன் மனைவியை அழைத்துக்கொண்டு வந்து சேர்ந்தான். அவனுடைய மனைவி துணியால் மூடப்பட்ட பெட்டி யொன்றை வைத்திருந்தாள். எந்த விதத்திலும் அவள் உருவத்தில் சிறுவனை ஒத்திருக்கவில்லை. இவ்வுண்மை அரசனுக்கு நன்குகப் புலப்பட்டது. சோலையப்பன் தன் மனைவியைப் பார்த்து, "பெருமை தங்கிய நம் அரசர், இச்

சிறுவனைப்பற்றி உண்மை அறிய விரும்புகிறார். இவன் எவ்வாறு நமக்கு மகனாக வந்தான் என்பதை எடுத்துச் சொல்; அஞ்சவேண்டாம்,'' என்று சொன்னான்.

"பதினான்கு ஆண்டுகட்குமுன் நான் ஒருநாள் சந்தைக்குப்போய்த் திரும்பி வரும்பொழுது, இந்த ஆற்றங்கரையில் ஒரு குழந்தை அழுங் குரலைக் கேட்டேன். குரல் வந்த திசைக்கு நேராக நான் ஓடிப்போய்ப் பார்த்த பொழுது ஆற்றில் மிதந்துவந்த ஒரு பெட்டியில் ஒரு சிறு குழவியைக் கண்டேன். அவன்தான் இதோ நிற்கின்ற இந்தப் பிள்ளையாண்டான். ஆற்றுநீரில் பாசி படர்ந்த ஓர் இடத்தில் இவன் வைக்கப்பட்டிருந்த பெட்டி சிக்கிக் கொண்டது. இவனுடைய அழுகுரலைக் கேட்டவுடன் என் உள்ளங் கரைந்தது. பிறர் எவருடைய உதவியையும் நாடாமல் நானே ஆற்றில் இறங்கிப்போய்ப் பெட்டியை எடுத்துக்கொண்டு வந்தேன். பசியாலும் குளிராலும் குழந்தை இறந்துபோகுந் தறுவாயிலிருந்தான். இவனை எனது வீட்டிற்கு எடுத்துக்கொண்டுவந்து என் கணவனிடம் காட்டினேன். எங்களுக்குப் பிள்ளைப்பேறு இல்லாததால், இவனை எங்களுடைய மகனைப்போல் வளர்த்து வருவதென்று நானும் அவரும் முடிவுசெய்துகொண்டு அவ்வாறே வளர்த்துவந்தோம். நெடுநாள் ஆகியும் இவனுடைய பெற்றோராவது மற்றோராவது இவனைத் தேடிக்கொண்டு வரவில்லை. வரவர இவன்மேல் எங்களுக்கு அன்பு மேலிட்டது. இவன் ஓடியாடித்திரிந்து கூச்சலிட்டுச் சிரிப்பதைக் கண்டு, அரசே! நான் எவ்வளவோ மகிழ்ச்சியடைந்தேன். இன்றுவரையில் கண்ணின் மணி போல் இவனை நாங்கள் காப்பாற்றிவந்தோம். ஆனாலும், எப்பொழுதாவது ஒருநாள் இவன் எங்களைவிட்டுப் போய் விடுவான் என்ற எண்ணம்மட்டும் எனக்கு அடிக்கடி வந்த

துண்டு. ஏனென்றால், இவனுடைய நடையையும் பேச்சையும் பார்ப்பவர்கள் இவன் அரச குடும்பத்தில் பிறந்தவனாயிருக்கவேண்டுமென்று சொல்வார்களே தவிர எங்கள் குடும்பத்தில் பிறக்கக்கூடியவன் என்று சொல்லமாட்டார்கள். இவனுடைய பெயர் திருமூலம். மூலநட்சத்திர நாளில் இங்குவந்து சேர்ந்தானாகையால் இவனுக்கு அப்பெயர் கொடுத்தோம். இவன் வைக்கப்பட்டிருந்த பெட்டி இதோ இருக்கிறது. மிகக் கவனத்துடன் நான் இதைப் பேணி வைத்திருக்கிறேன். இதைப் பாருங்கள்,'' என்று சொல்லி, பெட்டியை மூடியிருந்த துணியைச் சோலையப்பன் மனைவி நீக்கினாள்.

அவளுடைய பேச்சு முடிவதற்கு முன்னதாகவே அரசன், சூரனுந் தானுங் கொண்டுவந்த பெட்டிதான் அஃது என்பதை நன்கு உணர்ந்தான்; சிறிதுநேரம் கண்களை மூடிக்கொண்டிருந்து, பின் அரசன் நிமிர்ந்து பார்த்தான். பெட்டியின் ஒருபுறத்தில் எழுதப்பட்டிருந்த சிங்க உருவம் இன்னும் அப்படியே யிருந்தது. அப்பொழுது வேந்தனுக்கு ஓர் ஐயம் உண்டாயிற்று. அந்தப் பெட்டியைத் தானும் சூரனும் ஆற்றங்கரைக்குக் கொண்டு வந்தபொழுது வேறு யாராவது பார்த்திருக்கக்கூடுமோ என்று அவன் நினைத்துப்பார்த்தான். நினைத்துப் பார்த்ததில், சூரனையுந் தன்னையும் தவிர வேறு ஒருவரும் அதைப் பார்க்கவில்லை என்று அவனுக்குத் தெளிவாய்த் தெரிந்தது. இது தெளிவான பின்னும் அவனுக்கு ஆறுதலுண்டாகவில்லை. துன்பத்தில் ஆழ்ந்தவனாய் வேந்தன் அவ்விடத்தை விட்டு அரண்மனைக்குப் புறப்பட்டான். அன்று கண்ட அந்தச் சிறுவனுடைய முகம், நொடிப்பொழுதுகூட அரசனுடைய உள்ளத்தைவிட்டு அகலவில்லை. மன்னனுடைய கலக்கத்தை அறியாத அமைச்சர் முதலானோர், வழியில்

அவனுடன் நகைத்து உரையாடினார்கள். மன்னனும் தனது கலக்கத்தை மறைத்துக்கொண்டு மகிழ்ச்சியுடையவன்போல் அவர்களோடு பேசினான்.

## 6. சிறுவனைக் கொல்லச் சூரனை அனுப்புதல்

அன்றே மன்னன் தன் இருப்பிடம் போய்ச்சேர்ந்தான். அன்று இரவெல்லாம் அவனுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. மறுநாள் பொழுது விடிந்தவுடன் அரசன் சூரனைப்பற்றி நினைத்தான். காட்டிற் பிறந்த குழந்தையைத் தூக்கிக்கொண்டுவந்து ஆற்றிற்போட்ட சூரன் இன்னும் உயிரோடிருந்தான். உயிரோடிருந்ததுமன்றி முன்செய்த தீச்செயல்கள் போதாவென்று வேறுபல தீச்செயல்களைப் புரிந்துவந்தான். மன்னன் சூரனைக் கூப்பிட்டு அவனுடன் தனித்திருந்து பேசலானான். நீண்டநேரம் பேசியபின் சூரன் அரண்மனையிலிருந்து வெளியேவந்தான். வந்து "நல்லவர்களுக்கு அரச சேவகம் உதவாது. அரச ஊழியம் செய்கின்றவர்கள் பழிபாவம் என்று பாராமல் வேந்தன் கட்டளையிட்டதைச் செய்யவேண்டும். மறுத்தால் உயிருக்குத் தீங்குவரும். ஆயினும் உணவென்பதையே புசியாத பச்சைக்குழந்தையா யிருக்கும்பொழுது ஆற்றில் போடப்பட்டு உயிர்தப்பிப் பிழைத்தவன், பதினன்கு வயது ஆண் பிள்ளையானபின் அரசனுடைய வஞ்சகத்திற்குத் தப்பி உயிர்வாழமாட்டானே?" என்று அவன் முணுமுணுத்தான். பிறகு அவன் ஒரு பெரிய குதிரையின்மேல் ஏறிக்கொண்டு சோலையப்பன் இருக்குமிடத்திற்கு நேரே விரைந்துபோனான்.

சூரன் வருங்கால் திருமூலம் ஆற்றங்கரையில் அமர்ந்து கெளிறு, உளுவை, வரால் முதலிய மீன்கள் நீரில் விளையாடித் திரிவதைப் பார்த்துக்கொண்டிருந்தான். முந்திய

நாள் அரசன் அங்கு வந்தபொழுது நடந்ததெல்லாம் அவனுடைய மனத்தில் நன்றாகப் பதிந்திருந்தது. சூழ இருந்தவர்கள் மிகப் பணிவும் அன்பும் உடையவர்கள் போல் அரசனிடம் நடந்துகொண்டதையும், சோலையப்பன் மனைவி அரசன்முன் வந்து சொன்ன சொற்களையும்பற்றி அவன் நினைத்துக்கொண்டிருந்தான். அடிக்கடி அரசன் தன்னை வியப்புடன் உற்றுநோக்கியதும் அவனுடைய கவனத்திலிருந்தது. தானும் ஒரு பெரிய வேந்தனாகலாம் என்ற எண்ணம் அவனுக்குண்டாயிற்று.

அரசநிலை தனக்கு வந்தால் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்பதையும், பேசவேண்டுமென்பதையும் அங்கேயே திருமூலம் நடித்துப்பார்த்தான். இது முடிந்த பின் அவன் பெரிய வீரச்செயல்கள் நிகழ்த்தவேண்டுமென்றுந் துணிந்தான். இவ்வாறு அவன் நினைத்துக் கொண்டிருக்கும்பொழுது சற்று தூரத்தில் சூரன் வந்து கொண்டிருந்தது அவனுக்குத் தெரிந்தது. பொற்சரிகை வேலை நிறைந்த பட்டாடைகளைச் சூரன் அணிந்திருந்தான். கல் இழைத்த உறையிலே செருகப்பட்டிருந்த குத்துவாள் ஒன்று அவன் இடையிலிருந்தது. அன்றியும், அவனுடைய இடப்புறத்தில் ஒரு கத்தி தொங்கிக்கொண்டிருந்தது. கத்தியின் பிடி, சிறந்த வேலைப்பாடு நிறைந்ததாயிருந்தது. அந்தப் பிடிக்குள் மறைத்துவைக்கப்பட்ட ஒரு வெள்ளித் தகட்டில், "குத்திக்கொல்; இறந்தவன் திரும்பிவரமாட்டான்," என்று எழுதியிருந்தது.

சூரன் தொலைவில் வரும்பொழுதே நிமிர்ந்துபார்த்த திருமூலம், "என் நினைவிற்கு ஏற்க அதோ ஒருவன் அரசனிடமிருந்து வருகிறான். நான் நினைத்தது ஏன் நிறைவேறக்கூடாது?" என்று கருதினான். அதேநேரத்தில், ஆற்றங்கரையில் உட்கார்ந்த திருமூலத்தைக் கண்ட சூர

னும், "இச் சிறுவன் பிறந்த நோக்கம் நிறைவேறியேதான் தீரும். என்ன சூழ்ச்சி செய்தாலும் முடிசூடி அரசாளாமல் அவன் இறந்து போகமாட்டான்," என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான். கடிதில் திருமூலம் நின்றவிடத்தில் வந்துசேர்ந்த சூரன் குதிரையைவிட்டு இறங்கி, "சிறுவனே! அரசனிடமிருந்து உன் தந்தைக்கு ஒரு செய்தி கொண்டுவந்திருக்கிறேன். அஃது உன்னைப் பற்றிய செய்தியாகத்தா னிருக்கவேண்டுமென்று நினைக்கின்றேன்," என்று கூறினன்.

இதுகேட்ட திருமூலம் களிப்படைந்து குதித்து எழுந்து, "ஐயா! சந்தைக்குப் போக என்னுடைய தந்தை இப்பொழுதுதான் புறப்பட்டுக்கொண் டிருக்கிறார். இந்த வழியாகத்தான் அவர் போகவேண்டும். வாருங்கள்; அவர் புறப்படுமுன் அவரிடம் உங்களை அழைத்துக்கொண்டு போகிறேன்," என்றான்.

தான் ஏறிவந்த குதிரையை அங்கேயே ஓரிடத்தில் சூரன் கட்டிவிட்டுத் திருமூலத்தைப் பின்பற்றிச் சென்று சோலையப்பனைக் கண்டான். அவன் எழுந்து தரைமட்டுங் குனிந்து சூரனை வணங்கி, "ஐயனே! என்னைத் தேடித் தாங்கள் இங்கே வரவேண்டிய காரணம் என்ன?" என்று கேட்டான். அப்பொழுது சூரன் ஓர் ஓலையைத் தன் உடைக்குள்ளிருந்து எடுத்து, "நண்பனே! இதைப் படித்துப் பார்," என்றான். அவன் "ஐயனே! எனக்கு எழுத்தறிவு சிறிதுதான் உண்டு. ஆனால், என் மனைவியை வரச் சொல்கின்றேன். அவளுக்கு நன்றாக வாசிக்கத்தெரியும்," என்றான்.

"நண்பனே! அப்படி ஒன்றுஞ் செய்யவேண்டாம். இந்த ஓலையில் நம் வேந்தனுடைய முத்திரை இருப்பதை நீ பார். இந்தச் செய்தி அரசனிடமிருந்து வந்ததென்பது

அதனால் உனக்கு நன்றாக விளங்கவில்லையா? நான் சொல்வதைக்கேள். அரசனிடத்தில் ஊழியஞ் செய்யும் பொருட்டு, இப் பிள்ளையாண்டானை உடனே என்னுடன் அனுப்பிவைக்க வேண்டும் என்று அரசன் உனக்குக் கட்டளை யிட்டிருக்கிறான். அவனை அழைத்துப் போக வந்திருக்கிறேன்,'' என்றான் சூரன்.

இது காதிற் பட்டவுடனே சோலையப்பன் மிக வருத்த முற்றவனாய், "ஐயனே! இவ்வாறு எப்படியும் நடந்து தான் தீருமென்று எனக்கு முன்னதாகவே தெரியும். இந்தப் பிள்ளையாண்டான் என்னோடு இரத்தக் கலப்பு இல்லாதவன்; எப்பொழுதாவது ஒருநாள் இவன் என்னைவிட்டுப் போய்விடுவான் என்பது நான் எதிர்பார்த்ததுதான். ஆனாலும், எனது சொத்து முழுவதையும் இவனுக்கே கொடுக்க எண்ணியிருந்தேன். தன் வாழ்நாள் முழுவதையும் இவன் இங்கேயே நன்றாகக் கழிக்கலாம். அழகு நிறைந்த இளம்பெண் ஒருத்தியை இவனுக்கு மணஞ் செய்து வைக்கலாமென்று நினைத்திருந்தேன். இனிமேல், இவைகளை நினைப்பதால் என்ன பயன்? நான் யாவற்றையும் மறந்து விடவேண்டும்,'' என்று சொன்னான்.

சூரனும் சோலையப்பனும் பேசிக்கொண்டிருக்கையில் திருமூலம் அவர்கள் பேசுவதைக் கவனியாமல் வேறு ஏதோ நினைத்துக்கொண்டிருந்தான். ஆற்றங் கரையிலிருந்த சோலையப்பன் வீட்டில் அவன் மகிழ்ச்சியுடன் கழித்த நாட்களை மறந்துவிட்டான். அவனுடைய உள்ளம் வேறு பல இடங்களுக்குச் சென்றது. இனி, பெரிய நகரங்களுக்குச் சென்று உயர்ந்த அழகிய வீடுகளில் இருந்து, பெருவாழ்வு வாழப்போவதாக அவன் நினைத்தான். இவ்வாறு திருமூலம் நினைத்துக்கொண்டிருக்கும்பொழுது சூரன் சோலையப்பனை நோக்கி, "நண்பனே! இச் சிறுவன்

உயர்குடியிற் பிறந்தவன் என்று நம் அரசன் எண்ணுகின்றான். உன்னோடு உறையும் இவ் வாழ்க்கையை இவன் விரும்புவானென்று நினைக்கின்றாயோ?" என்று கேட்டுத் திருமூலத்தைப் பார்த்து, "இளைஞனே! உன்னுடைய விருப்பத்தை எடுத்துச்சொல்," என்றான்.

உயர்வாழ்க்கை வாழ்ந்து வீரச்செயல்கள் புரியவேண்டுமென்று கோட்டை கட்டிக்கொண்டிருந்த திருமூலம், இந்தக் கேள்வி செவியிற் பட்டவுடனே விடை ஒன்றுஞ் சொல்ல முடியாதவனாய் முதலில் வெட்கி நின்றான். பிறகு அவன், "இங்கே எனது வாழ்க்கை நன்றாகத்தான் இருக்கிறது. குறைவு ஒன்றுமில்லை. எனக்கு வில்வித்தையிற் சிறிது திறமையுண்டு. அதை இங்குள்ளோர் மிகவும் புகழ்ந்து பேசுகின்றார்கள். விற் பயிற்சி வல்லவர்களுக்கு ஆண்டுதோறும் இங்கே ஒரு பந்தயம் நடைபெறுகின்றது. அப் பந்தயத்தில் இவ்வாண்டு நானும் சென்று வெற்றியடையலாமென்று நினைத்தேன். அது போகட்டும், இந்த ஆற்றை உற்று நோக்குவீர்களாயின் இதிலே, வரால், வாளை, கெளிறு, கெண்டை முதலிய மீன்கள் திரிவதைக் காணலாம். அவை அவ்வாறு திரியும் அழகைப் பார்த்துக்கொண்டிருந்தாலே பொழுது போய்விடும். மற்றும் இங்கே பலவகைப் பறவைகள் எப்பொழுதும் காணப்படுகின்றன. இந்த இடம் நல்ல இடந்தான்," என்றான்.

சூரன் அவன் சொல்வதைக் கவனித்து, "உனது முகம் பார்ப்பதற்கு இனியதாயிருந்தாலும் நீ சரியாக வளர்க்கப்பட்டவனாய் எனக்குத் தோன்றவில்லை. ஆகையால், அந்த நல்வளர்ப்புக் கிடைக்கும் ஓரிடத்திற்கு உன்னை அழைத்தேக வந்திருக்கிறேன்; சிறுவனே! இதுபற்றி நீ பெரிதும் மகிழவேண்டும்," என்று கூறிச்

சோலையப்பனைப் பார்த்து, "எனக்கு நீ விடை கொடு; இந்தப் பிள்ளையாண்டானை நான் வந்து அழைத்துப் போனதைப் பற்றி ஒருவரிடமும் பேசவேண்டாம். அவன் மறுபடியும் இங்கேவர விரும்புவானென்று எதிர் பார்க்கவும் வேண்டாம். மிகவும் வருந்தி நீ அவனை வளர்த்திருக்கின்றாய்! அதன்பொருட்டு, நிறையப் பொன் னிருக்கிற இந்தப் பையை நீ பெற்றுக்கொள். இதை வைத்துக்கொண்டு நீயும் உன்னைச் சார்ந்தவர்களும் மிக வும் சுகமாக வாழலாம்," என்று பொன் நிறைந்த ஒரு பையைக் கொடுத்தான். கொடுத்துவிட்டுச் சூரன் திரு மூலத்தை, "புறப்படு," என்று அழைத்தபோது, சிறுவன் என்ன செய்வதென்று தெரியாமல் மயங்கி நின்றான்.

சூரனைக் கண்டவுடன் அவனுடன் சென்று வேறு உயர்ந்த வாழ்க்கை நடத்தவேண்டுமென்று திருமூலம் எண்ணினான். சூரன் பேசிய கேலி மொழிகளைக் கேட்ட பின் அவனுடைய உள்ளத்தில் பற்பல ஐயங்கள் எழுந் தன. பெற்றெடுத்த தாய் தந்தையர் போலவே தன்னை அன்புடன் வளர்த்த இருவரையும் மறந்து மற்றோரிடத் திற்குத் தான் போகவேண்டுமே என்பதை நினைத்தவுடன் அவனுடைய கண்களில் நீர் பெருகி வழிந்தது. அதுகண்ட சோலையப்பன் முன்னே வந்து திருத்தமில்லாத மொழிகள் பல கூறினான். இதற்குள் சூரன் அவ்விடத்தை விட்டுப் போக ஆத்திரப்பட்டுத் திருமூலத்தின் கையைப் பிடித்து இழுத்தான். துடிக்கின்ற நெஞ்சுடனும் தொங்கிய முகத் துடனும் திருமூலம் அமைதி நிறைந்த அந்தப் பழைய விடத்தைவிட்டுப் புறப்பட நகர்ந்தான்.

ஆனால், அவ்விடத்தை விட்டு அவன் பெயர்வதற்கு முன், சோலையப்பன் மனைவி ஓடிவந்து திருமூலத்தைக்

கட்டிப் பிடித்துக்கொண்டு, "நீ இங்கு வந்து எங்களுடன் இருந்ததால் நாங்கள் மட்டற்ற மகிழ்ச்சியுடன் காலங் கழித்தோம். இப்பொழுது நீ போய்விடுவதால் எங்களுக்கு ஆற்றொணாத் துன்பந்தான். ஆனால், பரந்த இவ்வுலகில் நீ சென்று மேன்மை யடையப்போகிறாய்! உன்னை நாங்கள் ஏன் தடுக்கவேண்டும்? என் மகனே! அழகு நிறைந்த கண்மணியே! நீண்டகாலம் நீ உயிரோடிருந்து மேன்மையும் செல்வமும் பெறுவாய். நீ உயர்நிலைக்கு வரும்பொழுது இந்த வீட்டில் எங்களுடன் நீ வாழ்ந்தாயென்பதை மறந்துவிடாதே. எவ்வகையிலும் உனக்கொரு குறைவும் இல்லாமல் உன்னை நாங்கள் வளர்த்தோம். உன்மீது எங்களுக்கிருந்த அன்புக்கு அளவில்லை. அந்த அன்பால் நாங்களிருவரும் வயது ஆனதும் தெரியாமல் இளமை அடைந்தவர்கள்போலிருந்தோம். இனி நீ போனபின் நாங்கள் விரைவில் கிழத்தன்மை யடைவோம்," என்றாள்.

இதற்குள் காலதாமத மாகிறதென்று சொல்லி, சூரன் அவ்விடத்திலிருந்து திருமூலத்தை அழைத்துக்கொண்டு போனான். சிறுவனும் சிறிது அச்சத்துடனும், வெட்கத்துடனும் அவன் பிறகே போனான். ஆற்றைக் கடந்தபின் சூரன் சவாரி செய்துவந்த பெரிய குதிரைமேல் இருவரும் ஏறிக்கொண்டு வாய் பேசாது சென்றார்கள்.

## 7. சூரன் வினைமுடித்தல்

இங்ஙனம் செல்லுங்கால் திருமூலம் யாவற்றையும் மறந்து வழியிலுள்ள இயற்கைக் காட்சிகளைக் கண்டு பெரிதும் உவகை கொண்டான். நெடுநாட் பழகிய ஓரிடத்தை விட்டு வேறிடத்திற்குப் போவது அவன் உளத்தை இப்

பொழுது வருத்தவில்லை. சூரனே வாய் திறவாமற் குதிரையைச் செலுத்தினன். நெடுந்தூரம் இவ்வாறு இவர்கள் சென்றபின், அரண்மனைக்குப் போகின்ற வழியைவிட்டுச் சூரன், ஒரு காட்டிற்குட் புகுந்தான். இதை நன்குணர்ந்த திருமூலம் வியப்படைந்தவனுகி, "ஐயா! நம்முடைய மன்னர் இப்போது இந்தக் காட்டிலா வசிக்கின்ருர்?" என்று கேட்டான்.

"மதியற்றவனே! எங்கே வசிக்கவேண்டுமென்று அரசருக்கு விருப்ப மிருக்கின்றதோ அங்கே அவர் வசிப்பார். இப்பொழுது இந்தக் காட்டிலிருப்பது அவரது விருப்பமாயிருக்கிறது," என்று சினந்து மொழிந்து, தனது நிலைமையை நினைந்து சூரன் மிகவும் வருத்தமுற்றுன். அரசன் தனக்கு இட்ட கட்டளையை நினைத்தபொழுது சூரனுக்கு உள்ளங் கொதித்தது. இந்தக் கொதிப்பால் அவன் திருமூலத்தை மற்றும் ஒருமுறை நோக்கி, "அந்த அரசனுங் கெடுவானுக! நீயுங் கெடுவாயாக! உங்களிருவராலும் என் வாழ்க்கை குறைந்து போகின்றது. வீட்டிலிருந்து யான் கடவுளைத் தொழுதுகொண்டிருக்கவேண்டிய இந்த வயதிலே, எனது வாழ்நாள் முடியுங்காலம் அணுகி வருகின்ற இந்த நிலையிலே, என்னை அங்குமிங்கும் அலையவைத்து என் நெஞ்சைப் புண்படுத்துகின்றவர்கள் நீங்கள் இருவருந்தான். ஐயோ! நான் பிறந்த நாள் பொல்லாத நாளாயிருக்கவேண்டும்," என்று கழறி விரைந்துபோகக் குதிரையைத் தூண்டினன்.

இவ்வாறு இருவரும் சென்று, ஒரு குன்றின் அடிவாரத்தில் வந்து சேர்ந்தார்கள். குதிரையின் பின்னே அமர்ந்திருந்த திருமூலம், வரப்போவதை அறியாதவனுய்ச் சுற்றியிருக்கும் காட்சிகளை உற்று நோக்கி உளமகிழ்ந்

தான். அங்கிருந்து மீண்டும் புறப்பட்டுப் போகப்போக நெருங்கிய மரங்கள் நிறைந்த ஒரு காடு தோன்றியது. மாலைப் பொழுதும் நெருங்கிற்று; நாளெல்லாம் குதிரை யேறிவந்த களைப்பினுல் திருமூலம் தூக்க மயக்கத்திலிருந் தான். காட்டினூடே சூரன் குதிரையைச் செலுத்தி ஒரு சிறிய பள்ளத்தாக்கை யடைந்தான். அது மனித நட மாட்டமில்லாத தனியிடமாயிருந்தது. தூக்க மயக்கத்தி லிருந்த திருமூலம் திடுக்கென்று விழித்து எழுந்தான். அப்பொழுது சூரன், "நீ கீழே இறங்கிவிடு. இந்தச் சேற்று நிலத்தில் குதிரையின் கால்கள் ஆழமாகப் பதி கின்றன. நம்மிருவரையுந் தாங்கிக்கொண்டு போகமுடி யாமல் குதிரை தவிக்கின்றது, இறங்கு, இறங்கு," என்று கூச்சலிட்டான்.

அவன் சொன்னதற்கிணங்கித் திருமூலம் கீழே குதித்து அருகில் நடந்து சென்றுன். நடந்ததுமன்றி, வரப்போவது இன்னதென்று சற்றும் நினையாதவனுய் மிகவும் அகமகிழ்ந்து அவன் பாடலானுன். திருமூலம் பாடிக்கொண்டு போகையில், சூரன் கையில் கத்தியை உருவிப் பிடித்துக்கொண்டு கடிவாளத்தை இழுத்துக் குதிரையை நிறுத்தினுன். நிறுத்தித் திருமூலத்தை நோக்கி, "சேணத்தைக் குதிரையின் மார்போடு சேர்த்துக் கட்டுகின்ற வார் தளர்ந்துவிட்டது. இங்கு வந்து அதை இழுத்துக் கட்டு," என்று கட்டளையிட்டான். திருமூல மும் தன் பாட்டை நிறுத்தி, குதிரையின் கீழ்க் குனிந்து நின்று, வாரைப் பிடித்து இறுக்க முயலும்போது, சூரன் குதிரையிலிருந்தபடியே கத்தி கொண்டு அவனைக் குத்தினுன். திடீரென்று கத்தி தன் உடலிற் பாய்ந்ததை அறிந்த திருமூலம் அங்கிருந்து குதித்துக் கூச்சலிட்டுக் கீழே விழுந்தான். தன்னைக் கொல்ல சூரன் முயன்ற

தைக் கண்டு, அவன் அடைந்த வியப்பு அளவிடற் பாலதன்று. அடைந்த காயத்தைப்பற்றிக் கவலை கொள்ளாதவனாய், சூரனது முகத்தையே விரிந்த கண்களுடன் திருமூலம் பார்த்துக்கொண்டிருந்தான். ஆனாலும் காயத்திலிருந்து உதிரம் பெருகப் பெருக விரைவில் அவன் தன்னறிவு இழந்துவிட்டான். சூரன் குதிரையைவிட்டு இறங்கி, அவன் அருகில் வந்து குலையில் கையைவைத்துப் பார்த்தான். குலை துடிப்பது அவனுக்கு நன்றாகத் தெரிந்ததால், உயிர்போக மற்றும் ஒருமுறை கத்தியால் குத்தக் கையை ஓங்கினான்.

அந்நேரத்தில் ஒரு மணியோசை அவன் காதில் விழுந்தது. அவ்வோசை இரண்டு மூன்றுமுறை காதிற் படவே, மிகவும் திகிலடைந்து சூரன் விண்ணெனக் குதிரையின்மேற் பாய்ந்து ஏறிக்கொண்டு அவ்விடத்தைவிட்டு ஓடினான். பைத்தியம் பிடித்தவன்போற் குதிரையை அவன் தூண்டத் தூண்ட அது தாவிப் பாய்ந்து முன்னே சென்று குலைவெடித்து மாண்டு விழுந்தது. அதன்பின் சூரன் இரவெல்லாம் அந்தக் காட்டில் நடந்து திரிந்து விடியற்காலை அரண்மனை போய்ச் சேர்ந்தான். அவன் உடனே வேந்தனிடம் சென்று, நடந்தது எல்லாவற்றையும் எடுத்துரைத்தபின், "உண்மையாகவே அந்தத் திருமூலம் இறந்து போனான்; அவனைக் கொல்லும்பொழுது நான் அஞ்சி நடுங்கினேன். அரசே! எல்லாம் தங்கள் பொருட்டாகத்தான். அவனுடைய உயிர் மேலுலகஞ் சென்றது என்பதில் ஐயமில்லை. ஏனென்றால், அவன் குற்றுயிராய்க் கிடக்கும்பொழுது விண்ணில் ஒரு மணியோசை பிறந்தது. மேலுலகத்திலுள்ள தேவர்கள் அவனை வரவேற்கும் பொருட்டு அடித்த மணியோசைதான் அது. இதைப்பற்றி ஐயத்திற்கே இடமில்லை. அந்தத் துறவி

தங்களுக்கு சொன்னமொழி பொய்த்துப் போய்விட்டது. ஆகையினால் வேந்தே! இனி அஞ்சவேண்டாம்,” என்று சொன்னான்.

சூரன் சொன்னதைக் கேட்டு அரசன் அமைதியடைய வில்லை. “நல்ல திறமை நிறைந்த ஒரு போர்வீரனை எனது காரியத்தை முடிக்க அனுப்பினேன் என்று நினைத்தேன். நீயோ, இங்கு என்முன் ஒரு பெண்போல் வந்து நின்று ஏதேதோ புலம்புகின்றாய். அவன் கொலையுண்டான் என்ப தற்கு அறிகுறி ஒன்றையும் உன் கையிற் காணேமே?” என்று மன்னன் கடுகடுத்துக் கூறினான். சூரன் முகத் தைப் பார்ப்பதற்கும் அரசனுக்கு வெறுப்பாயிருந்தது. ஆகையால், அவ்விடத்தைவிட்டு அரசன் நீங்கினான். ஆனால், அன்று முழுவதும் அவன், சூரன் தன்னிடம் கூறியதை நினைத்துப் பார்த்ததன் பயனாக எல்லாம் இறுதி யில் நன்றாக முடியுமென்று அவனுக்கொரு நம்பிக்கை உண்டானது. அரசுரிமை எப்படியாவது தனக்குப் பிறக் கும் ஒரு மகனுக்கே செல்லுமென்று அவனுக்குத் தோன் றிற்று. ஆகையால், அவன் சூரனை மறுபடியும் அழைத்து அவனுக்குப் பொன்னும் மணியும் வேண்டியமட்டுங் கொடுத்தான். தீமைசெய்து பெற்ற இந்தச் செல்வத் தைக் கொண்டு இன்பம் பெறமுடியாதவனாய்ச் சிறிது நாளிற் சூரன் இறந்து போனான்.

## 8. வானமலரை வளர்மனைக் கனுப்புதல்

இதற்குப்பின் சில ஆண்டுகள் சென்றன. அரசன் திருமூலத்தைப் பற்றிய கவலையில்லாதவனாய் மிகவும் மகிழ்ச்சியுடன் வாழ்ந்துவந்தான். என்றாலும், அவனது உளத்தைவிட்டு நீங்காத ஒரு குறைவு இருந்தது; அஃ தென்னவென்றால், தனக்குப் பின் அரசுபுரிய ஒரு மகன்

பிறக்கவில்லை என்பதே! திருமூலம் பிறந்த நாளில் அரசனுக்குப் பிறந்த ஒரு மகளைத் தவிர வேறு குழந்தை அவனுக்குப் பிறக்கவில்லை. இம் மகள் இப்பொழுது வனப்பு மிகுந்த இள நங்கையாகி மணம்புரியும் பருவம் அடைந்திருந்தாள். இச்சமயத்தில் அரசன் மனைவி திடீரென நோய்கண்டு இறந்துவிட்டாள். மனைவி இறந்தது குறித்து மன்னன் வருந்தவில்லை. உடனே மற்றொரு மனைவியை மணந்தாவது நாட்டை ஆள்வதற்கொரு மகனைப் பெற வேண்டும் என்ற எண்ணமே மன்னனுக்குப் பெரிய கவலையாயிற்று. ஆதலால், மனைவி மாண்ட சில நாட்களுக்குப் பின், அவன் ஒற்றர்களை ஏவித் தான் மணம்புரியத் தக்க அரசன் மகள் யாரென்று பார்த்துவரச் சொன்னான்.

சிலநாளில், மன்னன் ஒரு பெண்ணைத் தனக்கு வாழ்க்கைத் துணைவியாகப் பெற்றான். அவளிடத்தில் தனக்கொரு ஆண்பிள்ளை பிறப்பானென்று வேந்தன் எதிர்பார்த்தான். கலியாணமாகி ஓராண்டு இனிது கழிந்தது. நகரத்திலிருக்கும் தன் அரண்மனையைவிட்டு வேறொரு மனைக்கு மன்னன் போகுங்காலம் அணுகிற்று. நகரத்திற்கு நெடுந்தூரத்திலிருந்த இம்மனை நாற்புறமும் காடுகளும் குன்றுகளுமுள்ள வனப்பமைந்த ஓரிடத்தில் சால அழகாக அமைக்கப்பட்டிருந்தது. வேனிற் காலத்தில் மன்னன் இவ்வழகிய மனையிற் சென்று வாழ்வது வழக்கம். இவ்வழக்கத்திற் கிணங்க, அவன் புறப்படுவதற்குமுன் தன் மகளாகிய **வானமலரை** அங்கனுப்ப விரும்பினான். தனக்கு ஏற்பட்டுள்ள எண்ணிறந்த கவலைகளுக்கிடையே அரசன் தன் மகளுக்கு ஏற்ற ஓர் அரசிளங் குமரனைக் கணவனாகத் தேர்ந்தெடுத்திருந்தமையால், வானமலரை முன் அனுப்பிவிட்டுப் பிறகு தன் மருமகனாகப் போகிற இளவரசனுடன் அவ்வழகிய மனைக்குப்போக அரசன் எண்ணினான்.

காட்டிலுள்ள நெடுமனைக்குப் போக வானமலர் புறப்பட்டாள். அவளை வேந்தன் அழைத்து, "குழந்தாய்! இன்னும் ஒரு திங்கள் கழிவதன்முன், யானும் நீ போகுமிடத்திற்கு வருவேன். நான் வருங்காலை தனியே வரேன். மண்ணிலுள்ள மக்கள் எல்லோரினுஞ் சிறந்தவனென்று யான் கருதுகின்ற ஓர் இளமகன் என்னுடன் வருவான். மங்கையர்கள் மனத்தைக் கொள்ளை கொள்ளும் பேரழகு வாய்ந்த அவனை நீ கண்டு பெருமகிழ்ச்சியடைவாய்! போய் வா. நீ விரும்புவதை இறைவன் உனக்களிப்பானாக," என்று மொழிந்தான். அரசன் கூறியது கேட்டு வானமலர் சற்றேனும் நாணமாவது அச்சமாவது அடையவில்லை. மணஞ்செய்து கொள்வதால் அதிக மகிழ்ச்சி கிடைக்குமென்று அரசன் கருதியதாக அவள் நினைத்தாள். கலியாணத்தால் தனக்கு மகிழ்ச்சி பெருகுமென்று அவள் நம்பவில்லை.

வாழ்க்கையின் இன்பங்கள் வானமலருக்குத் தாமாகவே வந்தன; அகன்ற இவ்வையகத்தைத் தனது இன்பத்திற்கென்று படைக்கப்பட்ட ஒரு பெரிய இடமாக அவள் கருதினாள். இதுகாறும் அவள் ஒருநாளும் தன் தந்தையைத் தவிர வேறு ஆண்களைப்பற்றி நினைத்தது கிடையாது. ஆதலின் படைதாங்கிய வீரர் புடைசூழ, சேய்மையிலிருந்த நெடுமனைக்குப் போகுங்கால் காலை வேளையில் வீசுகின்ற இனிய காற்றால் அவள் உளம் புளகித்தது; ஆனால்; எந்த ஆண்மகனையும் நினைந்து அவள் மகிழவில்லை. செங்கதிர் வீசிக் கதிரவன் மறைந்தபின் பிறைத்திங்கள் தோன்றி எங்கும் அமைதி பிறந்தபோது அவள் விண்ணை நோக்கி உவகைகொண்டாள். மகிழ்ச்சியாயிருப்பதற்கு ஓர் ஆணின் உதவி வேண்டுமென்று அவள் சிறிதும் நினைக்கவில்லை. இங்ஙனம் சின்னாள் வழிநடந்து சென்று இறுதியில் வான

மலர், காட்டிடையே விளங்கிய வளர்மனை வந்து சேர்ந்தாள்.

## 9. மடத்தலைவர் மன்னனைக் காணல்

வானமலர் தந்தையைவிட்டு நீங்கியபின், அரண்மனையில் ஒரு செய்தி நடந்தது. அரசனது தலைநகரிலிருந்து வெகு தூரத்துக் கப்பாலுள்ள ஒரு மடத்தில் வாழ்கின்ற பெரியார் ஒருவர் அரசனைக் காணவந்தார். தன்னைக் காணும்பொருட்டு அவர் நீண்ட வழி கடந்து வந்தது கேட்டு, வேந்தன் உடனே அவரைப் பார்க்க இசைந்தான். வந்த பெரியாருடன் சில துறவிகள் இருந்தனர். இவர்களோடு நன்கு வளர்ந்த அகன்ற மார்பும், திண்தோளுமுடைய பத்து மக்கள் இருப்புக் கவசமணிந்து ஈட்டி பிடித்தவராய்த் தோன்றினர். மடாதிபதியை அரசன் கண்டு அவருடன் பல்வேறு செய்திகளைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தான். இறுதியில் அவன் அவரை நோக்கி, "எஃது எப்படியானாலும் தாங்களும் தங்களுடன் வந்தவர்களும் என்னோடிருந்து உண்டுபோதல்வேண்டும்," என்று சொன்னான். அவன் இவ்வாறு பேசிக்கொண்டே மடத் தலைவருடன் வந்த ஈட்டிபிடித்த மறவரை நோக்கினான். அவர்களுடைய உயரத்தையும் உடல் வலியையும் மன்னன் கண்டு வியந்து, "தலைவரே! மிகச் சிறந்த மறவர் தங்கள் சேவகத்திலிருக்கின்றார்களே! எங்கிருந்து இவர்களைக் கொண்டு வந்தீர்கள்? தங்கள் மடத்தை அடுத்திருக்கும் காட்டு நிலத்து மக்களோ இவர்கள்! அல்லது வேறு நிலத்து மக்களோ? இவர்களைப்போல் வேறு மறவர் அகப்படுவார்களோ? அகப்படுவார்களாயின் அவர்களை எனது படையிற் சேர்க்க விரும்புகிறேன்," என்றான்.

இவைபோன்ற சொற்களை மிகத் தெளிவாகவும் எளிதாகவும் மன்னன் பேசிவருங்கால், திடீரென்று அவனது குரல் தாழ்ந்தது. எதிர்பாராத ஒன்றைக் கண்டு திகைப்படைந்தவன்போல் மன்னன் விழித்தான். தான் கேட்ட கேள்விகளுக்கு மடத்தலைவர் கொடுத்த விடை, அவன் காதில் விழவில்லை. ஏனென்றால், மடத்தலைவருடன் அங்கு வந்து நின்ற மறவரில் ஒருவனுடைய கண்கள் அரசனது பார்வையை அப்புறஞ் செல்லாது தடுத்தன. தலையில் அணிந்திருந்த தலைச்சிராவுக்குள்ளிருந்து அந்தக் கண்கள் விழித்தன. ஆற்றங்கரையிற் சோலையப்பன் வீட்டில் அரசன் கண்டு வியப்புற்ற கண்களே, மறுபடியும் இங்கு அவன்முன் தோன்றின. சிறிதுநேரம் மன்னனுக்குச் சற்று ஐயப்பாடாக இருந்தது. ஆனால், அது பின்பு முற்றும் ஒழிந்தது.

வேந்தன் சிரிப்பவன்போல் நடித்து மடத்தலைவர் தன்னுடைய கேள்விகளுக்கு அளித்த பதிலை மிக ஊன்றிக் கேட்பவனைத் தோன்றினான். இது முடிந்தவுடன் மன்னன், மற்றவர்களில் ஒருவனாய் வந்த திருமூலத்தைப் பார்த்து, "நீ அணிந்திருக்குந் தலைச்சிராவை எடுத்துவிடு; அச்சமென்பதே அறியாத ஆண்மை உன் முகத்தில் தோன்றுகிறதா இல்லையாவென்பதை நான் பார்க்க வேண்டும். உன்னை இதற்குமுன் நான் கண்டிருப்பதாக நினைக்கிறேன். உன்னுடைய வரலாறு யாது?" என்றான்.

அரசனது விருப்பத்திற் கிணங்கத் திருமூலம் தான் போட்டிருந்த தலைச்சிராவைக் கழற்றினான். கறுத்து நெருங்கி வளர்ந்திருந்த அவனுடைய தலைமயிர் குறுக வெட்டப்பட்டு கழுத்தளவு தொங்கிற்று. அவனுடைய இனிய சிவந்த முகத்தின் அழகை யாவரும் கண்டு வியக்

தனர். செவிக்கு இன்பந்தரும் மெல்லிய ஓசை நிறைந்த மணியை அடித்தாற்போன்ற தீங்குரலில் அவன் தன் வரலாற்றை எடுத்துரைத்தான். சூரன் கையால் தான் குத்துண்டு விழுந்தவரையில் திருமூலம் தன் வரலாற்றைக் கூறி, அதன்பின் வேந்தனை நோக்கி, "அரசே! இதற்கு மேல் எனது வரலாறு இன்னதென்பதைத் தம்பிரான் ஆதிரையன் நன்கு அறிவார். என் உயிரைக் காப்பாற்றி, எனக்குக் கல்வி ஊட்டி, என்னைப் பிள்ளைபோல் வளர்த்த தம்பிரானே அதைச் சொல்லும்படி வேண்டிக்கொள்கிறேன்," என்றான்.

தம்பிரானை வேந்தன் நோக்கி மேல் நடந்ததைச் சொல்லவேண்டுமென்று கேட்க, அவர் பின்வருமாறு கூறினார்:—"யாங்கள் இருக்கும் காட்டில் ஏழைமக்கள் பலர் வசித்துவருகின்றனர். அவர்களில் ஒருவன் நோய் வாய்ப்பட்டு ஒருநாள் இறக்குந்தறுவாயில் இருந்தான். அவனை வந்து பார்க்குமாறு அவனைச்சேர்ந்த சிலர் வேண்டிக்கொண்டதால், யான் என்னால் கூடியதைச் செய்யவேண்டுமென்று புறப்பட்டுப் போனேன். எனது வருகையை எல்லோருக்கும் அறிவிக்கும்பொருட்டு ஒருவன் என்முன் ஒரு மணியை ஆட்டிக்கொண்டு சென்றான். வழியில் ஓர் அருவிக்கரையில், இதோ நிற்கும் திருமூலம் குற்றுயிராய்க்கிடந்தான். அவனது விலாவில் கத்திக் குத்தினால் உண்டான ஒரு காயம் இருந்தது. கத்தி மிகவும் ஆழமாக இறங்கியிருந்த அக் காயத்தினின்றும் குருதி பெருகி அங்கே தழைத்து வளர்ந்த பச்சைப் புல்லிற் செவேலெனப் பாய்ந்திருந்தது. அதைக் கண்டு நான், என்னுடன் வந்தவன் துணைகொண்டு, இவனை உடன் தூக்கிக்கொண்டு சென்றேன். யான் பார்க்கச்சென்ற நோயாளியின் இல்லத்திற்கு வந்தவுடன் இவன் அடைந்த காயத்தை

ஆற்றுவதற்கு வேண்டிய முயற்சிகள் செய்தேன். அதன் பின் யான் பார்க்கவந்த நோயாளியைப் போய்க் கண்டேன். அவனுக்கும் செய்யவேண்டியதைச் செய்த பின், மறுநாள் யான் எங்கள் மடத்திற்குத் திரும்பினேன். அங்கிருந்து தேர்ந்த ஒரு மருத்துவனை அனுப்பினேன். அவன் தனது சிகிச்சையால் திருமூலத்தின் காயத்தை விரைவில் ஆற்றி முன்போல் உரமுடையவனாக்கினான். அதன்பின் திருமூலத்தை எங்கள் மடத்திற்கு அழைத்து வரச்செய்து, நாங்கள் கல்வி கற்பிக்கத் தொடங்கினோம். கல்வியில் மிகுந்த ஆவலுடையவனாய் யாங்கள் புகட்டியதை எளிதாகவும், விரைவாகவும் இவன் அறிந்துகொண்டான். கல்வியும் அறிவும் இவன் நிறையப்பெற்ற பின்னும், எங்களைப்போல் துறவியாக வேண்டுமென்ற விருப்பம் இவனுக்கு வரவில்லை. இப்படியிருந்தும் இவனது நல்லொழுக்கத்தையும் இனிய தன்மையையுங் கண்டு, இவனை எங்களுடனேயே வைத்துக்கொள்ள ஆவல்கொண்டோம். ஆகையால், மடத்தைக் காவல்செய்யுங் காவலாளிகளுள் ஒருவனாக இவன் நியமிக்கப்பட்டான். இவன்மேல் எங்கள் எல்லோருக்கும் மிகுந்த அன்புண்டு,'' என்று தம்பிரான் கூறி, திருமூலத்திற்கு நேரே திரும்பி, "தம்பீ! உனது விலாவில் இறங்கிய அந்தக் கத்தி உன்னிடமிருக்கின்றதோ? இருக்குமாயின் அதை நமது வேந்தனிடங் கொடு. நாம் சொல்வது வெறுங்கதையன்று என்று அதனால் நன்கு விளங்கும்,'' என்றார்.

இச்செய்தி காதிற் புகுந்தவுடனே வேந்தனுக்குப் பிறந்த ஆச்சரியமும், அச்சமும் சொல்லுந் தரத்தனவல்ல. சிறிதுநேரங் கழிந்தபின் அவன் சோர்வடைந்தவனாய், "துறவிகாள்! இங்கு நிற்கின்ற இந்த இளமகன் நம்பத் தகுந்தவன் என்று எனக்குத் தோன்றுகிறது. அதனால்

இவன் எனது சேவகத்தில் இருப்பது நல்லதென்று நினைக்கிறேன். தங்கள் மடத்தில் நூல்களைக் கற்றுத் தனியே வாழ்வதைவிட, அரண்மனையில் எனக்குச் சேவகஞ் செய்து உலக வாழ்விலிருக்க இவன் விரும்புவான் என்று எண்ணுகிறேன்,'' என்று விளம்பினான்.

வேந்தனது விருப்பத்தை உணர்ந்த மடத்தலைவர், "வேந்தே! தங்கள் சேவகத்தில் இவனிருக்கவேண்டுமென்று விரும்புகின்றீர்கள்; அவ்வாறே ஆகட்டும். இவனைப்போன்ற உயரமும் உடற்கட்டும் அழகும் வாய்ந்தவர்கள் எங்களைப்போன்ற துறவிகளுக்கு வேண்டுவதில்லை. அன்றியும் காட்டிலுள்ள மடத்தில் எங்களுடன் தனித்திருந்து வாழ்வதைவிட, இவன் ஒரு மங்கையை மணந்து நாட்டில் வாழ்வதற்கே உரியவன்,'' என்று புன்னகையுடன் புகன்றார். அந்த வேளையில் இறந்துபோன சூரனிடம் தான் கொடுத்த கத்தி, திருமூலத்தின் கையிலிருப்பதை அரசன் கண்டான். "குத்திக் கொல்! இறந்தவன் திரும்பமாட்டான்!'' என்று உறையில் எழுதப்பட்டிருந்த கத்திதான் அது. அது கண்ணிற்பட்டவுடன் முன் நடந்த செய்திகளெல்லாம் அரசனது நினைவிற்கு வர, திருமூலத்தின்மேல் அவனுக்கிருந்த சினம் பதின்மடங்கு அதிகமாயிற்று. அரசன் ஒன்றுங் கூறாமல் மடத்தலைவருக்கும் அவருடன் வந்தவர்களுக்கும் அரண்மனையில் விருந்து நடத்தி அனுப்பினான். அவர்கள் விடைபெற்றுக்கொண்டு சென்றார்கள். திருமூலமோ, அவர்களுடன் போகாது அரண்மனையிலேயே தங்கிவிட்டான்.

## 10. திருமூலம் திருமுகங் கொண்டேகல்

பத்துநாள் வரையில் அரசன் ஒன்றுஞ் செய்யவில்லை. அப்புறம் ஒருநாள் அவன் திருமூலத்தைக் கூப்பிட்டு, "வாலிபனே! இதோ, ஒரு கடிதமிருக்கிறது. இதை எடுத்துக்கொண்டு தெற்கிலிருக்கும் நமது அரண்மனைக்கு நீ செல்லவேண்டும். இங்கிருந்து அது மூன்று நாள் வழிக்கு அப்பாலிருக்கிறது. அங்கே போவதற்கு உனக்கு வழி தெரியாது. ஆகையால் என் படைத்தலைவருள் ஒருவனை உனக்குத் துணையாக அனுப்புகிறேன். அவன் உன்னுடன் ஒருநாட் பயணஞ் சென்று அதற்குமேல் நீ போக வேண்டிய பாதையைக் காண்பித்துவிட்டுத் திரும்புவான். அப்பாலிருக்கும் வழியை நீ தனியாகவே கடக்கவேண்டும். பாதையை விடாது தொடர்ந்து செல்வாயானால், மூன்றும் நாள் நடுப்பகல் வேளையில் என் அருமை மகள் இப்பொழுதிருக்கின்ற பெருமனையிற் போய்ச் சேர்வாய். அவ்விடம் நீ போய்ச் சேர்ந்தவுடன் அங்கு நமக்குப் பிரதிநிதியாக இருக்கின்ற அமரநாதனிடஞ் சென்று இக் கடிதத்தைக் காட்டவேண்டும். அதுவரையில் இஃது ஒருவர் கண்ணிலும் படக்கூடாதென்பதைத் திட்டமாய் அறிந்துகொள். அறிவுடனும் உறுதியுடனும் நீ நடந்துகொள்வாயானால், இன்றுமுதல் உனக்கு நற்காலம் பிறந்ததென்று நினைத்துக்கொள்," என்று பகர்ந்தான்.

இவ்விதம் அரசன் செய்தது எதற்கென்றால், திருமூலத்தின் உயிரைப் போக்குவதற்காகவேதான். இதற்குமுன் இவன் பொருட்டு இருமுறை செய்த சூழ்ச்சி பலிக்கவில்லை. மூன்றுவதாகச் செய்யத் தொடங்கிய இந்த முயற்சி எப்படியாவது கைகூடுமென்று வேந்தன் நம்பி

ஞன். திருமூலத்தின் விதியோ இதற்கும் இடங்கொடுக்க வில்லை.

வேந்தன் கொடுத்த கடிதத்தை வாங்கிக்கொண்டு அவனிடம் விடைபெற்ற திருமூலம், தனக்கு வழிகாட்டியாக முதல்நாள் வரவேண்டிய படைத்தலைவனிடஞ் சென்ருன். கரிய நிறமும் பெரிய உருவமும் வாய்ந்த அப் படைத்தலைவன் திருமூலம் சொன்னதைக் கேட்டு உடனே அவனுடன் வழித்துணையாகச் செல்ல உடன்பட்டான். இருவருங் குதிரைகள் மேலேறிக்கொண்டு புறப்பட்டனர்.

முன்னே சூரன் செய்ததுபோல் இந்தப் படைத்தலைவன் திருமூலத்தின் உயிரைப் போக்க ஏதாவது செய்ய வேண்டுமென்று வேந்தன் எண்ணினுனே இல்லையோ தெரியாது. படைத்தலைவன் வழியில் ஆங்காங்கே சிறிது பேசினுன். விரிவிலா அறிவும், அஞ்சா நெஞ்சும் உடையவனுகிய இவனுக்குப் பேசுவதைப்போல் பெரிய வருத்தம் வேறொன்றுமில்லை. இவன் கூறிய மொழிகள் திருமூலத்திற்கு வருத்தத்தையும், சினத்தையும் தரத்தக்க கடுஞ்சொற்களாயிருந்தன. ஆயினும், அவன் தன் வெகுளியை அடக்கிக்கொண்டான். ஒருநாள்வழிச் சென்றபின் பாதை மேற்கு முகமாகவுந் தெற்குமுகமாகவும் பிரிந்தது. இங்குவந்து சேர்ந்தவுடன் படைத்தலைவன், திருமூலத்தை வணங்குகின்றவன்போல் நடித்து, அதிக இகழ்ச்சியுடன், "அழகிய ஐய! நான் மேற்றிசைச் செல்லவேண்டும்; தாங்கள் தென்திசை ஏகவேண்டும். அங்கே தாங்கள் உயர்பதவி அடைவீர்கள் என்பது திண்ணம். சிறந்த ஐயா! நான் சென்று வருகிறேன். இறுதியாக ஒன்று சொல்கின்றேன். தாங்கள் செல்கின்ற வளர்மனையில் உறைகின்ற எம் இளவரசியைக் காதலுடன் நோக்க

வேண்டா. அவ்வாறு செய்தால், நீரில் ஆழ்த்தப்பட்டோ, மரத்தில் தூக்கப்பட்டோ உயிரிழக்கநேரிடும்,'' என்று உரைத்தான்.

படைத்தலைவனுடைய கேலிமொழிகளைக் கேட்ட திருமூலம் பதிலொன்றுஞ் சொல்லாது, தன் பரியைத் துரத்தி அப்பாற் சென்றான். பெரிய உயர்பதவி தனக்குக் கிடைக்கும் என்ற நினைவே அவன் உள்ளத்திலிருந்தது. ஆகையால் அவன் பொங்கி வழிகின்ற உவகையுடன் தன் வழியே சென்றான். அன்று இராவுப்பொழுதை ஒரு சத்திரத்திற் கழித்து, மறுநாட் பொழுது விடிந்தவுடன், திருமூலம் மறுபடியும் குதிரை மேலேறித் தன் பயணத்தைத் தொடங்கினான். தொடங்கிச் செல்லுங்கால், இன்பம் நிறைந்தவனாய் அவன் பாடிக்கொண்டே சென்றான்; வழியில் ஒரு நகரத்தை யடைந்தான். அந் நகரத்தினூடே போகையில் வயிற்றுப் பிழைப்புக்கு வருந்தியுழைக்குந் தொழிலாளிகளையும், அழகும் அன்புமுடைய இளம் பெண்களையும், அருளும் அமைதியும் பெற்ற துறவிகளையுங் கண்டு, திருமூலம் முன்னினும் பன்மடங்கு இன்பம் பெற்றவனாய் அந்நகரத்தில் தங்கி, மறுநாள் காலையில் வானமலர் வாழும் அரண்மனை நோக்கிச் செல்லலானான்.

இதுவரையில் தரைமட்டத்திற் சென்ற வழி இதற்கு மேல் உயர்ந்து செல்வதாயிற்று. ஒரு குன்றின் உச்சியை யடைந்து திருமூலம் அங்கிருந்து பின் திரும்பிப் பார்த்தான். அங்கிருந்து நோக்கத் தான் விட்டு வந்த நகரத்தின் காட்சி மிக இனிதாயிருந்தது. நகரத்தினுள்ள வீடுகளில் அதிகாலையிற் புகை கிளம்புவதையும், மாடப்புறுக்கள் ஒரு கூரையிலிருந்து மற்றொரு கூரைக்குப் பறந்து செல்வதையும் பார்த்து அகமகிழ்ந்த திருமூலம்,

'இன்றுமுதல் எனக்கொரு புதுவாழ்க்கை தொடங்குகிறது,' என்று எண்ணினான். குன்றின் உச்சியில் சிறிது நேரம் நின்று நாற்புறமுஞ் சுற்றிப் பார்த்தபின், அங்கிருந்து இடப்புறமாகத் திரும்பிய பாதையைத் தொடர்ந்து அவன் ஓர் உயர்ந்த சமவெளியில் வந்து சேர்ந்தான். இச் சமவெளியில் எங்கும் பயிர்த்தொழில் நடைபெற்றதாகத் தெரியவில்லை. ஒவ்வோர் இடத்தில் மட்டும் ஆடுகள் மேய்ந்துகொண்டிருந்தன. ஆட்டிடையர்கள் பாடும் பாட்டைக் கேட்டுக்கொண்டு திருமூலம் தன் வழியே சென்றான். இவ்வாறு நெடுநேரஞ் சென்றபின், நடுப்பகல்வேளையில், அவன் ஒரு மரத்தடியில்வந்து நின்றான். இங்கிருந்து பாதை கீழ் இறங்குவதாயிற்று. தூரத்தில் செழுமை நிறைந்த ஒரு பள்ளத்தாக்கு இருந்தது. அப் பள்ளத்தாக்கில் எழில் மிகுந்த தோட்டங்களும், தோப்புகளும் சூழ்ந்த அரண்மனை ஒன்று தோன்றிற்று. அதுவே தான் போக வேண்டிய இடமென்று திருமூலத்திற்குத் தெரிந்தது.

இறங்கிச் செல்லச் செல்ல, அந்த மாளிகைக்குப் போகும் பாதையின் இருபுறத்திலும் இயற்கையழகு நிறைந்த காட்சிகள் அதிகரித்தன. அங்குள்ள ஓர் ஓடையைத் திருமூலம் கடந்து செல்கையில் வயல்களில் அறுக்கின்றவர்கள் மத்தியான வேளையில் மர நிழலில் உணவருந்துவதையும், இளைப்பாறுவதையும், நன்கு முதிர்ந்து சிவந்த பழங்கள் மரங்களில் தொங்குவதையும் பார்த்தான். இவற்றைப் பார்க்க, சிறுவனாயிருந்தபோது சோலையப்பன் வீட்டைச் சுற்றித் தான் விளையாடித் திரிந்த வயல்களுந் தோட்டங்களும் அவன் நினைவிற்கு வந்தன. அந்த ஓடையும் சோலையப்பன் வீட்டருகே சென்ற ஆற்றை நினைப்பூட்டிற்று. எல்லாம் அவனது இளம்பருவத்தை நினைவிற்குக்

கொண்டுவந்ததால், அவன் தன்னை மறந்து ஒரு சிறு பையன் போலானான்.

இளம்பருவம் நினைவிற்கு வரவே, அரசன் சோலையப்பனிடம் வந்ததும், மறுநாள் சூரன் கடிதத்துடன் தோன்றியதும், யாருமில்லாத ஓரிடத்திற் கொண்டுபோய்த் தன்னைக் கத்தியாற் குத்தியதும், பிறகு தான் உயிர் பெற்று மீண்டதும், நூல்களைக் கற்றதும், மடத்தலைவருடன் வேந்தன்முன் வந்ததும், அதன்பின் அருகில் தோன்றிய மாளிகைக்குப் போக அரசனால் ஏவப்பட்டதும் ஒன்றின்பின் ஒன்றாய் அவன் மனத்தில் தோன்றின.

## 11. திருமூலம் பெருமனையைச் சேர்தல்

இந் நினைவுகளுடன் திருமூலம் மாளிகையை நோக்கிச் சென்றான். மாளிகையைச் சுற்றிப் பெரியதோர் அகழியிருந்தது. போவோர் வருவோர் அகழியைக் கடப்பதற்காக, வேண்டும்போது இறக்கவும், வேண்டாதபோது உயர்த்தவுங் கூடிய ஒரு பாலமிருந்தது. திருமூலமும் அருகில் வரும்பொழுது இத்தூக்குப் பாலம் இறக்கப்பட்டிருந்தது. அகழியிற் காடாய்ப் பூத்திருந்த தாமரை மலர்களைப் பார்த்துக்கொண்டே திருமூலம் பாலத்தைக் கடந்தான். பாலத்தின் இறுதியில் வாயிற்காப்போன் ஒருவன் தூங்கிக்கொண்டிருந்தான். பாலத்தில் ஒருவர் நடந்துவருவது கேட்டு, அவன் திடீரென்று எழுந்து, ஈட்டியைக் கையிற் பிடித்துக்கொண்டு திருமூலத்தைத் தடுக்க முன்வந்தான். திருமூலம் அணிந்திருந்த ஆடையில் ஓர் அடையாளம் இருந்தது. அதைக் கண்டவுடன் வாயிற் காப்போன் பணிந்து, “ஐயா! எங்கள் தேவி வாழும் இவ்விடத்திற்குத் தாங்கள் வரக் காரணமென்ன?” என்று கேட்டான்.

அப்பொழுது திருமூலம், "நான் அரசனிடமிருந்து வருகின்றேனென்பது இந்த அடையாளத்தால் தெரிகின்றதல்லவா? இம்மாளிகைக்கும் இதைச் சுற்றியிருக்கும் இடங்களுக்கும் தலைவராய் விளங்குகிறவருக்கு நம் மன்னனிடமிருந்து கடிதங்கொண்டு வந்திருக்கிறேன்," என்றான்.

"நன்று, நன்று; ஆனால் ஒன்று நீங்கள் கவனிக்க வேண்டும். இந்த அரண்மனை அதிகாரி இப்பொழுதுதான் விருந்துண்ணப் போயிருக்கிறார். ஆகையால், தாங்கள் கொண்டுபோகும் கடிதத்தை அவர் உடனே படிக்கமாட்டார். தாராளமாக விருந்துண்டு, கூட உண்கின்றவர்களுடன் இனிதாகப் பேசி, அவர்களை அனுப்பும் வரையும் அவர் வேறு ஒன்றிலும் கவனத்தைச் செலுத்தமாட்டார். ஆதலால், தங்கள் குதிரையை இங்கே கட்டிவிட்டு என்னோடு சிறிதுநேரம் அமர்ந்திருந்தால் நான் பாடப்போகும் பாடல்களைக் கேட்டு நீங்கள் மகிழலாம். கவலையும் துன்பமும் ஒவ்வொருவருக்கும் வருவது திண்ணம். காலமிருக்கும் பொழுதே நமக்குக் கிடைக்கும் இன்பத்தை நுகரவேண்டுமன்றோ? எனக்குப் பற்பல பாடல்கள் தெரியும்," என்று காவலாளி சொல்லியது கேட்டுத் திருமூலம் புன்முறுவல் செய்தான்.

இதைப் பார்த்த காவலாளி, "தங்கள் முகத்தை நோக்கினால் என்னைத் தாங்கள் கேலி செய்வதுபோல் தோன்றுகிறது. சரி, இருக்கட்டும்; இளமையும் அழகும் ஒருங்கே வாய்ந்த தங்களுக்கு விரும்பியது வாய்ப்பதாக. இப்பொழுது தாங்கள் போகலாம். வழியில் வடிவழகி பூந்தோட்டத்தின் ஊடே தாங்கள் செல்லவேண்டும். அங்கே நறுமணம் நிறைந்த குளிர்ந்த காற்று வீசும். வடிவழகி என்ற ஓர் அம்மையார் ஒரு காலத்திலிருந்தார்கள். அவ்

வம்மையின் பொருட்டுத்தான் இனிய வாசனை கமழும் தோட்டங்களும் குளிர் நிழல் தருஞ் சோலைகளுஞ் சூழ்ந்த இந்த உயர்மனை ஆதியிற் கட்டப்பட்டது. அந்த அம்மை எத்தனையோ மக்களுடைய உள்ளத்தை நோக வைத்தார்கள். நெடுநாளிருந்து பழி பல செய்தார்கள். இது குறித்து அதிகமாக நான் பேசுவது தவறாகும்," என்றான்.

திருமூலம் சிறிது சிரித்து, "நண்பனே! இவ் அரண்மனையைவிட்டு யான் போகுமுன் உன்னுடைய பாடல்களைக் கேட்கத்தான் போகிறேன். இப்பொழுது நீ சொன்ன வடிவழகி பூந்தோட்டத்திற்கு வழியைக்காட்டு," என்று இயம்பினான். காவலாளன் திருமூலத்திற்கு வழியைத் தெளிவாகக் கூறியதுமன்றி, அரண்மனை அதிகாரியாகிய அமரநாதன் விருந்துண்டு எழுந்து வருமளவும் திருமூலம் அத்தோட்டத்திலேயே இருப்பது நல்லதென்றும் சொன்னான்.

அங்கிருந்து திருமூலம் நீங்கிக் காவலாளன் குறித்த விடத்தில் வந்து சேர்ந்தான். சொல்வதற்கரிய பொற்பு மிகுந்த பூந்தோட்டத்தைப் பார்த்தவுடன் திருமூலம் என்று மறியாத வியப்படைந்து நின்றான். உவப்பையூட்டுகின்ற ஒரு சொப்பனங் காண்கின்றவன் அதனினின்றும் விழித்து எழ எங்ஙனம் பின்வாங்குவானோ, அதே நிலையில் திருமூலம் அத்தோட்டத்தைவிட்டு வெளியே போக விரும்பாதவனாய் அங்குமிங்கும் உலாவித் திரிந்தான். திரிந்தவன், தெள்ளிய புனல் பெருகியோடும் ஊற்றருகே வந்து அதில் துள்ளி விளையாடுகின்ற மீன்களைப் பார்த்துக்கொண்டே தான் சிறுவனாயிருக்கும் பொழுது கற்றுக்கொண்ட சில பாடல்களைப் பாடினான். நீண்டநேரம் இவ்வாறு அவன் பாடிக்கொண்டிருக்கவில்லை.

மூன்று நாள் வழிகடந்த களைப்பினாலும், தோட்டத்தில் வீசிய குளிர்ந்த காற்றினாலும் அவன் விரைவில் அயர்ந்த தூக்கத்தில் ஆழ்ந்தான்.

## 12. கண்வளர் காளையைக் கார்குழல் காணல்

இங்ஙனமிருக்க, வானமலரும் அவளுடைய உயிர்த் தோழி ஒருத்தியும் அத்தோட்டத்திற்கு வந்தார்கள். வந்த இருவரும் உடன்பிறந்தவர்போல் ஒருவரை யொருவர் துரத்தி விளையாடி அங்குமிங்குந் திரிந்தார்கள். இதனால் சற்றே களைத்து, காற்றாற் கலைக்கப்பட்ட கூந்தலையும் ஆடைகளையுந் திருத்திக்கொண்டு இருவரும் மெள்ள நடந்தார்கள். தோழி வானமலரிடம் யாதோ ஒன்றைப் பற்றி எடுத்துரைத்தாள். அதைக் கேட்குங்கால் வானமலர் பன்முறை விழுந்து விழுந்து நகைத்தாள்! சில வேளைகளில் வெட்கத்தால் நாணமடைந்தாள்.

இவ்வாறு இருவரும் பேசிக்கொண்டு திருமூலம் கண்வளர்ந்த இடத்தருகே வந்தனர். தன்னைச் சுற்றி நிகழ்வதைச் சற்றும் உணராதவனாய்த் திருமூலம் தூங்கிக் கொண்டிருந்தான். யாரோ ஒருவன் தூங்குவதைக் கண்ட தோழியும், வானமலரும் அவன்யாராயிருக்கக் கூடுமென்று ஊகித்து அறிய முயன்றார்கள். அதன்பின் துணிவுடைய தோழி சரேலென்று முன்னோடித் தூங்குகிறவனைச் சற்றுநேரம் உற்று நோக்கியபின், அதிக வியப்புடனும், உவப்புடனுந் திரும்பி இளவரசியிடம் ஓடிவந்தாள். "ஏதோ காணாத ஒன்றைக் கண்டவள்போல், விழிக்கின்றாயே! என்ன செய்தி?" என்று வானமலர் ஓடிவந்த தோழியைக் கேட்டாள்.

"உன்னை மணக்கத் தகுந்த சிறப்பு வாய்ந்த ஒரு நாயகனை அழைத்துக்கொண்டு வருவேனென்று உன் தந்தை சொன்னது நினைவிலிருக்கின்றதா? அந்த இளவரசர் உன் தந்தை வருவதற்கு முன்னுகவே தனியாக வந்து, இங்கு உன்னைக்கண்டு காதல் மொழிகள் பேசி மகிழ்வாரென்று நான் உனக்குச் சொன்னேன் அன்றோ? இதோ! இங்கு வந்து பார்; அவ் விளவேந்தர் ஊற்றருகே கண்வளர்கின்றார். அவர் விழிப்பாரென்று நீ அச்சமுற வேண்டா. அவர் அயர்ந்து தூங்குகிறார்," என்று தோழி மொழிந்தாள்.

"நித்திரை செய்கின்ற ஒருவரைப் பார்க்க, நீ என்னை யழைப்பது தகுதியன்று. இவ்விடத்தைவிட்டு நாம் உடனே ஏகுவோம். என் தந்தையிட்ட கட்டளையை நான் மீறி நடவேன். தோழி, ஒன்று கேள். என் தந்தைக்குப் பின், இந்நாட்டை யானே ஆளவேண்டுமென்பது உனக்குத் தெரியும். மணஞ்செய்து கொள்ளாமல் அரசாட்சி செய்யவே யான் விரும்புகின்றேன். வா போகலாம்," என்றாள் வானமலர்.

"நல்லது, நல்லது; இதுவரையில் நீ கண்ட ஆண் மக்கள் யாவரும் உன்னால் விரும்பப்படத் தக்கவர்களா யில்லாதது பற்றி, கன்னியாய்க் காலங்கழிக்க நீ எண்ணி யிருக்கலாம். ஆனால், நீ விரைந்து வந்து இவரைப் பார். விண்ணிலிருந்து வந்தவர் என்று நினைக்கத்தக்க அத்துணை அழகுடையவரா யிருக்கின்றார். ஒருவேளை நீ வந்து பார்ப்பதற்குமுன் அவர் விண்ணில் மறைந்துவிட்டால் என் செய்வது?" என்று தோழி கூறி, இளவரசியின் கையைப்பிடித்து இழுத்தாள். அவளும் கூடப்போக இசைந்தாள். வானமலர் யாது காரணத்தினாலோ திருமுகத்தைப் பார்க்க ஆவலுடையவளானாள்.

இருவரும் நடந்து ஊற்றண்டை வந்தார்கள். தன்னை யறியாது வானமலர்க்கு நாணம் மேலிட்டது. அண்மையில் வந்து திருமூலத்தைப் பார்த்தபொழுது அவன் கண்ணிறைந்த அழகனுயிருத்தல் அறிந்து வானமலர் இன்பக் கடலில் ஆழ்ந்தாள். தான் மகிழ்வுடன் மணப்பதற்குரிய காதலன் அவன்தான் என்று அவளுக்குத் தோன்றிற்று. தனக்குக் கணவனுகப் போகின்றவனை உற்று நோக்குதல் தவறுகாது என்ற நினைவுடையவளாய், அவள் அங்கேயே நின்று நெடுநேரம் அவனது அழகை வியந்தாள். அவ்விடத்தைவிட்டுப் பெயர்ந்து செல்வதற்கு அவளது மனம் இசையவில்லை. என்றாலும், தோழியுடன் தனியே தான் அங்கிருப்பதைப் பிறர் காண நேரிடின், அதனுல் தீங்கு நேருமென்று எண்ணி, அவள் தன் தோழியைக் கூப்பிட்டாள். தோழியோ, துன்பம் நிறைந்தவளாய் அங்கேயே நின்றுள். ஏனெனில், வானமலர் திருமூலத்தின் ஒளிவிடும் முகத்தைக் கண்டு இன்பக் கடலில் மூழ்கி நிற்கையில், தோழி தூங்குகின்றவனது இடையிற் செருகப்பட்டிருந்த அரசனது திருமுகத்தை எடுத்துப் படித்தாள்; இக்கடிதமே அவளைத் துன்பத்தில் மூழ்கச் செய்தது. வானமலர் கூப்பிட்டபொழுது தோழி கடிதத்தை அவள் கையிற் கொடுத்து, "மடமயிலே! இதைப் படி; இதன் பொருளை அறிந்தபின், செய்யவேண்டியதைக் கடிதிற் செய். பேரழகு வாய்ந்த இவ்விளைஞர் உயிரிழக்கவேண்டுமென்று கடிதத்திற் கண்டிருப்பது, அந்தோ! கொடிது! கொடிது!!" என்றுள்.

வானமலர் கடிதத்தை வாங்கிப் பார்க்கலானுள். அதில் எழுதியிருந்ததாவது:—

"நம் பிரதிநிதியாகிய அமரநாதருக்கு எல்லா நன்மையுமுண்டாக வாழ்த்தி, வேந்தன் எழுதுவது:—

"இதைக் கொண்டுவரும் நம் கொடிய பகைஞனை உடனே கொன்றுவிடுக! கொல்வதுமட்டும் போதாது; நீர் உயிரோடிருந்து நன்கு வாழ வேண்டுமாயின் இவனது தலையை ஓர் ஈட்டியிற் பாய்ச்சி அரண்மனையிலிருந்து இரு நூறு அடிக்கப்பால் எல்லோருங் காண அதை நாட்டி வைத்தல் வேண்டும். நாம் இடும் இக்கட்டளைகள் நிறை வேற்றப்பட்டனவா என்று கடிதில் வந்து பார்ப்போம். இங்ஙனமே அரசனது பகைவரெல்லோரும் ஒழிவாராக," என்பதே.

## 13. கொலைக்கடிதம் மணக்கடிதமாதல்

வானமலர் இதைக் கண்ணுற்றுத் திகைத்தாள். தன் தந்தையின் பெயரும் முத்திரையும் கடிதத்தில் இருந்தும் தந்தை விரும்பிய வண்ணம் அந்த இளமகன் இறப்பது அவளுக்கு உடன்பாடாக இல்லை. திருமூலத்தின் மேல் அவளுக்குப் பிறந்த காதல் வரவரப் பெருகிற்று. தோழியை நோக்கி, "இங்கே நீ தனித்திருந்து இவருக் கொரு தீங்கும் வாராது பார்த்துக்கொள். தானாக அவர் துயில் நீங்குவாராயின் நான் இங்கு வருமளவும் அவரை வேறிடஞ் செல்லவிடாது இங்கேயே மறைந்திருக்கச் சொல். இதிற் சிறிது தவறி நடப்பாயாயினும் நீ கொலை யுண்பாய் என்பதை அறிந்துகொள். தோழீ!...நானிப் பொழுது சொன்னதைப் பொறுத்துக்கொள். என்னை நானே மறந்து பேசுகின்றேன்; உன்னைப்போல் எனக் கருமையானவர் எவரிருக்கின்றார்? இன்று நான் இருக் கும் நிலையில் எனக்குத் துணைபுரிந்து, இவரையும் என்னை யுங் காப்பாற்றுவாயாயின், நீயும் விரைவில் என்னைப் போல் ஓர் அரசியாவாய்," என்று வானமலர் கூறினாள். கூறியவள் அக்கணமே விரைந்தோடி அரண்மனைக்குச்

சென்று, தன் தந்தையின் பெயரும் முத்திரையும் பொறித்த ஒரு கடிதத்தை எடுத்துச் சிறிதும் நடுக்க மின்றிப் பின்வருமாறு எழுதத் தொடங்கினாள்:—

“நமது அரண்மனையைக் காக்கின்ற அமரநாதருக்கு எல்லா நன்மைகளும் பெருகுக. அன்பரே! நம் அருமை மகள் வானமலரின் திருமணத்தைக் கடிதில் நடத்திவைக்க நாம் நெடுநாளாக முயன்றுகொண்டிருப்பது நீவிர் அறிந்ததே. முயற்சிகள் இதுகாறும் பயனில்லாது போயின. இப்பொழுதேனும் எடுத்துக்கொண்ட முயற்சி கைகூடியதைப்பற்றி அகமகிழ்கின்றோம். எவ்வகையான இடையூறுமின்றித் திருமணம் உடனே நிகழும்பொருட்டு, வானமலருக்கு உருவத்திலும் குணத்திலும் குலத்திலும் ஒத்தவனும், நம்மால் மிகவும் விரும்பப்படுபவனுமாகிய இந்த நன்மகன் வசமாய் இக் கடிதத்தை உமக்கனுப்புகின்றோம். இவனுக்கு வானமலரை உடனே மணமுடித்திடுக! மணமானபின், அங்குள்ளோர் அனைவரும் இவ்விள மகன் எனக்குப்பின் ஆளுதற் குரியவன் என்பதை நன்குணர்ந்து அதற்கேற்ற வண்ணம் அவன்பால் ஒழுகச்செய்தல்வேண்டும். நாமிடும் இக்கட்டளைகளை நீவிர் குறைவின்றி நிறைவேற்றி எமதன்புக் குரியவராய் விளங்குவீர் என்று நம்புகின்றோம்.”

இதை அவள் எழுதி முடித்தபோது, அரண்மனையினுள்ளிருந்து யாரோ வருவது கேட்டு நடுக்குற்றுத் திடீரென எழுந்து, மாடத்தை விட்டிறங்கிப் பூந்தோட்டத்திற்கு நேரே ஓடினாள். வழியில் அவள் காதிற்பட்ட ஓசைகளெல்லாம் அவளை மெய்விதிர்க்கச் செய்தன. என்றாலும் அவள், யார் கண்ணிலும் படாது விரைந்து சென்று, திருமூலம் துயில் கொண்ட ஊற்றருகே வந்து சேர்ந்தாள்.

அவ்விடத்திற் காவல்செய்து நின்ற தோழி, அரசகுமாரியின் கையிலிருந்த கடிதத்தை வாங்கி ஒரு சிறிதும் மயங்காது, சுணங்காது அதைத் திருமூலத்தின் இடையிற் செருகினாள். அப்பொழுதுதான் அவன் யாதோ பேசிக்கொண்டு இடம் வலமாய்த் திரும்பிப்படுத்தான். இது காறும் உறுதியும் துணிவுமுடையவளாய் இருந்த அரசகுமாரி, இப்பொழுது மிகுதியும் அஞ்சி அகமுடைந்து செயலற்று நின்றாள். இந்த நிலையில் வானமலர் உறுதியைக் கைவிட்டு, உள்ளம் உடைந்து நிற்பாளாயின் பொல்லாங்கு நேருமென்று நன்கறிந்த தோழி, அவளுடைய கரங்களை இறுகப் பற்றிக்கொண்டு அவளை அசைத்து உற்றுநோக்கினாள்.

"தோழீ! என் னுள்ளம் படும்பாடு என்னாற் சொல்ல வியலாது. இதுவரையிற் பல்லைக் கடித்துக்கொண்டு இவற்றைச் செய்துவிட்டேன். இப்பொழுது எனக்கிருக்கும் நாணத்தையும் அச்சத்தையும் என்னால் தாங்கமுடியாதென்று நினைக்கிறேன். இறந்துவிடுவதே நலம் என்று தோன்றுகிறது. ஐயோ! என்னை நீ இங்கு அழைத்துக்கொண்டு வந்திராவிட்டால், இவையெல்லாம் நேர்ந்திராதே!" என்று பைந்தொடி இரங்கினாள்.

"தலைவியே! இப்பொழுது பின்வாங்கினால், நாமிருவரும் மாள்வது திண்ணம். அமரநாதனிடம் அச்சமின்றி நடந்துகொண்டால் எல்லாம் நன்றாகவே முடியும்," என்றனள் தோழி. இவ்வாறு கூறிவிட்டுத் தோழி, அரசன் மகளைத் தோட்டத்தில் மறைவான ஓரிடத்திற்கு அழைத்துச்சென்று அமரச்செய்தாள். அரசகுமாரி இப்பொழுது இருந்த நிலையில் அவளுக்குச் சிறிது உணவுகொடுத்து ஊக்கமுண்டாக்குவது நல்லதென்று தோழி யறிந்து, அரண்மனைக்கு ஓடி, இனிய தின்பண்டங்களும் தீங்கனி

களுங் கொண்டுவந்தாள். வரும்வழியில் திருமூலம் கண் வளர்ந்த இடத்தை உற்றுநோக்க, அவன் அங்கிருந் தெழுந்து வேறு எங்கேயோ சென்றதைத் தோழி கவனித் தாள். பின், தலைவியிடம் வந்து, அவளை உண்ணவும் பருகவும்செய்து, "செய்ததைச் செய்தாயிற்று; அதுபற்றி இனி வருத்தமுறுவதும் அஞ்சுவதும் வீண்; காதல் அச்சம் அறியுமோ? இந்நாள் நன்னாள் அன்றோ?" என்றாள்.

தோழி பகர்ந்த மொழிகளைக்கேட்ட வானமலர், சிறிது கலக்கந் தெளிந்து உண்ணவும் பருகவுந் தொடங்கி னாள். சோர்ந்த அவளது முகம் சிறிது மலர்ந்தது. தோழி அவளை நோக்கி, "எப்பொழுதோ நான் கேட்ட ஒரு சொல் என் மனத்தில் தங்கியிருக்கிறது. அச்சொல்லை யான் கனவிற் கேட்டேனோ, நனவிற் கேட்டேனோ அறி யேன். ஆனால் அஃது என் மனத்தைவிட்டு அகலவில்லை. அஃதென்னவென்றால், வயது சென்ற ஒரு துறவி நமது அரசனிடத்தில் வந்து, 'உனது செல்வியை மணந்து கொள்ள வருபவன் ஓர் அரசன் மகனாயிருக்கமாட்டான். அவன் ஓர் ஏழைக் குடியானவன் மகனாயிருப்பான்,' என்று சொன்னதுதான். இதைப்பற்றி நீ யாது நினைக் கின்றாய்?" என்றாள்.

வானமலர் மிகவும் முகஞ் சிவந்து, "இத்தகைய பல கதைகளை யான் கேட்டிருக்கிறேன். ஆனால் ஒன்று நான் அறிதல்வேண்டும். அரச குடும்பத்தில் பிறவாத ஒருவனை நான் மணந்துகொள்வது என்மீது பெருங் குற்ற மாகுமோ?" என்றாள்.

தோழி இதற்கு விடையாக, "அன்று, அன்று; கடவுளே அவரை வேந்தனாக்கத் திருவுளங் கொண்டுளார். அவர் திருவுள்ளத்திற்கிசைய நடப்பது நன்று. நம்மால் அதை எதிர்த்து நடக்கக்கூடுங்கொல்லோ? இங்கு உன்

தந்தையால் ஏவப்பட்டு வந்து உன்னால் காதலிக்கப்பட்டு அதன் பயனாக உயிர் தப்பி நிற்கும் இவ்விளமகன் இறைவனருள் நிரம்பப்பெற்றவனாக வேண்டும்,'' என்று கூறிக் கொண்டு வருகையில், அவர்களிருந்த இடத்திற்கப்பால் சற்று தூரத்தில் அரண்மனையைச்சேர்ந்த பலர், வானமலரை மணந்துகொள்ள அரசன் அனுப்பிய மணமகனைப் பற்றிப் பேசிக்கொண்டு சென்றனர். திருமூலத்தின் இடைக்கச்சையில் தோழியும் வானமலரும் செருகிய கடிதம் அமரநாதன் கையிற் சேர்ந்துவிட்டதென்று இதனால் அவ்விருவருக்கும் நன்கு விளங்கிற்று.

## 14. துறவியின் வாக்கு நிறைவேறுதல்

சிறிதுநேரத்தில் அரண்மனையும் அதைச்சார்ந்த இடங்களும் அழகு செய்யப்பட்டு விளங்கின. பெருஞ் செல்வர்களும் பிறரும் பட்டாடைகள் அணிந்து மணிபதித்த பொன்னணிகள் பூண்டவராய் அங்குமிங்கும் விரைந்து சென்றனர். ஒருவர் இருவர் வானமலரிடம் வந்து அவள் அடையப்போகும் இன்பநிலை குறித்து அவளை வாழ்த்தினர். இப்பொழுது வானமலர் அமைதியும் உறுதியும் உடையவளானாள். அவள் அரண்மனைக்குட் சென்று அத்தாணி மண்டபத்திற் புகுந்து அங்குள்ள மேடையில் ஏறி அமரநாதன் முதல் அதிகாரிகள் அனைவரும் பெருஞ் செல்வர்களும் பிறரும் அங்கே கூடியிருப்பதைக் கண்டாள். தான் காதலித்த இளமகனும் அங்கிருந்தான். அவனும் அங்கு நிகழ்ந்தவற்றைக் கண்டு வியப்புற்றவனாகத் தோன்றவில்லை. அரசன் மகளைத் தான் மணக்கப் போவதை அவன் ஒரு விந்தையாக எண்ணவில்லை போலும்!

"எனது வாழ்க்கையில் இதுவரையில் அநேக அற்புதங்கள் நடந்திருக்கின்றன. ஆனால், இப்பொழுது என் கண்முன் நான் காண்கின்ற காட்சி எல்லாவற்றிலும் மிகுந்த வியப்பாயிருக்கிறது! ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் இன்பமுந் துன்பமும் வந்துதான் தீரும். எனக்கு இனிமேல் நேரப்போவது என்னவென்று அறியேன். இன்பம் வந்தாலும் துன்பம் வந்தாலும் யான் உறுதியாயிருந்து எல்லாவற்றையும் பயன்படுத்திக்கொள்வேன்," என்று இந்த வகையில் திருமூலத்தின் எண்ணங்கள் சென்றன.

திருமூலம் அமர்ந்திருந்த மேடைக்கு வானமலரும் வந்துசேர்ந்தாள். இருவரும் ஒருவரையொருவர் பார்த்தனர். அவள் சிறிது திகைத்து விழித்தாளாயினும் திருமூலத்தின்மீது தனக்கு விருப்பம் உண்டென்பதைத் தன் பார்வையால் உணர்த்தினள். இப்பொழுது அமரநாதன் எழுந்து, வேந்தனிடமிருந்து திருமூலங் கொண்டுவந்த செய்தியை, மண்டபத்தில் கூடியிருந்த அனைவருங் கேட்குமாறு மிகத் தெளிவாகப் படித்தான். அதன்பின் வானமலர் எழுந்து முன்வந்து, தன் தந்தை இட்ட கட்டளையைத் தலைமேற்கொண்டு நடப்பதே தனது கடமையாகுமென்று இனிது நவின்றாள்; அவள் கூறியதைக்கேட்டு உவந்து திருமூலம், "இவ்வளவு பெரிய நிலைமைக்கு என்னைத் தகுந்தவனென்று கருதிய வேந்தன் பொருட்டும், இனிமை விளங்கும் முகத்துடன் என்னை நோக்கும் உன் பொருட்டும் யான் என் உயிரைக் கொடுப்பதற்கும் இசைவேன்," என்றியம்பினான்.

அச்சமயம் முரசுகள் அதிர்ந்தன; குழல்கள் ஒலித்தன; பாடல்கள் எழுந்தன; குருமார் வந்து மணவினை

நிகழ்த்த ஒன்று கூடினர். எல்லோருஞ் சேர்ந்து வான மலரையும் திருமூலத்தையும் மணவறைக்கு அழைத்துச் சென்றனர். நிற்க,

வானமலரை மணக்கத் தான் ஏற்பாடு செய்திருந்த மணமகன், ஒரு சண்டையில் உயிர்துறந்து பிணமாகக் கிடக்கின்றான் என்று வந்த ஒரு செய்தியைக் கேட்டு அரசன் தனது தலைநகரில் சாலவும் வருத்தமுற்றவனாய் என்ன செய்வதென்று தெரியாமல் ஏங்கியிருந்தான். வானமலர் தன்னைவிட்டு நீங்கியபொழுது ஒருமாத காலத்திற்குள் அவளுக்குரிய மணவாளனோடு அவளை வந்து பார்ப்பதாகவன்றோ அரசன் சொல்லியிருந்தான்! அக்கால வரம்பிற்குள், தன் மருமகனாக்க விரும்பிய கோமகன் இறந்துவிட்டதால், அரசனுக்குண்டான திகைப்பு இவ்வளவு அவ்வளவன்று. என்றாலும் அவன் ஒரு துணிவிற்கு வந்தான். தன் மகளிடஞ் சென்று ஒரு ஆண்டு வரையில் அவள் தன் கணவனுக்காகக் காத்திருக்க வேண்டுமென்று அரசன் கூறத் தீர்மானித்தான். ஆகையால் தான் குறித்த ஒரு மாதகாலம் ஆனபின் ஒருநாள் காலையில் தன் மகள் உறைகின்ற வளர்மனைக்கு வேந்தன் புறப்பட்டான். செல்லும் வழியில், தன் மகள் வாழ்ந்து வந்த அரண்மனைக்கு அருகில் திருமூலத்தின் தலை ஈட்டி முனையில் தோன்றுமென்பதை அவன் நினைத்துச் சிறிது களிப்படைந்தான். இதனால் அவன் கவலை நீங்கியவனாய் மெல்லப் பாட்டுப் பாடிக்கொண்டு சென்றான்.

அரண்மனையை நெருங்கி வரவர, குழலோசைகள் அங்கு முழங்குவனவற்றை அரசன் கேட்டு, அதன் உண்மையை அறிந்து கொள்ளாது, "நாம் இவ்வளவு தூரத்திலிருக்கும்பொழுதே அரண்மனையிலுள்ளோர் நமது வரு

கையை அறிந்து குழல்கள் ஊதித் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவிக்கின்றார்கள். இது வியக்கத் தகுந்ததன்றோ?'' என்று கூடவந்தவர்களைக் கேட்டான். இன்னுஞ் சிறிது அரண்மனையை அணுக, குழலோசையுடன் சுவை நிறைந்த பாடலோசையும் மன்னன் செவியிற்பட்டது. எதன் பொருட்டுப் பாடலும் குழலும் முழங்கின என்று அரசன் சிறிது கருதியபின், "நிகரற்ற ஓர் இளமகனைத் தனக்குக் கணவனாகக் கொண்டு வருவேன் என்று என் மகள் எதிர் பார்க்கின்றாள். ஆதலால் அவள் என் வருகையைக் கண்டு அகமகிழ்ந்து இசை முழக்கத்துடன் நம்மை வரவேற்கின்றாள்,'' என்று மொழிந்தான். அரண்மனைக்கு மிக அண்மையில் வந்துவிட்டதால், திருமூலத்தின் தலை எங்கே வைக்கப்பட்டிருக்கிற தென்பதை அறிய வேந்தன் நாற்புறமுஞ் சுற்றிப் பார்த்தான். ஒரு தலையும் அவன் கண்ணிற் படவில்லை. துறவி தனக்கு முதலிற் கூறிச் சென்ற அந்த மொழி நிறைவேறுமென்றே மன்னன் திண்ணமாய் நம்பியிருந்தான்.

வேந்தனும், அவன் பரிவாரங்களும் அரண்மனை வாயிலை அடைந்தார்கள். சிறிது தூரஞ் சென்றவுடன் அவர்களுக்கு முன் ஓர் ஊர்வலம் வந்தது. முதன் முதல் சிறு பெண்கள் பொற்சரிகையுடைய ஆடைகளணிந்து இருபுறமும் வர, அவர்கட்குப்பின் இசை வல்லோர் பலர் கருவிகளுடன் இனிய கீதங்கள் பாடி நடக்க, அவர்கள் பிறகே பெருமையான உடையணிந்த பெருஞ்செல்வர்கள் தோன்றினார்கள். இதைக்கண்ட அரசனுக்கு அளவிட முடியாத ஐயங்கள் எழுந்தன. இதற்குள் ஊர்வலத்தின் நடுவில் தன் மகளும் திருமூலமும் அழகிய ஆடையணிகளுடன் தலைகளில் முடிகளணிந்து, காதலனும் காதலியுமாய் வருவதையும் அவர்களுக்குப்பின் பொறுப்புடைய தலை

வர்கள் பணிவுடன் நடப்பதையும் அரசன் கண்டான்; கண்டதும் பதைபதைப்பினால் ஒன்றும் பேசமுடியாதவனாய் அப்படியே அசைவற்று நின்றான். அவனுடைய கண்களில் சினம் என்கிற நெருப்பு கொழுந்துவிட்டு எரிந்தது. தன்முன் தோன்றியவர்களைப் பார்த்து, "நீங்கள் என்முன் நடிக்கின்ற இந்த நாடகத்தின் பொருள் தான் யாதோ!" என்று உறுமினான். இதற்கு மறுமொழிகூற எவரும் துணியவில்லை. வானமலர் மிகுதியும் நடுங்கித் திருமூலத்தின் கையைத் தன் இருகரங்களாலும் இறுகப் பற்றிக்கொண்டு யாதோ சில சொற்களைப் பேசினாள். அவள் சொன்னது எவருடைய காதிலும் தெளிவாய்க் கேட்கவில்லை. அப்பொழுது வேந்தன் அமரநாதனை நோக்கி, "இவ்விளைஞன் சில நாட்களுக்குமுன் இடையூறின்றி இங்கு வந்து சேர்ந்தான் போலும்!" என்று வினவினான்.

"ஆம்; அரசர் பெருமானே! அவர் வந்தவுடன் நான் தாமதமின்றி மணவினை நிகழ்த்த எற்பாடுகள் செய்தேன். தாங்கள் எழுதி அவர் கையிற் கொடுத்த கடிதத்தில் கூறப்பட்டவற்றை அணுவளவும் தவறின்றி நிறைவேற்றி விட்டேன்," என்றான் அமரநாதன்.

"அங்ஙனம் நீர் செய்தது நன்று; உமது கடமையை நீர் நிறைவேற்றினீர். ஆயினும் உம்மிடமிருந்து யான் அறியவேண்டிய தொன்றுண்டு. வானமலர்க்குக் கலியாணமாய் இன்று எத்தனை நாளாயிற்று," என்று மன்னன் வினவினான்.

"அரசர்பிரானே! மணமாகி இன்று பதினொரு நாளாயிற்று," என்று அமரநாதன் விளம்பினான். வேந்தன் ஒன்றும் பேசவியலாது தலையைத் தாழ்த்தி நினைவில் ஆழ்ந்

தான். எல்லோரும் அரசனை உற்று நோக்கினர். நீண்ட நேரம் தலையைத் தாழ்த்தி நினைவில் ஆழ்ந்திருந்த மன்னன், இறுதியில் தன் தலையை உயர்த்தி, உரத்த குரலில் "இவர்களிருவரும் இணைக்கப்பட்டது பற்றி யாவரும் என்னைப் போல் மகிழ்க! நமது கட்டளையைச் சிறிதும் தவறாது நிறைவேற்றிய அமரநாதரே! நீர் நமது பேரன்புக்குரியவரானீர். முன்னிலும் உயர்நிலையில் உம்மை வைப்பேன். நிற்க, நம்முடைய மருமகனாகிய இத்திருமூலம் நமக்குப்பின் அரசாளப்போகின்றவனாதலின், இனி என்னுடன் ஒன்றாக அமர்ந்து ஆளுகை செய்வான். இனி யான் ஒன்றையுந் தனியாகச் செய்யப்போவதில்லை. இத் திருமூலத்தின் குலப்பெருமையை யான் நன்கு அறிவேன். அவன் இனிச் செங்கோல் செலுத்தி நாட்டை நலம்பெறச் செய்வான்," என்று சாற்றினான். இவ்வாறு புகன்றபின் மன்னன் தன் குதிரையை விட்டிறங்கி மருமகனையும் மகளையும் தன் இரு கைகளாற் பற்றிக்கொண்டு ஊர்வலத்திற் கலந்து செல்வானாயினான். செல்லுங்கால் அவன்,

"நெடு நாட்களுக்கு முன் துறவி வந்து கூறிய மொழியைக் கேட்டபின், அது நிறைவேறாது தடுக்கும் பொருட்டு என்னாற் கூடியதை எல்லாம் செய்து இளைத்தேன். அதனால் யாது பயன்? என் நெஞ்சைப் புண்ணாக்கிக் கொண்ட தொழிய வேறு பயன் பெற்றிலேன். இதை விடுத்து யான் வாளா இருந்திருப்பேனாயின் அழகிய எனது மனையில் எத்துணை இன்பத்துடன் யான் வாழ்ந்திருப்பேன்! திருமூலத்தின் விதியைத் தடுக்க முயன்றதற்குப் பதிலாக யான் எதிரிகளுடன் போரிட்டு வெற்றி பெற்றுப் புகழைத் தேடிக்கொண்டிருக்கலாமே! இவற்றையெல்லாம் யான் இழந்தேனே! என்ன மதியின்மை! என்ன மதியின்மை! சென்றது செல்லட்டும். இனி உயிரோடிருக்

கும் நாட்களையேனும் நான் முறையாகக் கழிக்க முயல்வேன். இறந்ததை எண்ணி வருந்தியும், வருவதை நினைத்து அஞ்சியும் ஆவி புழுங்கி அல்லற்படேன்," என்று தன்னைத் தானே தேற்றிக்கொண்டான்.

குடிகளுக்குப் பெருமகிழ்ச்சி யுண்டாகத் திருமூலம் முடிசூட்டப்பட்டான். அவனைப்போல் ஏழைகளுக்குதவிய அரசன் எவனுமிருந்ததில்லை. வானம் சுரக்க, வளங்கள் பெருக, அறங்கள் பரவத் திருமூலம் பன்னாள் வானமலருடன் அரசு செலுத்திவந்தான்.

## வில்லியம் மாரிஸ் கதைகள்

| | | |
|---|---|---|
| அரசாளப் பிறந்த மகன் | 0 | 8 |
| வையகத் துறக்கம் | 0 | 10 |
| இளஞ்சேய்க் கோல்லி | 0 | 10 |
| வில்லியம் மாரிஸ் கதைக்கோத்து | 2 | 4 |

கழக வெளியீடு : ௬௯

# வையகத் துறக்கம்

எனும்

## ஆங்கில நூலின் சில பகுதிகள்

ஆசிரியர் :

திரு. க. ப. சந்தோஷம், பி.ஏ., எல்.டி.,

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி :: சென்னை - 1.

9th Edition: June, 1945.
Reprints: March, 1946; March, 1947; June, 1955.

# SOME STORIES

From

# THE EARTHLY PARADISE

# VAIYAKATH THURAKKAM

[*Copy-Right*]

*Published by*

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY, MADRAS-1.

*Head Office*:

24, EAST CAR STREET, THIRUNELVELI.

Appar Achakam, Madras-1.—C. 1200.

# முன்னுரை

ஆங்கிலப் புலவராகிய உவில்லியம் மாரிஸ் (William Morris) இயற்றிய வையகத் துறக்கம் (Earthly Paradise) என்னும் நூலின் உரை நடையொன்றைப் பின்பற்றி, இச்சிறுகதைகள் மொழிபெயர்க்கப்பட்டன. இவற்றில் நமது நாட்டின் பழக்க வழக்கங்களுக் கேற்பச் சில வற்றை மாற்றி இருக்கின்றேன். ஆங்கிலங் கற்றோர் அதை எளிதில் அறிந்துகொள்வர். ஊழின் வலியையும் முயற்சியின் பயனையும் வலி யுறுத்தும் இக்கதைகள் ஆங்கில நூல்களின் சுவையைத் தமிழில் எத்துணை காட்டக்கூடு மென்பதைச் சிறு அளவிலறிவான் இதைமொழி பெயர்த்தேன். கற்போர் இவற்றில் இனிமை யொன்றுங் காணாராயின் அது மொழிபெயர்ப் பின் குற்றமேயாகும்.

க. ப. ச.

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| க. | செருக்கினுற் சிறப்பிழந்த மன்னன் .... | 1 |
| உ. | பொற்கனிகள் .... | 22 |
| ௩. | கற்பதித்த காலணி .... | 35 |
| ச. | ஞாயிற்றின் கீழுந் திங்களின் மேலும் .... | 52 |
| ரு. | தையல் நாயகம் .... | 63 |

# வையகத் துறக்கம்

## க. செருக்கினுற் சிறப்பிழந்த மன்னன்

### I

பண்டை நாட்களில் மிகத் தொலையிலுள்ள நாடொன்றில் ஒரு வேந்த னிருந்தான். இந்நாளிலுள்ள பேரரசர்களைவிட அவன் அதிகச் செல்வமுடையவனுய் நலமும், மகிழ்ச்சியும் நிறைந்து புகழுடன் ஆட்சி செய்துவந்தான். அவனது ஆளுகைக் குட்பட்ட முதற்குடிகளும்[1] அவனுடைய சொல்லிற்கு அஞ்சி நடுங்குவார்கள். அளவிற்கு மிஞ்சிய அகந்தை பொங்கி வழியும் நெஞ்சினனுகிய இவன் முன் ஏவலின்றி எவரும் வாய் திறக்கலாகாது. பல நாடுகளைக் கைக்கொண்டு உயர்ந்து விளங்கிப் பன்னுட்கள் தன் மனைவியுடன் அரசு செலுத்திவந்த இவன், இளவேனிற் பொழுதில் ஒருநாட் காலையில் தனது மாட்சியைப்பற்றியும், அரிய செயல்களைப்பற்றியும் பெருமையுடன் நினைத்துக்கொண்டு படுத்திருந்தான். அவன் பேச்சிற்கு மறு பேச்சுப் பேசுவதற்கும் அவனுடைய குற்றங்களை எடுத்துக் காட்டுவதற்கும் எவரும் எப்பொழுதுந் துணிந்ததில்லை; ஆகையால் தனக்கு நிகர் எவரு மில்லையெனத் தருக்கியிருந்த இவ்வேந்தன் பின்வருமாறு பேசிக்கொண்டான் :

"கோவிலுங் குருக்களும் எனக்கேன் வேண்டும்? உயிருள்ளவரை நானே கடவுள்; நானேன் சாகாம லிருக்கக்

1. பிரபுக்கள்.

கூடாது? முடிவின்றி என்னுயிர் ஒருவேளை எந்நாளும் இவ் வையகத்தில் நீடித்து நிற்கும். தன் காலத்தில் என் தந்தை பேரரசருள் ஒருவராய் எண்ணப்பட்டார். ஆனால், அவர் ஆண்டுவந்த நாட்டின் அளவை என்னுடையதுடன் ஒப்பிட்டால் அது சாலச் சிறிது. அன்றியும் என் தந்தையின் பாட்டனார் சிற்றரசனாய் ஆட்சி செய்துவந்த பட்டினம் இருந்த இடத்தில் என்னுடைய நாய்களை வைப்பதற்கு ஒரு மனை கட்டியிருக்கிறேன். இவற்றையெல்லாம் உற்று நோக்குகையில் மற்ற எளிய உயிர்களைப்போல் இறந்தொழியாமல், எல்லாரையும்விட மேன்மையிற் சிறந்து இதுவரையிலும், எடுத்த வேலைகளை இடரின்றி நான் முடித்திலங்கியவாறே, ஏன் நான் இன்னும் அதிக உயர்வடைந்து வாழக்கூடாது? கவலையு மிடுக்கணுமின்றிச் சாவைக் காணுமல் நீணிலத் திருந்தோரைப்பற்றிய வரலாறுகளைக் கேட்டிருக்கிறேன். அவ்வரிய வாழ்வு ஒருவேளை எனக்குங் கிடைக்கும்,'' என்றிவ்வாறு நினைத்துக்கொண்டு அவன் தூக்கத்தி லாழ்ந்தான்.

தூக்கம் நீங்கிப்பார்க்கையில் செங்கதிரோன் உச்சியிலிருந்ததால் திடுக்கென்று மன்னன் தான் படுத்திருந்த பொற்கட்டிலிலிருந் தெழுந்து முன் கருதிக்கொண்டிருந்தவற்றை மறந்து, "இன்று நாம் காட்டிற்சென்று வேட்டையாடுவோம்,'' என்று சொல்லிக்கொண்டான். அங்ஙனமே, வேட்டைக்கேற்ற உடையணிந்து தன்னுடைய ஆட்கள் தன்னைச் சூழ்ந்துவர நீண்டு வளர்ந்த தன் நாய்கள் பின்வர, அதிக மனவெழுச்சியோடு வேந்தன் குதிரைமேலேறிச் சென்றான். விலை கூறுவதற்கரிய குதிரையிலமர்ந்து இவ்வாறு சென்றவன் ஒரு மானைக்கண்டு, விரைவுடன் அதன்பின் சென்று நடுப்பகல் வேளையில் கூட வந்தவர்களை விட்டு, அதிக வழிகடந்து பிரிந்து, குளிர்ந்த நிழலு

டைய ஓராற்றங்கரையை நண்ணினுன். அங்குத் தன் குதிரையை விட்டிறங்கிப் பளிங்குபோலுள்ள ஆற்றின் புனலில் வெள்ளிய மீன்கள் துள்ளுவதைக்கண்டு உவகை கொண்டு, வெப்பம் தணியும்வண்ணம் நீராட விரும்பினுன்.

அருகிலிருந்த ஒருமரத்தில் குதிரையைக் கட்டி விட்டுத் தன்னுடைய யணிகளைக் களைந்து ஆற்றங்கரையில் வைத்து, நீரிலிறங்கி விளையாடிக்கொண்டிருந்தான். இதன் பின் வீட்டிற்குப் போகவெண்ணி உடையணிந்துகொள்வதற்காகக் கரையேறிவரக் குதிரையையும் ஆடையையும் அவன் அங்குக் காணவில்லை. வியப்பும் சினமும் ஒருங்கே யடைந்த அவனுடைய திகைப்பை என்னவென்று சொல்வது! அவற்றை எடுத்துக்கொண்டுபோன திருடனுக்கு எவருங் கேட்டு நடுங்கத்தக்க தீர்ப்புக் கொடுப்பதாகக் கழறினுன். தன்னுடன் வந்தவர்கள் எங்கேயாகிலும் அண்மையி லிருக்கலாமென்று கூவிப்பார்த்தான்; மறுமொழி யொன்றும் வரவில்லை. ஆற்றிலுள்ள மீன்கள் இவனது சினத்தையுங் கூச்சலையும் எள்ளளவும் கருதாமல் மெதுவாகத் தண்ணீரில் நீந்திக்கொண்டிருந்தன. முதலில் அவனிட்ட இரைச்சலைக்கேட்டுச் சிறிது அஞ்சிய குருவிகள் இப்பொழுது சற்றேனும் நடுக்கமின்றி யங்குமிங்கும் பறந்து திரிந்தன.

ஆள் நடமாட்டமில்லாத அவ்விடத்தில் கூக்குரலிட்டுக் களைத்துப்போன அரசன் என்ன செய்வதென் றறியாமல் ஆற்றங்கரை வழியே நடந்தான்; சிறிது வழிக்கப்பால் தனது காடுகளை மேற் பார்ப்போனது வீடிருக்க வேண்டுமென்பதை யறிந்து அதற்கு நேரே நடந்தான். காடு பார்ப்போன் வேந்தனிடத்தில் பற்றுடையவனுதலால் தன்னை நல்வரவேற்றுத் தனக்குத் தக்கபணிவிடை செய்வா

னென்ற நம்பிக்கையுடன், அகந்தை நிறைந்த மன்னன் உடலைமூடத் துணியில்லாமையால் பகலோன் தன்னை வாட்ட, "எனது வேலைக்காரனாகிய இந்தக் காடாள்வோன் வீட்டில் நல்ல உடையணிந்து, பசி தணிந்து, குளிர்ச்சியுள்ள இடத்தில் நான் அமர்ந்திருக்கும்போது, எனக்கு நேர்ந்த இவ்விடும்பைகளை நான் மறந்துவிடுவேன்," என்று சொல்லிக்கொண்டான்.

இங்ஙனம் அரசன் செல்ல, அவனுடன் வந்தவர்கள் அங்குமிங்கும் அலைந்து தேடிப்பார்த்துமவனைக் காணுதவர்களாய் மயங்கி நிற்கையில், அரசனுடைய ஆடையையணிந்து அவனுடைய பரியின்மேலேறிவந்த ஒருவன் அவர்கள் முன் தோன்றினன். எல்லோருமவனைத் தங்கள் மன்னனென்று மதித்துக்கொண்டு அவனுடன் வனத்தைவிட்டு நீங்கி அரண்மனைக்குச் சென்றூர்கள். மாளிகையிலிருந்த போலிவேந்தன், அரசியால் வரவேற்கப்பட்டு உணவருந்த உட்கார்ந்தான். அங்கிருந்த நாய்களெல்லாம் அவனைச் சுற்றி விளையாடிக்கொண்டிருந்தன.

இது நிற்க, ஆற்றங்கரையின் வழியாய்ச்சென்ற அரசன் காட்டை மேற்பார்ப்போனுடைய வீட்டருகே வந்து, வேட்டையாடுவதற்கு நாய்களையும் மனிதர்களையும் கூப்பிடுவதற்கு ஓசையெழுப்பும் குழலை எடுத்தூதினன். அங்கிருந்த வாயிற்காப்போன் ஊதினவன் இன்னுனென்று தெரிந்து கொள்வதற்காகக் கதவின் பின்னின்று எட்டிப் பார்த்தான். அம்மணமாய் ஒருவன் வீட்டின்முன் நிற்பதைக்கண்டு, "இங்கே உனக்கு என்ன வேலை? விரைவாய் வீட்டிற்குப்போய் ஆடை தரித்துக்கொள்," என்று கூறினன். அதைக்கேட்ட வேந்தன், "அடே மூடனே, கதவை உடனே திற; நான் உன் அரசனென்பதை இன்னும் அறிந்துகொள்ளவில்லையோ? உன் தலைவனிடம்போய்

எனக்கு உணவும் உடையும் வேண்டுமென்பதாகத் தெரிவி. என்னைக் கண்டவுடனே மன்னனென்று அறிந்துகொள்ளாததற்காக அஞ்சவேண்டாம்," என்ருன்.

வாயிலிலிருந்தவன் புன்சிரிப்புடன் "இஃதென்ன கனவோ, பைத்தியமோ?" என்று சொல்லி மறைந்தான். இதனுல் மன்னனுக்கு வெஞ்சினம்மூள, அவன் ஒருபெரிய கல்லைத் தூக்கிக் காவலாளன் பிறகே கதவில் மோதினுன். உள்ளே சென்ற வாயிற்காப்போன், ஒரு தடியை எடுத்துக்கொண்டு திரும்பிவந்து கதவைத் திறந்து "மடையா, எனது தலைவன் முன்னிலையில் நீ நிற்கவேண்டுமென்று இப்படிச் செய்கிருயா? அவரிடத்தில் நீயே வந்து இதைச் சொல்" என்றி சீறிக் கூறி, அரசனைப் பிடித்திழுத்து உள்ளே கொண்டுபோனுன். கண்ணிற்கு இனிதாய் வேலைப்பாடு நிறைந்து, அழகா யமைக்கப்பட்ட புதிய வெண்மையான ஒரு வீட்டின்முன் வெகுண்ட மன்னன் கொண்டுவரப்பட்டான். ஓராண்டிற்கு முன்னுல் இவ்வழகிய இல்லம் அரசனுல் காடு மேற்பார்ப்போனுக்குக் கட்டிக் கொடுக்கப்பட்டது. அடிக்கடி அரசன் இங்கு வந்துபோவதுண்டு. ஏனெனில் காட்டையாளும் இவ்வரச சேவகன் இளவயதில் ஏழையாயிருந்து, வேந்தனது ஆதரவால் இப்போதுள்ள நிலைமையை யடைந்திருந்தான்; அவனழகிய உடையணிந்து சாயங்காலவேளையில் தனது தோட்டத்தில் ஓங்கி வளர்ந்திருந்த மரக்கிளையினிடையே பரிதியினெளி மிளிர்வதைப் பார்த்துக்கொண்டிருந்தான். வெளியே ஒருவன் சிரிக்குஞ் சத்தங் கேட்டது.

ஒரு வேலைக்காரன் ஓடிவந்து புன்முறுவலுடன், "ஐயா அம்மணக் கட்டையாயிருக்குமொருவன், தன்னை நம்முடைய வேந்தனென்று சொல்லிக் கொள்ளுகின்ருன், தாங்களவனை அறிவீர்களென்றும் எங்களிடஞ் சொன்னுன். எந்த

வகையிலும் அவன் நம்முடைய அரசனைப்போ லில்லை. ஆனால், தாடியை மாத்திரம் வேந்தனைப்போல்வளர்த்துக் கொண்டிருக்கிறான்; அவனைப் பித்தனென்று விட்டு விடு வது வினையாய் முடியினும் முடியும். அவனை யிங்குக் கொண்டு வரலாமா?'' என்று கேட்டான். இதைச் செவியுற்ற தலை வன், “ஆம், விரைவிற் கொண்டுவா. நான் இளைப்பாறு மிந்நேரத்தில் இத்தகைய பைத்தியக்காரருடன் பேசிக் களைப்படைவது வெறுப்பாயிருக்கிறது,'' என்றான்.

தனது தொல்லைகளெல்லா மிப்பொழுது முடிந்து விடுமென்று கருதிய அரசன் வாயிற்காப்போனுடன், அவன் முன்னிலையில் வந்து நின்று, “நான் எங்ஙனம் உன்னிடம் இவ்வாறு உடையின்றி வந்தேனென்று வியப்படைகிறாய்? அது சரியே; நான் சொல்வதைக்கேள். ஆனால், அதற்கு முன், அதோ கிடக்கிற மேற்சட்டையை நானணிந்துகொள் வதற்குக் கொடு. ஏனெனின் உன்னுடைய ஊழியக்காரர் கள் உண்மையுடையவர்களா யிருப்பினும், முடியும் பட் டுடையு மில்லாத ஓர் அரசனை அவர்கள் மதிக்க முடியாத வரா யிருக்கின்றனர். இது கீழ்மக்களின் தன்மை; நீயும் நானும் அவர்களைப்போல் பேதையேமல்லேம். ஆ! இஃதென்ன விந்தை! நீ எனைக்கண்டொழாமல் உட்கார்ந்த வண்ணமே யிருக்கிறாய்; எனக்குப் பதிலாக வேறெவரேனும் ஆட்சி செய்கின்றனரோ? எத்தனைநாளாய் எனது பகைவர் களுடன் கூடி எவருமறியாமல் சூழ்ச்சிகள் செய்துவந்தாய்? நீ என்னை இப்போதே கொன்றுவிடு; நான் உயிருடனிருப் பது உண்மையானால், என் தலையைச் சற்றே அசைத்த வுடனே ஆயிரக்கணக்கான படைவீரர் நான் இட்டதைச் செய்ய முன்வருவார்களே! என்னைக் கொன்றுவிடு; அல்லது உன் சூழ்ச்சியை விட்டுவிடு. இன்று முதல் என் தயவைத் தேடிக்கொள்,'' என்றான்.

காட்டுக் காவலாளி அரசனை நோக்கி, "நீ எங்கள் வேந்தனல்லன் என்பதை உனக்குச் சொல்லவும் வேண்டுமோ? ஏழைப் பூச்சியே, ஒன்றுந் தெரியாமல் தடுமாறிய நிலையிலிருக்கிறுய். சாவதற்குமுன் நல்லறிவைப் பெறும் படி கடவுளை வேண்டிக்கொள்ளுகிறேன்," என்றுரைத்து, வேலைக்காரரை அழைத்து, "இந்த உன்மத்தனுக்குச் சிறிது உடையும் உணவும், இரவில் உறங்குவதற்கு இடமுங் கொடுங்கள்," எனக் கட்டளையிட்டான். நானில மாள்வோன் தன் கைகளை விண்ணிற்கு நேரே உயர்த்தி "நன்றியற்றவனே, உன் சாப்பாடும், உன் உடையும், நீயும் அழிந்துபோகட்டும்; உன் வீடு இடிந்து விழுவதாக; சிவந்த நெருப்புக் கொழுந்துகள், சித்திரவேலை நிறைந்த உன் சாளரங்களின் வழியாய்த் தாவிப்பிடித்து எரிவதைக் காண்பாய். ஏனெனில் உன்போன்ற கயவர்வாழும் இவ்வகத்தை நான் சுட்டெரிக்கப்போகிறேன்," என்று பெருங் கூச்சலிட்டான்.

பிறகு, அவன் தன்னைப் பிடித்திருந்தவர்களை உதறி விட்டு,வீட்டைக்கடந்து வெளிக்கதவின் வழியாய்நுழைந்து தலைவிரிகோலமாய் எங்குப் போவதென்று தெரியாமல் ஓடினுன். ஓடினவன் ஒரு பாதை யருகே புல்முளைத்த இடத்தில் களைத்து விழுந்து கிடந்தான். காட்டதிகாரியோ, அமைதியாய்த் தன் மனையிலமர்ந்து அகமகிழ்ச்சியுடன் தன் சொத்துக்களை எங்ஙனம் பெருகச்செய்ய வேண்டுமென்பதைப்பற்றியும் அரசனுக்குத் தன்மேலுள்ள நம்பிக்கையைப் பற்றியும் எண்ணும் எண்ணத்திலாழ்ந்து "அடுத்த முறை நான் மாநிலமாளும் என் தலைவனைப்பார்க்கநேரிடும்பொழுது யாக்கையை மூடத் துணியில்லாமல் இங்கு வந்த உன்மத்தனைக் குறித்துப் பேசவேண்டும்," என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். தன் பெருமையை இழந்து வாடி வருந்

திய மன்னனே, ஒரு பெரும்பாதை யருகில் மயக்கமுந் தளர்ச்சியுமுற்றுத் தான் கண்டது கனவோ, நனவோ என்றறிய வகையில்லாமல், புல்லின்மேற் கிடந்தான். இப் பொழுது கதிரவன் மேல்கடலில் மறைய, எங்கும் கங்குல் வந்து சூழ்ந்தது. பாதையிற் சிறிது தூரத்திற்கப்பால் யாரோ ஒரு பிரபுவின் முன் தீவர்த்திகள் பிடித்துக்கொண்டு வருபவர்களை அவன் கண்டான். அவர்களுடன் குதிரைச் சேவகர்களு மிருந்தார்கள். அங்கு வந்துகொண் டிருந்த பிரபு, தன்னுடைய அமைச்சர்களிலொருவன் என்பதை நன்கறிந்த, பெருமை நிறைந்த புரவலன் குதித்தெழுந்து நின்று உரக்கக்கூவி, "நமது அமைச்சனே, நீ நல்ல அறி வாளிதான். எனது பகைஞருடன் எப்பொழுதும் உறவாடி யிருப்பது உன் வழக்கந்தானே. காலத்திற்கேற்ற கோலங் கொள்கிறவனே,போ,போ" என்றான். ஒரு போர்ச்சேவகன் இதைக்கேட்டு அவனிடம் வந்து வாளின் பின்புறத்தால் அவனை யடித்து, இன்னும் உரக்கக் கத்தும்படி சொல்லி மந்திரியிடம் இழுத்துக்கொண்டு போனான். மந்திரி ஏறி யிருந்த பல்லக்கு, தீவர்த்தி பிடிக்கிறவர்கள் சுற்றி நிற்க, பாதையின் நடுவில் வந்து நின்றது. அந்த வெளிச்சத்தில் பொன்னு மணியும் ஒளிவீசச் சிறப்பா யமர்ந்திருந்த பிரபு வின் முகத்தை யரசன் பார்த்தான். அடிக்கடி அரசனை வணங்குகிற மந்திரி இப்பொழுது அவனை நோக்கி, "நீ என்னைப்பற்றித் தீதான மொழிகள் வழங்கியதாக இவர்கள் சொல்லுகிறார்கள். நான் ஏதாவது தீங்கிழைத்ததுண்டோ? அப்படி யாதாயினுமிருப்பின், எனது குடிகள் தங்கள் வழக்குகளுடன் என்னிடம் வரும்போது நீயும் வந்து உன் குறைகளைச் சொல்லிக்கொள்," என்றான்.

அரசன் மறுமொழியாக,"இப்பொழுது எங்கும் இருள் மூடியிருக்கிறது; தீவர்த்திகள் நின்று எரியாதபடி, காற்று

அவைகளை அசைக்கிறது; நீ என் முகத்தை நன்ருய்ப் பார்க்க முடியவில்லை என்று நினைக்கிறேன். தீவர்த்திக்காரரைக் கிட்டிவரச் சொல்லி, உனக்கு இந்தப் பதவியை அளித்தவர் யாரென்று நினைத்துப்பார். ஐயோ! நான் உன் அரசன் என்று உனக்கு விளங்கவில்லையோ?'' என்றான். ஆனால், பிரபுவோ, கோமகன் என்று அவனை அறிந்துகொள்ள முடியாமல் அவனைப்பார்த்து, "நண்பனே, நம்பத் தகாத ஒரு கதையை நீ என்னிடம் சொன்னாய்; வேறு யாரிடத்திலாவது நீ அதைச் சொல்லியிருந்தால் உனக்குப் பொல்லாத தீங்கு விளைந்திருக்கும். அறிவு தடுமாறினவனென்று நான் உன்னைச் சும்மா விடுகிறேன்; வேந்தன் கேட்டால் உனக்கு எள்ளளவும் இரக்கங் காண்பிக்கமாட்டான். அறிவிலியே, இந்தக் காசை வாங்கிக்கொண்டு, பொழுது விடிந்தவுடன் எங்கேயாவது உடுக்க ஆடையும், உண்ண உணவும் தேடிக்கொள். நகரத்திற்குள் போகவேண்டாம்; போனால் உன்னைப்பிடித்து நீதிமன்றத்தில் விசாரணை செய்வார்கள். இப்பொழுது நேரமாயிற்று; நான் போகவேண்டும்,'' என்று கூறிவிட்டுத் தன்வழியே போனான். ஒன்றும் பேச நாவெழாமல் நின்ற மன்னன் மந்திரி கொடுத்த காசைக் கையில் வைத்துக்கொண்டு, அந்நாணயத்தில் தன்னுடைய உருவம் பதிக்கப்பட்டிருந்ததைப் பார்த்துத் தான் தன்னந்தனியனாய் இருப்பதை நினைந்து ஏங்கி, "ஓ தெய்வமே, நான் அரசனாயிருந்து எத்தனை காலமாகி விட்டது!'' என்று இரங்கிக் கூறினான். இதற்குப் பின் அவன் மந்திரி சென்ற வழியே தனியாய் நடந்து போய், ஒரு புல்மேட்டை யடைந்து, அங்கு அயர்ந்து நித்திரை செய்தான்.

# II

மறுநாட் காலையில் அவன் துயில் நீங்கி யெழுந்து நாற் புறமுஞ் சுற்றிப் பார்த்தான். எப்பொழுது எவ்வாறு தான் அங்குவர நேர்ந்ததென் றறியாமல் சிறிது நேரம் மயங்கி யிருந்தான்; இறுதியிற் சிறிது சிறிதாய் முன்னாள் நடந்த நிகழ்ச்சியனைத்தும் நினைவிற்கு வந்தது. கிழக்கி லெழுந்த செஞ்ஞாயிற்றின் அழகிய இளவெயிலுடன் காலை யில் வீசுகின்ற இனிய புதிய காற்று அவன்மேற் படவும், தன்னுடைய துன்பங்களெல்லாம் விரைவில் ஒருமுடிவிற்கு வரும் என்ற நம்பிக்கை அவன் உள்ளத்தி லெழுந்தது. முந்திய இரவில் தான் வந்து தங்கிக் கண் அயர்ந்த இடம் தனது தலைநகருக்கு அண்மையி லுள்ளமை அறிந்தான். நாட்டுப் புறத்து மக்கள் அதிகாலையில் நகருக்குள் போவ தற்குத் திரள் திரளாய் வந்து காத்துக்கொண்டிருந்தனர்.

நிர்வாணியா யிருந்த தோன்றல் அவர்கள் கண்ணிற் படாமல் ஒளித்து ஓடிக் கடைசியில் நகர்க்கதவின் ஓரத்தில் வந்து நிற்க, அவனைக் கண்ட பலர் கைகொட்டிச் சிறிது நையாண்டி பண்ணினார்கள். வேறு சிலர், “உன் பெய ரென்ன? உன் ஊரென்ன? ஏன் இவ்வா றிருக்கிறாய்? இங்கு உன் அலுவலென்ன?” என்று இவையனைய பல கேள்விகளை எழுப்பி நகைத்தார்கள். ஆனால், இவர்களுள், பல பண்டங்களை வண்டியி லேற்றிக்கொண்டு நகரில் விற் பனை செய்வதற்குச் சென்ற ஒருவன், வேந்தனைத் தன் வண்டியிலேற்றிக்கொண்டு பருகுவதற்குக் கொஞ்சம் பால் அளித்து, அதிகக்கனிவுடன் அவனுக்கு நேர்ந்த துன்பம் என்னவென்று கேட்டான். செருக்கினாற் சிறப்பிழந் தவன் மறுமொழியாக, “நண்பனே, நேற்றிரவு சில கள்ளர் கள் என்னைப் பிடித்து, அடித்து, என் துணியையும்

பொருளையும் பிடுங்கிக்கொண்டார்கள்; நான் இப்பட்டணத்திலுள்ள ஒரு பெரிய வியாபாரி; என்னைக் கொண்டுபோய் அரச மாளிகையருகில் நீ விட்டுவிட்டால், உனக்கு வேண்டிய பணம் தருவேன். எனக்குத் தெரிந்தவர்கள் பலர் அங்கிருக்கின்றனர். எப்போதாகிலும் ஒரு காலத்தில் நான் உனக்குத் தகுந்த பரிசு அளிப்பேன். உன் பெயரையும், நீ இருக்குமிடத்தையும் நீ எனக்குச் சொல்,'' என்றான்.

நாட்டுப்புறத்து மகன், "ஐயா, நான் ஏழையாயிருந்தாலும் கடவுளுடைய ஆசீர்வாதத்தால் சாப்பாட்டிற்கு ஒரு குறைவுமில்லை. நான் ஒரு மாந்தோட்டம் வைத்துப் பயிர்செய்து அதில் விளையுங் கனிகளை விற்றுப் பிழைத்து வருகிறேன். எனக்கு இப்பொழுது வயது ஐம்பதாகிறது. சிறு வயதுமுதலிதுவரை பல சஞ்சலங்களையுஞ் சந்தோடங்களையும் அனுபவித்திருக்கிறேன். என்னுடைய பாட்டனார் கட்டிய வீடு ஒன்றிருக்கிறது; அஃது இப்பொழுது அழிந்துபோகும் நிலைமையிலிருப்பதால், அதைப் புதிதாகக் கட்டுவதற்கு வேண்டிய பண உதவி தாங்கள் செய்தால், எந்நாளும் தங்களுக்குக் கடமைப்பட்டவனாக இருப்பேன்,'' என்றான்.

மாட்சி இழந்து மயங்கிய மன்னன் இதற்கு விடையாக, "சிநேகிதனே, நீ கேட்டது மிகச் சிறிய விடயம்; இன்னும் அதிகமாய்க்கேள்,'' என்றான். இப்படி இவர்கள் பேசிக்கொண்டு ஒன்றாக நகருக்குட் புகுந்தனர். வணங்கா நெஞ்சினனாகிய செம்மல் வண்டியிற் படுத்திருந்தான். கொஞ்ச நேரத்திற்குள் அவர்கள் மாளிகையருகில் போய்ச் சேர, அரசன் வண்டியை விட்டிறங்கித் திடுதிடுவென்று அரண்மனை முன்கட்டிற்குள் ஓடினான். இரண்டாவது கட்டிற்குள் அவன் புகுவதற்கு முயற்சி செய்கையில் அங்

குள்ள காவலாளன் அவனை நிறுத்தி, "உனக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறதோ? அல்லது பேய் பிடித்திருக்கிறதோ? எங்கே போகிறாய்?" என்றான். குரிசில் அவனை நோக்கி, "நானுன் வேந்தன் என்பதை நீ கண்டுகொள்ளவில்லையா? நான் உன்னை நன்கறிவேன்; நீ எனது உடைகளைக்கொண்டுவந்து எனக்கு உடுத்தினால், உனக்கு நல்ல வெகுமானங் கொடுப்பேன். ஏனெனில், நானிப்பொழுது ஆலோசனைச் சபைக்குப் போகவேண்டும்," என்று மொழிந்தான். "சீ, பித்தம் பிடித்தவனே, வெளியே போ; நீ என்ன சொல்கிறாய்? வேந்தனா? இதைவிட இலேசான வார்த்தைகள் பேசியதன் பயனாக, அநேகர் மரண தண்டனைக் குட்பட்டிருக்கிறார்கள்; ஆதலால் அரண்மனைப் பாதுகாவலாளரிடம் நான் உன்னைக் கொண்டுபோகவேண்டும்," என்று வாயிற்காப்போன் பொங்கியுரைத்தான்.

இவ்வாறு அகந்தை நிறைந்த அரசன் அரண்மனைப் போர்ச்சேவகர்முன் கொண்டுபோய் நிறுத்தப்பட்டான். அவர்கள் அவன் சொன்ன சொற்களைச் சிறிதும் காதிற் போட்டுக்கொள்ளாமல், அவனை ஏளனம்செய்து சிரித்தார்கள். வேந்தன் மனம் புண்ணுயிற்று; தான் செய்யும் முயற்சிகள் யாதும் பயனடையாமல், தனக்கு வந்த துன்பங்களும் நீங்காமல், மனமுடைந்து தானிறந்துபோகக் கூடும் என்ற எண்ணம் கோமகன் உளத்திற் பிறந்தது. முந்திய தினந்தொடங்கி எடுத்ததெல்லாந் தாறுமாறுகப் போவதென்னவென்று அவனுக்கு விளங்கவில்லை. தனக்கு முன்னால் தரையில் புரண்டு பணிவிடை செய்யும் போர்ச்சேவகர்கள், இப்பொழுது அவன் கண்ணிற்கெதிரே அவனைக் கேலி செய்தார்கள். "ஐயோ கடவுளே! இரண்டு நாளைக்கு முன் நான் இருந்த வையகம்வேறு, இப்பொழுது நான் இருக்கும் வையகம் வேறோ? நான் தூங்குகிறேனோ,

அல்லது சொப்பனங் காண்கின்றேனே?" என்று தன்னைத் தானே வினவிக்கொண்டான்.

இப்படி இவன் சிந்தனையி லாழ்ந்திருக்கையில், அரண்மனை அதிகாரிகளிருவர் வந்து, தன்னை அரசனென்று சொல்லிக்கொண்ட உன்மத்தனை அரண்மனைக்குள் அழைத்துக்கொண்டு போகையில், அங்குள்ளோரனைவரு மவனைக் கவனமாய்ப் பார்த்தார்கள். அப்போது, "இனிமேல் என் கவலைகளெல்லாம் நீங்கிவிடும்; நான் எனது அரியணையில் அமர்ந்துகொள்வேன். போர்ச் சேவகர்களும், பிரபுக்களும், என் மனைவியும் என்னை இன்னாரென்று அறிந்து கொள்வார்கள். இல்லையேல், இனி ஒருவரும் என்னை எப்பொழுதும் அறிந்துகொள்ளப் போவதில்லை. நான் ஒருவருடைய நினைவிலுமில்லாமல் மாண்டு மறைந்து போவேன்," என்று தனக்குள் பேசிக்கொண்ட பாராள்வோன், தலைநிமிர்ந்து பார்க்கையில், மணிமுடி தலையிலிலங்க, பொன்னிழைத்த ஆடையணிந்து தன் சிங்காசனத்தின்மேல் ஒருவன் வீற்றிருப்பதைக் கண்டான். அவனுக்குக் கீழே அரசி யமர்ந்திருந்தாள். நாற்புறமும் மந்திரி பிரதானிகள் தலைவணங்கி நின்றார்கள்.

பெருமையினற் பதியிழந்து வாடிய மன்னனுக்கு இப்பொழுது கடுஞ்சினம் மூண்டது. தனக்கு முன்னிருந்தவன் எவ்வகையிலும் தன்னை ஒத்திருக்கவில்லை. ஆனல், அவன் மணிமௌலியைச் சுற்றி ஒருவகை ஒளி விளங்கிக் கொண்டிருந்ததனல், விண்ணவரில் ஒருவன் என்று அவனை எண்ணும்படியாயிருந்தது. அவன் அரசனை உருத்துநோக்கி "நமது மாட்சியைத் திருடக்கருதுகின்ற நீ யார்?" என்று வினவினன். சிந்தை நொந்து பதைத்துத் திகைத்து நின்றவன், "நேற்று வேந்தனயிருந்தவன் நானல்லனே? இந்நகரிலுள்ளோர் இன்று உனக்கு என்னுடைய அரசை

எங்ஙனமோ கொடுத்திருக்கிறார்கள்; என்றாலும் நானே நகருக்கும் இந்நாட்டிற்கும் அதிபதி என்பதை நீயறிந்து கொள். எல்லோரும் என்னைக் கைவிட்டகன்றாலும், இந்த இடத்திலேயே உன்னாற் கொலையுண்டு நான் மடிந்தாலும், என்னைக் குறித்து அழுது வருந்தி நன்மொழி கூற ஒருவருமில்லாவிட்டாலும், நானே இவ்வரசிற்குரியவனென்பது சத்தியம்,'' என்றான்.

அப்பொழுது சிங்காசனத்தில் வீற்றிருப்பவன் "ஞானமற்றவனே, நேற்றும் அதற்கு முன்னும் நானிங்கு அரசனாக விருக்கிறேன். பேதையாகிய நீ என்னுடைய அரசைக் கைப்பற்ற முயன்றதற்குக் கொலைத்தீர்ப்புக் கூறப்படவேண்டும். ஆயினும், நீ உயிரிழப்பதற்குமுன் இங்கு நிற்கும் பிரதானிகளும் உத்தமியான என்னுடைய மனைவியும் சொல்வதைக் கேள்; என்னுடைய பிரபுக்களே, வனப்புமிகுந்த அரசியே, என்னுடைய முகத்தை யுற்று நோக்கி நான் யாரென்று நீங்கள் சொல்லுங்கள்,'' என்றான். அப்பொழுது அவர்களனைவரும் ஒரே வாக்காய், "எங்களைக் காத்து நடத்தி ஆண்டுவருங் காவலனே நீ வாழ்க; உனது குலம் ஓங்குக, நெடுநாள் நீ அவனியிலிருந்து எங்களை ஆளக்கடவாய்,'' என்று வாழ்த்தினார்கள். கோமகள் எழுந்து அவனை நோக்கி, அடியை முத்தஞ்செய்து, தன்னுடைய அழகிய முகத்தில் உண்மை விளங்க, "என் காதற் கணவராகிய மன்னரே நீர் நீடூழி வாழ்க,'' என்றாள்.

அதன் பிறகு ஒளி விளங்குகின்ற முகத்தையுடையவன் அரசனை விளித்து, "கீழ்மகனே, இங்கு நடந்த யாவற்றையும் கண்டனையா? இப்பொழுது நீ கொலை உண்பதற்குத் தடை யாது உளது? ஆயினும் உன்னைக் கொல்ல எனக்கு விருப்பமில்லை; நீ என்முன் விழுந்து வணங்கி, நீ செய்த குற்றத்தை ஒத்துக் கொள்வாயானால், உன் பிழை

யைப் பொறுத்து என்னுடைய வேலைக்காரரில் ஒருவனாக உன்னை வைத்துக்கொள்வேன்,'' என்றான். சிதைந்த நெஞ்சுடன் மயங்கி நின்ற மன்னன் முகஞ்சிவந்து, சிறிது நகைத்து, "நீ சொல்வது பொய், நானே இங்குள்ளோர் அனைவருக்கும் வேந்தன்; என் முன்னோரும் எனக்கு முன் இந்நாட்டை ஆண்டுவந்தனர். எனது பெருமையை இழந்த பின்னர் நான் உயிருடன் வாழமாட்டேன்,'' என்று புகன்றான். அரியாசனத்திலிருந்தவன் கொஞ்ச நேரம் ஒன்றுஞ் சொல்லாமல் புன்னகையுடனும் இகழ்ச்சியுடனும் அரசனை உற்றுநோக்கி, "நீ மாளவேண்டியதில்லை. ஆனால், நீ ஒரு காலத்தில் வேந்தனாயிருந்ததை மறந்து, தாழ்மையாய் உயிர் வாழக் கடவாய்,'' என்றான்.

துன்பக் கடலில் மூழ்கிய வேந்தன், தன்னை நன்றாயறிந்த அங்குள்ளோர் பலருடைய முகத்தைக் கூர்ந்து பார்த்தான். எவரும் அவனைத் தங்கள் குரிசில் என்று அறிந்துகொள்ளவில்லை. தங்கள் நடுவில் வீற்றிருந்தவன் தங்களைப் பல ஆண்டுகளாய் ஆண்டுவந்த அரசன் என்பதிற் சிறிதும் ஐயம் அவர்களுக்குத் தோன்றினதாகத் தெரியவில்லை. பாரிழந்து, பதியிழந்து, இடும்பை எய்தி, உடுக்கையின்றி ஒடுங்கிநின்ற மன்னனுடன் நெடுநாட் பழகிய வேட்டை நாயொன்று அங்குப் படுத்திருந்தது. அந் நாயுங்கூட இப்பொழுது அவன்மேற் பாய்ந்து அவனைக் கடிக்க முன்வந்தது. இவன் அவ்விடம் விட்டு நீங்கிப் போகையில், "அருமையாய் என்னுடன் விளையாடிப் பழகியிருந்த நாயே! நீயும் என்னை மறந்தனையே!'' என்று முணுமுணுத்துக்கொண்டே அகன்றான்.

மாளிகைக்கு வெளியே சேவகர்கள் அவனைத் தள்ளி, அடிக்கடி அவன் பிறர் கண்டு களிக்க வெளியே சென்ற வாசல்களின் வழியாய்ப் பரபரவென்றிழுத்துச் சென்றனர்.

மூன்னாட்களில் அவன் வேற்றரசரை வென்று, அவர் நிலங்களைக் கைப்பற்றி, வெற்றி முரசு முழங்க, உருவிய வாட்களும் பொன்னணிகளும் மின்ன, சொல்லரிய மகிமையுடன் பவனிபோன தெருக்களின் வழியாய், ஐயோ பாவம்! அவனை இப்பொழுது காவலாளர்கள் குற்றவாளியைப்போல் பிடித்துக் கொண்டுபோனார்கள். "மக்களுந் தெய்வமும் ஒன்றாய்ச் சேர்ந்து ஏழையாகிய என்மேல் போர்செய்து வருத்துகின்றனரே! என் செய்வேன்," என்று ஏங்கி யழுதான்.

காலாளிகளோ, அவனுடைய ஏக்கத்தையும் தவிப்பையும் கண்டு இரங்காதவர்களாய், நகருக்கு வெளியே அவனைத் தள்ளிக்கொண்டுபோய், "கோவேந்தனாகிய எங்கள் ஐயனது கட்டளையைக் கேள்; வாயைத் திறவாமல் இவ்விடத்தை விட்டுப் பெயர்ந்து போ; நகரத்துக்குள் திரும்பி வராதே; வந்தால், இன்னும் கொடிய தீர்ப்புக்காளாவாய்; ஏதோ புண்ணிய வசத்தால் அவ்வளவு இலகுவான தண்டனையை யடைந்தாய்; இதற்காக நன்றி பாராட்டி உன் வழியே செல்," என்றனர்.

அவர்கள் போனபின் தனியனாய் நின்ற மன்னன் பல இடங்களில் அலைந்து திரிந்து, ஒரு சிற்றோடைக் கப்பால், காட்டினோரத்தி லமைக்கப்பட்டிருந்த சிறு குடில் ஒன்றைக் கண்டான். அப்பொழுது பழைய நாள் விஷயங்கள் அவன் நினைவுக்கு வந்தன. தான் இளவயதாயிருந்த காலத்தில், அச் சிற்றில்லில் வசித்துவந்த ஒரு துறவியிடம் அடிக்கடி யோசனை கேட்பதற்காகப் போய்வந்ததும், அத் துறவி சொன்ன நன்மதியைத் தான் போற்றாது புறக்கணித்ததும் அவன் நினைவுக்கு வந்தன. ஓடையைக் கடந்து குடிலிற்குட் சென்று இத்துறவியாவது நம்மை அறிவாரோ என்ற ஐயத்துடன் கதவைத்தட்டினான். தூய்மை வாய்ந்த

துறவி வாயிலில் வந்து, "அன்பனே என்ன செய்தி?" என்று வினவ, "ஐயா பெரியவரே, தங்களுக்கு இந்நாட்டையாள்கின்ற வேந்தன் தெரியுமோ? மெலிந்து எளியவனாயிருக்கும் என்னைத் தாங்கள் அறிவீர்களோ? ஐயோ, துறந்த பெரியீர், நான் அரசனல்லனோ? இந்நாட்டிற்கு அதிபதி நான் என்பது தங்களுக்குப் புலப்படவில்லையா?" என்றான் அரசன். இதைச் செவியிலேற்ற துறவி, "பைத்தியம் பிடித்தவன்போல் இக்கதையை நீ பிதற்றாதே. இப்படிப்பட்ட சொற்களை நீ பேசுவதனால் உனக்கு ஊதியமொன்றுங் கிடையாது," என்று கூறிக் குடிலுக்குள் நுழைந்தார்.

அங்கலாய்ப்பு மிகுந்து வியர்த்து நின்ற மன்னன், நிலத்தில் விழுந்து புரண்டு அழுது, "ஆ இறைவனே, இஃதென்ன நிலைமை? கண்டவரெல்லோராலும் இகழப்படும்படி ஏன் எனக்கு இந்தத் துன்பத்தைக் கொடுத்தாய்? ஒரு நாழிகை யாகிலும் எனக்கு முன்னிருந்த நிலைமையைத் தந்தருளல் வேண்டும். நான் பிறக்கும்பொழுது என்னுடன் கொண்டுவந்த தொன்றுமில்லை. ஆயினும் நாட்செல்லச் செல்ல, நான் நிரம்ப இறுமாப்புடையவனாகி இருந்த நிலைமையிலும் என்னை ஓர் அரசனாக வைத்திருக்க உனக்குத் திருவுள மிருந்ததே; என்னை ஏன் இப்பொழுது வருத்துகின்றாய்? நான் ஏன் எல்லோராலும் அவமதிக்கப் படுகின்றேன்? என்னுடைய பழைய எண்ணங்களை எல்லாம் நான் மறந்து, என்னுடைய வீணான மரியாதையையும் இறுமாப்பையும் நீக்கி, நான் முன்போல் வாழ வழி எனக்குக் காட்டாயோ? அப்படி உன் திருச்சித்தமில்லாவிட்டால், நான் உளங்கலங்கி நிற்குமிந்த வேளையில் காசினியில் நான் இன்னும் இருக்கவேண்டிய நாட்களைக் கவலையின்றிக் கழிக்க அருள் செய்வாய். நான் நினைத்தபடியெல்லாம் செய்தேன். உன்னை ஒரு பொருளாய் நான் மதிக்கவில்லை.

ஆயினும் நீ எனக்கு நலத்தையுஞ் செல்வத்தையும் கொடுத்தாய். பொறுத்தற்கரிய பிழைகள் பல செய்தும் நீ இன்னும் என்மேல் கண்ணோட்டமுடையவனுய் இருக்கின்றுய் என்பதை யறிவேன். நான் செய்த வினைகள் போதும். என் மீது இரங்கி எனை யாட்கொண்டருள வேண்டும் கருணைக் கடலே'' என மனமிளகி மன்றுடினுன்.

இங்ஙனம் அவன் இறைஞ்சி முடிவதற்குமுன் துறவி வெளியே வந்து, "என் குழந்தையே, என் மன்னவனே! நான் காண்கின்றது சொப்பனமா? நீ எவ்வாறு இவ்விடர்க் குட்பட்டாய்?'' என்று அன்புடன் கேட்டார். அரசன் அகம் புளகித்து முகமலர்ந்து, "நான் செய்த யாதோ ஒரு பெரிய குற்றத்திற்காகக் கடவுள் என்னை இவ்விதம் இழிவடையச் செய்தார். என்னுடைய வேலையாட்களும், மனைவியும், நண்பர்களும், எவரும் என்னை இன்னுரென்று அறிந்துகொள்ள முடியாமற் போயிற்று. சிறிது நேரத்திற்குமுன் நான் இங்கு வந்தபோது தாங்களும் என்னை அறிந்துகொள்ள முடியவில்லை. ஆனல், இப்பொழுது தாங்கள் என்னை இன்னுனென்று காண்கிறதினுல், கடவுள் என்மீது இரக்கங் கொண்டிருக்கிருர் என்று தெரிகிறது. இனித் தாங்கள் எனக்கு அணிந்துகொள்ள ஆடையும், பசியை ஆற்றிக் கொள்வதற்குச் சிறிது ஆகாரமும் தந்தால் நான் மறுபடியும் அரண்மனைக்குச் சென்று அங்குள்ள குருடர்கள் இப்பொழுதாவது என்னை அறிகிருர்களா என்று பார்ப்பேன்,'' என்றுன்.

அந்த வேளையில் துறவி தம் கண்களில் நீர் ததும்ப, "ஐயோ அரசனே, எத்தனை பாடுகள் பட்டாய்! என் வீட்டிற்குள் வா; இந்த முரட்டு அங்கியையும் என் குடிலிலிருக்கின்ற அற்ப ஆகாரத்தையும் ஏற்றுக்கொள். அதன் பிறகு உன் வரலாற்றை விரிவாய்ச் சொல். கடவுள் உன்னை மன்

னித்து அருள் செய்வாராக" என்ருர். பசியாறி முரட்டு உடையைத் தரித்துக் கொண்ட புரவலன், தன்னுடைய அளவற்ற இறுமாப்பினுலும் வீண் பெருமையினுலும் தான் அடைந்த துன்பங்களைப்பற்றித் துறவியிடம் முறையிட்டான். அவர் அவனுக்கு மனங் குளிரும்படி நல்ல வார்த்தைகள் மொழிந்து நன்னெறியிற் செல்லுமாறு பல புத்திமதிகள் சொல்லி அரண்மனைக் கனுப்பினுர்.

பொழுது போகும் வேளையாயிற்று. அரசன் ஒருவர் கண்ணிலும் படாமல், தன் நகருக்கு நேரேசென்று, அரண்மனை வாசலருகே செல்லுகையில், அங்கிருந்த காவலாளிகளில் ஒருவன், "இதோ நமது வேந்தர் நடந்து போகின்ருர். இன்று சாயங்காலம் மாறுவேடம் பூண்டு அவர் செல்வாரென்று கட்டளை பிறந்திருக்கிறது," என்ருன். அவன் அரண்மனைக்குள் நுழைந்து போகையில், சனங்களெல்லாரும் எழுந்து வாய்மூடித் தலைவணங்கி நின்றனர். அப்பொழுது அரண்மனை ஏவலாளர்களில் ஒருவன் வந்து, "வேந்தர் வேந்தே, தங்கள் ஆணையின்படியே அரச பெருமாட்டி தங்களை வரவேற்கச் சிறு மண்டபத்திற் காத்துக் கொண்டிருக்கிருர்கள்," என்றுரைக்க, "இப்பொழுது யாவும் சரியாய்நடைபெறுகின்றது" என்று மன்னன் தனக்குள் நினைத்துக்கொண்டு மேலே சென்ருன். என்ருலும், அன்று காலை தன் சிங்காதனத்தின்மேல் வீற்றிருந்து அரசனுக நடித்தவனைப்பற்றிய நினைவு வந்தபொழுது அவனுள்ளம் நடுங்கிற்று. ஆயினும் இறைவனுடைய கருணையிருந்தால், அவனுந் தன்னை ஏற்றுக்கொள்வான் என்ற உறுதி வேந்தனுக் கிருந்தது.

அரசி தனக்காகக் காத்துக்கொண்டிருந்த சிறு மண்டபத்தே அவன் அடைந்தபொழுது, அவள் தூங்கிக் கொண்டிருந்தாள். அவளருகில் அன்று காலை அரசனுப்

நடித்தவன் நின்று கொண்டிருந்தான். அவனைப்பார்த்து வெகுண்டு, வேந்தன் பேசத் தொடங்குகையில் அவன் முன் நின்றவனது தோற்றம் திடீரென்று மாறுதலடைந்தது. எதிரே நின்றவன் மக்கள் வடிவம் மாறி இமையாக் கண்ணருள் ஒருவனாய்த் தோன்றினான். சினக் குறியுடன் நின்ற அரசனை அவன் பார்த்து, "செம்மலே, நீ அஞ்சவேண்டாம். உனக்கு அறிவு கொளுத்த நான் இங்கு வந்தேன். இப்பொழுது கடவுள் உன்பெருமையை அழிக்க வல்லவரா யிருக்கிறாரென்பதை நீ யறிந்து கொண்டாய்; நேற்று நீ அரசனாயிருந்தாலும் இன்று உன்னைப் பேருரற்ற ஆண்டியாக மாற்றித் தெருத்தெருவாய்த் திரிய வைக்க அவருக்கு ஆற்றலுண்டு. இறப்பதற்குமுன் எல்லாம் வல்ல இறைவனின் ஒப்பற்ற மாட்சிமையை நீ உணரும்படி அவர் செய்ததற்காக நீ நன்றி பாராட்ட வேண்டும். நெடுநாள் மண்ணிலிருந்தும் கடவுளை யறியாமலே அநேகர் மாண்டு போகிறார்கள். நான் போகவேண்டிய நாழிகை வந்தது. மறுமையில் நீ என்னைக் காண்பாய். நான் போய்வருகிறேன். உனக்குப் பதிலாய் ஒருநாள் அரசு செலுத்தினேன். இனி நீ உன் அமைச்சர்களுடன் கலந்து, நாட்டிற்கு நலத்தைத்தேடி முன்போல் உவப்புடன் வாழ்ந்திருப்பாய்," என்று பேசி மறைந்தான்.

இவை யாவும் செருக்காற் சிறப்பிழந்த மன்னனுக்குக் கனப்போற் றோன்றிற்று. நடந்தவற்றைப்பற்றி ஒன்றும் பேசாமல் நினைவிலாழ்ந்தான். அப்பொழுது தூக்கத்திலிருந்து எழுந்த கோமகள், "மன்னர் மன்னவா, தங்களுடைய தேசத் தலைவர்கள் காத்துக் கொண்டிருக்கின்றனர். நீர் உருக் கரந்திருப்பதைவிட்டு வழக்கம்போல் அவர்களைப் பார்க்கவேணடும்" என்றாள். அரசன் எழுந்து, உயர்ந்த ஆடையாபரணங்கள் அணிந்துகொண்டு, சிங்காசனத்தில்

வீற்றிருந்தான். அன்று காலை அங்குவந்த பைத்தியம் பிடித்தவனைக் குறித்து யாரும் ஒரு வார்த்தையும் பேச வில்லை. வணங்கா நெஞ்சினனாயிருந்தோன் இப்பொழுது தாழ்மையும் இரக்கமும் அன்பு முள்ளவனாய்ச் செங்கோல் செலுத்தி வருகையில், தன் வாழ்க்கையில் நேர்ந்த இப் பெரிய நிகழ்ச்சியைப்பற்றி அடிக்கடி நினைத்துவந்தான். அவன் வயது முதிர்ந்தவனாகி வாழ்க்கையின் முடிவை நெருங்கியபோது, ஒருநாள் பின்வருமாறு கருதலானான்.

"அடக்கத்துடனும் ஒடுக்கத்துடனும் தாழ்மையாய் வாழும்படி எனக்கு அறிவு கொளுத்தப்பட்டு இன்றோடு ஆண்டு முப்பதாயிற்று. இறுமாப்பினாற் கண்மூடிப் பைத் தியம் பிடித்தவன்போ லிருந்த என்னை, அரச சமூகத்தை விட்டு வெளியே தள்ளச்சொன்னது நானேயன்றி வேறொருவருமில்லை என்று எல்லோரும் எண்ணிக் கொண்டிருக்கின்றனர். இதனுண்மை ஓடையினோரத்தில் பற்றற்று வாழ்ந்து வந்த துறவி ஒருவருக்குத்தான் தெரியும். அவர் இறந்து அநேக நாளாகின்றன. எனது வரலாற்றை நான் இறக்குமுன் மற்றவர்களுக்குச் சொன்னா லன்றி அஃது ஒரு கனவைப்போல் மறந்துபோகும். எனக்குப்பின் வருகிறவர்கள், எனக்கு வந்த துன்பங்களை யறிந்து, செருக்கினாற் சீர்குலைந்து போகாவண்ணம், நிகழ்ந்தவற்றை எல்லாம் எழுதி வைப்பேன்" என்பதே.

அங்ஙனமே, இக்கதை எழுதப்பட்டது. ஆயினும் அவனுக்குப்பின் வந்த அரசன், அதனால் ஒரு பயனும் பெறவில்லை. செருக்காற் சிறப்பிழந்தோனைவிட அவன் பன்மடங்கு அதிகமாய்த் தருக்கியிருந்தான். கடவுள் அவனையும் இடுக்கண்கள் வழியாய் நல்லாற்றிற்குக் கொணர்ந்தாரோ இல்லையோ? நாமறியோம்.

## உ. பொற்கனிகள்

மேல்நாட்டிலுள்ள அழகிய துறைமுகமொன்றில், பல்லாயிரம் ஆண்டுகளுக்குமுன் பகலவன் உச்சியிலிருக்கும் வேளையில், ஒரு கப்பல் பாய் விரித்துப் புறப்படுந்தறுவாயில் இருந்தது. இளங்காற்று வீசிக் கடலில் அலையின்றிப் பிரயாணஞ் செய்வதற்கு வேளை பொருத்தமாயிருந்ததால் நங்கூரத்தை உயர்த்தி மாலுமிகள் கப்பலை யோட்டத் தொடங்கினதும், கரையிலிருந்து கப்பலை நிறுத்தும்படி ஓர் ஓசை பிறந்தது. யாதோ பயணத்திற்கு இன்றியமையாதவற்றை மறந்துவிட்டோம் போலுமென்று மாலுமிகளின் தலைவன் கப்பலை நிறுத்த உத்தரவு கொடுத்தான். தங்கள் காதிற்பட்ட குரல் வந்த திசையை நோக்க, துறைமுகத்தை யடுத்த குன்றின் சாரலில் இரண்டு மனிதர் ஓட்டமா யோடிவருவதை மாலுமிகள் பார்த்தார்கள்.

இவர்கள் இருவருங் கரையருகில் வந்ததும், மாலுமிகள் அவர்களை உற்று நோக்கினார்கள். முதலில் வந்தவன் உருண்ட கண்களுஞ் சுருண்ட மயிரு முடையவனைப் பார்த்தவர்கள் வியக்கத்தகுந்த உயரமும் அகலமும் பொருந்திய பருத்துத் திரண்டு இறுகிய தோள்களுடன் அளவற்ற தேக வலியுள்ளவனைத் தோன்றினான். பொற்பூண்க ளமைந்த அரித்தோலை மேலே போர்த்தவனைக் கையில் சாலப் பெரிய தண்டாயுதம் ஏந்தி வந்த இவன் பிறகே, ஓடிக் களைத்துக் குறு மூச்சுடன், நீண்ட தடியூன்றிக் கண்குழிந்து கன்னஞ் சுருங்கிய கிழவனொருவன் வந்து நின்று, "நானுனக்குச் சொன்ன கப்பலிதுதான்; இனிச் செய்யவேண்டியதைச் செய்," என்றான். மற்றவன் இவை கேட்டு மகிழ்ந்து மாலுமிகளைப் பார்த்து, "அன்பர்

களே, நீங்கள் கீழ்த்திசையை நோக்கிப் போகிறவர் களென்று பிறர் சொல்லக் கேட்டேன். நெருப்பால் இறக்கவேண்டுமென்பது என் தலை எழுத்தாகையால் வெங்கதிர் உதிக்குமிடத்திற் சென்று அதன் வெப்பமெப் படி யிருக்குமென்று பார்க்க விரும்புகிறேன். எங்களைக் கப்பலிலேற்றிக்கொண்டு கடல்மீது செல்வீரா?'' என்று கேட்டான்.

கப்பலின் தலைவன் மறுமொழியாக, "ஐயா உம் முடைய பெயரென்ன? நாங்கள் வணிகர்களாதலால் ஊதியமின்றி ஒன்றையுஞ் செய்யோம். உங்களைக் கப்பலி லேற்றிக்கொண்டால் என்ன தருவீர்கள்? உம்மைப் பார்த் தால் நல்ல செல்வ முடையவரென்று தெரிகிறது,'' என் ருன். வளர்ந்து தளர்ந்த கிழவன் மீகாமன் சொன்னதைக் கேட்டு முணுமுணுத்துக்கொண்டே கீழே குனிந்து, "மண லில் யாதோ ஒன்றை எடுத்தான். இளையவனே, "நான் வீட்டைவிட்டுக் கிளம்பும்போது நினைத்தது சரியாயிற்று,'' என்று மொழிந்து, மாலுமிகளைக் கூப்பிட்டு, "என்னு டைய பெயர் இப்போது உங்களுக்குத் தெரியாது. ஆனுல், இனிமேல் என் பெயரை நீங்கள் அறிவீர்கள். இப்போது என்னை '**வலியன்**' என்று கூப்பிடுங்கள். இதோ, இதைப் பெற்றுக்கொள்ளுங்கள்,'' என்று தன் கரத்திலிருந்த பொற்பூ ஒன்றைக் கப்பலின் மேற்றட்டில் விழும்படி எறிந்தான். தண்டேன்றித் தடுமாறி நின்ற வயோதிகன், நரம்பெழுந்து நின்ற தன் கையில் இரண்டு புதற்றரமான முத்துக்களை யெடுத்துக் கடலோடிகளுக்கு நேராய் நீட்டி, "இதை வாங்கிக்கொள்ளுங்கள். 'கடற்கரை இடையன்' என்பது என் பெயர். இன்னும் என்னைப்பற்றி நீங்கள் அறிய வேண்டுமாயின் கொஞ்சநாட் பொறுத்திருங்கள்,'' என்ருன்.

இருவருடைய மொழிகளையுங் கேட்டபின் கப்பலோட்டிகளுடைய மனத்தில் எடுத்துரைக்க முடியாத சந்தேகங்களுந் திகிலு முண்டாயின. அவர்களைக் கோபமூட்டாது ஏற்றுக்கொள்வதே தகுதியெனத் துணிந்து, இருவரையுங் கப்பலில்வந் தேறிக்கொள்ளும்படி யழைத்தார்கள்! உடனே வலியன் வயோதிகனைத் தன் கையில் தூக்கிக்கொண்டு சமுத்திரத்தில் இறங்கி, அலைகளை அற்பமும் மதியாமற் சாடி நடந்து, கப்பலருகில்வந்து, அதிலிருந்து தொங்கிய கயிற்றைப் பிடித்துத் தாவி உள்ளே சென்றான். தூக்கிய புருவங்களுடனும், விரிந்த கண்களுடனும், மாலுமிகளெல்லோரு மொன்றாய்க் கூடி ஒப்பற்ற வலியுடைய இப்பெரு மகனுடைய கை கால் முகங்களைக் கூர்ந்து பார்த்து, "இப் புருடனைப்போ லெங்கும் கண்டதில்லை," என்று வாய்திறந்து சொல்லாமற் கண்களாற் பேசிக்கொண்டார்கள்.

காற்று முன் வீசிய திசை மாறித் தென்கிழக்காய் வீசினது. பலசாலியானவன் மரக்கலத்தின் முனையில் நின்றுகொண்டு விரிகடலைப் பார்த்தவண்ணமா யிருந்தான். வயோதிகனோ பின்னால் உட்கார்ந்து கடற்கன்னிகைகளையும் சமுத்திர மீன்களையும்பற்றி மாலுமிகளுக்குக் கதைகள் சொல்லத்தொடங்கினான். அவன் சொன்னதைப் பார்த்தால், ஆழத்திற் புகுந்து அங்குள்ள அதிசயங்களை அவன் நேரிற் கண்டவனென்று எண்ணும்படியாயிருந்தது. இங்ஙனம் குணதிசையை நாடிக் கப்பல் புறப்பட்டு, எவ்வித இடையூறுமின்றி மூன்றுநாள் ஓடிற்று. நாலாவது நாள் அதிகாலையில், பாய்மரத்தின்மேல் நின்ற யாமக்காரன், தூரத்தில் நிலந் தெரிவதை அறிவித்தான். இதைக் கேட்டவுடன் மக்களிற் சிறந்த வல்லமை வாய்ந்தவன் தனது தோழனாகிய கிழவனைக் குறிப்பாகப் பார்த்துப்

பின்னெழுந்து, மரக்கலத்தின் முற்பாகத்தில் வந்து நின்று, கையைக் கண்களுக்குமேலே உயர்த்தி, எதிரே தெரிந்த நிலக்கரையை உற்று நோக்கினான், இவ்வாறு இவன் கவனித்துக்கொண்டிருக்கும்பொழுதே கரிய மேகங்கள் திரண்டெழுந்து ஆகாயத்திற் பரவி, நிலமுங் கரையுந் தெரியா தொழியச் செய்தன.

சிறு மழை பொழிய ஆரம்பித்தது. சற்றேனும் அசைவின்றிக் காற்று நின்றுவிட்டது. மாலுமிகளின் மனம் அயர்ந்தது. கப்பலும் நீரில் மிதந்து ஓடாமல் நின்றது. சிறிதுநேரம் மக்களும மரக்கலமும் நின்ற நிலையிலேயே செயலொடுங்கி மயங்கியபின், நாவாயின் பாய்கள் தடதடவென்று அடித்தன. கிழக்கிலிருந்து பெருஞ் சண்டமாருத மொன்று எழும்பிக் கப்பலைப் புடைக்க, அது மேற்கு முகமாய்க் கடலைக் கிழித்துக்கொண்டு பாய்ந்தது. அதன் ஓட்டத்தை நிறுத்தவும் திருத்தவும் இயலாது மரக்கல மக்கள் விழித்தனர். இரவென்றும் பகலென்றுந் தெரியாமல் ஆகாயம் இருண்டு தோன்ற இடைவிடாமல் காற்று மோதியடிக்கக் கடல் கொந்தளிக்க ஓய்வின்றிக் கப்பலோட, வலியவன் அங்குமிங்கும் விரைந்து சென்று, தன்னுடைய பலத்த புயங்களால் கப்பலைச்சமநிலைப்படுத்தினான். கோலூன்றிக் குனிந்தவன், காற்றையும் அலையையும் கருதாமல் நிதானமாய் நின்றுகொண்டிருந்தான். மாலுமிகள் ஒருவர் முகத்தை யொருவர் பார்த்துத் திடுக்கிட்டு நின்றார்கள்.

பூமியின் எல்லைகளுக்கப்பால் கொண்டு போகப்பட்டு, இறுதியில் இதற்குமுன் எவருங்காணாத இடங்களிற் போய்ச் சேர்ந்து, ஒருவருந் தப்பாமல், மாண்டு அழிந்து போவோமென்று அவர்கள் திண்ணமாய் நம்பினார்கள். ஆனால், அச்சமென்பது அணுவளவு மின்றி, அசையாத

அழகிய கோபுரம்போல் அவர்கள் மத்தியிலிருந்த தண்டாயுதனைக் காணக் காண அவர்களுக்குத் தைரியம் உண்டாயிற்று. அவன், பாய்மரத்தில் மோதிக் கதறிய காற்றுக்கிசைய இராகம்பாடிக் குதித்தெழுந்து பேய்போல் ஆடிய திரைகளைக் கண்டு நகைத்துத் தனது வலிமையால் கப்பலைக் காத்து நடத்தினன். இடியினேசையும் மின்னலினெளியும் அவனைச் சற்று மசைக்கவில்லை. இத்தகைய சத்தி வாய்ந்த இவ்வீரனும், விழித்த கண் இமையாமல் அமைதியாய் வாய் திறவாது நின்ற கிழவனும் தேவர்களாயிருக்க வேண்டுமென்று கப்பலோட்டிகள் நினைக்கலானார்கள். இப்படிப் பத்து நாட் சென்றபின் சண்டமாருதம் ஓய்ந்தது. மறுநாள் கொந்தளிப் படங்கிக் கதிரவனும் உதயமானன். இப்பொழுது யாவரும் பயந் தெளிந்தார்கள். கிழவனும் முன்போலவே பண்டைய நாட் சரித்திரங்களைச் சொல்லத் தொடங்கினன். ஆனல் இளையவனே எப்பொழுதும் மேற்குத்திசையைக் கவனித்துக்கொண்டிருந்தான்.

இருபதுநாள் கழிந்தபின் புதிய தேசமொன்றை அவர்கள் கண்டார்கள். முதலில், உயர்ந்த பெரிய மலைகளும், பின் பச்சைப்புல் வளர்ந்த நிலமும் தெரிந்தன. ஆனல், கரையருகில் வருவதற்குமுன் பொழுதுபோய் இருள்மூடியதால், இரவெல்லாம் கடலிலேயே நங்கூரமிட்டு நிற்கும்படியாயிற்று. அலைகளில்லாமல் எல்லாம் அமைதியா யிருந்தால், மோசமின்றி இராப்பொழுதைக் கழித்து, ஆசையுடன் சூரியோதயத்தை எதிர்நோக்கினர்கள். வெளிச்சமானவுடன், கூப்பிடு தூரத்திற்கப்பால் வெண்கலத்தால் அமைக்கப்பட்ட சுவரொன்று தெரிந்தது. எளிதாகக் கப்பலைச் செலுத்திக் கரையருகேவந்ததும், வலியன் எழுந்து தாண்டிக்குதித்து நிலத்தில் நின்று சிங்கம்போல் கர்ச்சித்தான். கிழவன் மெதுவாய் அவன் பிறகே போனன்.

சாதாரணரல்லாத இவ்விருவரும் யாதோ ஒரு காரியத்திற்காகத் தங்களுடைய நாவாயிலேறி அங்கு வந்தார்களென்று இப்பொழுதுதான் கடலோடிகளுக்கு விளங்கிற்று. அவர்கள் பின்னல் இவர்கள் போகாது, "நாம் தகாததொன்றுஞ் செய்யாமல் இங்கே அவர்கள் வருமட்டுங் காத்திருப்போமானல் அவர்களுடன் சுகமாய் நமது நாட்டிற்குத் திரும்பலாம்," என்று பேசிக்கொண்டிருந்தார்கள். ஆனல், அவர்களுக்குள் மனத்துணிவுடைய இரண்டு பேர், வலியனையும் அவன் நண்பனையும், பின்தொடர்ந்துபோக நிச்சயித்து மெதுவாக நடந்து சென்றார்கள். மேலே செல்லச் செல்ல, அப்பூமியின் சிறப்புத்தெளிவாய்த் தோன்றிற்று. பூக்கள் விரிந்த புதர்களிலிருந்து குருவிகளின் இனிய குரல் கேட்டது. இதற்கு முன் எங்குங் கண்டிராத மலர்கள் தோன்றின. மனத்தை மகிழ்விக்கும் நறுமணம் எங்கும் உலாவியது.

இங்ஙனம் காதிற் கிசைந்த குரல்களும் கண்ணைக் கவரும் நிறங்களும் முகர்தற்கினிய வாசனைகளும் நிறைந்து களிப்புண்டாக்கு மவ்விடத்தில் தண்டாயுதனும் அவன் தோழனும் நடந்து, வெண்கலச்சுவரில் அமைக்கப்பட்ட பெரிய கதவண்டை வந்து நின்றார்கள். பின்னல் வந்த மாலுமிகளுந் தூரத்திலேயே நின்று பார்த்தார்கள். குருவிகளின் சத்தமும் காற்றின் இரைச்சலும், அடங்கியொடுங்க உரத்த ஓசையுடன் தன் தண்டாயுதத்தை ஓங்கினன் வீரரிற் சிறந்தவன். இருப்புக் கதவை உக்கிரமாய்த் தாக்க, பூட்டுந் தாழும் பறந்து, தகடுகள் சிதறி, நிலையும் வாயிலு மொன்றாய்த் தரையில் விழுந்து கிடந்தன. அங்கே ஒரு வினடியுந் தாமதிக்காமல், வீரன் உள்ளே பிரவேசித்தான். அவனுடைய தோழனே வெளியே ஒரு மரத்தில் சாய்ந்து நின்றான்.

மாலுமிகள் சிறிது நேரம் மயங்கி நின்ற பிறகு, முன்னேறிச் சென்றார்கள். கிழவன் சாய்ந்து கொண்டு நின்ற மரத்தினருகே வந்து பார்த்தபோது, அவனங்கில்லை. அவன் மாயமாய் மறைந்து போனான். ஒரு பச்சோந்தி மாத்திரம் மரத்தி லிருந்தது. அதை அவர்கள் கவனிக்கமால், வில விலத்த நெஞ்சுடன், உடைந்து கீழே கிடந்த கதவின் வழியாய் உள்ளே எட்டிப் பார்த்தார்கள். அங்கே பயங்கரமானதொன்றுந் தோன்ற வில்லை. கருதரிய அழகு நிறைந்த சிங்கார வனமொன்றும் எதிரே தெரிந்தது. எதற்கும் அஞ்சாதவனாகிய வலியவன் சிங்கம்போல் மேலே சென்றான். சிறிது நேரம் அங்கேயே நின்று யாவற்றையும் கவனித்தபின், கப்பலோட்டிகளும் உள்ளே போனார்கள். அவர்கள் கண்ட அதிசயங்களுக்கு அளவில்லை. இவ்வளவு அற்புதமான காட்சிகளைக் கண்ட பின், "நாம் உயிரோடு திரும்புவோமோ இல்லையோ', என்ற சந்தேகம் அவர்களுக்குண்டாயிற்று. என்றாலும், "இறப்பதற்குமுன் இன்னுஞ் சிலவற்றைக் காண்போம்" என்ற தீர்மான முடையவர்களாய் அவ்விருவருங் காத்திருந்தார்கள்.

சிங்கத்தோலை ஆடையாக அணிந்தவன், தன்வழியை மறைத்து நின்ற மரக்கிளைகளை வலது புறமாகவும் இடது புறமாகவும விலக்கிக்கொண்டு நடந்துபோய்த் தான் எதிர் பார்த்ததைக் கண்டவன்போல ஆனந்தக் கூச்சலிட்டு விரைவாயோடினான். அப்பொழுது பெண்கள் ஒருவருக்கொருவர் தாழ்ந்த அமைதியான குரலிற் பேசுவது கேட்டது. அதனுடன் அச்சத்தைத் தரும் ஒரு தொனியுமுண்டாயிற்று. கடலோடிகளின் மனந் துடித்தது. ஆனாலுங் காற்றையுங் கடலையும் மதியாது தங்கள் கப்பலைச் செலுத்திய புருடன் முன்னே செல்வதை யுன்னித் தைரியமடைந்து நடந்தார்கள். சிறிது தூரம் நடந்தபின், செடிக

ளில்லாத சிறு வெளியொன்று தோன்றிற்று. அங்கே பளிங்காற் செய்யப்பட்ட தொட்டியிலிருந்து வழிந்து பெருகிய தெளிந்த சிற்றோடையின் கரையில் மெல்லிய தாய் வளர்ந்து ஓடையின்மேல் கவிந்து நின்ற மரமொன்றில் அழகிய செம்பொன் மேனியுடன் விளங்கிய கற்பகக் கனிகள் மூன்று தொங்கிக்கொண்டிருந்தன.

அம் மரத்தைச் சுற்றிச் சித்திரப் பதுமைகள்போல் அழகு வாய்ந்து அடிமுதல், முடிவரையில் நிர்வாணிகளாயிருந்த மூன்று இளம் பெண்கள், அளவு கடந்த ஆண்மையுடன் தோன்றிய, உடல் வலியில் ஒப்பில்லாத பெருமகனைக் கண்டு எழுந்து நின்றார்கள். அவர்களுடைய கூந்தலவிழ்ந்து தேகத்தைச் சுற்றித் தொங்கிற்று. இலைகளின் வழியாய் நுழைந்த சூரியனொளி சிறுசிறு பொட்டுக்களாய் அவர்களுடைய தேகமெங்கும் தேமல் படர்ந்ததையொப்ப ஆடிக்கொண்டிருந்தது. ஆனால் அவர்களுடைய பாதங்களை யொட்டி, மரத்தின் வேர்களை மூடிக்கொண்டு, நீலமுங் கறுப்புங் கலந்த நிறமுடன் மரக்கிளைகளைத் திரள்திரளாய்ப் பின்னிப் பிடித்து, நெருப்புப் பொறிகள் பறக்குங் கண்களுடன் உயரப் படமெடுத்தாடிநின்ற பெரிய சர்ப்பமொன்று அங்கேயுள்ள கற்பகக் கனிகளைக் காத்து நின்றது. புருட சிகாமணியாகிய வலியவன் தன் தண்டாயுதத்தைக் கீழே யூன்றி, அதன்மேற் சாய்ந்துகொண்டு, மலர்ந்த முகத்துடனும் சாந்தமான குரலுடனும் அப்பெண்மணிகளை நோக்கி, “கன்னிகைகளே, இத்தனை காலமாய் நீங்கள் இக் கனிகளை நன்றாய்க் காத்து வந்திருக்கிறீர்கள். ஆனால், காலங்கள் மாறுவதால் உலகிலுள்ள யாவும் மாறவேண்டுவனவாயிருக்கின்றன. இங்குள்ள பொற்கனிகளை என்னிடம் நீங்கள் கொடுக்கவேண்டிய நாளும் நாழிகையும் இப்போதுதான் வந்தன,” என்றான்.

அப்போது முதற் கன்னிகை பதிலளிக்கத் தொடங்கினாள்: வேனிற் காலத்தில் குளிர்ந்த சோலைகளில், வீசும் இளந் தென்றலினும் இனிய ஓசையுடன், "நீ இயம்புவது விந்தை. கருங்கடல்சூழ் இரும்புவியில் நீ பகர்ந்த வண்ணம் ஒன்று வேறொன்றாய்த் திரிந்து மாறினும், இங்குள்ள தொன்றும் மாறுவதில்லை. தேவர்களாயினும் மனிதர்களாயினும் இங்கொன்றையும் மாற்ற வியலாது. நீ நிற்குமிடத்திலேயே மாண்டு மறைந்து போவாய். உன்னைக் கண் மூடி விழிப்பதற்குமுன் கொல்ல வல்ல நஞ்சுடைய இக் கொடிய நாகத்தைப் பார்," என்று பகர்ந்து சர்ப்பத்தைச் சுட்டிக்காட்டினாள். அவள் பேசியதை முற்றும் அறிந்தது போல், மரத்தினுச்சியில் படமெடுத்து நின்ற நாகம் நீண்டு பருத்த தன் உடலின் வளைவுகளை யுருவிக்கொண்டு சற்றே முன்வந்தது. இதற்குள் இரண்டாவது மடந்தை, "குவலயம் அழிந்து போனாலும், நாங்கள் இங்கேயே இத்தரு நிழலில் தங்கியிருப்போம். உலகில் நடப்பதைப்பற்றி நாங்கள் சிந்தியோம்," என்றாள். மூன்றாவது நங்கை, புல்லாங்குழலினு மினிய சொற்களால், "எங்கள் பொற் பழங்களைக் கவர்பவன் யாராயிருந்தாலும் அவன் வாழ்க்கை சிதையும். நீ பிறந்த நாள் உனக்குப் பொல்லாத நாள். மக்களுடைய ஆசையினாலும் இச்சையினாலும் வேறு காரணங்களினாலும் மாறுதல்கள் வந்தாலும் எல்லாம் முன்னிருந்தபடியே இருக்கும்," என்றாள்.

"சரி, அப்படியே ஆகுக; என்னை இங்கு ஏவி இழுத்துக்கொண்டு வந்த ஊழ்வினையால் நான் மாள்வதாயினும் மீள்வதாயினும், இக்கனிகளை நான் கைப்பற்றின பின் வருவது சாபமாயினும் இலாபமாயினும், நான் கொண்ட நோக்கத்தை முடிக்க முயல்வதே என்னுடைய துணிபு. உங்களுடைய கொடிய சர்ப்பத்தை என்மேல் வரவிடுங்கள்,"

என்றான், பகைவர் கண்டு நடுங்கும் பலவான். இவ்வாறு அவன் சொல்லி வாய்மூடுமுன், பெரும்புகை கிளம்பின தென்றெண்ணும்படி, கடிதில் மரத்தை விட்டு வந்து மின்னல்போற் பாய்ந்து கீழே நின்றுகொண் டிருந்தவனைச் சர்ப்பந் தாக்கியது. அஃது ஒரு நிலையில் நில்லாது, அங்கு மிங்குஞ் சீறி விழுந்து சினந்து சாடி யாடிற்று. தண்டேந் திய செம்மல் இதை யுற்றுநோக்கி அசையாது நின்றான். அப்போது அக்கொடிய பாம்பு தன்னுடைய தேகத்தி னொரு பாகத்தால் சுந்தர வீரனின் கால்களை வளைத்துச் சுற்றிக்கொண்டு, தனது பிளவுண்ட நாக்கை நீட்டி வாங்கி விரைவாய் அசைந்து துள்ளிற்று. சிறிது சிறிதாய்த் திறல் மிகுந்த தோன்றலின் தேகமுழுமையும் பாம்பின் வளைவுக ளால் மூடப்பட்டது. என்றாலும் அவன் நின்றவிடத்தை விட்டு நிலைபெயராது, செயலற்றவன்போற் றோன்றினான். இறுதியில் அவனுடைய கோபம் மூள, பூமி யதிரும்படி கனைத்துக் கூவி யெழுந்தான். உடனே முதுகெலும்புகள் மடமடவென்றொடிந்து ஒரு குவியலாய்ப் பாம்பு கீழே விழுந்தது. குன்றனைய திரளாய்க் கிடந்த சர்ப்பத்தின் வாயிலிருந்து ஊற்று நீருக் கிணையாய் இரத்தம் பெருகி வடிந்து பச்சைப் புல்லிற் பாய்ந்தது. ஆண்மைக் கணிகல மானவன், அதைச் சிறிது நேரம் பார்த்துவிட்டு, ஓங்கி யெழுந்த பெருஞ்சினத்தின் குறிகள் முகத்தைவிட்டு நீங்க, அகமலர்ந் தங்குள்ள அற்புதக் கனிகளுக்கு நேராய்த் திரும்பினான். இக் காட்சியை எதிரேயிருந்து கண்ணுற்ற கன்னிகைகள் உண்மையாகவே சித்திரப்பதுமைகளானார்க ளென்று சொல்லும்படி ஐம்புலன்களும் ஒடுங்கி நின்றார் கள்.

அருந்திறலண்ணல் கைகளை நீட்டி அங்கு வளர்ந்த மரத்தின் கிளையை வளைத்துப் பொற்கனிகளை எடுத்துக்

கொண்டு, "அழகுடையீர், மக்களுடைய வினைகளாலுண்டாகும் இன்ப துன்பங்களுடனே உலகம் தன்னுடைய நெறியில் விரைந்து செல்கிறது; தன் முடிவையடையுமட்டும் அங்ஙனமே அது செல்லவேண்டும். நான் உதிருண்ட இலையைப்போல் இருந்தவிடந் தெரியாது ஒழிந்து போனதும், நான் செய்து முடித்த அரிய காரியங்கள், முயற்சியினால் வரும் பயனை மனிதருக்கு விளக்கிக் காட்டும். இவ்வினியவிடம், இதோ இறந்து கிடக்கும் இப்பாம்பின் உறைவிடமா யிருப்பதால் எவருக்கும் நன்மை பயந்ததில்லை. இந்தப் பழங்களை நாவெடுத்துக்கொண்டு போவதால் இவ்விடத்தினருமை குறையாது. நீங்கள் இன்னு மிங்கேயே இருங்கள். இங்கு நடந்ததன் ஞாபகார்த்தமாக, வாகமைந்த இவ்வரைக் கச்சையை வைத்துக் கொள்ளுங்கள். இனி நெடுநாட்களுக் கப்புறம் நீங்கள் சென்றகாலங்களைப்பற்றிப் பேசும்பொழுது, கடல் கடந்து வந்து உங்கள் கனிகளைக் கவர்ந்த என்னை மறவாதீர்கள்," என்றான்.

அவர்கள் முன்னிருந்தபடியே செயலற்று நின்றார்கள். விழித்த கண் மூடாது முகத்திலொரு குறியுமின்றி, மௌனமா யவர்கள் நிற்பதைக் கண்ட வலியவன், பழங்களைச் சிங்கத்தோல் ஆடைக்குட் போட்டுக்கொண்டு, குவலயத்தோர் அதிசயிக்க வேறு அரிய செயல்கள் இயற்றச் சென்றான். அவனது ஆற்றலை அறிய எவரே நாடார்?

ஒளித்திருந்து இவற்றைப் பார்த்த கடலோடிகள் தண்டாயுதன் திரும்புவதைக் கண்டு ஓட்டம் பிடித்தார்கள். கடிதிற் கப்பலை யடைந்து அங்குள்ளவர்களுக்குத் தாங்கள் கண்டவற்றைச் சொல்ல வாயெடுக்கும்போது கிழவனும் குமரனுந் தங்களுக்கு நேரே வருவதைக் கண்டார்கள். இக்கிழவன் எங்கே மறைந்திருந்து இப்பொழுது தனது நண்பனாகிய வலியனுடன் கலந்து வந்தானென்பது அவர்களுக்கு

விளங்கவில்லை. அவன் மாலுமிகளை நோக்கி, "ஐயன்மீர், பாய்விரித்துப் புறப்படுங்கள். இன்னும் இங்கிருப்பது நன்றன்று" என்று சொல்ல, நொடிப்பொழுதில் ஒரு காற்றுண்டாகிக் கப்பலைக் கிழக்குநோக்கி ஓடச் செய்தது. எல்லோரும், களிப்புடன் பேசிக்கொண்டிருக்கையில் கிழவனுடைய முகம் வேறுபட்டுப் புதிதாயிற்று. முதியவனாய்த் தோன்றிய தோற்றம் போய் இப்பொழுது அவன் நல்ல இளமை பொருந்திய உயர்மகனாய்த் தோன்றினான்.

ஆறுதினங்கள் சென்றபின் அவன் கப்பலோட்டிகளைப் பார்த்து, "நான் சொல்லப்போவதை அமைதியாகக் கேளுங்கள். உலகிற் சிறந்த ஆண்டகை என்று எவரும் புகழுங் கோமகனொருவன் இருக்கிறான். அவன் தனது விரோதியாகிய ஓர் அரசனுடைய ஆணைக்கு வினையின் பயனால் கட்டுப்பட்டு, மக்களுடைய கால்படாத ஒரு நாட்டிற்குச் சென்று அங்குள்ள அரிய பொருளொன்றைக் கொண்டுவர உடன்பட்டு, எங்ஙனம் அந்நாட்டிற்குச் செல்வதென்று அறியாது வாடிக் கடலோரமாய்த் தனியே அலைந்துகொண்டிருக்கையில், ஓரிடத்தில் ஆழிவேந்தன் (கடலரசன்) நீர்ப்பெண்கள் சூழக் கொலுவிருப்பதைக் கண்டு, மெள்ள நடந்துபோய் அவனைச் சண்டைக் கிழுத்துப் பிடித்தான். கோமகனின் உடலுரத்தை உடனே அறிந்த கடலரையன் தனது வலிமையால் அவனை வெல்ல முடியாதென்றறிந்து, கரடியாய்ப் புலியாய்க் குருவியாய் மீனாய் உருவமாறி முயன்றுபார்த்தும் தப்பியோட முடியாது வயது முதிர்ந்த கிழவனாய்த் தோன்றி, 'அப்பா நான் தோற்றேன். உனக்கு என்னவேண்டும்?' என்று கேட்டு, அவன் கருத்தை யறிந்து அப்போதுதான் புறப்படுந் தறுவாயிலிருந்த ஒரு கப்பலுக்கு அவனை அழைத்துக் கொண்டுபோனான். அதற்குப்பின் நடந்த வரலாற்றை நீங்

கள் யாவரு மறிவீர்கள்,'' என்றான். இப்படிச் சொல்லி முடிந்தவுடன் கிழவனுயிருந்து குமரனைய் மாறித் தன் வரலாற்றை யுரைத்த கடலரசன், கண்ணிற்குத் தெரியாமல் மறைந்தான். மாலுமிகள் பயந்து வலியனை யணுகி அவனைத் தொழுதுகொள்ள விரும்பினார்கள். ஆனால், அவன் அவர்களைத் தடுத்து, "இன்னும் நெடுநாள் நான் நீணிலத்தில் வாழவேண்டும். எனது முடிவு இன்னும் வரவில்லை,'' என்றான்.

கப்பல் விரைந்தோடினது. வலியன் தனது இடம் போய்ச் சேர்ந்தான். மாலுமிகளும் அதன்பின் தங்கள் ஊருக்குத் திரும்பித் தாங்கள் கண்டதையுங் கேட்டதையும் யாவருக்கும் அறிவித்தார்கள்.

# ௯. கற்பதித்த காலணி

வானமளாவிய மலைகள் ஒரு புறமும் அலைவீசி யொலிக்கும் பெருங்கடல் மறுபுறமும் எல்லையாக அமைந்த நிலப்பரப் பொன்றில், ஒரு காலத்தில் ஒரு மக்கட் கூட்டத்தார் வாழ்ந்து வந்தனர். வெப்ப தட்ப மிகுதியன்றி நல்ல செழிப்புவாய்ந்த இந்நிலத்துமக்கள் வெளிநாடுகளுக்குச் சென்று பொருள்தேடிச் செல்வந் தொகுக்க வேண்டுமென்ற எண்ண மில்லாதவராய் ஆடுமாடுகள் வளர்த்துப் பயிரிடுவதிலேயே தங்கள் நாட்களைக் கழித்தனர். வயல் வேலை முடிந்து ஓய்ந்திருக்கும்போது, பெண்கள் பஞ்சு நூற்பார்கள்; ஆண்கள் அழகிய பல தட்டுமுட்டுகள் செய்வார்கள். சில வேளைகளில் அங்குள்ள துறைமுகத்திற்கு வேற்றுநாடுகளிலிருந்து பல பண்டங்கள் நிறைந்த கப்பல்கள் வருவதுண்டு. அப்பொழுது ஆடவரும் மகளிரும் தங்களிடமுள்ள பொருள்களைக் கொண்டுபோய் விற்றுக் கற்பதித்த நகைகளையும் உயர்ந்த பலவகையான ஆடைகளையும் வாங்குவார்கள். இவற்றை அவர்கள் பெட்டிகளில் பத்திரமாய்ப் பூட்டிவைத்துப் பெருநாள் திருநாட்களில் அணிந்துகொள்வார்கள்.

இவர்களுள், தனது வாழ்நாளெல்லாம் வருந்தியுழைத்துப் பிழைத்து, அறுபது வயது நிறைந்து கிழவனாகிய மிக்க எளியவ னொருவன் இருந்தான். இளவயதில் அவன் சேர்த்து வைத்த பொருள் வரவர எங்ஙனமோ குறைந்து கொண்டே வந்தது. அந்நாட்டிலுள்ளோர் பயின்றுவந்த எல்லா வேலைகளிலும் நற்றேர்ச்சியுடைய இவன், ஏன் வறுமையடைந்து வாட்டமுற்றானென்று ஒருவருஞ் சொல்ல வியலவில்லை. நரைத்த கிழவியாயிருந்த அவன் மனைவியும் வீட்டிற் கடுத்தவற்றைப் பழுதின்றிப் பார்த்து

வந்தாள். இருவரும் இங்ஙனம் அறிவுந் திறமையும் உடைய வராயிருந்தும் அவர்களுடைய நிலைமை இடுக்கண் நிறைந்த தாயிற்று! கையிலுள்ள பொருளும் பெருகாது குறு கிற்று. ஆயினும் எங்ஙனமோ அவன் தன் நாட்களைக் கழித்து வந்தான். இதனுண்மை யென்னவெனில் அவனு டைய இளவயதில் நல்ல செல்வமும் திறமையும் பொருந்தி உவப்புடன் வாழ்ந்து வருநாளில், மண நிகழ்ந்து பல ஆண்டுகளாகியும் பிள்ளைப்பே றில்லாததினுல் பெரிதுங் கவற்சியுற்ருன்.

கணவனும் மனைவியுங் காலையும் மாலையும் இறைவனை நோக்கித் தங்கள் பொருளனைத்தையும் எடுத்துக்கொண்டு, ஒரு குழவியைத் தங்களுக்கு அளித்தருளல் வேண்டு மென்று இறைஞ்சி வந்தனர். இப்படி இருபது ஆண்டு களாகக் கடவுளை வேண்டிக்கொண்டதன் பயனுக, இறுதி யில் அவன் மனைவி சூல்கொண்டாள். ஒருநாள் இள வேனிற் காலத்தில், விண்ணில் முகிலின்றி எங்கும் நீல நிறமாயிருக்க, உளங்களிக்கும் இளங்காற்றுவீச, குழந்தை வேண்டுமென்று பொருளிழக்க உடன்பட்ட இம்மகன் பல வற்றைக் கருதிக்கொண்டே தூக்கத்தி லாழ்ந்து ஒரு கனக் கண்டான். அஃதாவது, தானுந் தன் இல்லாளுந் தங்கள் பூந்தோட்டத்தி லரும்பிய ஒரு முகையை உற்றுநோக்கிக் கொண்டிருக்கையில், விசும்பெங்குங் கார்முகில் நிறைந் தது. அச்சிறுமுகை இதழ் விரிந்து நின்றவுடன், அதைச் சுற்றிக் கண்ணுக்கினிய ஒரொளி விளங்கிற்று. இதன்மேல் அவர்களிருவருக்கும் மயக்க மேலிட்டு உயிரற்றவர்போற் கீழே விழுந்தனர். பிறகு பூத்த அச்செடி ஓங்கி வளர்ந்து பெருமரமாகி, அவர்கள்மேற் கவிந்து நின்றது. அம்மரக் கிளைகளிடையே மன்னர்கள் அணியும் முடிகளும் வாட் களுங் கப்பல்களுங் கோவில்களுந் தொங்கிக்கொண் டிருந்

தன; அதன் இலைகளின் நடுவே போருக்குரிய கிடுகு முதலி யவை ஒன்றோடொன்று அடிபடும் ஓசை கேட்டது; அவர் கள் அறியாத மொழில் பாட்டுக்கள் பல கிளம்பின; ஆனால், ஒன்று அவர்களுடைய மொழியிலேயே பாடப்பட் டது. இதன்பின் அவன் எழுந்து பார்க்கத் தன் வீட்டின் ஓர் அறையில் தானிருப்பதையும், ஞாயிற்றின்ஒளி சாளரத் தின் வழியாய் உள்ளே வருவதையுமறிந்து வெளியே எழுந்து நடந்தான்.

அவன் கண்ட கனவு தீங்கொன்றையுங் குறிக்காத தால் அகமகிழ்ச்சியுடன் தன்முன் எதிர்ப்பட்டவரை வினவி, வழியிலுள்ள வயல்களையுங் களஞ்சியங்களையும் ஆவலுடன் பார்த்துக்கொண்டு போனான். புற்களின் நடுவே பூத்திலங்கிய பூக்களும், பசிய வயல்களும் அவன் உள் ளத்தை மகிழ்வித்தன. இவ்வாறு அந்நாளெல்லாம் திரிந்து சாயங்காலமானபின், விண்ணின் திங்களெழும்பி வீடுகளின் நிழல்கள் தெருக்களில் நீளமாய்விழும்பொழுது, தன்னகம் வந்து சேர்ந்தான். ஒரு சிறுமி அவனைக் கிட்டி, "நெடுநாளாய் நீ கருதியது கைகூடிற்று; உன் எண்ணம் ஈடேறியது. கடவுளை வாழ்த்து. உன் வீடு இனிக் களிப்பு நிறைந்த வீடாயிற்று" என்று மொழிந்தாள். அவன் உள்ளே சென்று தனக்கொரு சிறு மகள் பிறந்திருப்பதை அறிந்து மகிழ்ந்தான்.

சின்னாட் சென்றபின் அவன் தன்நண்பரையும் பிறரை யும் வரவழைத்துப் பெரிய விருந்துசெய்து பொருளுங் கொடுத்தான். குழந்தை நன்றாய் வளர்ந்து பார்ப்பதற்கு இனியதாய் விளங்கிற்று. ஓராண்டு முடிந்ததும் தாய் தந்தையர் மறுபடியும் ஊரிலுள்ளோர் பலருக்கு விருந்து செய்தனர். ஆனால், முன்போல் பணங்கொடுக்க முடிய வில்லை; எதையும் அவ்வளவு சிறப்பாய்ச் செய்யக்கூடவில்லை.

ஏனெனின் அவர்கள் வைத்திருந்த உடைமை குறைய லாயிற்று. நாட்களுந் திங்களும் ஆண்டுகளுஞ் சென்று, குழந்தை வளர வளரப் பெற்றோர்க்கு வறுமை மிகுந்தது. கையிலுள்ளவற்றையெல்லாம் விற்றுக் கடைசியில், நெடு நாளாய்த் தங்களுக்கு உணவளித்துவந்த நிலத்தையும் விற் கும்படியான நிலைமையை யடைந்தனர். அவர்களுடைய பெண்ணும் இப்பொழுது பத்தொன்பது வயது மடந்தை யாயினள். இவள் பெயர் பொன்னி.

நாடெங்கும் இப்பொன்னிக்கு அழகில் நிகர் எவரு மில்லையாயினும், பிறந்ததுமுதல் அவள் பெற்றோர் ஏழைக ளானமையால், அகமொடுங்கி முகம்வாடி அதிகமாயொன் றும் எவரிடமும் பேசாது, அல்லும் பகலுந் தன் வேலையி லேயே இவள் கருத்தாயிருந்தாள். இவளைத் தந்தை நோக்கி, "இவளுடைய உள்ளத்தில் என்னென்ன நினைவுக ளுண்டாகுமோ" என்று அடிக்கடி நினைப்பான். ஒருநாள் மூவரும் ஒன்றாய் அமர்ந்திருக்கையில், தன் வாழ்க்கையில் நடந்த ஒரு நிகழ்ச்சியைக் குறித்துத் தகப்பனுரைக்கத் தொடங்கினான்.

"மாலுமிகள் எவருமின்றி ஒரு கப்பல் ஒருநாள் நமது துறைமுகத்தில் வந்து சேர்ந்தது. இங்குள்ளோர் பலர் ஒன் றாய்த் திரண்டு கடற்றுறைக்குச் சென்று, கப்பலைக் கரைக்கு இழுத்துக்கொண்டுவந்து, அதிலிருந்த சாமான் களைக் கூறிட்டு எடுத்துக்கொண்டனர். நானும் அவர்களுள் ஒருவனாதலால் பிறர்க்குக் கிடைத்ததைப்போலவே எனக் கும் பல உயர்ந்த பொருள்கள் கிடைத்தன. இரண்டுதாழித் தேனும் பொற்சரிகை வேலையமைந்த பட்டாடையொன் றும் எனக்கு அகப்பட்டன. அதை இப்பொழுது நினைத் தால் நெஞ்சு புண்ணாகிறது. பொற்றகட்டால் அடிக்கப் பட்ட தலைச்சீரா ஒன்றும், வில்லொன்றும் அதற்கிசைந்த

அம்பறாத்தூணியும், முன் சொன்னவற்றுடன் எனது பாக மாய் வந்தன. இவைகளெல்லாம் நமக்குமுன் இதோ சுவ ரில் தொங்கிக்கொண்டிருக்கின்றன. ஆனால், இன்னுமொரு புதுமையான பொருளிருக்கிறது; அதை நான் இப் பொழுது காட்டுகின்றேன்; நீ விளக்கேற்று.'' என்று தன் இல்லாளுக் குரைத்து, பெட்டியொன்றைத் திறந்து அதி லிருந்து நல்ல சரிகை வேலையுள்ள துணியால் மூடப்பட் டிருந்த ஒன்றை வெளியே எடுத்தான். அப்பொழுது பொன்னி தலைநிமிர்ந்து புருவம் நெறித்து அதை உற்று நோக்கினாள்.

துணியிற் பொதிந்திருப்பது யாதாயிருக்கலாம் என்று அவள் ஐயுற்று நிற்கையில், பொன்னும் மணியும் மின்னு வதைக் கண்டாள். விலைமதித்தற்கரிய கற்கள் பதித்த அழ கிய பொன் மிதியடி யிரண்டு, தன் தகப்பன் கையிலிருப் பதைப் பார்த்துப் பொன்னி மிகவும் வியப்பெய்தினாள். அப்பொழுது அவள் தந்தையருகிற்சென்று, அவ்வழகிய மிதியடிகளைத் தன் கைளால் தொட்டுப் பார்த்துச் சற்று நேரம் மகிழ்ந்து, பின் ஒன்றும் பேசாமல் வீட்டுவேலை களிற் கவனத்தைச் செலுத்துவாளாயினாள். மிதியடியைக் கண்டதாற் சிறிதுநேரம் நீங்கிய முகவாட்டம் மறுபடியும் அவளைப் பிடித்தது கிழவன் பொன்னியைக் கூப்பிட்டு, "குழந்தாய், அஃதெனக்குக் கிடைத்தபொழுது எனக்கு யாதொரு குறையும் இருக்கவில்லை; எனக்கு நிலமிருந்தது; பொருளிருந்தது; ஆனால் பிள்ளையில்லை. பல ஆண்டுகளாய் இவற்றை நான் வீட்டில் வைத்துக்கொண்டிருந்தேன். ஏனெனில் இவற்றிற்குத் தகுந்த விலைகொடுப்பார் இங் கெவருமில்லை. அன்றியும் பல நூல்களைக் கற்றுத் தெளிந்த ஓரறிஞன் இவற்றால் எனக்கு நற்காலம் பிறக்குமென்று சொன்னான். அந்த நம்பிக்கையினாலும் இவ்வளவு நாளும்

இம் மிதியடிகளைப் பேணி வைத்திருந்தேன். ஆனால் வயிற்றிற்கு உணவின்றி நாம் வருந்துங்கால் இவற்றைப் பெட்டியிற் பூட்டிவைத்தென்ன பயன்? நமது ஊருக்கு மேற்புறத்திலிருக்கும் கொற்றவை கோவிலில் தலைமுறை தலைமுறையாகத் தொண்டுபுரிந்துவரும் சுடலைப்பெருமான் என்பவன் இந்த மிதியடிகளைத் தான் வாங்கிக்கொள்வதாகப் பன்முறை எனக்குச் சொல்லியிருக்கிறான். அவன் நல்ல செல்வமுடையவனாதலின், நீ நாளைக் காலையில் இவற்றை அவனிடம் எடுத்துக்கொண்டுபோய் என்ன விலை அவன் தருவானென்று கேட்டுவா. நல்ல விலை கிடைப்பதாயிருந்தால் மிதியடிகளை விற்று நமக்கு வேண்டியவற்றை வாங்கிக்கொள்ளலாம்," என்றான்.

இதைக்கேட்ட பொன்னி அதிக வெறுப்படைந்து முகஞ்சுளித்தாள். "நாம் இவ்வளவு கீழான நிலைமையிலிருப்பது அவளுக்குத் தாங்கமுடியாத வருத்தமா யிருக்கிறது," என்றாள். பொன்னியின் வெறுப்புக் குறியைக் கண்ட அவளுடைய தாய். இதற்கு மறுமொழியாகப் பொன்னி வாய்திறந்து ஒன்றும் பேசாமல், அசைவற்றுக் கற்போலிருந்தாள். வயதுசென்ற அவளுடைய தந்தை, பெருமூச்சு விட்டெழுந்து தனது வேலைகளைச் செய்ய வெளியே போனான்.

மறுநாள் பொழுது விடிந்தவுடன், பொன்னி சுடலைப் பெருமான் வீட்டிற்குப் போகப் புறப்பட்டாள். கண்ணிற்குக் குளிர்ச்சி யளிக்கும் பச்சைப் புல் நிறைந்த வெளியினூடே சென்று, பலநிறப் பூக்கள் விரிந்து செழித்து வளர்ந்த தோட்டங்களைக் கடந்து அவள் செல்கையில், அவளை யறிந்த பலர் வழியில் எதிர்ப்பட்டு, நன்மொழி கூறினார்கள். அவர்களுடைய நன்மொழிக்கு விடையளித்த பொன்னி, அமைதியாக எளியவர்களுடன் பேசும் ஓர் அரசி

யைப்போலச் சொற்களை வழங்கினாள். வீட்டின் வாசலில் நின்று பொன்னியின் போக்கை உற்று நோக்கிய அவளுடைய அன்னை, "இவளொரு அரசியாயிருந்தால் எத்தனைபேருடைய தலையில் காலை வைத்து மிதிப்பாளோ?" என்று தனக்குட் சொல்லிக் கொண்டாள்.

பொன்னியோ, யாதொன்றையுங் கருத்திற் கொள்ளாது, விரைந்து நடந்துபோய், வயல்களையும் வீடுகளையுந் தாண்டிச்சென்று, "இவ்விடத்தில் நான் நெடுநாளாக இருக்கிறேன். இங்கு யாவும் முன்னிருந்தபடியே இருக்கின்றனவேயன்றிப் புதுமையானது ஒன்றுமில்லை. ஒருவர் மற்றொருவரைப்போ லிருக்கிறார்களே யொழிய நூதனமா யொன்று செய்பவரும் சொல்பவரும் இங்கில்லை. இறப்பதற்குமுன் அரியன, இனியன, புதியன காண்பதற்கு இங்கு வழியில்லை. இந்த நாட்டைவிட்டு வேறு நாட்டிற்குச் சென்று புதுமக்கள் நடுவேயிருந்தால் நலமாயிருக்கும்" என்று பேசிக்கொண்டாள். இங்ஙனம் இவள் தனக்குள் எண்ணி நடந்து, ஒரு குன்றின் உச்சியில் வந்து நின்றாள்.

குன்றின்மேல் ஓங்கி வளர்ந்த மரங்களின் கிளைகள் காற்றினால் அசைந்தன; மலைச்சாரலில் மாடுகள் மேய்ந்து கொண்டிருந்தன; தூரத்தில் வயல்களும் வீடுகளுஞ் சிறு புள்ளிகள்போல் தோன்றின. அதற்கப்பால் அலைவீசும் கருங்கடல் ஆகாயத்துடன் கலப்பதுபோல் தெரிந்தது. இவற்றையெல்லாம் கொஞ்சநேரம் நின்று பார்த்துவிட்டுப் பொன்னி பெருமூச்சுடன் முன்னேறிச் சென்று, காளி கோவிலினருகில் வந்தாள். அவ்விடத்தில் யாரோ ஒருவர் அவளைப் பேர்சொல்லி யழைக்கக் கேட்டுப் பொன்னி திடுக்கிட்டாள். குன்றின் புறத்திலிருந்து ஒரு நாய் துள்ளிப் பாய்ந்துவந்து அவள் காலிற் புரண்டு விளையாடிற்று. அஞ்ஞமலியின் பின்னே, நீல உடையணிந்த ஒரு வாலிபன்

வந்து நின்றான். சுடலைப் பெருமானுடைய மூத்தமகனாகிய அவனைப் பொன்னிகண்டு புன்னகை செய்தாள். அவன் பெரிதும் உளமகிழ்ந்து, "பொன்னி, நீ எங்கே வந்தாய்? ஏதாவது அலுவலுண்டோ?" என்று அன்புடன் கேட்டான்.

அதற்கு விடையளிக்காது, கற்பாவைபோல் கால் நாழிகை நின்றபின், "என்னுடைய தந்தையிடமிருந்து உன் தந்தைக்கு ஒரு செய்தி கொண்டுவந்தேன். அவர் இப்பொழுது கோவிலிலிருப்பாரா?" என்று பொன்னி கேட்க, "அவர் இங்கில்லை; கடற்கரைக்குப் போயிருக்கிறார்; ஆனால் இப்போது திரும்பி வந்துவிடுவார்," என்றான் நீல உடையணிந்தவன். அவனுடன் பேசிக்கொண்டிருப்பதற்குச் சிறிதும் விரும்பாத பொன்னி, "அவர் வருமளவும் நான் காத்திருக்க முடியாது. என்னுடைய அன்னை கொடுத்த காணிக்கையைச் செலுத்தக் கோவிலுக்குப் போகிறேன்!" என, "நானும் உன்னுடன் வருகிறேன். கோவிலில் உன் அலுவல் முடிந்தவுடன், உன்னை வீட்டிற்கழைத்துக் கொண்டு போவேன்" என்று மறுமொழி பகர்ந்தான், சுடலைப்பெருமான் மகன்.

இதனைச் செவியேற்ற பொன்னி, அவனுடைய நோக்கத்தையும் துணிவையும் அறிந்து வெகுண்டு, "இவ்வூரிலுள்ளோரது வழக்கம் எனக்குச் சற்றேனும் பிடிக்கவில்லை. நீ உன் வேலையைப் பார்த்துக்கொண்டுபோ, இங்கு நில்லாதே" எனக் கழறினாள். இடியோசையைப் போற் பிறந்த அம்மொழியைக் கேட்ட வாலிபன் நிரம்ப மயங்கி என்ன செய்வதென்றறியாமல் தன் வழியே கடிது நடந்தான்.

இப்போது பகலோன் உச்சியிலிருந்தான். சிறிது வழிக்கப்பால் மரங்களடர்ந்து இருண்ட சிறு காடொன்

றிருந்தது. அதன் நடுவிலுள்ள சிறு குளத்தில் ஒரு மலையருவி வந்து விழுந்தது. பொன்னி இதற்கு நேராக நடந்து அங்கு அமைக்கப்பட்டிருந்த பாலத்தைக் கடந்து போகும்பொழுது, ஒரு முட்கொம்பு, அவளுடைய சேலையின் முனையைப் பற்றிக்கொள்ள, அதை ஒடித்தெறிந்து விட்டுக் கண்ணாடிபோற் றெளிந்த ஒரு குளத்தைப் பார்த்தாள் காலையிலிருந்து இதுவரையில் நடந்த களைப்பு மேலிட அவள் ஒரு மரத்தடியி லயர்ந்து படுத்து, அன்று காலையில் வீட்டிலிருந்து கொண்டுவந்த கற்பதித்த காலணிகளைக் கையிலெடுத்து உளம் போனவாறெல்லாம் ஏதேதோ நினைக்கலானாள்.

விண்ணை நோக்கிய வண்ணம் இவ்வாறு படுத்துக் கொண்டிருந்த பொன்னிக்கருகில், குழி முயல்கள் அச்சமின்றிக் குதித்தோடின; அணிற் பிள்ளைகள் கீச்சுக் கீச்சென்று கூவி மரத்திற்குமரந் தாவித் திரிந்தன; மரங்கொத்திக் குருவிகள் கூவின; மீன்கொத்திப் பறவைகள் இறகடித்து நின்றன; கோழிகள் கொக்கரித்தன; பொன்னி இவற்றின் நடுவில் அமைதியா யமர்ந்து, தான் கொண்டு வந்த உணவை யருந்தியபின், அருவியின் கரையில் நின்று தெளிந்த நீரைக் கையால் அள்ளிக் குடித்தாள். இதன்பின் மரத்தடியிலிருந்த மிதியடிகளைத் தன் காலிற் பூண்டு, காட்டிற்குள் நுழைந்து திரிந்து, பால்போலும் மணல் நிறைந்த குளக்கரையில் வந்து நின்றாள். கண்ணைக் கவரும் நிறமும் உளமகிழச் செய்யும் மணமும் பொருந்திய மலர்களும், பச்சைப் பசேரென்று பரவிய புல்லும் செங்கதிரோன் மங்கிக் காய்வதும் அவளைக் களிக்கச் செய்தன.

சேலையைச் சிறிது தூக்கிப் பிடித்துக்கொண்டு நடந்து அங்குள்ள புற்றரையில் அமர்ந்து குளத்தில் குளிக்க வேண்டுமென்று ஆவலெழ, அணிந்திருந்த ஆடைகளையும்

அரிய பொன் மிதியடிகளையுங் கழற்றி வைத்துவிட்டு, அதிக ஆழமில்லாத அக்குளத்திற் பொன்னி இறங்கினாள். தாய் தந்தையரையும் வீட்டையும் தங்களை வருத்திய வறுமையையும் மறந்து தண்ணீரில் இவள் விளையாடிக் கொண்டிருக்கையில், விசும்பில் வட்டமிட்ட ஒரு பறவையின் உரத்த குரல் காதில் விழுந்தது. அவள் மேலே பார்த்தபொழுது, ஒரு பெரிய கழுகு பறந்துகொண்டிருந்தது. முன்போலவே மறுபடியும் இரைச்சலிட்டுக் கழுகு திடீரெனக் கீழே இறங்கி அவளுடைய மிதியடிகளில் ஒன்றைப் பற்றிக்கொண்டு விண்ணிலெழும்பிக் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்தது.

பலநாளாய் நல்குரவிலிருந்த அவளுக்கு மிதியடிகளில் ஒன்றை இழக்க நேரிட்டதும் விந்தையாகத் தெரியவில்லை. மிடியின் கொடுமை வழக்கமாகிவிட்டபடியால், கழுகு மிதியடியைக் கொண்டு போவதைக் கண்டு அழுதுபுலம்பாமல், அவள் தனக்குள் நகைத்துக்கொண்டாள். அவசரமின்றித் தன்னுடைகளை யணிந்துகொண்டு, வீட்டை நோக்கிப் புறப்படும்பொழுது, இங்ஙனம் ஓர் அரிய பொருளை யிழந்ததனால் ஒருவேளை தனக்கு நற்காலம் பிறக்கலாமென்று அவளுக்குத் தோன்றிற்று. ஆனால், இத்தகைய எண்ணங்களெல்லாம் வீட்டிற்கு வந்தவுடன் காற்றாய்ப் பறந்தன; ஏனெனின் அவளுடைய அன்னை நடந்ததைக் கேட்டவுடன் சீறிச் சினந்தாள்.

அன்னை பொங்கி வடிவதைக்கண்ட மகள் கூசாமலும் ஒடுங்காமலும் புன்சிரிப்புடன் அமர்ந்திருந்தாள். தாயின் வயிறு எரிந்தது. மகளின் கல்நெஞ்சை நினைத்து அவள் அழுதாள். அப்பொழுது நிகழ்ந்ததையெல்லாம் பார்த்துக் கொண்டு வாளாவிருந்த தந்தை எழுந்து தன் மனைவியின் சீற்றந் தணிய நன்மொழி கூறிப் பொன்னியை நோக்கி,

"உனக்கு இதனால் நன்மை உண்டாகும்" என்று சொன்னான். அவன் மனைவியோ மிகுந்திருக்கும் மிதியடியிலுள்ள கற்களையெடுத்து உடனே விற்றுவிட வேண்டுமென்றறைந்தாள்.

அவ்வேளையில் பொறுமை நிறைந்த தந்தை பொன்னியைப் பார்த்து, "பொன்னி, நாம் மிகவும் ஏழைகளாக விருக்கிறோம்; சிறந்த இம்மிதியடியிலுள்ள கற்களை விற்றால், நமக்கு வேண்டியவற்றை வாங்கிக்கொள்ளலாம். ஆயினும் அப்படிச்செய்ய எனக்கு விருப்பமில்லை. நீ பிறந்தபொழுது நான் கண்ட கனவைப் பற்றிச் சொல்லியிருக்கிறேனா?" என்று வினவ, "சிறிது கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால், அதன் விவரம் எனக்கு நன்றாய் விளங்கவில்லை," என்றாள் பொன்னி. "இல்லை, இல்லை; குழந்தாய், அஃது உனக்கு நன்றாய்த் தெரியும்; அதை நான் மறுதரம் சொல்ல வேண்டியதில்லை; மிதியடியை வைத்துக்கொள். அதனால் உனக்கு நன்மையுண்டாகும்," என்று இனிமையாய்த் தகப்பன் பேசினான். இதைக்கேட்ட பொன்னி எழுந்து, தந்தையினடியில் விழுந்து, "வையகத்தில் பசியும் பிணியு மற்று வாழ்தலரிது. நம்முடைய ஊழ்வினையோ கொடிது. இந்தப் பிழைப்பு ஒழிந்தால் நன்றாயிருக்கும்" என்றழுதாள். இவ்வழுகை நீடித்து நிற்கவில்லை. சில நாழிகைகளானபின், அவள் வழக்கம்போல் தன் வேலைகளைச் செய்யலானாள்.

மேற்கூறியவை நடந்து ஒரு வருடஞ் சென்றது. வீட்டுக்கு வேண்டிய சில உணவுப் பொருள்களை வாங்குவதற்காகப் பொன்னி வீட்டைவிட்டுப் புறப்பட்டுத் தெருவழியாய் நடந்து, கடற்கரையிலுள்ள கடைவீதிக்குச்சென்றாள். சிறிதுதூரஞ் சென்றபின் ஓரிடத்தில் பாதையினோரத்தில், வேட்டை நாயொன்று படுத்திருப்பதைக் கண்டு சற்று

நேரம் நின்றாள். அந்நாய்க்கு உரியவனாகிய ஆட்டிடையன், அருகிலுள்ள ஒரு மரத்திற் சாய்ந்துகொண்டு நின்றான். அவனைப் பார்த்தவுடன் பொன்னிக்கு ஒரு நினைவு பிறக்க, அவள் வந்தவழியே திரும்பிச்சென்று வீட்டிற்குப் போய்ப் பெட்டியில் பூட்டி வைக்கப்பட்டிருந்த மிதியடியைக் கடிதி லெடுத்துக்கொண்டு, மறுபடியுங் கடைவீதியை நோக்கி வந் தாள்.

அவளுக்கு எதிரேவந்த அவ்வூரார், வெளிநாட்டிலிருந்து துறைமுகத்திற்கு வந்திருக்கும் வியாபாரிகளையுங்கடலோடி களையும்பற்றிப் பலவாறு பேசிக்கொண்டு போனார்கள். புதியவற்றைக் கண்டு களிக்கவேண்டுமென்ற ஆவல் குடி கொண்ட நெஞ்சினளாகிய பொன்னிக்கு இப்பொழுது ஒரு வகையான மகிழ்ச்சி தோன்றிற்று. தனதருகில் பலர் ஒன்றுகூடி, ஏதோ ஒன்றை அதிக விருப்பத்துடன் நோக்கு வதைப் பார்த்து, அவர்களுடன் சேர்ந்து தானும் அதைக் காண வேண்டுமென்ற ஆசை அவளுக்கு உண்டாயிற்று. எனினும் தனது வேலையை முதலில் முடித்துக்கொள்ள வேண்டுமென்று உறுதிபண்ணிக்கொண்டு, அங்ஙனமே செய்து அதன்பின், முன்சொன்ன கூட்டத்தில் நடப்ப தைப் பார்க்கச் சென்றாள். அங்கே அழகிய ஆடைகளணிந்த வெளிநாட்டு மக்கள்சிலர், ஒரு சிறு கோவிலில் தெய்வந்தொழ வந்திருந்தனர். கோவிலுக்குள் ஒரு பீடத் தின்மேல் தான் ஒரு வருடத்திற்குமுன் இழந்துவிட்ட காலணியைப் பொன்னி கண்டனள். அளவற்ற உவகை யால் பொன்னியின் முகம் பொலிவுபெற, அவள் மற்றவர் களை விலக்கிக்கொண்டு உள்ளே நுழைந்தாள். எல்லோ ரும் அவளைப்பார்த்து வியப்புற்று நின்றனர்.

அப்பொழுது அவள் ஒரு தெய்வப்பெண்போல் விளங்கிப் பின்வருமாறு பேசலானாள்: "நீங்கள், அதோ,

பீடத்தின்மே லிருக்கிற மிதியடிக்கிணையான மற்றொன்றைத் தேட வந்திருக்கிறீர்களென்று நான் நினைக்கிறேன். அஃது என்னிடத்திலிருக்கிறது. இன்றைக்குச் சரியாய் ஒரு வருடத்திற்குமுன், இவை யிரண்டும் என் பாதங்களிலிருந்தன'' என்று சொல்லித் தன்னிடமிருந்த மிதியடியை வெளியே எடுத்தாள். இதைக் கண்ணுற்ற மக்கள் கை கொட்டி ஆரவாரஞ் செய்தார்கள். அந்த வேளையில் பொன்னுடை தரித்த நரைத்த முதியோன் ஒருவன் முன்வந்து நின்று "அவனியில் நிகழ்பவை யனைத்தும் தேவர்கள் வகுத்தபடியே சிறிதும் பிறழாமல் நடைபெறுகின்றன. எங்கள் வேந்தனுக்கேற்ற காரிகையை என் கண்முன் காண்கின்றேன்,'' என்று சொல்லப் பொன்னியின் முகம் சிறிது வேறுபட்டது.

அவள் வாயைத் திறந்து ஒன்றும் பேசாமல், கிரீட மணிந்த அரசியைப்போல் தலையைத் தூக்கி, எதிர்நின்றவனைப் பார்த்தாள். இவன் அவளை நோக்கி, "மங்கையர் புகழு மாதரசே, கேள், இற்றைக்கு ஓராண்டிற்குமுன் எங்கள் அரசன் ஒரு வேள்விசெய்தார். வேள்விச் சாலையில் சூரியனொளி வீசிக்கொண்டிருக்கையில் திடீரென்று விசும்பிலிருந்து ஓர் ஓசையுண்டாகி மின்னல்போல் வெளிச்சமும் தோன்றிற்று. அங்கு வந்திருந்த சிலர், பெரிய கழுகொன்று விண்ணிலிருந்து இறங்கினதைக் கண்டோமென்று சொன்னார்கள். அதனுண்மை எனக்குத் தெரியாது. ஆனால் எங்கள் அரசனது கையில் இங்கிருக்கும் இம்மிதியடி எங்ஙனமோ வந்து சேர்ந்தது. வெகுகாலமாய் அதைப்பற்றி விசாரணைசெய்து (கடைசியில்) எங்களை நோக்கி, 'உலகெங்கும் போய்த் தேடிப்பார்த்து இம்மிதியடியை அணிந்திருந்த மாதைக் கண்டுபிடியுங்கள். அவள் யாராயிருப்பினும் அவளை மணந்துகொள்வேன்' என்றுரைத்தார். இதைக்

கேட்டு முதலில் நாங்கள் பெரிதும் மயங்கினோம். ஆயினும் அரசரது கட்டளையை நிறைவேற்றவேண்டுமென்று எங்கள் நாட்டைவிட்டு வெளிப்பட்டுப் பல தேசங்களிலுஞ் சுற்றித் திரிந்து, கடல் கடந்து இங்கும் வந்தோம்'' என்றான்.

இதைக்கேட்ட பொன்னி, "சரி, உங்களுடைய விருப்பம் யாது? என்னுடைய தாய் தந்தையரையும் எனது நாட்டையும் விட்டகன்று நான் காணாத ஒரு வேந்தனை மணந்து கொள்ள வேண்டுமென்று புகன்றீர். நம்மாலாவ தொன்றில்லை; தெய்வத் திருவருள் வழி நடத்தும்,'' என்றுரைக்க, அவள் முன்னின்ற இவன், தந்தத்தினு லமைக்கப்பெற்ற ஓர் இருப்பில் அவளை அமரச்செய்து, தன்னுடன் வந்தவரனைவரையும் அவள் முன்சென்று வணங்கும்படி உத்தரவளித்தான். இது நிறைவேறியபின், அவர்களெல்லாரும் எழுந்துநின்று, எப்பொழுது அவள் தங்களுடன் புறப்பட்டு வரக்கூடுமென்று வினவினார்கள்.

தலை நிமிர்ந்து, கூசாமல் யாவரையும் நோக்கி, இனிய தாழ்ந்த குரலில், பொன்னி இதற்கு எதிர்மொழி கூறத் தொடங்கி, "எப்பொழுது நான் புறப்படக் கூடுமென்று கேட்டீர்கள், இன்றே புறப்படுவது நலம், இனி ஒரு கணமுமிங்கு நான் தரியேன். வறுமையால் மெலிந்து வாடிய பழைய நாட்கள் கழிந்தன; புதிய காலம் வந்தது; இரண்டிற்கும் நடுவில் தங்கியிருக்க வியலாது. ஆனால், நான் என் எளிய தாய் தந்தையரையும் என்னுடன் அழைத்துக் கொண்டு வரவிரும்புகிறேன். எனக்கு கிடைத்த இப் பெரும்பேற்றை அவர்களும் அனுபவிக்க வேண்டும். அன்றியும், என்னுடைய தந்தையினிடத்தில் எனக்கு நிரம்பிய அன்புண்டாதலின், எதிர்பாராமல் எனக்கு வந்த இவ்வரிய நன்மையைக்குறித்து நேரில் நான் அவருடன் பேசவேண்டும்.'' என்றாள்.

அவ்வண்ணமே அவள் தன்னகத்திற் கெழுந்து சென்று, ஆவினங்களை யோட்டிக்கொண்டு வந்த தன் தகப்பனைக் கண்டு, "எந்தையே, நமக்கு நற்காலம் பிறந்தது; மாட்சிமையுஞ் செல்வமு நிறைந்த ஒரு கோமகனுக்கு நான் மனைவியானேன். இதனினும் பெருவாழ்வு தெய்வத்தால் நமக்குக் கிட்டினும் கிட்டலாம். நாம் ஏழைகளாயிருந்தோம்; நீர் மாடு மேய்த்தீர் என்பவற்றை முற்றும் மறந்துவிடலாம்'' எனச் சாற்றித் தனக்கு நேர்ந்தவற்றை யெல்லாம் விளம்பினாள். தளர்ந்து முதிர்ந்த தந்தை, மகள் சொன்னதைச் செவியிலேற்று மறுமொழி பகர முயன்றபோது நா வெழாமல் தடுமாற்றத்துடன் பேசினான்.

இறுதியில், "உன் மனங்குளிர்ந்தால் அதுவே எனக்குப் போதும். வேறொன்றுமெனக்கு வேண்டாம். இதுவரையும் நாம் வாழ்ந்த வாழ்வு கேவலமானதன்று. மகளே, நீ விரும்பியபடி நான் உன்னுடன் வரத் தடையில்லை; ஆயினும் தீர நினைத்துச்சொல்; எங்களை உன்னுடன் அழைத்துக்கொண்டு போவது ஒருவேளை உனக்குக்கெடுதியாயினுமாகும். குழந்தாய் என்னை ஒருநாளும் மறவாதே; உன்மேலுள்ள அன்பின் மிகுதியால் என் உள்ளம் நிரம்புகின்றது,'' என்று தந்தை சொல்ல, "என்னுடைய உயர்பதவியிற் புதியவர்களுடன் நான் தனியாயிருக்கவேண்டுமென்பது தங்கள் எண்ணம் போலும்! நான் மனத்தளர்ச்சியடைந்தால், அருகிலிருந்து என்னைத் தேற்றவேண்டியது உங்கள் கடமையன்றோ? உடனே புறப்படுங்கள். துறைமுகத்திலுள்ள கப்பல் பாய்விரித்து நிற்கின்றது; பொழுது போவதற்குள் நாம் கப்பலேற வேண்டும்,'' எனப் பொன்னி மொழிந்தாள்.

இதற்குப் பதிலொன்று முரையாது தந்தை புன்முறுவலுடன் மனைக்குட் சென்றான். பொன்னியின் மனத்தில்

தோன்றிய எண்ணங்களை யாரால் எடுத்துக் கூறமுடியும். சிறிது நேரத்துக்குள் அவளுடைய பெற்றோர் வீட்டை விட்டு வெளியே வர, மூவரும் கடற்கரையை நோக்கி நடந்தனர். பொன்னியின் தந்தை மிகப் பழைய செந்நிற உடையொன்றைத் தரித்திருந்தான். சனங்கள் அவர்களைப் பார்த்துக் கைதட்டி இரைச்சலிட்டார்கள். கடற்கரையில் பொன்னி மற்றவர்களை விளித்து, "பெரியோரே, நான் உடனே புறப்படவிரும்புகிறேன்" என, அவர்கள், 'அங்ஙனமே யாகுக; நாங்கள் வந்த நோக்கங் கைகூடியதற்காகப் பிரார்த்தனைகள் செய்தாயிற்று. இவ்வூர் மக்களுக்கு வெகுமதிக ளளித்தாயிற்று. ஆனால், தாங்கள், தங்கள் உயர்நிலைமைக் கேற்றவாறு உடையணிந்து முடிதரித்துக் கொள்ளலாமே," என்றார்கள். "இல்லை, இல்லை; நான் இப்போது எப்படியிருக்கிறேனோ அப்படியே அரசன்முன் நிற்பேன்," என்றறைந்தாள் பொன்னி.

எல்லாருங் கப்பலுக்கு நேரே நடந்தனர். தன் தந்தையின் கையைப் பிடித்துக்கொண்டு சென்ற பொன்னியின் சிவந்த இதழ்கள் துடித்தன. கண்களில் தாரை தாரையாய் நீர் பெருகிற்று. எனினும் அவள் மற்றவர்களுக்கு முன் நடந்துபோய்க் கப்பலேறி அங்கிருந்து கீழே அலைகள் புரள்வதைப் பார்த்துக்கொண்டிருந்தாள். மரக்கலம் நின்ற இடத்தைவிட்டுப் பெயர்ந்தது. ஆனாற் பொன்னி அதை அறியவில்லை. சில நாழிகை சென்றபின் அவள் திரும்பிப் பார்த்துப் பலர் தன் சொற்படி செய்யக் காத்திருப்பதை நோக்கித் திகைப்படைந்தாள். அவள் மிகவும் பயந்து நடுங்கினாள். அவிழ்ந்து தொங்கிய அவளுடைய கூந்தல் வீசுகின்ற காற்றிற் பறந்தது. தனக்குள் தானே ஏதோ அவள் பேசிக்கொண்டாள். அன்று நிகழ்ந்தவை யனைத்தும் அவளுக் கொரு கனவுபோற் றோன்றின. உடலைவிட்டு உயிர்

நீங்குமுன் தனக்கு ஏதேது நேருமோவென்ற வருத்தம் அவளுக்குண்டாயிற்று.

அந்த வேளையில் அவள் நாற்புறமுஞ் சுற்றிப்பார்த்துத் தாய் தந்தையர் தன்னருகி லில்லாமல், தான் தனியளாயிருப்பதை யுணர்ந்தாள். உடனே பொன்னி, தன்னுடன் முதலிற் பேசிய நரைத்த தாடியையுடையவனை அணுகி, "என் தந்தை எங்கிருக்கிறார்?" என்று கேட்டாள். "அரசியே, வயது சென்ற தங்கள் தந்தை, இது காறுந் தாம் வசித்துவந்த இடத்திலே தாமறிந்த மக்களிடையே இறுதிவரையிலும் இருக்கவேண்டுமென்று தங்களுடன் வராமல் நின்றுவிட்டார். தாமறியாத மக்களுடன் கலந்து வாழ்வது தம்மாலியலாதென்று சொன்னார். அவர் நாவாயிலேறுதது தங்களுக்குத் தெரியுமென்றே எண்ணினேன்; என்ன செய்வது? துறைமுகத்திற்குத் திரும்ப வேண்டுமென்பது தங்கள் கருத்தாயின், அவ்வாறே செய்வோம்," என்று நரைத்தவன் மறுமொழி அளிக்க, பொன்னி மீண்டும் நடுங்கி, ஒருவாறு தெளிந்து, "துறைமுகத்திற்குப் போவோம்" என்று கூற முயன்றும், நாவெழாது நின்றாள்.

ஊழினை யாவரே வெல்வார்! "கப்பல் விரைந்து செல்வதாக" என்ற மொழிகளே இறுதியில் அவள் வாயிலிருந்து வெளிவந்தன. அங்ஙனமே அவள் ஏறியிருந்த திமில் அளவற்ற பெருங்கடலை அளந்து அப்பாற் சென்றது. இதற்கு மேல் பொன்னியின் வரலாறு இன்னதென்பதை யாமறியோம். கற்கும் அறிஞர் கணிப்பாராக.

## ச. ஞாயிற்றின் கீழுந் திங்களின் மேலும்

தொன்னாளில் இமயமலைச் சாரலை யடுத்த ஒரு நிலத்தில் மூன்று மக்களுடன் பயிர்த்தொழில் செய்துவந்த ஒருவனிருந்தான். அவனுடைய முதலிரண்டு மக்களும் ஊக்கமாய் வேலை செய்து, உண்மையாய் உழைத்து வந்தனர். அவர்களது உதவியின்றித் தந்தை தன் தொழிலைச் சரிவரச் செய்திரான். ஆனால், சொக்கு என்ற பெயருடைய மூன்றாவது புதல்வனோ ஊக்கமின்றி தூக்கம் நிறைந்தவனாய், முயற்சியின்றி அயர்ச்சி யுற்றவனாய்ப் பசிதீர உண்டும் உறங்கியும் வளர்ந்தான். கார்த்திகை மார்கழி மாதங்களில் மெய்யொடுங்கிப் பல் கிடுகிடுக்க, ஊதை வீசும்பொழுது இச்சொக்கன் நெருப்பருகே யமர்ந்து, குளிர் காய்வதன்றி வேறொரு வேலையுஞ் செய்யான். இளவேனிற் காலத்தில் தோட்டந் துரவுகளைச் சுற்றித் திரிந்து, மலர் கொய்து விளையாடி, யாருக்கும் விளங்காத பழைய பாட்டுக்களைப் பாடிக்கொண்டு பல விடங்களிலும் அலைவான். இவன் போக்கையும் நோக்கையுந் தன்மையையுங் கண்ட தந்தை, நாணமில் வீணனென்றிகழ்ந்து தட்டழிந்து கெட்டொழிய விட்டு விட்டான்.

ஒருநாள் தன் வயல்களைப் பார்வையிடச் சென்ற தகப்பன், அந்நாட்டின் வழக்கப்படி, கூதிர்க்காலத்தில் மாடுகளுக் குணவாகும் பொருட்டுப் புல் வளரவிட்ட தன் நிலத்தைக் கண்டு, அகமகிழ்ந்து, "இன்னும் இரண்டொரு நாள் மழை பெய்யாதிருந்தால், நன்றாய் வளர்ந்திருக்கும் இப்புல்லை அறுத்துப் போரிட்டு, என்னுடைய ஆடுமாடுகளுக்கு ஏராளமான தீனியாகச் சேர்த்துக் கொள்வேன்" என்று எண்ணினன். ஆனால், வயலைக் கிட்டிவந்து அவன் உற்று நோக்கியபோது, நெஞ்சு மிகவாடிச் சினந்து நின்றான்.

ஏனெனில், புல் வயலிற் கால்பங்கிற்கு மேல் ஒரு புறம் யாவும் அழிவுற்றுக் கண்கொண்டு பார்க்கக்கூடாத நிலைமையிலிருந்தது. புல்லெல்லாம் மிதியுண்டு குலைந்து புழுதியிற் புதைந்திருப்பதைக் கண்ட விவசாயி, பற்றியெரியும் உளத்துடன் வீட்டிற்குத் திரும்பினன்.

அன்று சாயங்காலம் அவன் தன் புதல்வர்களிருவரையும் அழைத்து, “மக்களே, யாரோ போக்கிரிகள் நமக்குப் பெரிய தீங்கிழைத்திருக்கிறார்கள்” என்று கூறி, மூத்த மகனை நோக்கி, “நேற்றிரவு வீணர்கள் எவர்களோ வந்து நம்முடைய புல்லைத் துவைத்துவிட்டுப் போயிருக்கின்றனர். நீ உன் வில்லை யெடுத்துக்கொண்டு, இன்றிரவு நமது வயலுக்குப் போய் அருகிலிருக்கும் முட்புதரில் ஒளிந்து காவல் செய்” என்று கட்டளையிட்டான். அங்ஙனமே மூத்தவன் வில்லும் அம்புங் கத்தியு மெடுத்துக்கொண்டு, குறித்த விடத்திற்சென்று, ஒளித்துக் காவல் செய்தான். முன்னிரவு கழிந்து நள்ளிரவு ஆகும் வேளையில் அவன் தூங்கிவிழுந்து, விடியற்காலத்தில் நல்ல நித்திரையிலாழ்ந்து, பொழுது விடிந்தபின் எழுந்து, முன்னிலு மதிகமாய் வயலிலுள்ள புல் நாசமாயிருப்பதைக் கண்டான்.

தனது கவலையின்மையால் வந்த கெடுதியை நினைந்து, மனமுடைந்த இம் மகன் வெட்கத்தினால் தலைகுனிந்து வீட்டிற்குவர, நடந்ததை யறிந்த தந்தை முகங் கடுகடுத்துச் சுடுமொழி வழங்க, மகன் மறுமொழி பகராது வாளாவிருந்தான். மறுநாளிரவு இரண்டாவது குமாரன் தகப்பன் சொற்படி வயல் காக்கப் போய்த் தமையனைப் போலவே முன்நேரத்தில் விழித்திருந்து, பின் நேரத்தில் நித்திரை செய்து, பரிதியி னுதயத்தி லெழுந்து, வயலிற்கு முன்னினு மிகக் கேடு விளைந்திருப்பதை யறிந்து தன் தந்தை கண்ணிற் படாமற் பதுங்கிக்கொண்டான். தந்தை

தன் தமையன்மாரைத் திட்டுவதைக் கேட்டுக்கொண்டே தரையிற் புரண்டுகொண்டிருந்த சோம்பேறியாகிய மூன்றாவது மகன் சொக்கன் திடீரென்றெழுந்து, "அப்பா, நமக்கு இந்தத் தீங்கிழைத்தவர்களை நான் கண்டுபிடிக்கிறேன்" என்று உறுதியாய்ச் சொன்னான். அவன் மொழிகளைச் சிறிதும் மதியாத் தந்தை "உன் இச்சைப்படியே செய். கெடுதி செய்தவன் யாரென்று கண்டுபிடிப்பாயாகில், உனக்கு நல்ல பரிசளிப்பேன்" என்றான்.

இதற்கு விடையொன்று மளியாது, சொக்கன் வீட்டை விட்டு வெளியே போய் ஒரு மரத்தடியிற் படுத்துறங்கிப் பகற்பொழுதைக் கழித்தான். விண்ணில் திங்கள் தோன்றியதும் அவன் எழுந்து, கையிற் படையொன்று மின்றி வயலிற்குச் சென்றான். "இத் தீங்கு செய்தவர்கள் போக்கிரிகளா யிருப்பார்களாயின், என்னைக் கட்டாயம் கொன்றுவிடுவார்கள். ஆனால் கந்தருவப் பெண்கள் இங்கு வந்து போகிறார்க ளென்று என் புத்தியிற் படுகிறது. அஃது உண்மையா யிருக்குமாயின், ஆயுதங்களைக் கொண்டு அவர்களை யார் என் செய்யக்கூடும்?" என்று சொக்கன் நினைத்துக்கொண்டு, வயலருகே சென்று, மறைந்து பார்ப்பதற்கேற்ற இடமொன்றைத் தேடி, அதிலிருந்து தண்கதிர் மதி மறைந்து, விண் மீன்கள் ஒளி மழுங்கி வைகறையாகிற வரையிற் கண்ணிமையாது காத்திருந்தான்.

இளங்காற்று வீசிக் குருவிகள் விழித்துக் கூவத் தொடங்கின. அப்போது சொக்கனுக்குக் கண்ணிமைகள் சோர்ந்து, நித்திரை மயக்கமாகிக் கனவுகள் தோன்றின. ஆனால், அப்போது ஒரு பறவைக்கூட்டம் வந்திறங்கினது போல் ஓர் அரவங் கேட்கச் சொக்கன் திடுக்கென்று விழித்துப் பார்த்தான். பாலனைய வெள்ளிய அன்னப் பறவைகளேழு விசும்பில் வட்டமிட்டிறங்கிப் புற்றரையி லமர்ந்தன.

அவற்றை விரட்ட வேண்டு மென்று முதலில் நினைத்த சொக்கன், எவ்வாறோ அங்ஙனஞ் செய்யாமல், அவைகள் தங்கள் வளைந்து சிவந்த அழகிய அலகுகளால் இறகுகளைக் கோதுவதை உற்று நோக்கிக்கொண்டிருந்தான். அவைகள் மெதுவாய் நடந்து அவனிருக்கு மிடத்தை அணுகிவந்தன.

அப்பொழுது அவ்விடத்தில் மாயமாய் முகில் வந்து மூடியதுபோற் றோன்றிற்று; கண்களைத் துடைத்துக் கொண்டு சொக்கன் மறுபடியும் பார்க்க, அன்னப்பறவை கள் அங்கில்லை. இறகுடன் அவற்றின் தூவிகள் மாத்திரங் கீழே கிடந்தன. அவற்றி னருகில் எழுதரிய எழில்வாய்ந்த ஏழு கந்தருவக் கன்னிகைகள் நின்றனர். சொக்கனிருந்த இடத்திலிருந்து மூன்று முழத்திற்குள் அவர்கள் வந்து நின்று, ஒருவருக்கொருவர் தேனினுமினிய மொழிகளிற் பேசலாயினர். இவாகளுள் ஒருத்தியின் குரல் நெஞ்சைக் கவருஞ் சுவை நிறைந்ததா யிருந்தது. அவளுடைய பேரழ கைக் கண்டு பொங்கு முளத்தனாய் நின்ற சொக்கன், “இவளுடைய அன்ன மயிர்ப் போர்வையை நானெடுத்துக் கொள்வேனாயின், அவள் என்னிடம் பேசுவதற் கிடமுண் டாகும்” என்று துணிந்து, பைய நடந்து, கையை நீட்டி அதைத் தன்னிடம் இழுத்துக்கொண்டான்.

இதன்பின் கந்தருவ மாதர்கள் செழித்து வளர்ந்த மெல்லிய புல்லை மிதித்துப் பலவகை நடனஞ் செய்யத் தொடங்கிப், பொழுது விடியுங் காலமானவுடன், தங்க ளுறைவிடம் போகவெண்ணி, அனைவரும் தத்தம் அன்னப் போர்வையை யணிந்து உயரக் கிளம்பினார்கள். போர்வை யிழந்தவள் வருந்தித்தவித்து முகத்தைக் கைகளால் மூடிக் கொண்டு கண்ணீர் பெருக்க, மற்றவர்கள் அவளருகே வந்து, அவளுடைய நிலைமைகண்டிரங்கி, ஒருதவியுஞ் செய்ய வியலாதவராய், மேலே வட்டமிட்டுப் பறந்து

மறைந்தனர். அழுது நின்ற அணங்கைச் சுற்றித் தும்பிகள் பறந்தன; தேனீக்கள் இரைந்தன; சுண்டெலிகள் துள்ளி ஓடின.

மறைந்திருந்த சொக்கன் இப்போது வெளியே வர, அவனைக் கண்ணுற்ற பைங்கொடி நாணி நடுங்கிச் சிறிது தூர மோடிப் பின் திரும்பிப்பார்த்துத் தன்னுடைய அன்னமயிர்ப் போர்வை அவன் கையிலிருப்பக் கண்டு, "உனக்கு நான் யாதுகுற்றஞ் செய்தேனென்று நீ என்னை இவ்வாறு வருத்துகின்றாய்?" என்று கேட்க, அளவிறந்த காதல்நிறைந்த முகத்துடன் சொக்கன் அக்கோதையை உற்றுநோக்கினான். அவனுடைய கருத்தையுடனே யுணர்ந்த மெல்லியல், தன் செங்கனி வாய்திறந்து, "நான் செய்ய வேண்டுவ தியாது? எனதிடம் போய்ச் சேரவேண்டாவோ? நான் இம்மாநிலத்து மக்கள்போல் வாழ்வதரிது. ஆயினு மொன்று நவில்வேன் கேள்: நீணிலத்தி லிருந்து எதிர்த்தவரெவரையும் வென்று உயர்வும் நலமும் பெற்று வாழ்வது உனக்கு விருப்பமோ? அன்றேல், கந்தருவ ருலகிற்கு வந்து என்னுடன் வாழ விருப்பமோ? இதை நன்றாய்க் கருதிப்பார்த்து மறுமொழி சொல். என்னை மறந்து, உலகிற் சிறந்து வாழ்வதுவோ? அல்லது, உலகை மறந்தென்னுடன் இருப்பதுவோ? எது உன் விருப்பம்?" என்று வினவினாள்.

"இக்குவலய வாழ்வு எனக்கு வேண்டாம்; நான் உன்னுடன் வருகிறேன்; என்னை யழைத்துக் கொண்டு போ," என்றான் சொக்கன். இதற்குடன்பட்டுக் கந்தருவ நங்கை, சொக்கனைக் கூட்டிக்கொண்டு நடந்து ஒரு காட்டையடைந்து தன் அன்னப் போர்வையை யணிந்து, சொக்கனுக்கு மந்திரத்தால் துயில்வரச் செய்து, அவனுடன் மேலெழும்பிச் சென்றாள். தூக்கந் தெளிந்து விழித்

தெழுந்த சொக்கன் வேறோ ருலகத்தி லிருந்தான். அதன் நலத்தையும் வனப்பையும் எடுத்துரைக்க நம்மனோரா லாகாது.

மூன்றாண்டுகள் கந்தருவ சுந்தரியோடு வாழ்ந்த பின், தன் வீட்டிற்குப் போகவேண்டுமென்ற ஆவல் சொக்கனுக் குண்டாயிற்று. இதனை லவன் வாட்ட மடைவதைப் பல முறை பார்த்தவள், "வீட்டை நினைந்து நீ வருந்துகின்றாய்! நீ உன் தாய், தந்தை தமையன்மாரைப் போய்ப் பார்க்க விரும்புகின்றாய். அங்ஙனமே செய். ஆனாற் புவியில் நீ எனக்காகப் பொறுமையுடனுங் கருத்துடனுங் காத்திருக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் பொழுது போனவுடனே நாம் முதலி லொருவரை யொருவர் பார்த்தவிடத்திற்கு வந்து, ஒரு மணி நேரம் அங்கிருக்கவேண்டும்; அங்கே புதுமையொன்றும் நிகழாவிட்டால், நான் நன்றாயிருக்கிறே னென்பதை யறிந்துகொள். இன்னுமொன்று கேள். மற்ற மக்களுடன் நீ பேசும்பொழுது, நான் உன்னுடன் இருக்க வேண்டுமென்று விரும்பி மறந்தும் என்னைக் கூப்பிட லாகாது. ஏனெனின், அப்படி யென்னை நீ யழைத்தால் நான் தவறாமல் உன்னிடம் வந்தே தீரவேண்டும். அங்ஙன மாயின் உனக்கு மெனக்கும் பெருந்தீங்கு விளையும்," என் றிவை யனையவற்றை மொழிந்து ஒருவகை இனிய சங்கீதத் தாற் சொக்கனைக் கண்வளரச் செய்து பாரிலிறக்கினாள்.

அவன் கண்ணைத் திறந்து பார்க்கத், தான் முன் விளையாடித் திரிந்த ஒரு வனத்தினிடையே யிருப்பதை யறிந்து, களிப்புடன் நடந்து, தன் வீட்டிற்குப் போனான். உள்ளே தன் தந்தை பேசுவதும், தானறியாத பெண்க ளுரையாடுவதும் அவன் செவியிற் பட்டன. நன்றாய் முக்கா டிட்டுக்கொண்டு சொக்கன் அகத்துள் நுழைந் தான். வேற்றாள் வந்ததைக் கண்ட தந்தை எழுந்து

நின்றான். அங்கிருந்தவ ரனைவருஞ் சொக்கனையுற்று நோக்கினார்கள். இராத் தங்குவதற்காக யாரோ வழிப் போக்கன் தங்களிடம் வந்தானென்று கருதிய தந்தை, முக்காடிட்டவனை உணவருந்த வழைத்தான். அதற்கு உடன்பட்டுச் சொக்கன் தந்தையுட னமர்ந் துண்ணும் போது, அவனுடைய தாய் அவனை அடிக்கடி கூர்ந்து பார்த்து. "இவனுடைய கண்களையும் முகச்சாயலையுங் கவனித்தால் காணாமற்போன என்மகனைப்போ லிருக் கிறான்," என்று தனக்குட் சொல்லிக்கொண்டாள்.

உணவுண்டபின், தந்தை வழிப்போக்கனை நோக்கி, "விருப்பமுள்ளவரை எங்களுடனிருக்கவேண்டும்," என்று குளிர உரைத்து, அதிகாலையில் தன் மக்களுடன் நிலத்தில் வேலைசெய்யப் புறப்பட்டுப்போனான். தனியாக ஓரிடத்தி லமைதியா யமர்ந்திருந்த சொக்கன், தனக்கு நேர்ந்தவை யனைத்தையும் நினைந்து தன்னை மறந்து, கனவு காண் பவன்போ லிருந்தான். இங்ஙன மிருந்தவன் சில நாழிகை சென்று மறுபுறந் திரும்ப, தன் அன்னை யருகில் நின்று கொண்டு உருக்கமாய்த் தன்னைப் பார்வையிடுவதைக் கண் டான். உடனே அவன் தன்னை அடக்கிக்கொள்ள முடியா தவனாய்த் தாயின் காலில் விழுந்து, "அம்மா, உனக்கு நானொன்றையும் ஒளியேன்: என்னுடைய வரலாற்றை யான் சொல்லுகிறேன் கேள்" என்றான்.

அன்பு பொங்குவதா லெழுந்த கண்ணீருட னிரு வரும் பேசலானார்கள். பகற் பொழுது முடிந்து இரவாகிய பின்னும் அவர்கள் பேசிக்கொண்டே யிருந்தார்கள். வேலைக்குப்போன தந்தையுஞ் சகோதரர்களுந் திரும்பி வந்து, முந்திய நாள் வழிப்போக்கனாய் வந்தவன் சொக்க னென்று அறிந்து, அவனை வரவேற்று வாழ்த்திக் கழி பேருவகையுடன் இரவெல்லாம் மதுவுண்டு களித்தார்கள்

இப்படிப் பன்னாட் கடந்தபின் சொக்கனுக்கு வேறு நினைவுக ளுண்டாகத் தொடங்கியதால், ஒவ்வோர் அமயத்திற் கலங்கிய வுளத்துடன் முகம்வாடி யிருப்பான். ஒவ்வொரு நாளுஞ் சாயங்காலங்களிற் கந்தருவ நங்கை குறித்த விடத் திற்குப்போய்க் காத்திருப்பது அவனுக்கு வழக்கமாகி விட்டது.

ஒருநாள் அவன் தாங்கொணாத துயரடைந்து பிரி வாற்றாது புலம்பிப் பொழுதுபோகும் வேளையிற் குறித்த நேரத்திற் காதலியைக் கருத்தி லுன்னி, "நீ யென்னிடம் வரவேண்டும்," என்றழுது கூப்பிட்டு, வீட்டிற்குத் திரும் பினான். அன்றிரவு நெடுந்தூரத்திலொரு குழலூதப் பட்டது போற் காற்றிற் சத்தம் பிறந்தது. சொக்கனுடன் இருந்தவர்களெல்லாந் தூக்கம் நீங்கி யெழுந்து, காதைச் சாய்த்துக்கேட்க, முன் பிறந்த அரவம் முன்னிலுந் தெளி வுட னணுகி வந்தது. அயர்ந்து துயின்ற சொக்கன் குலை நடுங்கி விழித்தான். அவனுடைய அண்ணன்மா ரிருவரும் வாளும் வில்லுங் கையிற் கொண்டு ஏதோ பெரிய ஆபத்து விளையப்போகிற தென்று கதவைத் திறந்து பார்த்தார்கள். வெளியே வீசிய பெருங்காற்று இரைந்து வீட்டிற்குள் நுழைந்தது. அதற்குப்பின் ஆரவார மடங்கி யெங்கு மமைதியுண்டாக, வெண்ணுடையணிந்த பெண்ணொருத்தி அவர்கள்முன் வந்து நின்று, வீட்டிலுள்ள யாவருக்கும் நன்மையுண்டாக வாழ்த்திச் சொக்கனை நோக்கி, "நெடுந் தூரத்திலிருந்து உன் குரல் கேட்டு வந்தேன்," என்றாள். அப்போது சொக்கன் முன் வந்த தன் கந்தருவ மனைவி யிவ ளென்று மற்றவர்கட்குக்காட்டி, எல்லோருடனும் மகிழ்ச் சியாய்ப் பேசினான்.

அவளும் யாவருடனும் இனிதாய்ப் பேசி அழகா யமர்ந்திருந்தாள். ஆனால், மறுநாள் கிழக்கு வெளுக்கு

முன் அவளெழுந்து நித்திரையிலிருந்த சொக்கனை அழுத கண்களுடன் பார்த்து, "இனி நான் வருத்தம் நிறைந்தவளாய் நானறியாத ஒரு நாட்டிற்போய் வாழவேண்டும். இவண் நான் மொழியுஞ் சொற்களைக் கண் துயில்கின்ற நீ கேட்டறிந்து கொள்ளக் கூடுமாயின், எங்ஙனமாயினும் நாமொருவரை யொருவ ரடைந்து இன்புற்றிருப்போம். விரைவில் நான் 'ஞாயிற்றிற்குக் கிழக்கிலும் திங்களுக்கு மேற்கிலும், உள்ள நாட்டி லலைந்து திரிவேன்; என மொழிந்து சத்தமின்றி வீட்டை விட்டகன்று இரவின் குளிர்காற்றில் வெளியே சென்றாள்.

பரிதி யெழுந்த பின் விழித்த சொக்கன் தனக்கு வந்த பெருங்கேட்டை யெண்ணி வருந்தி வெளியே சென்று, பல விடங்களிலுந் தேடிப் பார்த்துப் போனவள் சென்ற நெறி புலப்படாமையால் பெரிதுங் கலங்கி, நில்லாது நடந்து, கடைசியிலொரு கடற்கரை யோரம் வந்து நின்றான். அங்கே சில பகல் தங்கி, எங்கிருந்தாகிலுமொரு கப்பல் வருமென்று காத்திருந்தான். வேனிற் காலத்தில் மலர்கள் விரிந்து நறுமணம் வீசு மொரு நாளிலே, அங்கொரு மரக்கலம் வந்தது. அதி லேறிய சொக்கன் இரவும் பகலும் நித்திரையின்றி, சூரிய சந்திரர்களைப் பார்த்த வண்ணமாக இருந்தான். திடீரென் றவனுக்கோர் எண்ணம் பிறந்தது. சூரியனுக்குக் கீழும் சந்திரனுக்கு மேலு முள்ள ஓரிடத்திற்குத் தான் போகவேண்டு மென் றவனுக்குத்தோன்றிற்று.

பலநாடு நகரங்களையுஞ் சுற்றி யலைந்து எத்தனையோ இடையூறுகளை மேற்கொண்டு, இடுக்கண் பலவெய்தி மெலிந்து, தளர்ந்து வயது முதிர்ந்தவனாய், அவன் தகப்பன் வீட்டிற்கு வந்து சேர்ந்தான். அங்கே தன்னுடைய தாய் இறந்த பின், எல்லாம் மாறியிருந்தது. ஆதலின் அங்கிருக்கப் பொறாதவனாய் மறுபடியும் வீட்டை விட்டு

உலகமெங்குஞ் சுற்றி மலைபலவுங் கடந்து, கப்பலேறிச் சாகரந் தாண்டி, பெரும் புயலிலகப்பட்டுக் கப்பல் உடைய, நீந்தித் தவித்து, மூர்ச்சை யடைந்து கனவு காண்ப வன்போ லிருந்தான். இதன் பின் வெகு தூரம் மேலிருந்து கீழே விழுவது போன்ற ஒருணர்ச்சி யவனுக்குண்டா யிற்று. அவ்வுணர்ச்சி யொழிந்தபின் ஐம்புலன்களு மொடுங் கிய நிலைமையில் அவன் யாதோ ஓரிடத்திற்குப் போய்ச் சேர்ந்தான்.

அவ்விடத்தை யடைந்ததும் அவனுக்குத் தன்னறிவு தோன்ற, சிப்பிகளுஞ் சங்குகளும் பரவிக்கிடந்த எழில் வாய்ந்த அமைதியான அலைவாய்க் கரையில் தானிருப் பதை யுணர்ந்து, உறுதியுட னெழுந்து நடந்தான். தனக் கெதிரே தோன்றிய மலைகளுக்கு நேராய்ச் சென்று பழங் கள் நிறைந்த ஒருமரத்தடியில் வந்து அதன் கனிகளிற் சிலவற்றை யருந்தி அயர்ந்து படுத்தான். மறுபடியும் அவனெழுந்து நடக்க, எவருங் கண்டு வியக்கத்தக்க, அழகு நிறைந்த நில மொன்று அவன் கண்ணிற் பட்டது. கொடி முந்திரித் தோட்டங்களும் கோதுமை வயல்களும் பழ முதிர் சோலைகளும் இளமரத் தோப்புகளும் இடை யிடையே விசித்திரமாய்க் கட்டப்பட்ட வீடுகளும் அவனுள் ளத்தைக் கொள்ளை கொண்டன. 'என்னே இந்நாட்டின் பெருமை! இனி என் மனக்கவலை மாறும். நீள்த் திரிந் தலைந்த சலிப்புமகலும். வெங்கதிர்ப்பரிதிக்குக் கீழும் தண்கதிர்மதிக்கு மேலுமுள்ள விடத்தில் வந்து சேர்ந் தேன்'' என்றான்.

நாற்புறமுஞ் சுற்றிப் பார்க்கையில் கீழிருந்த பள்ளத் தாக்கில், ஓங்கி வளர்ந்த மரங்களால் மறைக்கப்பட்ட உயர்ந்த சிறந்த மாளிகை யொன்று புலப்பட்டது. மலையி லிருந் திறங்கி, அவ்வரண்மனையின் வாயிலுக்குப் போன

சொக்கன் பொன்னு லலங்கரிக்கப்பட்ட பட்டாடைகளை யணிந்த பலர் உள்ளே செல்வதும் வெளியே வருவதுமா யிருப்பதைக் கண்டான். அவர்களில் ஒருவரு மவனுடன் பேசவுமில்லை; அவனைப் பார்க்கவுமில்லை. அரண்மனைக்குட் சென்று அங்கிருந்த மண்டபத்தில் மங்கையரும் ஆடவரும் ஏக்கம் நிறைந்தவர்களாய் அங்கும் இங்கும் நின்றுகொண் டிருப்பதையும், வேலைக்காரர் பலர் நன்மணம் வீசும் உயர்ந்த உணவு வகைகளை எடுத்துக் கொண்டு வாய் திறவாமல் உள்ளே போவதையும் வியப்புடன் நின்று பார்த்த சொக் கன் ஒன்றும் பேசாமல் அவர்களுடன் கலந்து விருந்துண் டான். ஆனால், மற்றவர்களுண்டு எழுமுன் தன்னிடத்தை விட்டுப் பெயர்ந்து, சொக்கன், அரண்மனையின் பல பகுதி களையும் உற்றுநோக்கிக்கொண்டு திரிந்து, பூட்டப்பட் டிருந்த சித்திரமமைந்த ஒரு கதவின் முன்வந்து நின்றான். அதைத் திறந்துள்ளே செல்ல, யாரோ பெண்ணொருத்தி யின் உடையசைவு மெல்லிய ஓசை கேட்டது. முன்னாளில் எங்கோ நுகர்ந்த வாசனை வீச, அகமகிழ்ந்து சொக்கன் உள்ளே சென்று மறுபடியுந் தன் காதலியாகிய காந்தருவ மாதைக் கண்டான்.

# ரு. தையல் நாயகம்

வேந்தர்கள் வழியிற் பிறந்த தையல் நாயகம் பிறந்து சின்னுளாகு முன்னரே தந்தையை இழந்தாள். இதற்குப் பின் ஈராண்டு கழியுமுன்னர் அவளுடைய தாயும் பிணி வாய்ப்பட்டு இறக்குந் தறுவாயிலிருந்தனள். துணையெவரு மின்றித் தன் சிறு குழந்தை தனியேயிருந்து வருந்துமென் பதை யவளுன்னிச் சிறுவயதிற் றன்னை வளர்த்த வயது சென்ற துரைமகனிடம் தையல்நாயகத்தையொப்புவித்துப் பகைவரால் யாதொரு தீங்கும் நேரிடா வண்ணம் அவளைக் காக்கவேண்டுமென்று மொழிந்து உயிர்விட்டாள். இங்ஙனம் அவள் உயிர் துறக்க, முதியோனுகிய துரை பெரிதுங் கவற்சியுற்று, எங்ஙனந் தன் முதிர் வயதில் அச்சிறு பெண்ணை யேற்றபடி வளர்த்துக் காக்கக் கூடுமென் றேங்கித் தன் வீட்டு வாயிலி லெவருடனும் பேசாது நெடுநேரம் அமர்ந்திருப்பான். திடீரென்றெழுந்து தன் வாளை யுருவித் தேய்ந்துபோன முனையையுற்று நோக்கி "இனிய முகத்தை யுடையவளே, அழகிய கைகளை யுடையவளே, மாண் டனையோ? இன்னு மொருமுறை உன்னைப் பார்ப்பே னென்று நினைத்தேன்," என்று முணு முணுப்பான்.

இரும்புவேலை செய்வதில் நல்ல தேர்ச்சியுடைய இப் பெரியோன் சிலநாட் சென்றபின் தனது உலைக் கூடத்திற் குச் சென்று எவரையுமுள்ளே சேர்க்காமல் யாதோ ஒரு விந்தையான வேலை செய்யத் தொடங்கினுன். பிறருதவி யின்றிப் பன்னுள் வேலைசெய்து, ஒருநாட் காலையில், மூன் றாண்டுக் குழவியாயிருந்த நாயகத்தைத் தன்னுடன் உலைக் கூடத்திற் கழைத்துச் சென்றுன். இவ்வாறு சென்றவன் பொழுதுபோயும் வீட்டிற்கு வராமையால் நண்பரும் மற்ற வரும் அவனுக்கு யாது நேர்ந்ததோ என்று அஞ்சினர்.

மறுநாட்காலையாகியுங் கிழவனுங் குழவியும் எவர் கண்ணினு மகப்படவில்லை யாதலின் உலைக்களத்திற் போய்ப் பார்க்க இதற்குமுன் கருத்தாய்ப் பூட்டப்பட்டிருந்த கதவுகளெல்லாந் திறந்து நின்றன; உலையிற் நெருப்பில்லை; சம்மட்டி, குறடு, உளி முதலிய கருவிகள் கீழே விழுந்திருந்தன; மரத் துண்டுகளுந் தரையெல்லாம் பரவிக் கிடந்தன. வெகு நேரந் தேடியு மவனைக் காணாமையால், நண்பரும் பிறரும், உம்முதியோ னெங்ஙனமாகவோ இறைவன் றிருவடி நிழலடைந்தானென்றும், தன்னுயிரினு மரிதாய்க் காத்துவந்த செல்வக் குழவியாகிய நாயகத்தையுங் கடவுளருளால் அவனெவ்வாறோ கொண்டுபோய் விட்டானென்றும் எண்ணினார்கள்.

ஆனால் பெரியோ னிறந்துபோகவில்லை. நாயகத்துக்கு யாதொரு கெடுதியும் நேராதிருக்கும்பொருட்டு அவனை யெடுத்துக்கொண்டு,எதிரிகளின் சூழ்ச்சியெட்டாதவொரு நாட்டுக்குப் போகப் புறப்பட்டான். இளைத்து வாடித் தளர்ந்து, அச்சத்தை தரும் இருண்ட காடுகளைக் கடந்து, அருநெறி நடந்து, நரைத்த தலைமயிர் தோள்களிற் புரள, அன்பு பழுத்த நெஞ்சுடையோன் பைய நடந்தான். அவனிடையில் வாளொன் றிருந்தது, முதுகி லெவரும் இதுவரையிற் பார்த்திராத பெரிய வீணை யொன்று தொங்கிக் கொண்டிருந்தது.

ஒருநாட் பிற்பகல் எல்லாம் அமைதியாயிருக்க, இம் முதியோன், அடர்ந்தவொரு காட்டின் நடுவிலுள்ள சிறு வெளியை யடைந்தான். அங்குச் சென்றவுடன் நாற்புறமுஞ் சுற்றிப்பார்த்து, ஐயத்தை யுண்டு பண்ணக்கூடியதொன்றும் புலப்படாமையால், தன்னுடைய வீணையை யிறக்கி யதனருகிலமர்ந்து அதன் தண்டைக் கைகளாற் பிடித்தழுத்த, மறைந்திருந்த ஒரு பொறியின் இயக்கத்தால்

அது திறக்கப்பட்டது. அதனுள் ஓரத்திற் பொற்சரிகை வேலைநிறைந்த ஆடையணிந்து மலர்ந்த முகத்துடன் கண் வளர்ந்த சிறுமியாகிய நாயக மிருந்தாள். தன் இறுகிய விரல்களால் மூதாதையனைய அப்பெருமகன், துயில்கொள்ளுஞ் செல்வியின் முகத்தைத் தீண்ட அவள் அச்சமின்றிக் கண்விழித்துப் பெரியோனுக்கு நேராகத் தன் சிறிய கைகளை நீட்டினாள். மெத்தெனப் புல் வளர்ந்த அவ்விடத்தில் முதிர்ந்த செம்மனத்தான் பொன்போலும் பாவையைத் தன் மடியி லிருத்திச் சிறிது பொழுது மகிழ்ந்த பின் அவளைத் தரையிலே தூக்கிவிட்டான்.

வடிவுடைய இளங்கொடி பொலிவுபெற நடந்து, அங்குள்ள பூக்களைக்கண்டு உவகை கொண்டு, ஓடி யாடுவதை யகங்குளிரப்பார்த்த தடந்தோளான் தன் வீணையைக் கையி லேந்திக் கூர்மையான சில ஓசைகளை யெழுப்ப, விரிந்த கண்களுடன் தையல் சற்றே தியங்கி நின்றாள். பிறகு வீணையின் நரம்புகளிலிருந்து சுவைநிறைந்த இசை பிறந்து பெருகிக் காட்டையெல்லாம் நிரப்பிற்று. நாயகம் அவ் வினிமையி லீடுபட்டுக் குதித்தாடத் தொடங்கினாள். வீணையின் நல்லொலி வரவரத் தாழ்ந்து இரக்கச்சுவையை ஊட்டிப் பிறைநுதல் செய்த தாண்டவத்தைக் குன்றவைத்துச் சிறிது சிறிதாக அடங்கி நின்றுவிட்டது. ஒளிதிகழ் முகத்தாளுங் களைத்துத் துவண்டு அன்பு பொழி விழியண்ணலின் மடியிற் றங்கி அவனகன்ற மார்பிற் சாய்ந்தாள்.

காட்டின் மற்றொரு பகுதியில் யாரோ ஒருவர் குழலூதக்கேட்டு, முதியோன் உடனே தன் கஞ்சுகத்திற்குள்ளிருந்து ஒரு மருந்தை யெடுத்து நாயகத்தை யுண்ணும்படி செய்து, தூக்க நிலையி லவளை வீணைக்குள் விரைவாய் வைத்து மூடித் தோளிலேந்தி, கையில் வாளுடனொன்றும்

பேசாமற் காட்டினிடையே அடிநீட்டி நடந்தான். பகலோன் மேல்கடலில் மூழ்குமுன் அவன் விரைந்து சென்று, இருளாகும்போது காட்டைவிட்டு நீங்கினான். அருகிலுள்ள குன்றின்மேலேறி நின்று களங்கமற்ற வுளத்தான் நாற்புறமும் உற்றுநோக்கும்போது உப்பங்காற்றுத் தன்மேல் வீசுவதையும் தூரத்திலே முந்நீர் புரண்டுவந்து தரையில் மோதி யிரைவதையும் அறிந்தான்.

அங்கிருந்த இருளிற் கூர்ந்து நோக்கக் குன்றின் சாரலிலொரு வெளிச்சந் தோன்றியது. அதை யிலக்காய் வைத்துக் கடுகி நடந்து, அருகிற் பிறிதோரகமுமின்றித் தனிமையாய் நின்ற, ஏழைக்கோர் உறைவிடமெனச் சொல்லத் தகுந்த, சிறு குடிலின் வாயிலில் மேலோன் வந்தான். கதவைத் தட்டிக் கூப்பிட, உள்ளே வரும்படி யில்லோரழைத்தமையின், குடிலில் நுழைந்த கோண நெஞ்சினன், நெருப்பருகே குளிர் காய்ந்துகொண்டிருந்த இழிஞளாகிய ஒரு கிழவியைக் கண்டான். சுருங்கிய முகமும், கவலை குடிகொண்ட பூனைக் கண்களும் வெகுண்ட பார்வையுமுடைய இக்கிழவி, வீணையுடன் றோன்றிய நல்லோனைக் கண்டு கையில் தீவர்த்தியுட னெழுந்து நின்றாள்.

"என்ன நோக்கத்துட னிங்கு வந்தாய்? திருட வெண்ணி வந்தாயானால் உன் முயற்சியெல்லாம் பாழாயிற்று; எங்களிடத்தி லொன்றுமில்லை" என்று வெறுக்கத் தகுந்த ஒருவகை நகையுடன் மூத்தோள் கூற,

"நன்மகளே நான் கள்வனல்லன்; இன்றிரவு நான் தலைசாய்த் துறங்க இடந்தேடி வந்தேன். அது கிடைத்தாற் போதும்" என்றான்.

"ஆயின் நல்லவனே, இரு. உன் கோணை வீணையைக் கீழே வை. நீ யுடுத்திருக்கு மாடையும் உன் வீணையைப்

போலவே கோணி யிருக்கிறது. நீ செய்யும் வேலையும் இவற்றிற் கிசைந்தே யிருக்குமென்பதி லையமில்லை" என்று ஏளனஞ் செய்தாள் பூனைக்கண்ணி.

ஆனல் பெரியோன் பதிலொன்று முரையாது, வீணையைக் கீழிறக்கி, நெருப்பை யணுகி யமர்ந்தான். ஈரமிலா நெஞ்சினளும் பருத்தி நூற்க உட்கார்ந்தாள். தன் வேலையைச் செய்யாது திருட்டுதனமா யவ ளடிக்கடி யங்கு மிங்கும் நோக்குவதை முதியோன் பார்க்கவில்லை; பார்த்திருந்தா லுடனே அவ்விடம் விட்டுப் பிறிதிடஞ் சேர்ந்திருப்பான். அவ ளெழுந்து யாதோ வொன்றைத் தேடுவதாகப் பாசாங்கு செய்து, வீணையைக் கிட்டி அதனின்றும் ஒரு பொன்வேலை நிறைந்த ஆடையின் முனை தொங்குவதைக் கண்டாள். ஒட்டிட்ட மேற்சட்டையும், தேய்ந்து சிதைந்த செருப்பும் பூண்டிருந்த முதுமகனுடைய தோற்றம் அவளுக்கு ஐயத்தை யுண்டாக்கிற்று.

அவனொருபிரபுவாயிருக்க வேண்டுமென்று துணிந்து, கொஞ்ச மாவைக் கொண்டுவந்து பிசைந்து, அடைசுடுந் தொழிலி லமர்ந்த கிழவி முன்னினும் நுண்மையாய்ப் பெரியோனை யுற்று நோக்கினள். நன்மனத்தானின் மேற்சட்டை விலகும்படி யவனைத் தீண்டி நடந்து முழங்கைக்கு மேல் அவனொரு பொற்பூ ணணிந்திருப்பதையுஞ் சுடுமுகத்தாள் கண்டாள். இவை யாவற்றையு மறிந்தவுட னவளுக்குப் பொருளாவல் மூண்டெரிய, கண்களிற் பகையெனுந் தீ வெளி வந்தது. களைத்துப் போயிருந்த அண்ணலினெண்ணம் வேறெங்கோ சென்றிருந்ததால் அவ னதைக் காணவில்லை.

"இப்போது ஏழையா யிருப்பினு மொருகாலத்தில் திரையா யிருந்தவரே, எழுந்துண்ண வாரும்" என்று

கிழவி கழறி, 'துரை' என்றவுடனே யவன் முகத்தில் யாதாயினுங் குறி தோன்றுகிறதா வென்று கூர்ந்து பார்த்தாள். அவள் சொன்ன மொழிகளைச் சான்றோன் கேளாதவனா யுணவருந்தத் தொடங்கினான்.

"நாளெல்லாம் வருந்தி யுழைக்கும் என் கணவன் இன்னுஞ் சிறிது நேரத்தில் வருவான். வீட்டிற்கு வந்து பசியைத் தீர்த்துக்கொள்ளும் வரையில் அவன் புகைந்து வெகுண்டு கடுஞ்சொற் கூறுவான். அவன் வரவிற்காக நீர் காத்திருக்க வேண்டாம். மனையை யடுத்திருக்கும் நெற்களஞ்சியத்தில் நீர் இராப்பொழுதைக் கழிக்கலாம்" என்று மூத்தவ ளறைந்தாள்.

"நன்று, அங்ஙனமே செய்யலாம். இதைவிடப் பன்மடங்கு இழிவான இடங்களி லிதற்குமுன் தங்கியிருக்கிறேன். களஞ்சியத்திற்கு வழிகாட்டு. இவ்விரவில் எவராயினு மென்னுடன் சினந்து பேசினால் வாளைப்பற்றுமலென் கையைத் தடுப்ப தரிது. முன்னால் நட" என்றான் முதுமைக்கணிகலமாயவன்.

அவ்வாறே ஒன்றும் பேசாது மூத்தோள் முன்னடந்தாள். ஆயினும் பெரியோன் தன் பாரமான வீணையைக் கருத்துடன் தூக்குவதை யவள் நின்று கவனித்தாள். குன்றின் சாரலிலிருந்து கீழே நோக்கத் திரைகடல் நிலவொளியில் மிளிர்வதை முதுமகன் கண்டு முகந்தெளிந்து, புன்முறுவலுடன், இருண்டு தோன்றிய களஞ்சியத்திற்குட் சென்றான். அதன்பின் அத்தண்ணளியான் நீரையாவது விசும்பையாவது மறுநாள் ஞாயிற்றையாவது காணவில்லை. ஏனெனின், அன்றிரவு தன் கணவன் வந்தவுடனே மூத்த கொடியோள் அவனுடன் கலந்துபேசி, தங்கள் வீட்டிற்கு அதிதியாய் வந்தவனைக் கொலை செய்யும்படி தூண்ட, விலவிலத்த

நெஞ்சினனாகிய அவன் இறுதியில் தன் மனைவியின் சொல்லிற் குடன்பட்டுக் கோழிகூவும் வேளையிற் களஞ்சியத்திற் குப் போனான்; அவனுள்ளே போனவுடன் வீணை நரம்புகளின் மெல்லிய ஓசை கேட்டது. இறந்தவர்களின் ஆவிகள் வந்தனவென்று கிழவியின் கொழுநன் மிகவும் அஞ்சினான். நடுங்கிய கைகால்களுடன் அவன் இருட்டில் விழித்துப்பார்க்க, வயது முதிர்ந்த நல்லோன் ஒரு கையி லுருவிய வாளும் மற்றொரு கையில் வீணையும் பிடித்துக்கொண்டு தூங்குவதைக் கண்டான்.

சிறு குழந்தை யொன்று முணுமுணுத்ததை யொத்த ஓர் அரவம் அவன் செவியிற் பட்டது. பயங்கரத்தக்க தொன்றையும் அவன் காணாவிடினும் அவனுக்கு உடம்பு கிலிர்த்தது. இருமுறை திரும்பியோட நினைந்த அவன் கடைசியிற் பொருளாசையாற் பிடிக்கப்பட்டுக் கையி லீட்டியுடன் இருளிற் றவழ்ந்து சென்றான். அவன் நெஞ்சு துடித்துப் பின் திரும்பிப் பார்த்துக்கொண்டே முதியோனை யணுகி, ஈட்டியை ஓங்கிக் குலை பிளவுபடும்படிக் குத்திவிட்டு ஓட்டம் பிடித்தான். அதன்பின் அவன், விழுந்தெழுந்தோடி வீட்டிற்குள் நுழைந்து மிக உரத்த குரலில் தன் மனைவியைக் கூப்பிட்டான். அவள் வந்து, "ஏன் கூச்சலிடுகிறாய்? நான் இங்கிருக்கிறே னென்பது தெரியவில்லையா? என்ன செய்தி" என்று கேட்டாள்.

"மனைவியே, நான் அதைச் செய்துவிட்டேன்; ஒரு பழியும் அறியாத ஒருவனை நான் கொன்றுவிட்டேனென்று நினைக்கிறேன்," என்று சொன்னான்.

"அதனா லென்ன? அவன் உயிர் போய்விட்டால் கவலையொன்று மில்லை" என்று அவன் மனைவி சிரிப்புடன் கூறினாள்.

அவனே "இறந்தவன்போற் றேன்றி அக்கிழவன் பகல்சென்று இராவான பின் திரும்பி வந்தால் என்னசெய்வது? அவன் வைத்திருக்கும் வீணையில் யாதோ மாயமிருக்கிறது. அவன் தூங்கிக்கொண்டிருக்கும் பொழுது தானகவே அஃது ஓசையுண்டாக்குவதைக் கேட்டேன்" என்று நடுங்கி யுரைத்தான். இதைக் கேட்ட மனைவி "தைரியமற்ற மூடனே, தூக்கத்தில் அவன் தெரியாமல் கைகளை நரம்பின்மேலே போட்டிருப்பான். அதனல் நீ கேட்ட சத்த முண்டாயிருக்கும்" என்று மெய்விதிர்த்துக் கூறினள். பொழுது விடிந்து நெடுநாழிகை யானபின் இருவருமொன்ருகக் களஞ்சியத்திற்குட் சென்ருர்கள். ஈட்டியாற் குத்தப்பட்ட முதியோன் குருதியில் நனைந்து நித்திரை செய்கிறவன்போற் றேன்றினன்.

கிழவி விரைந்து அவனையணுகி, அவன் கையிலிருந்த பொற்பூணைக் கழற்றிக் கொண்டாள். வீணையை யெடுத்து அதைத் திறக்க முயன்றபொழுது அஃதிடந்தராமையாற் கணவனைக் கூப்பிட்டு உளியுஞ் சுத்தியுங் கொண்டுவரச் சொன்னள். அங்ஙனமே அவன் நடுக்கத்துடனே கேட்டவற்றைக் கொணர்ந்து தர, இருவரும் வீணையை உடைத்துத் திறந்தனர். ஆனற் சிறிதேனும் அச்சமின்றிக் கரிய விழிகளுடன் தங்களை யுற்றுநோக்கிய சிறு பெண்ணை யுள்ளே கண்டபோது அவர்களடைந்த இறும்பூதை என்னவென்று சொல்வது? கடிதில் அவர்கள் நாயக மணிந்திருந்த பொன்னுடையைக் கழற்றி எடுத்துக்கொண்டு, "இதில் பொன்னும் மணியும் இருக்கின்றன. இவளை வைத்து நாம் காப்பாற்றுவது வருத்தந்தான். ஆயினும் இவளை வருந்தி யுழைக்கச் சொல்லிச் சிறிதன்னங் கொடுத்து வளர்ப்போம்" என்று கிழவி சாற்ற, அவள்

கணவன் "இவளுடன் பேசி இவளைப்பற்றிய விவரங்களைத் தெரிந்துக் கொள்" என்றான்.

நாயகமோ, வாயைத் திறப்பதற்கும் உடன்படவில்லை. பயமுறுத்தியும் நல்லது சொல்லியும் எவ்வளவோ முயன்று பார்த்தும் அவள் வாய் திறவாததனால் அவள் ஊமை யென்று இருவரும் நினைத்துக்கொண்டார்கள். அவளுக் குக் கந்தைகளை யுடுத்தி வீட்டிற்குட் கொண்டுவந்து, முதி யோனை எடுத்து ஆழமாய்க் குழிவெட்டி அதிற் புதைத்து விட்டார்கள்.

## II

இங்ஙனந் தீயவரிருவருடன் இருந்த தையல் நாளுக்கு நாள் அழகில் வளர்ந்து வந்தாள். ஆனால் எப்போதும் மௌனமாயிருப்பாள். அந்தப் பொல்லாத கிழவி, நாயகத் திற்குக் 'காக்கை' என்ற பெயரிட்டு வேண்டிய உணவளிக் காது அடித்து வருத்திவந்தாள். ஆயினும் அவள் கண்ணீர் சிந்தி அழுதுநின்றதில்லை; பல்லைக் கடித்துக்கொண்டு தான் செய்யவேண்டிய வேலைகளைச் செய்து முடிப்பாள். இவ் வாறு ஆண்டு பல சென்றபின் குழவிப்பருவம் நீங்கி, மங் கைப்பருவம் அடைந்தாள். அவர்கள் வசித்துவந்த அழுக்கு நிறைந்த குடில் தையலின் வேலையால் இப்போது பார்ப்ப தற்கு அழகாக ஆயிற்று. ஆனால் கிழவியோ முன்னிருந்த படி இருந்ததல்லாற் சற்றேனும் மாறினாளில்லை. மங்கைப் பருவங் கடந்து எழில்பெற வளர்ந்த நாயகத்தைக் காணும் போதெல்லாம் அவளுக்கு அதிக வெறுப்புத் தோன்றும். சிறுமியைக் கொன்றுவிடலாமென்றும் அவளுக்கெண்ணம் பிறந்ததுண்டு. ஆனால், பயத்தினால் அவளொன்றுஞ் செய்ய வில்லை.

ஒருநாள் இளவேனிற்காலத்தில் தையல் வெள்ளாடு களை யோட்டிக்கொண்டு மலையின் சாரலிற் சென்றாள். மலை

யும் மரங்களும் கடலும் விசும்பும் அவளைச் சுற்றி யழகா யமைதியா யிருந்தனவாதலின் தான் பட்ட வருத்தங்களைப் பெரிதாக அவள் கருதவில்லை. உலகில் வாழ்வது நல்லதென அவளுக்குத் தோன்றிற்று. பைங்கொடியன்னாள் காட்டிற் குள் நுழைந்து மரங்களினிடையே சுற்றித் திரிந்தாள். ஆங் குள்ள ஓர் அகன்ற ஆழமதிகமில்லாத குளத்தின்மேல் நீர்க் கோழிகள் மூழ்கிப் பறந்து விளையாடிக்கொண்டிருந்தன. தையல் விரைவாய் நடந்து குளத்தின் மணற்கரையில் தண் ணீரோரத்தில் வந்து நின்றாள். நின்றவள், தெள்ளிய தண் ணீரி லுற்று நோக்கத் தன் முகம் அங்குத் தெரிவதுகண்டு இன்னிசை போன்ற நகைசெய்தாள்.

அவளைக் காத்து வளர்த்த பெரியோன் துஞ்சியபின் இதுவரையில் வெளிப்படாத அவளது குரல் இனிமை நிறைந்து காட்டி லொலித்தது. "எல்லோருக்கும் பேரு வகை யளிக்குங் காதல் எல்லோர்க்கு முரியது. ஆயினுங் கயவருடன் வாழுமெனக்குக் காத லெங்கிருந்து வரும்? எப்போதாயினு மொருநாள் நானறியாத மக்கள் இங்கு வந்து என்னை யழைத்துக்கொண்டு போவார்களென்று பற் பல சொப்பனங் காண்கிறேன். துன்பமின்றி வாழ்பவர் உலகி லுளரென்பதை யறிவேன்," என்று பேசிக்கொண்டு, அழகிய அமைப்பையுடைய தன்னுடலிலிருந்து உடுத்தி யிருந்த கந்தைகளைக் களைந்து, நீரில் இறங்கி விளையாடிய பின், மெள்ள நடந்து கரையேறி உடையணிந்து நெறிதவ றித் திரிந்த வெள்ளாடுகளைக் கூப்பிட, அவை துள்ளி யோடி வந்து அவளைச் சுற்றி நின்றன.

இன்று யாது காரணத்தாலோ அவள் கவற்சி நீங் கிய உளத்தளாய் அடர்ந்த காட்டைவிட்டு நீங்கி அலை கடலுக்குமேல் வளர்ந்து நின்ற குன்றினுச்சியில் நின்றாள்.

இதற்குமுன் பார்த்திராத காட்சி யொன்றை அவள் இன்று கடலிற் கண்டாள். தடதடவென் றடிக்கும் பாய்களுடன் ஒரு யாளியின் பொன்னுருவம் பதிக்கப்பெற்ற முகத்தை யுடைய நீண்ட மரக்கலமொன்று கடலில் மிதந்துகொண் டிருந்தது! தனக்கு வந்த மிடி எங்ஙனமோ நீங்கப்போகிற தென்று அவளுக்கு ஓர் உணர்ச்சி தோன்ற, திரை வீசுங் கரைமேல் அவள் நாட்டத்தை யூன்றினாள். கடலில் மிதக் குந் திமிலிலிருந்து மூன்று மாலுமிகள் நல்லுடை யணிந்தவ ராய் ஓர் அம்பியி லேறி நிலத்தை நாடி வந்தனர். இவர்களை நெடுநேரம் நின்று பாராமல் நம்பிக்கை நிறைந்தவளாய்த் தையல் விரைந்து நடந்து குடிலை யணுகினாள்.

அங்கே வலிமை மிக்க மனிதர் உரத்த குரலில் யாதோ வொன்றைக் கேட்பதையும் கீச்சென்ற குரலுடன் பூனைக் கண்ணியாகிய கிழவி, "நான் வயது சென்றவளும் பலங் குன்றியவளுமாயிருக்க, உங்களுக்கு நானென்ன உதவி செய்யக்கூடும்? என்னுடைய மகளாகிய காக்கை வரும் வேளையாகிறது; பொறுங்கள்" என்று சொல்வதையுங் கேட்டாள். இதற்கு விடையாக, "சரி அப்படியே சற்று நேரம் பொறுப்போம்" என்றானொருவன். குளித்துவந்த நாயகம் இதற்குள் கதவைத் திறந்துகொண்டு இளமுறுவ லுட னுள்ளே வந்தாள். கிழிந்து தொங்கிய ஆடையணிந்து மலர்ந்த முகத்துடன் நின்ற மடந்தையை வந்த மாலுமிகள் வாய் திறந்து விழித்து நோக்கலானார்கள். திரட்டிச் செருகியிருந்த அவள் கரியகூந்தலி லொருபாகம் அவிழ்ந்து அரைக்குக் கீழே தொங்கிற்று. நிறங்கள் பொருந்திய நறு மணம் நிறைந்த காட்டுப் பூக்களைச் சேர்த்து நாயகந் தலை யிற் சூடியிருந்தாள்.

கண்ணிமையாது அவளைப் பார்த்த மாலுமிகளி லொரு வன் கிழவியை நோக்கி, "இப்பெண் உனக்கினமானவள்

அல்லளென்பது தெற்றெனத் தெரிகிறது. இவள் யார்?" என்று வினவ, அடக்கொணுக் கடுஞ்சினத்துடன் கோணிய மனத்தினள், "உண்மையாய் அவள் என் மகள்தான். அவளைப்போல் நானுங் கட்டழகியாயிருந்தேன். ஆயினும் அறுபத்தைந் தாண்டுகள் சென்றபின் யான் மாறுபட்டுத் தோன்றுவது விந்தையன்று. என் மகளாகிய இவளோர் ஊமை; அதனாலென்ன? அவள் நன்ருய் வேலை செய்கிருள். ஆதலின், சமையல் செய்யத் தொடங்குங்கள். அவள் உங்களுக்கு விறகு கொண்டுவந்து உதவி செய்வாள்," என்ருள். சிறிதுநேரம் விலவிலத்து நின்ற தையல் கடலோடிகளுக்கு உதவிசெய்யப்போனுள்.

வேலை முடிந்தவுடன் மாலுமிகள் சமைத்தவற்றை யெடுத்துக்கொண்டு கடலைநோக்கிச் சென்ருர்கள். ஆனல், அவர்கள் கொண்டுபோன பண்டங்கள் அரைவேக்காடுடையனவாயும் உண்பதற் கிசையாதனவாயு மிருந்ததால் அவர்களின் தலைவன் அவர்களைத் தன்முன் நிறுத்தி உண்பதற்கிசையாதவற்றை அவர்கள் செய்து கொணர்ந்த காரணம் யாதென்றுகேட்க, "ஐய, சுருங்கிய முகத்தையுடையவொரு கிழவியின் வீட்டிற்கு நாங்கள் போயிருந்தோம்; சமையலுக்கு வேண்டிய பண்டங்களொன்றும் அகப்படவில்லை. அவளுடன் நாங்கள் பேசிக்கொண்டிருக்கையில் அழகிய ஒளி வீசுங் கரிய விழிகளையுடைய தெய்வப்பெண் போன்ற எழில் நிறைந்த மங்கையொருத்தி அங்கு வந்தாள். அவள்மேற் கண்ணுங் கருத்துமாய் நாங்களிருந்தோமாதலின் சமைப்பதில் உளஞ் சொல்லாமல்யாவுங் கெட்டுப் போயிற்று" என்றுரைத்தார்கள். "நன்று, நீங்கள் மூவரும் வேறுபாடின்றி யிதைச் சொல்வதால் பேதைமொழிபுகன்றீரென்று நீங்கள் சொன்னதைத் தள்ளுவதற்கில்லை. ஆயினுமொன்று கேண்மின்: நீங்கள் பார்த்த மங்கை

இறந்த நம் மனைவியை யொத்திருப்பாளோ?" என்று கேட்டான்.

"அரசே, வையத்தில் இவளுக்கிணையாய் யாம் எவரையுங் கண்டதில்லை" என்று மூவருங் கூறினர்

"இனி நான் அவளுருவத்தைக் கண்டு அவளினிய மொழியைக் கேளாமலிரேன்" என்றான் தலைவன். அப்போதவர்களு ளொருவன், "வனப்பு மிக்க இம்மங்கை பிறந்ததுமுதல் வாய் திறவாத ஊமையென்று கிழவி சொல்லக் கேட்டோம்" என்றான்.

"இதில் யாதோ மறைபொருளிருக்கின்றது. நீங்களதிகாலையி லெழுந்து இன்று சென்ற குடிலிற்குப் போய் வனப்பு மிகுந்த இவ்வனிதையை நாளைப் பொழுது போவதற்குள் நான் பார்க்கவேண்டுமென்று சொல்லுங்கள். அவள் இங்கே வரவேண்டும். அவள் தன் தந்தையின் வீட்டிலெவ்வாறு நடத்தப்படுவாளோ அவ்வாறே இங்கும் நடத்தப்படுவாளென்று தெரிவியுங்கள்," என்று தலைவன் கருத்துடன் மொழிந்தான்.

மறுநாட் காலையில் அரசன் செய்தியைச் செவியுற்ற நாயகம் ஒன்றுஞ் சொல்லாமல், யாவுமறிந்தவள்போலதற் குடன்பட்டாள். பக்கத்திலிருந்த கிழவி மிகவும் வெகுண்டு துடித்தாள்; கடலோடிகளோ அவள் சினத்தைச் சிறிதும் மதிக்கவில்லை. ஞாயிறு கடுங்கதிர் பரப்பி உச்சியிலிருந் திறங்கி மேற்கே சாயும் வேளையில், தையல் அமைதியாய் நடந்து கடலை நோக்கிச் சென்றாள். வெய்யவனின் செவ்வொளி அவள் கரிய குழலிற் பளிச்சென்று வீசிற்று. நடந்துபோய்க்கொண் டிருந்தவள், தன் கிழிந்த உடையை நினைந்து நாணி, "யாது நேருமென் றெவர் சொல்லக்கூடும்? இவ்வேந்தன் என் பழைய கந்தையுடையைக் கண்டு வெட்

கினு லென்செய்வேன்," என்று செந்தாமரைபோல் முகஞ் சிவக்கக் கூந்தலைத் தன் காந்தள் மெல்விரல்களா லவிழ்த்துத் தொங்கவிட்டு மெய்யை மூடிக்கொண்டு இனிது நடந்தாள்.

அவள் மணல்மேல் வருவதைக்கண்ட மாலுமிகள் அகமுவந்து பேரிரைச்ச லிட்டனர். பேச்சின்றி இமை விழியாது தையலி னழகைத் தன் கண்களாற் பருகிய வேந்தன், இருகைகளையும் நீட்டி அவளை வரவேற்றான்.

"பெண்களுட் சிறந்தோய், உன் காட்சி கிடைத்ததா லகமகிழ்வெய்தினேன்," என்று கொற்றவன் பாலுந் தேனு மனைய இனியமொழி சில பகர்ந்து, அவளைக் கப் பலுள் அழைத்துத் தன் மனைவியைப் பற்றியுந் தனியனாய்த் தான் கழித்த நாட்களைக் குறித்துமிரங்கிப் பல இயம் பினான். அவள் ஊமையென்று கடலோடிகள் கூறியதை அவன் முற்றும் மறந்தான். அவளைப் பார்த்தவண்ண மாய் மன்னவன் தன்காதலைக் கூறி அவள் வாய்மொழி விழையா நிற்க, துடிக்கு மிதழ்களுடன் விரைவாய், "நீ மகிழ்ந்தால் யான் மகிழ்வேன்" என்று தையல் புகன்று, கண்புதையா நின்றாள்.

"என்னே உன்மொழியினிமை," என்று இறை கொஞ்சி அவள் மருங்கு காங்க, நாயகம் சற்றே பின்ன டைந்து, "ஐயகோ, எனதின்பம் நிலைக்குமோ? திரும்ப யான் சென்று உனைக்கண்ட இன்பத்தை எண்ணி யிரங்க வேண்டு மென்பதை மறந்தனை போலும்! நல்லவ, நீயு மெனை நினைந் திரங்குவையோ?" என மென்மொழியாள் கவன்று வினவிப் பின்னும் பேசுவான் றொடங்கி, "இன் னுஞ் சிறிது பொறுப்பது நன்று. அகன்ற இவ்வங்கண் ஞாலத்தில் மூலைக்கொருவரா யிருந்த நம்மைச் சேர்த்து

வைத்த ஊழ், மற்றும் நம்மைக் கூட்டும் ஆயினும், நீ யொருவேந்தனும் யான் எவருமறியாத வெளி யாளு மாயினமையின், ஐய! என்னை நீ விரைவிற் பதரென்றிகழா யென் றெண்ணுவ தெங்ஙனம்? உரமுடையோய்! உன்ன றிவு பெரிதாகலின் நீயே இதற்கு முடிபு கூறுக," என்றாள்.

இங்ஙனம் அவளுரைத்ததைக் கேட்ட கோமகன் அன்பா லுருகிய பார்வையுடன் தையலி னளகந் தொட்டு "காதலி யாது நீ வேண்டுவது? உளத்திருப்ப தெனக்கு ஓதாய்" என,

"அருந்திறலோய், பகைவரை வென்று, புகழ்பெற வேண்டிப் புறப்பட்ட நீ, வழியே சென்று உன் வஞ்சின முடித்து வாகைசூடித் திரும்புங்கால் இந்நெறி வருவை யேல், குன்றின் ஒரு சிறு குடிலில் நின் வரவு எதிர்நோக்கி யான் காத்திருப்பேன்' என்று மொழிய,

"நன்று, ஓராண்டிற்குமுன் தொலை நாடுகளில் சென்று ஒன்னாரை வென்று பெரும்புகழ் பெறுவே னென்றல் லவோ உறுதிசெய்தேன். அங்ஙனமே இப்போது யான் செல்கின்றேன். ஆயினும் போர்முனையில் நான் விழுவேனா யின் உன்மேல் நான் கொண்ட காதலுடனே உயிர் விடுவே னென்பதை யுணர்ந்துகொள். என் பெயர் அமராபரணன், இறுதிவரையும் உனை நான் மறவேன்: போய்வருகிறேன்," என்றான் கொற்றவன்.

"போய்வருக; ஒரு கன்மனக் கிழவிக்குக் குற்றேவல் செய்யுஞ் சிறுமகள் நானென்பதை நன்கறிவாய்" என்று தேன்மொழி விளம்பினாள். உடனே அமராபரணன் ஒரு பேழையைத் திறந்து உயர்ந்த பட்டுடை யெடுத்து அதை

நாயகத்தின் முன் கொணர, வாங்கக் கைநீட்டி, அவள் புன்னகை புரிந்து,

"கல் நிறைந்த குன்றின் புறத்திற் புகையடைந்த சிற்றிலிற் கிஃதமையுமோ? இதை யானெடுத்தேகின் கிழவி பறித்துடுத்து மகிழ்வது திண்ணம்" என்று அறைந்து மரக்கலத்தை விட்டு நீங்கிய மாந்தளிர் மேனியாள், முகத்தின் மீது நிலவொளிபட, கடற்கரை மணல் மேல் அன்னமெனத் தனிவழி நடந்து குன்றேறிச்சென்று மன்னன் கண்ணிற்கு மறைந்தாள். அன்றிரவே அமராபரணன், பருத்து வளர்ந்த மரக்கல மாக்கள் தண்டுவலிக்க, மாற்றவர் நாடு நாடிப் பரவைமேலேகினன்.

## III

குடிலிற்குத் திரும்பிய தையல், முன்போற் காலைமுதல் மாலைவரை வேலைசெய்யத் தொடங்கி, எவருடனும் ஒன்றும் பேசாது, கப்பலிற் றன்னுடன் அமிழ்தனைய மொழிகள் பேசிக் காதலை வெளியிட்டுத் தனக்கின்ப மூட்டிய அமராபரணனைக் கண்டநாளை யெண்ணியுவந்து, அமைதி குடிகொண்ட இனிய முகத்துடன் கிழவிக்கடங்கி யிருந்தாள். இளவேனில் சென்றது; முதுவேனிலுங் கழிந்தது; கார்போய்க் கூதிரும் வந்தது. ஆயினும், வடிவழகி எதிர்பார்த்த கப்பல் வரவில்லை. கடல்மேற் சென்ற காதலனை நினைத்துக் கொண்டு ஒருநாள் நாயகம் காட்டினூடே செல்லுங்காற் கீழே பள்ளத்தாக்கில் தாரை யூதப்பட்டது போலொரு முழக்க மெழுந்தது. கோடரி தோளிலேந்திக் காட்டில் நின்ற கிழவியின் கணவன் ஓட்டமாயோடிக் குறுமூச்சுடன் வீட்டையடைந்து,

"கடலோடிகள் வந்திருக்கின்றனர். ஏதோ தீங்கு நேரிடும்போலிருக்கின்றது. இந்த ஊமைப்பெண் நமக்கு வினையாய் வந்தாளே" என்று பதற,

"நல்லது, யாரவர்கள்?" என்று கலக்கமின்றிக் கேட்டாள் திருக்கு நெஞ்சுடைய கிழவி.

"போன சித்திரை மாதம் இங்குவந்து சமையற் செய்வதற் கிடங்கேட்ட கடலோடிகள் மறுபடியும் வருகிறார்கள். இந்தப்பெண் அவர்களுடன் கடற்கரைக்குப் போனபோது ஏதோ நடந்திருக்கவேண்டும்" என்று நாயகத்தின் தாதையனைய பெருமகனைப் பிணமாக்கிய பழிகாரன் ஐயத்துடன் கூற,

"இல்லை, இல்லை. ஒருகால் இதனால் நமக்குப் பெரும் பேறு வரலாம்" என்று உலர்ந்த உளத்தள் அவனைத் தேற்றினாள்.

"போதும் நிறுத்து: நமக்கு வரும் பேறுமுண்டோ? பதினைந்தாண்டுகட்கு முன் செய்த கொலைக்காகப் பழி வாங்க வருகிறார்களென்று நினைக்கிறேன். அவர்கள் இதோ வந்துவிட்டார்கள்" என்று கிழவன் விலவிலத்து நிற்க அசைவின்றி நாயகம் உள்ளே சென்று அடுப்பருகே நின்றாள். வெளியே வாளுடன் நடந்த மக்கள் வரும் ஓசை கேட்டது. கதவையொருவன் மோதித்திறந்து, "விரிந்த கருங்கடலைத் தாண்டி யாம் நாடிவரும் மங்கையர்க்கரசி இச் சிறு குடிலில் இன்னுமுளராயின், இவ்வீடு நன்மைபெறுக" என, அடுப்பருகே யமர்ந்த தையல் ஒன்றையும் பாராது, கேளாது கீழ்நோக்கிய வண்ணமாயிருந்தாள். அப்போது நடுக்கத்துடன் கயவன் எழுந்து நின்று,

"இத்தனைநாளும் இவ்வூமைப் பெண்ணை இரக்கங் காட்டி வளர்த்த எங்களுக் கொன்றுமில்லையோ?" என்று கேட்க,

"நீ நீட்டிப் பேசற்க; உன் பொய்ம்மொழிகளை எங்களிடம் பிதற்ற வந்தனையோ? நீங்கள் மாள்வதும் வாழ்வ

தும் மெல்லியள் கையிலுள வென்பதை யறிந்துகொள்"
என்று அஞ்சக்கூறி, நாயகத்துக்கு நேரே திரும்பி,

"எங்களம்மையே, அரசியே, நீர் வாழ்க" என்றான். இஃதவன் வாயிற் பிறக்கும்போதே, காதளவோடிய கண்ணு ளெழுந்து நின்று இருள் மிகுந்த அக்குடிலில் முதன்முதல் தன் செவ்வாய் திறந்து பேசலானாள்.

"முந்நீர் கடந்த நல்லீர், சென்ற வாண்டு இவ்வேழை மகளுடன் தித்திக்கு மொழி நனி பேசிய குன்றனைய திரள் தோளர் தறுகணாளர் நீவிர்போலும். அப்பெருந்தகை கூறி யது உரைமின்" என,

"எம்முடைய இறைவன் கூறியதிது; 'ஒருபோதும் ஓய்வின்றி யெனது அகம் நீங்கா துறையும் ஒளிவிழி யணங்கு என்னுடன் வர உடன்படுவாளேல் சுணங்காது அவளை யழைத்து வம்மின், என்பதே" என்ன,

"ஆயின் வந்தேன். அவனைக் கண்டபோதே யென் னுள்ளம் அவன்பாற் சென்றது: சிறிது பொறுமின்; இங் குறையும் இவ்விருவருக்குங் கொடுப்பதற் கொன்றுமில்லை கொல்? இவர்கள் வறிஞர்" என்று மதியேய்க்கு முகத் தாள் விளம்ப,

"கோமகன் ஏவியவாறே அரியன பல கொணர்ந்தோம். நமது மேன்மைக் கமைந்த ஆடையணிகளுமுள. நுஞ் சொற்படி செய்வதெங் கடமை" என்று தலைவணங்கி நிற்க,

"அற்றேல், அன்பீர்! அவன் எனக் களித்தவற்றை இவ்விருவருக்குங் கொடுமின். ஆண்டகைமுன் என் பழ வுடையுடன் செல்வேன்" என்று பவளவிதழ்ப் பைங் கொடி தன் துணிபை விளக்கி, பூனைக்கண் பேயையுங் கசட னாகிய அவள் கணவனையும் நோக்கி,

"எனக்கு விடைகொடுமின்; நான் இங்கு வந்தது முதல் இதுவரை நன்றி செலுத்த நீவிர் எனக்கொன்றுஞ் செயவில்லை" என மணியோசைபோற் றெளிய விளம்பிச் செலவு பெற்றுத் தையல் நாயகம் போக அடியெடுத்தாள். உள்ளும் புறமும் மிடி நிறைந்த அப் புன்குடிலை விட்டு அவள் ஒளி விடு திருமுகம் நீங்கிற்று. பொன்னும் மணியுந் திகழ்வதைக் கண்டு உளம்புளகித்து இருளடை மனத்தினர் மலைத்து நிற்க, மாலுமிகள் பின் வர, குன்றைவிட்டிறங்கிக் கோமகளார்கலி நோக்கிச் சென்றாள். தரைமோதி அலையாடுந் தண்கரை அவள் சேருமுன், நுரை வீசுந் திரையிற் றிடுமெனப் பாய்ந்து அமராபரணன் அவள் எதிர் வந்தான். வலிய பெரிய கைகளாற் பிறைபழி நுதற்பாவையை அகப்படுத்தித் திங்கள் கண்டு பொங்கிய கடலெனக் காதல் பெருகிய கண்களுடன் கூசி யுள்ளொடுங்கும் அவள் கருவிழியுற்றுநோக்கிப் பலவாறு குலவி, மாற்றலர் படை யழித்த மன்னன் தையலுடன் தன்னூடு போகத் திமிலேறினன். மறுநாள் நாயகம் ஒரு கனவு கண்டதைத் தன் காதலனுக்கு உரைத்தாள்.

"ஆடவருட் சிறந்தோனாகிய ஒரு வேந்தன் நனி இனியவளாகிய ஓ ரரசியுடனமர்ந்து, பெருநிலம் புகழும் அமராபரணன், நம் நன்மகளாகிய தையலை மணந்தான்; வாழ்க அவன் கொற்றம் என்று பேசி மறைந்தனன்" என்று நாயகம் விளம்ப, அவள் வேந்தர் வழியிற் றோன்றியவள் என்ற எண்ணம் அரசனுக்கு உதித்தது. பன்னளாகுமுன் தையல் கண்ட கனவினுண்மை அமராபரணனுக்கு வெளியாயிற்று.

வையகத் துறக்கம்

முற்றிற்று.

கழக வெளியீடு : ௧௩௪

# இளஞ்சேய்க் கொல்லி

ஆசிரியர் :

திரு. க. ப. சந்தோஷம்

வேலூர்.

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி. :: சென்னை-1.

8 th Edition: May, 1945.
Reprints: March, 1946; May, 1947; March, 1956.

# ILANCHEYK-KOLLI

[All Rights Reserved]

*Published by*

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY, MADRAS-1.

*Head Office:*

24, EAST CAR STREET, THIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras-1. C. 1020.

# முன்னுரை

'இளஞ்சேய்க் கொல்லி' என்னும் இக் கதை பத்தொன்பதாம் நூற்றாண்டில் திகழ்ந்த ஆங்கிலப் பாவலரான உவில்லியம் மாரிஸ் (William Morris) இயற்றிய கதைகளுள் ஒன்றாகிய பெல்லரோவ்வன் (Bellorophon) என்பதைத் தமிழ்ப்படுத்தியதாகும்; இதிலுள்ள சிறப்புப் பெயர்கள் மாற்றப்பட்டிருக்கின்றன. கூடியவரையில் யாவும் தமிழ் வழக்கொடு பொருந்துமாறு திருத்தியமைக்கப்பட்டும் இருக்கின்றன.

மக்கள் வாழ்க்கையில் நேர்வனவெல்லாம் அவர் தம் முயற்சியால் ஆவனவல்லவெனினும் உறுதியும் உரமுங்கொண்டு ஒருவர் செய்து முடிக்கக் கூடியவற்றிற்கு எல்லையில்லையென்பது ஈண்டுத் தெளிய எடுத்துரைக்கப்படுகின்றது. 'கருமமே கட்டளைக் கல்' என்பது கொண்டு இந்நூலை நோக்குக.

கு. ப. சந்தோஷம்.

# உள்ளுறை

## க. சிறுமலை நாடு


| | | பக்கம் |
|---|---|---|
| க. | கனவின் விளைவு .... | 1 |
| உ. | அரசியின் காதல் .... | 7 |
| ந. | அரசி பொய்யுரையும், வேந்தன் வெகுளியும் .... | 13 |
| ச. | அரசியின் முடிவு .... | 18 |


## உ. ஈழ நாடு


| | | |
|---|---|---|
| க. | ஒப்பிலான் வரவேற்பும், பூங்கோதை எச்சரிக்கையும் .... | 23 |
| உ. | இளஞ்சேய் வெற்றிபெற்று மீளல் .... | 28 |
| ந. | துர்க்கை ஊர்வலம் .... | 35 |
| ச. | வெம்மனப் பெண்படையை வென்றது .... | 40 |
| ரு. | பகைராணு நெடுவிலங்கு .... | 44 |
| சா. | ஒப்பிலான் விளம்பரமும், கொல்லி துணிபும் .... | 48 |
| எ. | ஒப்பிலான் செய்த சூழ்ச்சி .... | 52 |
| அ. | நெடுவிலங்கை மாய்த்தது .... | 56 |
| கூ. | கொல்லியைக் கோதை காத்தது .... | 64 |
| கo. | அரசுரிமை பெற்றுக் கொல்லி கோதையை மணந்தது .... | 70 |

# இளஞ்சேய்க் கொல்லி

## க. சிறுமலை நாடு

### க. கனவின் விளைவு

சிறுமலை நாட்டிற்கு வேந்தனாகிய வரம்பன் என்பவன் ஒருநாட் காலையில் வேட்டையாடச் சென்று, விலங்குகளைப் பின்பற்றி ஓடித்திரிந்து, களைத்து, வேட்டையாடத் தன்னுடன் வந்தவர்களோடு காட்டிலுள்ள சிறு வெளி ஒன்றில் இளைப்பாறிக்கொண்டிருந்தான். அப்போது, நீண்ட பிரயாணஞ்செய்து இளைத்துப்போனவனும், அழுக்குப் படிந்த ஆடைகளை அணிந்தவனுமாகிய ஒருவன் குதிரையின்மேல் அமர்ந்தவனாய் அங்குத் தோன்றினான். அவனது உடை அழுக்குப் படிந்திருந்ததோடு, கிழிந்து கந்தல் கந்தலாய்த் தொங்கிக்கொண்டிருந்தது. அவனுடைய இடையில் வாளுறையொன்று விளங்கிக்கொண்டிருந்தது; அஃது ஒடிந்துபோயிருந்தது; அதில் வாளுமில்லை; அவன் ஏறியிருந்த கரிய குதிரை வேர்வை நிறைந்து வாயில் நுரையுடன் நின்று துடித்தது. இங்ஙனம் வந்தவனுடைய முகத்திற் பெருந் துன்பங் குடிகொண்டிருந்ததாயினும், அவனுடைய உருவமும் பார்வையும் உயர்குடிப் பிறப்பினனென்று அவனை அறிவித்தன. இவனை உற்று நோக்கிய சிறுமலை நாட்டு வேந்தன், குதிரைமேல் ஏறிய இம்மகன்

பொறுக்கொணுத ஒரு வருத்தத்தால் தனது நாட்டையும் வீட்டையும் விட்டோடி வந்திருக்க வேண்டுமென்று நினைத்தான். அரசனின் வேட்டை நாய்கள் புதிதாய் வந்தவனைக் கண்டு வெகுண்டெழுந்து பாய, அரசனே டிருந்தவர்கள் நாய்களை அதட்டி யடக்கி, மாவின்மேல் இருந்தோனைக் கூவியழைத்து, "இந்தக் காட்டிற்குள் நுழைந்த நீ யார்? எதற்காக நீ இங்கு வந்தாய்?" என்று இத்தகைய பல கேள்விகளைக் கேட்டார்கள். உடனே அவன் குதிரையை விட்டிறங்கி, "என்னுடைய வரலாற்றைச் சொல்லி முடிக்குமளவும் என் உயிர் நிற்குமோ நில்லாதோ அறியேன். உங்கள் அரசன்முன் என்னைக் கொண்டுபோய் விடுங்கள்," என்று விடையிறுத்தான். இவனுடைய பரிதாபமான உள நிலைமையையுங் களைப்பையும் மன்னன் கண்டு, "அன்பனே, நீ உணவருந்தி இளைப்பாறியபின், உன்னுடைய வரலாற்றை எனக்குச் சொல்லலாம். இப்பொழுது நீ அதைச் சொல்லவேண்டியதில்லை. உனது பெரிய வருத்தத்தையுந் திகைப்பையும் பார்த்து என் மனம் இரங்குகின்றது," என்று உருக்கத்துடன் கூறி, அவனை உணவு அருந்த அழைத்தான். வந்தவனும் இதற்கு உடன்பட்டு உணவருந்துவதை அரசன் கூர்ந்து பார்த்து, "இவனுடைய வரலாறு எத்தன்மையதாயிருக்குமோ?" என்று கருதிக்கொண்டிருந்தான். ஒருவாறு தன் பசியைத் தீர்த்துக் கொண்டபின், புதிதாய் வந்தவன் பின்வருமாறு பேசலானுன்:—

"எனது உயிரைக் காப்பாற்றிக்கொள்ளும்பொருட்டு நான் எனது நாட்டையும் நகரையும் விட்டு ஓடிவந்தேன். ஆனல், இப்பொழுது இந்த உயிரை வைத்திருக்க வேண்டுமென்ற விருப்பஞ் சற்றும் எனக்கில்லை. இப்பொழுதே எனது உயிரை நான் இழந்திட நேரிடுமாயின், அதற்காக

ஒரு சிறிதும் நான் வருந்தேன். நான் சொல்வதைக் கவன மாய்க் கேளுங்கள். நேற்றுவரையில் நான் எனது தந்தையின் தலைநகராகிய திருவுறை நகரத்தில் யாதொரு கவலையுமின்றி வாழ்ந்துவந்தேன். இளஞ்சேய் என்ற பெயருடையவனும், என்னிடத்தில் மிக்க நேயமுடையவனுமாகிய தம்பி யொருவன் எனக்கிருந்தான். நாங்க ளிருவரும் சிறு பிள்ளைகளாக இருந்த காலத்தில் ஒன்றுகூடி விளையாடியிருந்தோம். பிள்ளைப் பருவம் நீங்கி வாலிபப் பருவம் வந்தபோது இருவரும் ஒன்றாக வெளிநாடுகளுக்குச் சென்று, அரிய வீரச் செயல்கள் நிகழ்த்திப் புகழ்பெற வேண்டுமென்று நாங்கள் ஒரு முடிவுசெய்துகொண்டோம், ஆனால், இனி என் தம்பியாகிய இளஞ்சேயின் முகத்தை நான் பார்க்கப்போவதில்லை; அவன் பெயர் மறைந்து போகும். எல்லோரும் என் பெயரை நிந்தித்துரைப்பார்கள்; நானொரு பழிகார னானேன்.

"நடந்ததைச் சொல்லுகிறேன் கேளுங்கள், அடுத்தடுத்து மூன்று நாட்களாய் நானொரு கொடிய சொப்பனங் கண்டேன். சொப்பனத்தில், உயர்ந்து வளர்ந்ததும் சாம்பல் நிறமுள்ளதுமான ஓர் உருவம் தூக்கத்தினின்றும் என்னைத் தட்டி எழுப்பி, எனது தம்பி இளஞ்சேய் கண் வளர்ந்த அறைக்குள்ளே கூட்டிக்கொண்டு போயிற்று. அங்கே இவ்வுருவம் ஒரு சிறிய அம்பை என் கையிற் கொடுத்தது. இவ் வம்பில் வெள்ளிப் பூண்க ளிருந்தன; அம்பினிறகு, ஒரு பகுதி சிவப்பும் மற்றொரு பகுதி பச்சையுமாயிருந்தது. இந்த வாளி என் கையில் வந்தவுடன் அதை யார்மீதாயினுஞ் செலுத்தவேண்டுமென்ற ஓர் உணர்ச்சி எனக்குண்டாயிற்று. நான் எவ்வளவு முயன்று பார்த்தும் அவ் வுணர்ச்சியை என்னைவிட்டு அகற்ற முடியவில்லை. இறுதியில் நானொரு உன்மத்தன்போற் கையி

லிருந்த அம்பை எனது தம்பி இளஞ்சேயின்மேற் போக விட்டேன்.

"இச் சொப்பனத்தினால் யான் கலக்கமுற்று நித்திரை செய்கையில், மற்றொரு கனவு கண்டேன். ஒரு மலைச்சாரலில் நான் அலைந்து திரிந்து, கடற்கரையோரத்திற் கட்டப்பட்ட பெரியதொரு நகரத்தை நான் அடைந்ததாகக் கனாக் கண்டேன். கடற்கரை மணலில் மக்கள் பெருந் திரளாகக் கூடி இறந்துபோன தங்கள் அரசனுக்குச் செய்யவேண்டிய கிரியைகளை நடத்தினார்கள். இறந்துபோன அரசனது பெயரை அவர்கள் ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்ட போது அது யான் கேட்டிராத ஒரு புதிய பெயராய்த் தோன்றிற்று. ஆனால், துஞ்சிய மன்னனது முகத்தை யான் பார்த்தபோது, அஃது என்னுடைய முகமே என்று கண்டேன்.

"ஒருமுறையன்று, இருமுறையன்று, மும்முறை இக் கனவையே நான் கண்டதால், தாங்கொணாத பெரும்பாரம் என் மனத்தை வந்தழுத்திற்று. என் மனக்கவலையை என் தம்பிக்குக் கூறி ஆறுதல்பெற வழியில்லை. சொப்பனத்தை அவனுக்குக் கூறுவதாற் பயனொன்றுமில்லை. அவனுக்கு விரோதமாக என் மனத்திலுள்ள சூழ்ச்சியைச் சொப்பனமாய் நான் அவனுக்குக் கூற நினைத்ததாக, அவன் என்மீது ஐயமுறுவானென்று நான் அஞ்சினேன். என்மீது அவனுக்கு எவ்வகையான ஐயமும் உண்டாகக்கூடாதென்று நான் உறுதி செய்துகொண்டேன். ஆயினும் நான் கண்ட கனவை யாருக்காயினுஞ் சொல்லி, அதனாலென்ன விளையுமென்று ஆராயாமற் சும்மா இருக்க முடியவில்லை.

"எனக்கும் என் தம்பிக்கும் இளமையிற் கல்வி பயிற்றுவித்த பெரியவரொருவர் நகரத்திற்கு வெளியே

தனியே ஓரிடத்தில் வசித்து வந்தார். அவரிடம் இக்கனவைக் கூறி அவர் சொல்வதன்படி நடந்துகொள்ளத் தீர்மானித்தேன். மேலே நவின்ற சொப்பனத்தை மூன்ரும் முறை கண்டபின், அதிகாலையிலெழுந்து பெரியவரிடம் போகப் புறப்பட்டேன். அரண்மனையின் முற்பகுதியைக் கடந்து நான் வெளியே செல்லுங்கால், அங்கு நின்ற கம்பமொன்றில், சொப்பனத்தில் நான் கண்ட அம்பு வைக்கப் பட்டிருப்பதைப் பார்த்தேன். இதைக் கண்டு நான் வியப்புற்று நின்றேன். எனது உளத்தை வருத்திய சொப்பனத்தின் உண்மையை உபாத்தியாயருக்கு விளக்குவதற்கு, இவ்வம்பு துணையாயிருக்குமென்று நினைத்து அதைக் கையோடு கொண்டு சென்றேன்.

“ஆசிரியரைக் காணவேண்டுமென்று நான் எடுத்துக் கொண்ட முயற்சி பயன்படவில்லை. அவர் இல்லத்திற் சென்று யான் வினவியபோது, அங்குள்ளவர்கள், முன்னிரவே அவர் திருவுறை நகரத்திற்குச் சென்ருரென்று அறிவித்தனர். மற்றும், யாதோ ஒன்று குறித்து அவர் பெருங் கவலை அடைந்தாரென்றும், அது யாதுபற்றி என்பது தங்களுக்குத் தெரியாதென்றும், வீட்டிலுள்ளவர்கள் எனக்குத் தெரிவித்தனர். இது கேட்டு நான் மிகவும் அஞ்சி நின்றேன். எதைப்பற்றி நான் அவரைக் கேட்க வந்தேனே அதுபற்றியே கவலை யடைந்தவராய், கனவில் நான் கண்ட அபாயத்தை எனக்கு அறிவிக்குமாறு, ஆசிரியர் எங்கள் அரண்மனைக்குச் சென்றிருக்க வேண்டுமென்று எனக்குத் தோன்றிற்று.

“பலவற்றையும் நினைந்து வாடும் மனத்தனய் யான் வந்த வழியே திரும்பினேன். நான் புறப்பட்டுப் பாதி தூரம் வந்தவுடன் ஓரோசை என் காதிற் பட்டது. நான்

ஏறியிருந்த குதிரையை நிறுத்தி அவ்வோசை கிளம்பிய திசைக்கு நேரே செவிசாய்த்தேன். சிறிது நேரத்திற்கு முன் தூரத்திற் கேட்ட அவ்வொலி அருகிற் கேட்டது. எனக் கெதிரிலிருந்த புதரில் யாதோ ஒன்று நகர்ந்து பதுங்குவதுபோலத் தெரிந்ததால், காட்டிலுள்ள பல விலங்குகளில் இது யாதாயிருக்கக்கூடுமென்று சிந்திக்கத் தொடங்கினேன். இந்நிலையிற் புதருக்குள்ளிருந்து சாம்பல் நிறமுடைய ஒரு பெரிய உருவம் என் முன்னே வந்தது. இஃதொரு பெரிய கோநாயென்றெண்ணி, என் கையி லிருந்த அம்பை அதன்மேற் செலுத்தும்பொருட்டுச் சிறிது எழுந்து, வெள்ளிப்பூண் கட்டிய அவ்வம்பை நேராய் மார்பிற் பாய்ச்சினேன். அது போய் ஆழமாய் இறங்கிற்று. சில விநாடிகளுக்குப்பின் யான் கண்ட காட்சியை ஐயோ! நான் என்னவென்று சொல்வேன்! அம்புருவி மாண்ட கோநாய்க்குப் பதிலாய், என் தம்பியாகிய இளஞ்சேய் குத்துண்டு கிடக்கக் கண்டேன். இதனால் யானடைந்த திகிலையுந் திகைப்பையும் எங்ஙனம் எடுத்துரைப்பேன்?

"எனது நடுக்கம் என்னைவிட்டு விலகுமுன் அண்மை யில் ஆட்கள் வருஞ் சத்தங் கேட்டது. அதிகாலையில் நான் தேடிச்சென்ற என் ஆசிரியர் படையேந்திய பல ருடன் ஓடிவந்தார். என்னுடன் பிறந்த தம்பி கொலையுண்டு கீழே கிடப்பதைக் கண்டு, நானே அவனை மாய்த்தவ னென்று என்னை அவர்கள் பிடிக்க வந்தனர். உருவிய வாட்களுடன் வந்த இம்மனிதர் கைக்கு நான் தப்பியோடி னேன். அவர்களால் தாக்குண்டு மாள்வதற்கஞ்சி நான் ஏன் ஓடிவந்தேனென்று எனக்கே தெரியவில்லை. இன்று அவர்கள் என் முன் வருவாராயின், அவர்களாற் கொலை யுண்பதற்கு எள்ளளவும் அஞ்சாது, முழுமனதுடன் அவர் கள் முன் தலைவணங்கி நிற்பேன். நிற்க, என்னைத் துரத்தி

யவர்களில் ஒருவன் என்னைப் பின்தொடர்ந்து வந்து என்னுடன் சண்டை தொடங்கினான். இச்சண்டையில் நான் என்னெதிரியைக் குதிரையினின்றுங் கீழே வீழ்த்தினேன்! எனது வாளும் பொடிப்பொடியாய் உதிர்ந்தது. இதற்குப் பின் எவரும் என்னைத் தொடரவில்லை. என் தம்பியாகிய இளஞ்சேய் இறந்தபின் நானும் இறப்பதை அவர்கள் விரும்பாமல் என்னை விட்டுவிட்டனர் போலும்! அங்கிருந்து ஓடிவந்த கோலத்துடன் நான் உங்கள் முன் நிற்கிறேன். இதுவே எனது வரலாறு."

## உ. அரசியின் காதல்

இவை யாவற்றையும் உற்றுக்கேட்ட மன்னனாகிய வரம்பன் மிகுதியும் வருந்தி, திகைத்து நின்ற அரசகுமாரனுக்குத் தன்னா லியன்றவரை ஆறுதலுண்டாக்கும் நன்மொழிகள் கூறி, அறியாது அவன் செய்த கொலையினால் வந்த பழியை நீக்குவதற் கேற்ற சடங்குகளைச் செய்ய, சமயத் தலைவருடன் ஒழுங்கு செய்வதாக மொழிந்தான். மேலும் அவன் திருவுறை நகரத்து இளங்கோவை நோக்கி, "நீ கண்ட கனவின் இரு பகுதிகளில் முற்பகுதி மாத்திரம் நிறைவேறிற்றென்று இதுகாறும் நீ கூறியவாற்றாற் காணக்கிடக்கின்றது; இதனால் கனவின் பிற்பகுதியும் நிறைவேறுமென்று உனக்குத் தெரியவில்லையா? நல்ல, புதிய, பெரிய செழித்த நாட்டிற்கு நீ வேந்தனாவாய். கழிவிரக்கப் படுவதை விட்டு என்னுடன் அரண்மனைக்கு வந்து, இனிது வாழ்வாயாக," என்று கூறினான். மன்னனுக்கு இவ்வரசிளங்குமரன்மேல் ஒரு பற்றுமுண்டாயிற்று; ஆதலின் அவனை எங்ஙனமேனுந் தன்னுடன் அழைத்துப்போக வேண்டுமென்று முயன்றான். வாடிக் கலங்கி நின்ற இளங்குமரன் தன்னைச்சுற்றி நடந்துகொண் டிருந்தவற்றைப்

பற்றிக் கவலை இல்லாதவனாய்த் தான் செய்வது இன்னதென்றறியாமலே, அரசனுடனும் மற்றவருடனும் சேர்ந்து சிறுமலை நாட்டின் தலைநகருக்குச் சென்றான்.

அன்றிரவு கழிந்து கதிரவன் உதயமானபோது, தன்னுடன் வந்த அரசகுமாரனை வேந்தன் தனது அரண்மனைக் குருக்களிடம் அழைத்துச் சென்றான். புதிதாய்த் தங்கள் நகரத்திற்கு வந்த கோமகன் இயற்றிய பெரும் பழி அவனை விட்டு நீங்குமாறு குருக்கள் பல சடங்குகளைத் தொடங்கினார். கோமகனுந் தன் பெருங் குற்றத்தை நினைந்து வருந்தி அழுதான். சடங்குகளெல்லாம் நிறைவேறியபின், அரசிளங்குமரனின் கொலைப்பழி அவனைவிட்டு அகன்றதென்று குருக்கள் விளம்பினார். மற்றும், அவர் அவனை நோக்கி, "மன்னன் மகனே, ஈண்டு நாம் இயற்றிய கிரியைகளால் நீ குற்றம் நீங்கியவனாய் இவ்விடத்தை விட்டுப் பெயர்ந்து போகின்றாய். ஆயினும், நீ செய்யவேண்டியது மற்றொன்றுண்டு. எம்முன் நீ வந்து, நீ செய்த கொடிய செயலைக் கூறிக் கழுவாய் வேண்டியதற்கு அறிகுறியாக உன் பெயர் மாற்றப்பட வேண்டும். உனது தம்பியாகிய இளஞ்சேயைக் கொன்றவனென்று எல்லோராலும் இனி நீ அழைக்கப்படுவாய். இதுமுதல் உன் பெயர் 'இளஞ்சேய்க் கொல்லி' என்றிருப்பதாக," என்றார். இதனால் ஒருவாறு மனந் தேறி, அவ்விளமகன் வேந்தனுடன் அரண்மனைக்குச் சென்றான். என்றாலும் அவன் முகத்திற் குடிகொண்ட சஞ்சலம் அவனை விட்டு நீங்கவில்லை.

திருவுறை நகரத்துச் செம்மலை, வேந்தன் தன்னுடன் கூட்டிக்கொண்டு போய், விரைந்து பாய்கின்ற தன் பரிகள் கட்டியிருக்கு மிடங்களையும், போருக்குரிய ஆயுதங்கள் தொகுத்து வைக்கப்பட்டிருந்த சாலைகளையும், பொன்

னும் மணியுங் குவித்து வைத்திருந்த பொக்கிஷ சாலைகளையும், இன்னும் பலவற்றையுங் காட்டினான். இவையொன்றின்மேலாயினும் அச்செம்மலின் உளஞ் செல்லவில்லை. இதைக் கண்ட அரசன் சிறிது வருத்தமுற்றான். அரண்மனையிலுள்ள அரியவை பலவற்றை யெல்லாம் பார்த்து முடித்தபின், நல்ல வேலைப்பாடு நிறைந்ததாய், வெள்ளித் தகடுகள் வேய்ந்த ஒரு கதவருகே வேந்தன் வந்து நின்று, தனதருகில் வாய் திறவாது நின்ற தோன்றலைப் பார்த்து, “இளஞ்சேய்க் கொல்லி, உனது மனக்கவலையை மாற்றுவதற்கு யான் என்னால் இயன்றதை யெல்லாஞ் செய்து பார்த்தேன். அஃதென்னால் ஆகாதென்பது இப்பொழுது தெளிவாதலின், என்னைக்காட்டிலும் நுட்பமாய் உன்னுடைய கவலையை யறிந்து நீக்கத்தகுந்த வேறொருவரிடம் உன்னை நான் கொண்டு போகின்றேன்,” என்றனன்.

அரசன் இங்ஙனங் கூறிக் கதவைத் திறந்தபொழுது, மெல்லிய இளங்குரலுடன் பெண்கள் பேசுஞ் சத்தங் கேட்டது. கதவைத் திறந்து இருவரும் உட்சென்று, அரசி உறைகின்ற அந்தப்புரஞ் சேர்ந்தார்கள். சலவைக்கல் தளத்தையுடைய அவ்விடம், பொங்கி மேலெழுகின்ற நீரூற்றுக்களுடையதாய், மிகக் குளிர்ந்திருந்தது. அங்குள்ள சாளரங்களின் வழியாய்த் தரைமீது அலைவீசி விளையாடுங் கடற்கரைக் காட்சி இனிது தோன்றிற்று. அரசிக்குப் பணிவிடை செய்பவர்கள் பலவித வேலைகளில் ஈடுபட்டு அமர்ந்திருந்தனர். வரம்பன் மனைவியோ தனியாக ஓர் இருக்கையில் வீற்றிருந்தாள். இளஞ்சேய்க் கொல்லி அவளுடைய அழகை மிகவும் வியந்து நோக்கினான். அந்த வேளையிற் பணிவிடைப் பெண்களில் ஒருத்தி யாதோ சிறு தவறு செய்தது கண்டு, மன்னன் தேவி அவ

லைக் கடிந்து நோக்கினாள். அப்பார்வை மிகக் கொடியதாக வும் கன்மனத்தைக் காட்டுங் குறியாகவுமிருந்தது. 'வியக் கத்தகுந்த வெளியழகுவாய்ந்த இவ்வரசியின் மனங் கல்லா யிருத்தல்கூடுமோ?' என்று இளஞ்சேய்க்கொல்லி எண்ணி இரங்கினான்.

இதற்குள் அரசன் இளஞ்சேய்க் கொல்லியைப் பிற ருக்குந் தன் மனைவிக்கும் அறிமுகப்படுத்தி வைத்து அவ னைப்பற்றிப் பலவாறு புகழ்ந்து பேச ஆரம்பித்தான். வேந்தன் கூறியது அரசியின் காதில் ஏறவில்லை; இளஞ் சேய்க் கொல்லியின்மேல் அவள் கண்ணுங் கருத்தும் ஊன்றின. இளங்கோமகன், அரசியுடன் உரையாடி முகமன் கூறாது அமைதியாய் நின்றான். இதை அவள் விரும்பவில்லையாயினும், இளஞ்சேய்க் கொல்லியைப்பற்றி வெறுப்படையாது, அவனைக்குறித்து நினைவி லாழ்ந்தாள்.

அரசனும் இளஞ்சேய்க் கொல்லியும் அந்தப்புரத்தை விட்டு நீங்குமுன், வேந்தன் மனைவிக்கு அவ்விளமகன்மேற் பெருங்காதல் பிறந்தது. நாட்கள் பல கடந்தன; இளஞ் சேய்க் கொல்லியுடன் பேசி மகிழ அரசிக்கு வேட்கை மிகுந்தது. ஆனால், அரசனுடன் நெருங்கிப் பழகியது போல், இளஞ்சேய்க் கொல்லி, அரசியுடன் அளவளாவி யிருக்க விரும்பவில்லை. இளங்கோமகனின் நன்மையைக் கருதி அரசி இடைவிடாது தன்னால் இயன்றவற்றை யெல் லாஞ் செய்துவந்தாள். அரசனும் அவ்வாறே செய்தான். தனக்காக அவர்கள் எடுத்துக்கொண்ட கவலையை நினைந்து இளஞ்சேய்க் கொல்லி மிக நன்றியறிதலோடு நடந்து கொண்டான்.

தன்னந் தனியனாய்த் தப்பி யோடிவந்த தோன்றல், இப்பொழுது பழைய செய்திகளையும் அவற்றைப்பற்றிய

நினைவுகளையும் மறந்து, ஒரு புது வாழ்க்கையைத் தொடங்கினான். துணையிலியாய் அவன் சிறுமலை நாட்டிற்கு வந்த அஞ்ஞான்று நன்மொழிகள் கூறித் தன்னை வரவேற்றுத் தனது நலங் கருதிப் பலவற்றைச் செய்த வரம்பனின் பொருட்டு, இளஞ்சேய்க் கொல்லி பல வேலைகளில் இறங்கினான். சிறுமலை நாட்டின் வளம் பெருகவும், பசி பிணி பகையால் வருந் துன்பங்கள் குறையவும், அவன் பாடு பட்டுழைத்தான். அவனெடுத்த கருமங்களெல்லாம் எளிதில் நிறைவேறின. கருமங்களைச் செய்து முடிப்பதில் அவன் சாலத் திறமையுடன் நடந்துகொண்டதாலும், இனிமையுடன் பேசுகின்றவனாகவும், அன்பு நிறைந்தவனாகவும் விளங்கியதாலும் அந்நாட்டில் தலைமை பெற்றவர்களிற் பலர் அவனுக்கு நெருங்கிய நண்பரானார்கள். இதன் பயனாக, போர் புரிவதிலும் சமாதானஞ் செய்வதிலும் இவை யொத்த இன்னும் பல காரியங்களிலும், அடிக்கடி வேந்தன் இளஞ்சேய்க் கொல்லியின் உதவியை வேண்டி நின்றான். இவனும் பல காவதங்களுக்கு அப்பாலுள்ள வேறு நாடுகளுக்கு அவ்வப்போது விரைந்து சென்று, அரசு முறையிற் சிக்கலான பல காரியங்களைச் செய்து முடித்தான். இவ்வாறு நகரத்தை விட்டு வெளியே சென்று வேலையில் ஆழ்ந்திருப்பதே அவனுடைய வழக்கமாயிற்று. எதற்கெனின், அரண்மனையில் அவன் இருக்கும்போதெல்லாம் வரம்பன் மனைவி அவனை நாடி வந்து நனியினிய மொழி பகர்ந்து, அவனைத் தன் வலையில் அகப்படுத்த முயன்றாள். அரசி விரும்பிய வகையில் தான் நடந்து கொள்ள முடியாதென்று எவ்வளவு தெளிவாய் அவன் காட்ட முயன்றானே அவ்வளவுக்கு அதிகமாய் அவள் அவனுக்குக் காதலூட்ட முயன்றாள். ஒரு நாள் அரசியுடன் அவன் தனியாயிருக்க நேர்ந்தபோது, அவள்

அவனை யணுகி, "உன்னை என்பா லிழுப்பதற்கு நான் எவ்வளவு முயன்றும், நீ சிறிதும் என்மேல் இரங்கவில்லை. என்னை ஒரு பொருளாக மதியாது, என் காதலையும் இகழ்கின்றாய். இதனால் வரும் பயனை நீ அறியாய்," என்று மிக வெகுண்டு உரை பகர்ந்தாள். இப் பேச்சைக் கேட்ட இளஞ்சேய்க் கொல்லி மிகவும் நாணி வெளியே வந்து, அவளுடைய தகாத நடக்கையை எண்ணி நெஞ்சு புண்ணாகி, மறுநாள் தான் நகரத்தினின்றும் புறப்பட்டு நெடுந்தூரஞ் சென்று போர் செய்யப் போவதை உன்னி ஒருவாறு மனத்தைத் ஆற்றிக்கொண்டான். தான் செய்யப் போகும் போர் முடிவதற்குக் குறைந்தது நாலைந்து திங்களாகுமாதலால், அதுவரையில் அரசியின் சூழ்ச்சிகளிலிருந்து விடுதலை பெற்றிருக்கலாமென்று அவன் மகிழ்ந்தான்.

மறுநாளே அவன் போர்முனைக்குப் புறப்பட்டுச் சென்றான். தனது கூரிய அறிவினாற்றலாலும், ஆண்மையினாலும் இளஞ்சேய்க் கொல்லி எளிதில் தன் எதிரிகளை முதுகுகாட்டி யோடச்செய்து, சின்னாளில் மீண்டுந் தலைநகரந் திரும்பினான். வெற்றியுடன் திரும்பிய வீரமகனின் வரவு கேட்டு, நகரத்து மக்களெல்லாரும் ஒன்று திரண்டு வெளிக் கிளம்பி, அதிக ஆர்ப்பரிப்புடனும் அலங்காரத்துடனும் அவனை நகரத்திற்கு அழைத்து வந்தார்கள். அரசனும் எதிர்கொண்டு சென்று, அன்பு ததும்புகின்ற உளத்துடன் இளஞ்சேய்க் கொல்லியை மார்போடு அணைத்து வாழ்த்தி, யாவரும் அறிய அவனைத் தன் மகனென்றுந் தனக்குப் பின் அரசு செய்ய உரிமையுடையவனென்றுங் கொண்டாடினான். இங்ஙனம் மன்னனருகில் வர, நகர மக்கள் புடைசூழ, இளஞ்சேய்க்கொல்லி நகரத்துட் புகுந்து, அரண்மனையை அணுகினான். அப்பொழுது

அவன் வேந்தனை நோக்கி, "மன்னர் பெரும, தங்கள் தேவியுந் தங்களைப் போன்றே, உடல் நலமும், உளவமைதியும் பெற்று வாழ்கின்றனரோ," என வினவினன். இதற்கு விடை கூறப் புகுந்த மன்னன், அரசியைப்போல் சுகத்தை அனுபவிப்பவர் எவருமில்லை என்றும், கவலை என்பது அரசியின் மனத்திற் புகுவதில்லை என்றும், இளஞ்சேய்க் கொல்லியுந் தானும் அரசியைப்போல் வருத்தமின்றி நாட் கழித்தால் நன்றாயிருக்குமென்றும் மொழிந்தான்.

## ரு. அரசி பொய்யுரையும் வேந்தன் வெகுளியும்

இளஞ்சேய்க் கொல்லியும் தானும் இன்னலின்றி வாழ்க்கை நடத்தவேண்டுமென்று வேந்தன் கொண்ட விருப்பம், அவன் எதிர்பாராத வகையில் வீணாய்ப் போயிற்று. வேற்று நாட்டிலிருந்து திரும்பிவந்த இளஞ் சேய்க் கொல்லி, அமைதியுடன் இளைப்பாறி இன்பத்துடன் வாழ்க்கை நடத்தவேண்டியதிருக்க, அவன் அரசியின் அடங்காத கோபத்திற்கு இலக்காகி, மிகவும் இன்னலுற் றுத் தவிக்கவேண்டியதாயிற்று. பற்றி எரிகின்ற சினத்தை உள்ளடக்கி வைத்திருந்த கோமகள், தன்மீது இளஞ்சேய்க் கொல்லிக்குக் காதலுண்டாகும்படி இறுதியாக ஒரு பெரு முயற்சி செய்யத் துணிந்தாள். அங்ஙனமே அவள் சென்று அவன் தன் எண்ணத்திற்கு இசையுமாறு எவ்வளவோ தூண்டிப் பார்த்தும் அவன் இணங்காதவனாய் நிற்க, அணை கடந்த வெள்ளம்போற் பொங்கி யெழுகின்ற வெகுளி யுடன் வெளியே வந்து, எந்த வகையில் அவன்மீது ஒரு பெரும் குற்றஞ் சுமத்திப் பழி வாங்கலாமென்று வகை தேடினாள்.

இளந்தென்றல் வீசு மொரு மாலைப்பொழுதில் அவள் வேந்தனிடம் வந்து, இளஞ்சேய்க் கொல்லி மிகக் கொடிய

பாதகனென்றும், படிற்றொழுக்கத்தால் வேந்தனுக்கு நண்பனாய் நடிப்பவனென்றும், தனது கற்பை யழிக்க அவன் வழிபார்த்தானென்றும், இத்தகைய இழிதகைமை யுடையவனை வேந்தன் நண்பனாக வைத்திருப்பது அடாத தென்றும் கோபித்துக் கூறினாள். அவள் சொன்னதில் அணுவளவும் உண்மையில்லையெனினும், இளஞ்சேய்க் கொல்லியின்மீது அவள் கோபங்கொள்வதற்குக் காரண முண்டென்பதை அறியாத வேந்தன், அவளுடைய அழு கையையஞ் சினத்தையுங் கண்டு மயங்கி, அவள் கூறிய தெல்லாம் வாய்மை என எளிதில் நம்பினான்.

இவ்வாறு கூறிய அரசி தன்னைவிட்டுப் போனபின் இளஞ்சேய்க் கொல்லியின்மேல் அவள் சாட்டிய குற்றத் தைப்பற்றி மன்னன் நினைக்கத்தொடங்கி என்ன செய்வ தென்று அறியாத நிலைமையிலிருந்தான். அவனுக்குக் கூரிய அறிவும், ஐயங்கொண்டு ஆராயப் புகுந்து தெளி வடையுந் தன்மையு மிருந்திருக்குமாயின், அரசி கூறியதன் உண்மையை அறிவதற்கு வேண்டிய வழிகளை அவன் தேடியிருப்பான். அத்தன்மை அவனுக்கு இல்லையாதலின், உண்மை இன்னதென்றறிய யாதொரு முயற்சியும் அவன் எடுத்துக்கொள்ளவில்லை. இராணி பொய் சொல்லக்கூடி யவ ளென்பதையும் மன்னன் மறந்தான். எப்படி இளஞ் சேய்க் கொல்லியைத் தண்டிப்பது என்ற நினைவு அரசனை மிகவும் வருத்திற்று. தனது நாட்டைவிட்டு இளஞ்சேய்க் கொல்லியை அப்புறப்படுத்தினால், அவன் உதவியின்றித் தானென்ன செய்யக்கூடுமென்ற திகைப்பு மன்னனுக்குண் டாயிற்று. எங்ஙனமாயினும், இளஞ்சேய்க் கொல்லியின் முகத்தில் தான் விழிப்பதில்லை என்றும், சிறுமலை நாட்டி னெல்லைக்குள் அவனைக் கொலை செய்வதில்லை என்றும் அரசன் உறுதி செய்துகொண்டான். ஆனால், தனக்குப்

பேருதவிசெய்த இளஞ்சேய்க் கொல்லியின்மேல் எங்ஙனந் தண்டனை விதிப்பது? அவனை எங்கு அனுப்புவது? என்ற கேள்விகளுக்கொரு விடைதேடி, மன்னன் கடைசியி லொரு முடிவிற்கு வந்தான். தன் மனைவியின் தாய் நாடாகிய ஈழநாட்டில் அவள் தந்தையாகிய ஒப்பிலான் அரசுபுரிந்து வந்தான். இளஞ்சேய்க் கொல்லி செய்த பெரிய பாவத்திற்காக அவன் அந்த ஒப்பிலான் நாட்டிற் சென்று மாள்வதே தகுதி என்று வேந்தனுக்குத் தோன் றிற்று. சிறுமலை நாட்டின் துறைமுகத்தி லொரு நாவாய் அன்று வந்து தங்கிற்று. காலையில் வரம்பன் அக் கப்பலுக் குச் சென்று, மாலுமிகளின் தலைவனைப் பார்த்து, கப்ப லோட்டிகளுக்குத் தான் கொடுக்கவேண்டிய பணத்தை யும் அதற்குமேல் நடக்கவேண்டியவற்றைப்பற்றிய தனது உத்தரவையும், ஓர் ஆள்மூலமாக அனுப்புவதாகச் சொல்லி யிருந்தான். இச்செய்திகள் தனது நினைவிற்கு வர, துறைமுகத்திலுள்ள கப்பலிலேயே இளஞ்சேய்க் கொல் லியை ஏற்றி, ஈழத்திற்போய் அவன் சாகும்படி யனுப்பு வது நன்றென்று அரசன் நிச்சயித்துப் பின்வருமாறு எழுதலானான் :—

“என் மகனென்று நான் பன்முறை பாராட்டிய இளஞ்சேய்க் கொல்லிக்கு எழுதுவது :

“பொழுது விடிவதற்குமுன் நீ ஈழநாட்டிற்குப் புறப் படவேண்டும். இத்துடன் அனுப்பும் மோதிரத்தையும், இரண்டு பைகள் நிறையக் கட்டியிருக்கும் பொன்னையும், நமது துறைமுகத்திலிருந்து இன்று புறப்பட விருக்குங் கப்பலின் தலைவனிடம் நீ கொண்டுபோய்க் கொடுக்கவேண் டும். நீயுங் கப்பலிலேறி ஈழத்துக்குச் சென்று, அந்நாட் டிற் செங்கோல் செலுத்தும் ஒப்பிலானைக் கண்டு, இக் கடி

தத்துடன் அனுப்புஞ் சித்திரப் பெட்டியை அவரிடங் கொடுக்கவேண்டும். இஃதன்றி, இப்பெட்டியைத் திறக்கக்கூடிய சாவிகளிரண்டில், ஒன்று அவரிடமும், மற்றொன்று என்னிடமு மிருக்கிறதென்பதை நீ அவருக்கு நினைவூட்டுவாயாக. பெட்டிக்குள் மிக முக்கியமான கடிதமொன்றிருக்கிறது.

"இளஞ்சேய்க் கொல்லி, நீ போய் வருக. புறப்படுமுன் நீ என்னை வந்து பார்த்து வழியனுப்பிக் கொள்ளவேண்டிய அவசியமில்லை. இதற்குப்பின் ஒருவரையொருவர் நாம் காண்போமென்று எனக்குத் தோன்றவில்லை. உலகில் நீ உயிருடனிருக்கும், நாள் கொஞ்சமா யிருக்கலாம். என்ன நேரிட்டாலும், நீ ஊழைப் பகைத்து அறிவற்ற தன்மையில் நடந்துகொள்ளமாட்டாயென்றும், உன்னை நேசித்து உனக்காகக் கவலைப்பட்ட என்மீது பகைமை பாராட்டமாட்டாயென்றும் நம்புகிறேன். போய்வருவாயாக.

வரம்பன்"

இஃதுடன் அரசன் மற்றொரு கடிதமு மெழுதி, அதை முன் குறித்த சித்திரப் பெட்டியுள் வைத்துப் பூட்டி, நம்பத்தகுந்த ஒருவனிடங் கடிதத்தையுஞ் சித்திரப் பெட்டியையும் மோதிரத்தையும் இரண்டு பை நிறைந்த பொன்னையுங் கொடுத்து, இவற்றை இளஞ்சேய்க் கொல்லிபால் உடனே சேர்க்குமாறு கட்டளையிட்டான். இக்கட்டளையைப் பெற்றவன் தூங்காது விழித்திருந்த இளஞ்சேய்க் கொல்லியிடம் விரைந்து சென்று வேந்தனிடமிருந்து தான் பெற்றுக்கொண்டவற்றை அவனிடங் கொடுத்தான். மன்னன் விடுத்த கடிதத்தைப் படித்துப் பார்த்த இளஞ்சேய்க் கொல்லி, அதன் பொருளின்னதென்று அறியாமல் மயங்கி நின்று, இரண்டு மூன்று முறை திரும்பத் திரும்ப வாசித்தான். அதன்பின் அவனுக்குச் சிறிது தெளிவு பிறந்தது.

எங்ஙனமாகவோ அரசனுக்குத் தன்மீது எரிவு தோன்றிய தால் இக் கடிதம் எழுதப்பட் டிருக்கவேண்டுமென்று அவ னுக்கு நன்கு தெரிந்தது. அரசனுடைய மனைவி, தன்மீது பொல்லாத பொய்க் கதைகளைக் கூறியதன் காரணமாக இக்கடிதம் வரையப்பட்டதென்பதை அவன் அறியவில்லை. ஆதலின், தன்னை மகனென்று கொண்டாடிக் களித்த வேந்தன் திடீரென்று தன்னை நாட்டைவிட் டேகும்படி ஏவியது யாதுபற்றி என்று அவன் தன்னைத்தானே கேட் டுக் கொண்டான். குற்றமொன்றும் அறியாத தன்னை இவ்வாறு நடத்துவது நெறியற்ற செய்கையாகுமென்று நேரே அவனிடஞ் சென்று விளக்கிக் காட்டவேண்டு மென்று முதலில் இளஞ்சேய்க்கொல்லி கருதினன். இச் செய்தியைப்பற்றி அமைதியாய்ச் சற்று ஆலோசித்தபின், இதுவுந் தனது நன்மைக்கென்றே நடந்திருக்கவேண்டு மென்று அவனுக்குத் தோன்றிற்று. தான் அறியாத ஓர் ஆபத்தினின்றும் தன்னைத் தப்புவிக்கும் பொருட்டு ஒரு வேளை மன்னன் இத்தகைய கடிதத்தைத் தனக்கு வரைந் திருக்கலாம். அங்ஙனமாயின், கடிதத்தில் தனக்கிட்ட கட்டளையை நிறைவேற்றுவதே நலமாகும். அவ்வாறின்றி, தன்மீது பிறந்த வெறுப்பின் காரணமாக வேந்தன் இவ் வாறு செய்திருப்பானாயின், அவன் முன் சென்று வழக் காடுவதாற் பிறக்கக்கூடிய பயனொன்றுமில்லை. தனது குற்றமின்மையை யாவரும் அறிய எடுத்துக் காட்டுதற்கு இப்பொழுது முடியாவிட்டாலும், எப்பொழுதாயினும் ஒரு நாள் உண்மை வெளிப்படுதல் உறுதி என்று கருதி வேந் தன் கட்டளையை நிறைவேற்றத் தீர்மானஞ் செய்த இளஞ் சேய்க் கொல்லி உடனே கடற்கரைக்குப் புறப்பட்டான்.

துறைமுகத்திலுள்ள கப்பலை நண்ணி, வேந்தன் கொடுத்த பொன்னையும் மோதிரத்தையும் மாலுமிகளின்

தலைவனுக்கு அளித்துவிட்டு, அமைதியாகக் கப்பலின் ஒரு புறத்தில் இளஞ்சேய்க் கொல்லி அமர்ந்தான். சிறிது பொழுதிற் கப்பல் புறப்பட்டுப் பாய்மரங்களில் வந்து மோதிய காற்றால் தள்ளுண்டு, விரிகடலிற் பாய்ந்தோடிற்று. சிறுமலை நாட்டின் தலைநகரத்தில் வேந்தனொருவனே இளஞ்சேய்க் கொல்லிக்குப் பகைஞனானான். சிறுமலை நாட்டிற்குத் தான் தனியனாய் வந்து சேர்ந்ததையும், வரம்பன் தனக்குச் செய்த நன்றியையும், அவனோடு பலநாள் தான் இனிது வாழ்ந்ததையும் நினைந்து இளஞ்சேய்க் கொல்லி இரங்கினான்.

## ௬. அரசியின் முடிவு

சிறுமலைநாட்டுவேந்தன், தனக்கினிய நண்பனைப் பலநாளிருந்து அரிய ஊழியங்கள் செய்த கோமகனை வேறொரு நாட்டிற்கு அனுப்பிவிட நேர்ந்ததைச் சில வேளைகளில் நினைந்து மிகவும் வருத்தமுற்றான். இளஞ்சேய்க் கொல்லியைப்போல் உண்மையாய் உழைப்பவனும் நம்பிக்கை வைக்கத் தகுந்தவனுமான தோழன் எவனும் அகப்படானென்பது நாள் செல்லச் செல்ல, வேந்தனுக்கு மிகத் தெளிவாய் விளங்கிற்று. அரசனது நிலை இவ்வாறாக, அரசி எவ்வாறு இருந்தாள் என்று பார்ப்போம். உண்மையாகவே இளஞ்சேய்க் கொல்லி பெரிய குற்றத்திற்காளானான் என்று அரசன் நம்பியதால், அவன் அதிகமாய் வருந்தவில்லை. அரசி அவ்விதந் தன் மனத்தை ஆற்றிக்கொள்ள இடமில்லை. ஒரு குற்றமும் அறியாத இளஞ்சேய்க் கொல்லியின்மீது, பெரும்பழிசுமத்தி, அவன் கடல் கடந்து சென்று, வேறு நாடடைந்து, தூரதேசத்திற் போய்த் துன்பமுற வைத்ததை எண்ணுந்தோறும் ஊசியிறங்குவதுபோல் ஓர் உணர்ச்சி அவளுள்ளத்திற்றோன்

றிற்று. உயிரை வைத்துக்கொண்டிருப்பதே அவளுக்குத் தாங்க முடியாச் சுமையாயிற்று. இளஞ்சேய்க்கொல்லி சிறுமலை நாட்டை விட்டுச் சென்ற சின்னாட் கழித்து அரசி யொருநாள் அரண்மனையிலிருந்து திடீரென்று காணமற் போனாள். அவளுடைய சேடியரும் பிறரும், அவள் சின்னாளாய் ஏக்கத்திலாழ்ந்து ஒருவருடனும் உரையாடாது நடந்து திரிந்த தோட்டங்களிலும் வேறிடங்களிலும் எங்கணுந் தேடிப் பார்த்தனர். ஆனால் இம்முறை அவள் தோட்டத்தையும் அரண்மனையையுங் கடந்து அப்பாற் சென்றனள். ஓரிடத்திலிருந்தமுட் செடியில், அரசி அணிந்திருந்த பட்டாடையிலுள்ள சில நூல்கள் தொங்குவது கொண்டு, அச் செடியைக் கடந்து கோமகள் வெளியே போயிருக்க வேண்டுமென்று எளிதில் எவருங் காணக் கிடந்ததாயினும், அவ்விடத்தை விட்டு அவள் யாண்டுச் சென்றாளென்பது விளங்கவில்லை. அரசனால் அனுப்பப் பட்ட மனிதர் நாடெங்குஞ் சென்று அரசியைப்பற்றிய செய்தி யாதாயினுங் கிடைக்குமாவென்று பார்த்தார்கள். எங்ஙனம் அரசி மறைந்து போனாளென்று ஒருவராலுஞ் சொல்லக் கூடவில்லை. தங்களரசி இனித் திரும்பி வாரா ளென்று சிறுமலை நாட்டு மக்கள் உணர்ந்தனர். அவர்கள் இதற்காக வருந்தவில்லை: அவளை இழந்துவிட்டதற்காக அரசனுந் தாங்கொணாத் துயரில் ஆழ்ந்துபோகவில்லை.

வரம்பன் மனைவி எங்ஙனம் மறைந்தாளென்ற செய்தி, அந்நாட்டிலுள்ள மக்களில் இருவர்க்கேயன்றி வேறெவர்க் குந் தெரியாது. இவர்கள் யாரெனில், ஒரு வலைஞனும் அவன் மனைவியுமே. அரசி மறைந்துபோன மறுநாள் வலை ஞன் தன் மனைவியிடம் வந்து, தான் கண்ட ஒரு செய்தி யைக் கூறத் தொடங்கினான்:—

"மனைவியே, நேற்றிரவு யான்கண்டகாட்சி யொன்றை உனக்குச் சொல்லுகிறேன். நேற்றிரவு நான் கடலிற் சென்று வலை வீசிப் பிடித்த மீனைச் சுமந்துகொண்டு நமது தலைநகருக்குக் கடலோரமாகவே நடந்து சென்றேன். நமது ஊரை அடுத்திருக்கும் குன்றின் சாரலிலுள்ள காட்டிற் பாதிதூரங் கடந்து நான் போகையில் வியக்கத் தகுந்த ஒரு நிகழ்ச்சியைக் கண்டேன். குன்றின் செங்குத்தான பாகத்தில் நின்றுகொண்டு கீழே இருக்கின்ற கடலை உற்று நோக்கிய ஓர் உருவம் எனக்குத் தெரிந்தது. அப்பொழுது இருட்டா யிருந்தாலும் அவ்வுருவம் ஒரு பெண்ணாய்த் தான் இருக்க வேண்டுமென்று எனக்குத் தோன்றிற்று. ஆயினும், அப்பெண் தனது நிலைமையை நினைந்து, வருந்தி வாய்விட்டுப் புலம்பாதிருந்தால், அது யாரென்று நான் அறிந்துகொள்ள முடியாது போயிருக்கும். அவ்வுருவம் புலம்பிய புலம்பலிலிருந்து அது நம் வேந்தன் மனைவி யாய்த்தா னிருக்கவேண்டுமென்று நன்று யறிந்துகொண்டேன். மக்களாய்ப் பிறந்தவரில் தன்னைப்போல் அல்லற் பட்டவர் எவரு மில்லையென்றும், ஒரு பாவமுமறியாத ஒருவனுக்குத் தானிழைத்த பெருந் தீங்கினால் தனக்கு மதிமயக்க முண்டாயிற்றென்றும், அரசி சொல்வது என் காதில் விழுந்தது. தூக்குப் போட்டுக்கொள்ளும் பொருட்டு, அரசி தன் அரையிலிருந்த கச்சையை அவிழ்த்து, அதை ஒரு மரத்திற் கட்டித் தொங்கவிட்டிருப்பதை நான் பார்த்தேன். அவள் செய்ய நினைந்த செயலை நான் விரைந்து சென்று தடுப்பதற்குமுன் இராணியின் முடிவு வேறொரு வகையில் நிகழ்ந்துவிட்டது. மனத்தைத் துடிக்கச் செய்யுமொரு பெருங் கூச்சலுடன் அரசன் மனைவி சரேலென்று கீழே கடலிற் குதித்தாள். இதைக் கண்டு நான் அயர்ந்து நின்றுவிட்டேன். வேந்தன்

மனைவிக்கு இத்தகைய பயங்கர முடிவு வரவேண்டிய காரணமென்னவென்று எனக்கு விளங்கவில்லை.

"இதன்பின், என்ன செய்வதென்று நான் யோசிக்கலானேன். ஒரு வழியுமெனக்குத் தோன்றவில்லை. உன்னுடைய யோசனை என்ன? இதோ பார், மரத்திலிருந்து தொங்கிய கச்சையை நான் கையோடு கொண்டுவந்திருக்கிறேன். இதை மன்னனிடங் கொண்டுபோய்க் கொடுத்து, நான் கண்டவற்றை எல்லாம் அவனிடம் எடுத்துரைக்கச் சொல்லுகிறாயா? அல்லது, ஒன்றும் பேசாது இக் கச்சையை யாருக்காயினும் விற்றுப் பணமாக்கிக் கொள்ளலாமா? என்ன செய்யச் சொல்லுகிறாய்?" என்று செம்படவன் கேட்டான்.

"வேண்டாம், வேண்டாம். அரசனிடம் இதைக் கொண்டு போகவும் வேண்டாம்; இதை விற்கவும் வேண்டாம். சொல்லொணாத் துன்பத்தில் மூழ்கியிருந்த அரசியின் கச்சையை விற்றுக் கொஞ்சம் பணந்தேடிக் கொள்வதால், நமக்குத் தீமை வந்து நேருமேயன்றி நன்மை வாராது. இன்ன வகையில் அரசி இறந்தாளென்று வேந்தனுக்கு உரைப்பதால் பிரயோசனமொன்றும் இல்லை. குன்றில் நின்றுகொண்டிருந்த அரசியைக் கடலில் விழாதபடி தடுக்காமற் போனது உன் குற்றமாகுமென்று அரசன் உன்னைத் தண்டித்தாலுந் தண்டிக்கலாம். ஆதலின், நீ படகிலேறிக் கடலிற் சென்று ஒரு கல்லைக்கட்டி இந்தக் கச்சையை ஆழத்திலெறிந்துவிடு. அரசி மாண்ட விதத்தைக்குறித்து நீயும் நானும் இனி ஒரு வார்த்தையும் பேசலாகாது," என்று அவன் மனைவி பதிலிறுத்தாள்.

மக்களுக்குப் பல நலத்தைச் செய்வாளென்று யாவரும் எதிர்பார்க்கக்கூடிய அழகிய இளம்பெண்ணாய், ஈழ

நாட்டிலிருந்து பல ஆண்டுகளுக்கு முன் சிறுமலை நாட்டிற்கு வந்த வரம்பன் மனைவியின் தற்கொலை மேற்குறித்த செம்படவர்க்கன்றி வேறெவர்க்கும் வெளியாகவில்லை. இது நிற்க, அரசியால் நீங்கிழைக்கப்பெற்ற இளங்கோமகனுக்கு ஈழநாட்டில் யாது நேர்ந்ததென்று பார்ப்போம்.

# உ. ஈழ நாடு

## க. ஒப்பிலான் வரவேற்பும் பூங்கோதை எச்சரிக்கையும்

ஈழத்தில் வந்திறங்கிய இளஞ்சேய்க் கொல்லி தனக்கு யாது நேர்ந்தாலும் கொஞ்சமும் அஞ்சாது நடந்து கொள்ளத் தீர்மானித்தான். தனது விதி எப்படியிருப் பினும் தனக்குத் துணை நிற்க ஒருவருமில்லாவிட்டாலும், யார் தன்னை எதிர்த்தாலுங் கவலைகொள்ளாது ஆண்மை யுடன் வாழ்க்கை நடாத்த வேண்டுமென்ற ஓர் உறுதி அவன் மனத்திற் பிறந்தது. முதன்முதல் அவன் நிறை வேற்ற வேண்டிய கடமை, ஈழத்திற் கரசனாகிய ஒப்பிலா னைக்கண்டு வரம்பனளித்த சித்திரப் பெட்டியைக்கொடுக்க வேண்டுவதே. இதைச் செய்வதற்கு இடையூறொன்று மில்லை. உலகத்தின் பல பகுதிகளில் நடக்கும் நிகழ்ச்சி களைப்பற்றிச் செய்தி கொணர்வோருக்கு ஈழத்தரசன் சமுகத்தை அடைவது எளிதாயிருந்தது. ஆதலின், தன்னோடு வந்த மாலுமிகளுடன் சேர்ந்து இளஞ்சேய்க் கொல்லி ஒப்பிலானைக் காணச் சென்றான். இம் மாலுமி கள் ஈழத்திற்குப் புதிதாய் வந்தவரல்லர். இதற்குமுன் பன்முறை அவர்கள் ஒப்பிலானைக் கண்டுபோனதுண் டாதலின், அரசன் அவர்களை நன்மொழி கூறி விசாரித் தான். அவர்களுடன் சேர்ந்து வந்த இளஞ்சேய்க்கொல்லி யைப் பார்த்தவுடன், அவன் சிறுமலை நாட்டு வேந்தனுக்கு வலக்கையா யிருந்து, அரிய செயல்கள் பல இயற்றிய திருவுறை நகரத்துக் கோமகனா யிருக்கவேண்டுமென்று ஒப்பிலான் உடனே அறிந்துகொண்டான். இளஞ்சேய்க் கொல்லியின் உடையும் நடையும் ஒழுக்கமும் அவனை

உயர்ந்தவனென்று காட்டின. அன்றியும், திருவுறை நகரத்திலிருந்து சிறுமலை நாட்டிற்கு வந்து, வியத்தற்குரிய செய்திகள் பல நிகழ்த்திப் பெயர்பெற்று விளங்கிய இளங் கோவின் உருவத்தையும் உரத்தையும்பற்றி ஒப்பிலான் கேள்விப்பட்டிருந்தான்.

அரசன் கேட்ட கேள்விகளுக்கு இளஞ்சேய்க்கொல்லி பணிவுடன் விடையிறுத்து, சிறுமலை நாட்டில் தான் செய் தவையெல்லாம், துன்பத்தில் தனக்குத் துணையாய் நின்ற வரம்பனது அன்பிற் கீடாகாவென மொழிந்தான். இதன் பின், அவன் சித்திரப்பெட்டியை ஒப்பிலானிடங் கொடுத்து, வரம்பன் கூறியவற்றையுந் தெரிவித்து, "வேந்தே, யான் இவ்விடம் விட்டு வேறு நாடு சென்று யுத்தஞ்செய்து வெற்றிபெற்றுப் புகழடைய விரும்புகின் றேன்; என்னுடைய நண்பன் வரம்பனுக்கு, நான் எவ்வகையிலோ பகைவனாகி விட்டேனென்று எனக்குத் தோன்றுகிறது. அஃதுண்மையாயின், யானும்மைச் சார்ந்திருப்பது வரம்பனுக்கும் உமக்கும் பகையை விளைக்குமென்று அஞ்சுகின்றேன். விடை தருக," என் றியம்பினான். இளஞ்சேய்க்கொல்லி சொன்னதற்கு ஒப்பி லான் உடன்படவில்லை.

"உன்னைப்போல் உண்மை பேசுமொரு கோமகன் நெறிதவறி நடக்கக்கூடியவனென்று நினைக்க என் மனம் நாணுகின்றது. நீயும் நானும் அன்பராயிருத்தல் கூடா தென்பதற்குத் தகுந்த சான்று தோன்றுமளவும் ஈண்டு என்னுடன் நீ வாழ்ந்திடுக," என்று ஈழக்கோன் இனிது மொழிந்தான். வரம்பன் முன் செய்ததுபோன்றே ஒப்பி லானுந் திருவுறை நகரத்துத் தோன்றலை அரண்மனையில் தன்னுடன் வைத்துக்கொள்ள விரும்பினான். சிறுமலை

நாட்டில் நிகழ்ந்ததுபோலவே ஈண்டுமிறுதியில் தனக்குத் தீது விளையுமோ வென்று எண்ணிய இளஞ்சேய்க்கொல்லி, வேந்தன் விருப்பத்திற் கிணங்கப் பின்வாங்கினுனயினும் கடைசியில் உடன்பட்டான். ஈழவேந்தன் நகரத்தை யலங்கரித்து, விருந்துகள் செய்து விளையாட்டுக்கள் நடத்திப் பல்வேறு துறைகளில் இளஞ்சேய்க் கொல்லியின் மேல் தனக்குள்ள மதிப்பை வெளியிட்டான்.

ஒன்பது நாட்கள் இங்ஙனங் கழிந்தன. கழிந்தபின் வரம்பன் தனக்கனுப்பிய சித்திரப் பெட்டியின் நினைவு ஒப்பிலானுக்கு வந்தது. வரவே, பெட்டியை உடனே திறந்து பார்த்தான். அதற்குள் தான் கண்டதை ஒப்பிலான் எவருக்குஞ் சொல்லவில்லையாயினும், அப்பெட்டிக்குள், தன்மீது குற்றஞ் சுமத்துமொரு பத்திர மிருந்ததென்பது இளஞ்சேய்க் கொல்லிக்குத் தெற்றெனத் தெரிந்தது. எற்றுலெனின், பெட்டியினுள்ளதைத் திறந்து பார்த்து முடித்த வேந்தன், இளஞ்சேய்க் கொல்லியைத் தனியே யழைத்து, மிக்க கலக்கமுடையவனுய், "உயிருக்கு ஊறின்றி நீ இருக்க வேண்டின், வேறு நாடு செல்க," என்றனன். இவ்வுரை பகர்ந்தபின் ஒப்பிலான் வேறென்றுங் கூறுது வெளியே சென்முன். தனியே நின்ற இளஞ்சேய்க் கொல்லி, "என் விதி யிருந்தவா றென்னே!" என்று ஏங்கினுன். இவ் வேளையில் யாரோ ஒருவர் அடி எடுத்து நடந்துவருமோசை செவியிற்பட, ஏங்கிநின்ற இளமகன் பின் திரும்பிப் பார்த்தான். நடந்து வந்த உருவம் எழில் மிகுந்த ஒரு நங்கையாய்த் தோன்றிற்று. சிறுமலை நாட்டு மன்னனுடைய மனைவியை மிகவுமொத்திருந்த இம் மங்கையின் உருவத்தைக் கண்டு இளஞ்சேய்க் கொல்லி மெய்ம்மறந்து நின்முன். ஆனல் இம் மங்கையின் பார்வை வரம்பன் மனைவியின் நோக்கைப்போற் கொடி

யதா யிருக்கவில்லை. ஒப்பிலானின் மக்க ளிருவரில் இளை யவளாகிய இவள், தன்னுடைய முற்பிறந்தாளாகிய வரம்பன் மனைவியை முகச் சாயலினும் அமைப்பினும் ஒத்திருந்தாளாயினும் வேறு வகையில் இவள் தன் தமக்கையை யொத்திருக்கவில்லை. இளையவளுக்கிருந்த அன்பும் இனிமையும் மூத்தவளுக்கில்லை. படிற்றொழுக்கத்தாலுங் கன்மனத்தாலும் மூத்தோள் எல்லோராலும் எவ்வளவு வெறுக்கப்பட்டாளோ, அவ்வளவு செவ்விய மனத்தாலுங் குளிர்ந்த அன்பாலும் இளையோள் எல்லோராலும் விரும்பப்பட்டாள்.

பிழை யொன்றுஞ் செய்யாதிருக்கவும், பிறர் செய்த சூழ்ச்சிகளாற் பெருந் துன்பத்திற்காளாகிய திருவுறை நகரத்தரச குமாரனை ஒப்பிலானின் இளைய மகள் கூசியுள்ளொடுக்குங் கண்களுடன் பார்த்து, அவனிடம் பேசுவதற்கு மிகவும் வெட்கி, "நீ இன்னும் இங்கிருப்பையாயின் உன்னுயிருக்குத் தீங்கு விளைவது திண்ண மென்றறிந்து உனக்கு எச்சரிக்கை செய்ய வந்தேன்," என்று தடுமாற்றத்துடன் குழைந்து மொழிய, அவளுரை கேட்டுச் சொல்லொணு வியபபெய்தி நின்ற இளஞ்சேய்க் கொல்லி, "என்னுயிர்க்குத் தீங்கு நேரிடுமென்று எவ்வாறு துணிந்தனை?" என வினவினன்.

"யானொரு கனவு கண்டேன்," என்று அவள் பதிலிறுக்கத் தொடங்கி, "கொடிய கடுவுடைய நாகங்கள் நிறைந்த ஓரிடத்தில், நான் அவற்றிடையே நடந்து போவதுபோல் எனக்குத் தோன்றிற்று. இப் பாம்புகள் என்மீது சீற்றங்கொள்ளாது, என்னுடன் கேண்மையுடையனபோல் ஒழுகினவாதலால், அவற்றாலெனக்கொரு தீங்கும் விளையா தென்பதை அறிந்தேன். இந்நிலையில்

யானிருக்கையில். நீ எனக்கு நேரே நடந்து வருவதை நான் பார்த்து, நச்சரவங்களாற் கடியுண்டு நீ மாள்வா யென்று பெரிதும் நடுங்கினேன். என்னை நீ அணுகி வராது திரும்பிப் போய்விட வேண்டுமென்று உனக்குச் சொல்ல நான் எவ்வளவோ முயன்றும் பயன்படவில்லை. என்னை நீ நெருங்கி வருகையில், என்னைச் சூழ நின்ற கட்செவிகளி லொன்று படமெடுத்து நின்று உன்னைக் கடித்துவிட்டது. நீ நஞ்சேறி விழுந்திறந்தாய். இஃதுடன், கனவின் முற் பகுதி முற்றிற்று. இதற்குப்பின் வந்த மற்றொரு சொப் பனத்தில், 'இளஞ்சேய்க் கொல்லி இறந்தான்; இளஞ் சேய்க்கொல்லி இறந்தான்' என்றொரு குரலெழுந்தது," என்று முடித்தாள்.

அவள் சொன்ன கனவிற் பிறந்த குரலைக் குறித்து இளஞ்சேய்க்கொல்லி சிந்தித்துக்கொண் டிருக்கையில் அரசன் மகள் அவ்விடம் விட்டு மறைந்தாள். சிந்தையி லாழ்ந்து நின்ற செம்மல், தனக்குத் தீங்கு வருமென்று வேந்தன் மகள் நவின்றதைப்பற்றி அணுவளவுங் கவற்சி கொள்ளாது, வேறொன்றின்மேற் கருத்தை யூன்றினான். "உயிர் தப்பிப் பிழைக்க வேண்டின், வேறிடஞ் செல்க; என்றெனக்குக் கூறும்படி இந்நங்கையைத் தூண்டியது யாது கொல்? என்பால் நன்றி பாராட்ட வேண்டியவரும் என்னை வெறுத்தொதுக்கினர். அங்ஙனமிருப்ப, என்னைக் குறித்து ஒன்று மறியா இவ்வரச குமாரி, எனது நலங் கருதிப் புகன்ற நன்மொழியை நினைக்குந்தோறும் என் மன மிரங்குகின்றது. மங்கை யிவள் கண்ணோட்ட மினிது, இனிது," என்று அவன் தனக்குள்ளே பேசிக்கொண் டான். அமர்ந்த மெல்லிய குரலுங் குளிர்ந்த பார்வையு முடைய இக்கோதை யுறையும் நாட்டைவிட் டகன்று, உயிரைக் காக்கும் பொருட்டு வேறொரு தேசத்துக்கு ஓடு

வது ஆண்மைக் கழகன்றென்று, வரம்பன் மனைவியின் காதல் வலைக்குத் தப்பிய குரிசில் எண்ணினான். என்றாலும், தன்மீது வெறுப்புற்ற ஒப்பிலானோடு இருக்க அவன் மனம் இசையவில்லை. ஆகலான், ஒப்பிலானின் பகைவர் மேற்சென்று போர் புரியவோ, அல்லது ஒப்பிலானின் பொருட்டு, வேற்றரசர்களிடந் தூதுபோய், அவர்களுக்குள்ள வேற்றுமைகளை முடிவு செய்யவோ கூடுமாயின், அங்ஙனஞ் செய்வது மற்றொரு நாட்டிற்கு ஓடிவிடுவதைக் காட்டிலும் நன்றாகுமென்று தேறி, வேந்தனவைக்கு விரைந்து சென்றான் இளஞ்சேய்க் கொல்லி. அவன் போகும்பொழுதே அவன் கொண்ட கருத்திற்குச் சார்பான செய்திகள் வேந்தனவையில் நிகழ்ந்தன.

## உ. இளஞ்சேய் வெற்றிபெற்று மீளல்

ஒப்பிலான் வீற்றிருந்த மண்டபத்திற் சில போர்வீரர்கள் தலையிறக்கத்துடன் உளமுடைந்தவர்களாய் நின்றார்கள். இவர்களிற் சிலர் சண்டை செய்து ஆயுதமிழந்தோடி வந்தவர்களாகவும், கிழிந்த குருதிக்கறை பட்ட உடையணிந்தவர்களாகவும் தோன்றினார்கள்; மற்றுஞ் சிலர் களைத்து வாடி, நேராய் நிமிர்ந்து நிற்பதற்குஞ் சத்தியில்லாதவர்களாய்த் தூண்களிற் சாய்ந்துகொண்டு நின்றனர். எதிரிகளால் தாக்குண்டு எதிர்த்துநிற்க வலியற்று, முதுகு காட்டி யோடிவந்த இவர்களின் தலைவனை ஒப்பிலான் பார்த்து, "சீர்குலைந்து நீங்கள் என்முன் வந்து நிற்குங் காரணமென்?" என்று கேட்ட கேள்விக்கு விடையாக, தாங்கள் போரில் எதிரிகளால் முறியடிக்கப்பட்டு வெட்கத்துடன் ஓடி வந்ததைத் தலைவன் விளக்கிக் கூறலானான். இதுகேட்ட ஒப்பிலானின் முகஞ் சிவந்தது. அவன் தனது சினத்தை வெளியிடுமுன் இளஞ்சேய்க் கொல்லி அங்கு

வந்து நின்றான். அரசன் அவனைக் கண்டு பெரிதும் வியப்பெய்தி, நாட்டை விட்டுத் தாமதமின்றி வெளியேறும்படி தான் அவனுக்கு மிகத் தெளிவாகக் கூறியும், சற்றேனுந் திகைப்பின்றி, அவன் தன் முன் வரக் காரணமென்னவென்று யோசித்தான். இங்ஙனம் ஒப்பிலான் வியப்படைந்தும், தனது ஆச்சரியத்தை வெளியே காட்டாது அடக்கிக்கொண்டு, இளஞ்சேய்க் கொல்லியை விளித்து, "நண்பா, நான் சொல்வதைக் கேள். அலங்கோலத்துடன் என்முன் நிற்கும் வீரம் வாய்ந்த படையாளரிவர்களை, மலைகளுக்கப்பால் வதியுமென்னுடைய குடிகளாகிய ஒரு முரட்டுக் கூட்டத்தாரை அடக்கும் பொருட்டு அனுப்பினேன். விவேகமற்றவர்களும் படைத் தேர்ச்சி மிகுதியு மில்லாதவர்களுமாகிய அந்த முரட்டு மக்களை என்னுடைய போர்வீரர்கள் எளிதில் நொடிப் பொழுதில் வென்றிருக்கலாம். ஆனால், நடந்ததென்? எனது சோற்றையுண்ட இவர்கள் உதையுண்டு இங்கு ஓடி வந்து நிற்பதை நோக்க என் மனம் கொதிக்கின்றது. இளஞ்சேய்க் கொல்லி! அரிய வீரச் செயல்கள் நிகழ்த்திப் பெரும்புகழ் பெறுமாறு வேறிடஞ் செல்வது உன் கருத்தென்பதை நீ வெளியிட்டாய். இந்த முரட்டு மக்களை வென்று அடக்குதற்பொருட்டு என் படைகளை நீ நடத்திச் செல்லவல்லையோ?" என்று கேட்டான்.

தனது நன்மையைக் கருதி வேந்தன் இம்மொழி கூறாது, தன்னை ஒழிக்க வேண்டுமென்ற பொல்லா நோக்கத்துடன் இங்ஙனம் பேசினனென்பது இளஞ்சேய்க் கொல்லிக்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெரிந்தும், ஈழநாட்டி லிருக்க வேண்டுமென்ற விருப்பம், பிறவெண்ணமொன்றையும் அவன் மனத்திற் புகவொட்டாது அகற்றியதால், சற்றேனும் மயக்கமின்றி, வேந்தன் கூறியதற்கு

அவன் உடனே யுடன்பட்டான். ஆயினும் அவன் ஈழத் தானை உற்று நோக்கி, "உனக் கடங்காதவர்மீது நான் படையெடுத்துச் செல்கின்றேன். இதில், நான் இதற்கு முன் கண்டிராத பெரிய மோசங்க ளிருக்குமென்று ஓர் உணர்ச்சி எனக் குண்டாகிறது. பகைவர்மேற் படை யெடுத்துச் செல்லும் நான் வெற்றியுடன் மீளவேண்டு மென்பது உனது வேட்கையாயின், என்பொருட்டு இறை வனை வேண்டிக்கொள்வது உன் கடமையாகும்," என்று விளம்ப, ஒப்பிலான் முகம் உடனே வேறுபட்டது. அவன் மிகவும் வருந்தி முயன்று தனது உள்ளத்தில் நிகழ்வதை மறைத்துக்கொண்டு, இளஞ்சேய்க்கொல்லி வெற்றிபெற்று வரவேண்டுமென்று தான் விரும்புவதாகவும், பகைவர்மீது செல்வதற்கு அவன் மயக்கமின்றி இணங்கியதற்காக நன்றி செலுத்துவதாகவுங் கூறினான்.

இது நடந்த இரண்டு நாட்களில் நகரத்தை விட்டுப் புறப்படுவதற் குடன்பட்ட இளஞ்சேய்க் கொல்லி, தன் னுடன் போருக்கு வருகிற வீரர்களை ஒன்றாகக் கூட்டிச் சில போர் முறைகளை அவர்களுக்குப் பயிற்றுவித்தான். தங்கள் தலைவனது அஞ்சா நெஞ்சை யறிந்து வீரர்களும் ஆண்மை மிகுந்தவரானார்கள். இரண்டாம்நாளிரவு, செயற் குரியவற்றை யெல்லாஞ் செய்து முடித்த இளஞ்சேய்க் கொல்லி தனியே ஓரிடத்தில் இளைப்பாறி யிருக்கையில், வெள்ளுடை யணிந்த பெண்ணொருத்தி தன்னிடம் நடந்து வருவதைப் பார்த்தான். இங்ஙனம் வந்த மங்கை கண மேனுந் தன் மனத்தை விட்டகலாத வேந்தன் மகளாகிய பூங்கோதைதானே வென்று அவன் எண்ணி உற்று நோக்கினான். வந்தவள் பூங்கோதை யல்லள். அரச குமாரியின் சேடியரில் ஒருத்தியாகிய இவள், உறையிற் பூட்டியிருந்த வாளொன்றை அவன் கையிற் கொடுத்து,

"யாரு முடனில்லாதபோது வாளை யுறையிலிருந் துருவ வேண்டும். இரண்டாவது, அங்ஙனம் செய்யத் தாமதிக்க லாகாது. இஃது எங்கள் தலைவி தங்களுக் கனுப்புஞ் செய்தி," என்று கூறி அகன்றாள். அவளுருவம் மறைந்த வுடன் இளஞ்சேய்க் கொல்லி விரைந்து தானுறையும் அறையுட் புக்கு வாளை உருவிப் பார்த்தான். உறைக்குள் மடித்துச் செருகி வைத்திருந்த ஒரு கடிதம் வெளியே விழுந்தது. அதை விரித்துப் பார்த்தபோது, அவனுக்கு விரோதமாய்ச் சூழ்ச்சிகள் பல செய்யப்படுவதால் அன்றிரவே நாட்டைவிட்டுப் போய்விடுதல் நலமென்றும், படைகளுடன் அவன் பகைவரை யெதிர்த்துச் சென்றால் உயிருடன் மீள்வது சந்தேகமென்றும் அரசகுமாரி தன் கைப்பட வரைந்திருப்பதை அவன் அறிந்தான்.

மற்றும் அக்கடிதத்திற் கண்டிருந்ததாவது, "யான் உனக்கனுப்பும் இக்கட்கத்தை இடையிற் கட்டிக்கொண்டு, இன்றிரவு துறைமுகத்திற்குச் சென்றிடில், அங்கே பந்தம் பிடித்தவரிருவரும் மாலுமியொருவனும் வந்துன்னைக் காண்பார்கள். அவர்கள் உன்னை யணுகி, 'வாளுருவப் பட்டதோ?' என்று வினவுவர். அப்பொழுது நீ, 'ஆம், காயமும் ஆறி விட்டது,' என்று விடையளித்தல் வேண்டும். இவ்வாறு செய்வதால் உன்னை அவர்கள் இன்னா ரென்றறிவார்கள். உன்னைப் பார்க்க வருகின்ற கப்ப லோட்டி மிகுதியும் நம்பத் தகுந்தவன். அவன் உன்னைத் தன் கப்பலி லேற்றிக்கொண்டு பொழுது விடியுமுன் இந் நாட்டைவிட்டு வெளியேறுவான். ஈண்டு, நானுனக்குச் சொல்லுமாறு நீ செய்ய வேண்டுமென்று உன்னை மிகவுங் கேட்டுக்கொள்கின்றேன். எதற்கெனின், யாதோ ஓர் எண்ணம்பற்றி உனதுயிருக்கு வருந் தீங்கையுங் கவனி யாமல் ஈழநாட்டிலிருக்க நீ முயல்கிறாய்," என்பதே.

ஈழநாட்டிலிருந்துகொண்டு, அதன் பகைவர்மீது படை எடுத்துச்சென்று, தான் சொன்னவண்ண மெல்லாவற்றையும் நிறைவேற்றவேண்டுமென்ற உறுதி இளஞ்சேய்க் கொல்லிக்கு இருந்தது. இங்ஙனமிருந்தும், பூங்கோதை விடுத்த ஓலை அவனுளத்தை இளகச்செய்தது. நாட்டிற்குத் தனியனாகவந்து, மன்னனால் வெறுப்புண்டு ஒதுக்கப்பட்டுப் பரிதபிக்கத் தக்க நிலையிலிருந்த தன்னை ஒரு பொருளாகக் கருதிப் பூங்கோதை செய்த ஒழுங்குகளைப்பற்றி அவன் நினைத்தபோது, மிகுதியு முருகி, தன்னை ஈழநாட்டிலிருக்கத் தூண்டியது யாதென்பதை அவளிடஞ் சென்று கூற விரும்பினான். அவளுக்கும் ஒருவேளை தனது துணிவின் காரணந் தெரிந்திருக்கலாமென்று அவனுக்குத் தோன்றிற்று. ஆயினும் அவன் தான் நினைத்த வண்ணஞ் செய்யவில்லை. பூங்கோதை அனுப்பிய வாட்படையை இடையிற் கட்டிக் கொண்டு சிறிதும் அச்சமின்றி, அவன் வேந்தன் அரண்மனைக்குச் சென்று அங்கிருந்த நம்பத்தகாத மக்களுடன் கூடிச் சம்பாஷணை செய்தான். ஒப்பிலானுடனும் அவன் விளையாட்டாகப் பேசியதுமன்றி, பிற்றைநாள் விடியற் காலையிற் போருக்குச் செல்லவேண்டிய வீரர்களுடன் கலந்து எங்ஙனம் பகைவரைத் தாக்கவேண்டுமென்பதைப் பற்றி உரையாடினான். இறுதியில் அவனெழுந்து தன்னுடன்போகும் போர்வீரரெல்லாரும் இரவு நெடுநேரமாவதற்குமுன், கண்வளரச் செல்லவேண்டுமென்று கட்டளையிட்டான். அவனது திறமையுந் துணிவும் எல்லோருக்கும் ஊக்கமளித்தன. இளஞ்சேய்க் கொல்லியின் உத்தரவை மீற எவரும் முற்படவில்லை.

மறுநாள் வைகறையில், படைகள் அணிவகுத்து முறையுடன் பின்னடக்க, கம்பீரத்துடன் பரிமீதேறிச் சென்றான் இளஞ்சேய்க் கொல்லி. நாற்புறமும் மோசங்கள்

அவனைச் சூழ்ந்திருந்ததை எண்ணிக் கிலேசமடைந்திருந்த பூங்கோதை, தான் அவனுக்குப் புகன்றவாறு வேறு தேசம்போகாது இளஞ்சேய்க் கொல்லி படையின் முன்னணியிற் சிங்கம்போற் செல்வதைக் கண்டு, உவப்பும் வியப்பு மொருங்கே அடைந்தாள்.

இங்ஙனம் படைகளை நடத்திச் சென்ற இளஞ்சேய்க் கொல்லியைப் பற்றி ஏழுநாளளவுஞ் செய்தியொன்றுங் கிட்டவில்லை. இதுபற்றி நகரத்திற் சிறிது நடுக்கமுண்டாயிற்று. அரசனுங் கவற்சி கொண்டான். எட்டாவது நாளிற் சில குதிரை வீரர்கள் நகரத்திற்குள் விரைந்து வந்து, "செயம் செயம்" என்று ஆர்ப்பரித்தனர். "எதிரிகள் நுறுங்குண்டனர். நமது சேனை வெற்றிபெற்றுத் திரும்பி வருகின்றது. கொள்ளைப் பொருளின் மிகுதியினாலுஞ் சண்டையில் சிறைபிடிக்கப்பட்ட எதிரிகளின் தொகைப் பெருக்கத்தாலும் நமது சேனையின் வரவு தாமதமாகின்றது. நம் படைத்தலைவர் இளஞ்சேய்க் கொல்லிக்குத் தீங்கொன்றும் நேரவில்லை. சண்டையில் அவர் நடந்துகொண்ட வகையை உற்றுநோக்கின், மந்திர வலியால் அவர் உயிர் காக்கப்படுகின்றதென்றே நினைக்க வேண்டும். பகைவருடைய கோட்டையொன்றை வளைத்துக்கொண்டு நாங்கள் போர் புரியுங்கால, தன்னந் தனியராய் அவர் மதின்மேலேறி நின்றார். மூன்று திசைகளிலிருந்து எதிரிகள் எய்த அம்புகள் அவர்மேற் பாய்ந்தன. ஆனால் அவற்றை மழைத்துளிகளென மதித்துப் பகைவர் மேல் அவர் சாடினார். அதுகண்டு நாங்களும் ஊக்கங்கொண்டு முன்னேறி ஒன்னார்மேல் விழுந்து தாக்கி அவர்களை முறியடித்தோம்," என்று செய்தி கொண்டுவந்த குதிரைவீரர் விளம்பினர்.

போரில் மாண்டொழியாது இளஞ்சேய்க் கொல்லி திரும்பி வருகின்றானென்ற செய்தி அரசன் காதிற்கு எட்டியவுடன் அவன் எண்ணியது, யாதாயினுமாக தனக் கடங்காதார் தோற்றனரென்பது பற்றியும், இளஞ்சேய்க் கொல்லியின் தலைமையிற் றன் படைவீரர் பெருவெற்றி யடைந்தன ரென்பது பற்றியும் வேந்தன் மட்டற்ற மகிழ்ச்சி எய்தினன். அஃதன்றி, தன் போர்வீர ரடைந்த வெற்றியின் பொருட்டுத் தெய்வத்திற்கு நன்றி செலுத்துதற்காக நகரிலுள்ளோர் அனைவரும் ஒன்றுகூட வேண்டுமென்று மன்னன் ஆணை பிறப்பித்தான். நகரமாந்தரெல்லோரும் ஒருங்கு திரண்டு, சாலக் களிப்புற்று இளஞ்சேய்க் கொல்லியை எதிர்கொளச் சென்றனர்.

நகரைச் சமீபித்து வந்த இளஞ்சேய்க் கொல்லியை எல்லோரும் உவகையுடன் எதிர்கொண்டு வாழ்த்தி வரவேற்கச் சென்றாராயினும், ஒருவர் மாத்திரம் தனியே தம்மிடத்திலிருந்து, அவன் போருக்குச் சென்று இடையூறின்றித் திரும்பி வந்ததற்காக மிக மகிழ்ந்தார். அவ்வாறு செய்தவர் பூங்கோதை என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? யுத்தஞ்செய்து மீண்டு வந்ததன் பயனாக இளஞ்சேய்க் கொல்லியின் ஆற்றலும் போர்த்தொழிலினறிவும் யாவருமறியுமாறு வெளிப்படுத்தப்பட்டதைக் குறித்துப் பூங்கோதை அகமலர்ந்தாளாயினும், தன் தந்தையுடன் அரண்மனையில் அவனிருக்குமளவும் அவனுக்கு மோசமுண்டென்பதை அவள் நன்குணர்ந்தாளாதலின், ஒருநாள் அவனைக் கண்டு, "இதுகாறும் இடர்களினின்று எங்ஙனமோ நீ தப்பினை. இனி யாது நேருமோ; யாரறிவார்? தாமதமின்றி நீ வேறிடம் போவது நன்று," என்றுருக்கத்துடன் நவின்றாள். பூங்கோதையின் கனிந்த மொழிகேட்டு, "நாடோறும் உன் முகத்தைக் காணப்

பெறும் பாக்கியம் கிடைக்குமாயின், வேறு பேறு நான் வேண்டேன். அதன்பொருட்டு எத்தகைய இன்னல்களை யும் இடையூறுகளையும் பொறுத்துக்கொள்ள நான் சித் தமாயிருக்கிறேன். எனக்குத் தீங்கு நேருமென்ற கார ணத்தைக் காட்டி, என்னை வேறிடஞ் செல்ல ஏவுவது வீண் முயற்சியாகு மென்பதை நான் உனக்கு எடுத்துக் காட்டவேண்டியது என் கடமையாகின்றது. பிற காரணம் ஏதாயினு மிருப்பின் அதைக் கேட்க விரும்புகின்றேன்," என்று வீரன் கூறினான். அவன் சொன்னது பூங்கோதையி னுள்ளத்தை மகிழ்ச்சியால் நிரப்பிற்று. ஆயினும் அவளுக் கிருந்த பயம் இன்னும் அகலவில்லை. காதலால் இணைக் கப்பட்ட அவ்விருவரும் ஓரிடத்திருப்பதையே நச்சினா ராயினுந் தன்மேல் வைத்த காதலால் இளஞ்சேய்க் கொல்லி இறக்க நேர்ந்தால் என்னவாகுமென்று பூங் கோதை அஞ்சினாள்.

## ௩. துர்க்கை ஊர்வலம்

ஆண்டுக் கொருமுறை ஈழநாட்டின் தலைநகரிற் கோவில் கொண்ட துர்க்கா தேவிக்குத் திருநாள் கொண் டாடுவது அந்நாட்டின் வழக்கமாயிருந்தது. அந்நாளில் நகரமாந்தர் துர்க்காதேவியின் பொன்னுருவத்தைத் தேரி லேற்றி, தூய்ய வெள்ளைநிறமுள்ள எருதுகளைப் பூட்டி ஊர் வலம் வருவார்கள். தேருக்குமுன் வெள்ளுடையணிந்த இளம்பெண்கள் வில்லும் அம்புங் கையிற்கொண்டு நடந்து செல்வார்கள். மிகத் தொன்னாளில் துர்க்கைக்கு நரபலி கொடுத்த துண்டு. அக்கொடிய வழக்கம் இப்பொழுது நடைபெற வில்லையாயினும், அதன் அறிகுறியாகச் சில கிரியைகள் இன்னும் நிகழ்ந்தன. அவை யாவையெனின், துர்க்கையின் தேருக்குமுன் செல்லும் வெள்ளுடை

தரித்த பெண்கள், நகர மங்கையருள் மூவரைப் பிடித்துத் துர்க்கையின் பலிபீடத்திற்கு இழுத்துக்கொண்டு போவார்கள். அங்கே, பிடிபட்ட பெண்களைக் கொல்லுதற்பொருட்டுப் பூசாரி வாளை யோங்கி நிற்கும்போது, நாட்டை யாள்கின்ற வேந்தன் மூன்று வெண்மான்களும், ஒரு பொற்குழலும், வெள்ளியாற் செய்யப்பட்ட ஒரு பூஞ்செடியும், சிறந்த பட்டாடை யொன்றுங் கொண்டுவந்து கொடுத்து, இவைகளைப் பெண்களுக்கீடாகப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று துர்க்கையை மன்றாடுவான். இதற்கு ஒத்துக்கொண்டு, பிடிபட்ட பெண்களை விடுதலைசெய்து, அரசன் கொணர்ந்து கொடுத்தவைகளைத் துர்க்கைக்குப் படைப்பான் பூசாரி.

இத்திருநாள் இப்பொழுது வர, நகரத்திலுள்ள கடைகளெல்லாம் மூடப்பட்டன; துறைமுகத்தில் வேலை நிறுத்தப்பட்டது. ஆடவரும் பெண்களும் விதவிதமாக உயர்ந்த பட்டாடைகள் அணிந்து களிபேருவகையுடன் துர்க்கையின் கோவிலில் வந்து கூடினார்கள். தேவியினுருவத்தை அலங்கரித்துத் தேரில் அமரச்செய்து, வெள்ளைக் காளைகளை அதிற் பூட்டி யோட்டியகாலை யாதுபற்றியோ தேர் சற்றேனும் அசையாது நின்றுவிட்டது. இதன்காரணம் இன்னதென்று ஒருவராலும் அறிய முடியவில்லை. முன்னைவிடத் தேரின் பாரம் அதிகமாயிற்றென்று சொல்ல வழியில்லை; காளைகள் வலிமை குன்றினவென்று எண்ணுவதற்கும் இடமில்லை. பூசாரிகள் விழுந்தெழுந்து அழுது தொழுது துர்க்கையைப்போற்றி, தேர் நகர்ந்து செல்ல அவள் அருள்புரிய வேண்டுமென்று கெஞ்சினார்கள். யாதும் பயன்படவில்லை. இதன்மேல், ஊர்வலம் வரத் தேவிக்கு விருப்பமில்லையென்று எல்லோருந் தீர்மானித்துத் தேரை நின்ற நிலையிலேயே விட்டுவிட்டு மற்றச்சடங்குகளை நிறைவேற்றப் புறப்பட்டுப் போனார்கள். அடுத்து

நடக்கவேண்டியது, மங்கையர் மூவரைப் பிடித்துப் பலி பீடத்திற்குக் கொண்டுபோதல். இதை அவர்கள் செய்யத் தொடங்கியவுடன் ஒரு துர்ச்சகுனந் தோன்றிற்று. நங்கையர் மூவருளொருத்தி பலிபீடத்தருகில் வந்தவுடன் அலறி வீழ்ந்தாள். பணியவந்த சனங்களெல்லாரு மிதைக் கேட்டுத் திடுக்கிட்டார்கள். இது போதாதென்று, பலியிடுவதற்கென்று கொண்டுவந்து நிறுத்தப்பட்ட மான்களி லொன்று குதித்துக் கொம்பை யசைத்துப் பூசாரியின் கையிலிருந்து தப்பி யோடிற்று. இந்த வேளையிற் கையில் ஈட்டி பிடித்த போர் வீரனொருவன் பாய்ந்தோடி வந்து தப்பியோடிய மானைக் குத்திக்கொன்று துர்க்கையை நோக்கி, "மதியற்ற தேவியே, இன்று நீ நடந்துகொண்ட விதம் தகாது, தகாது. நீ சொன்னவாறெல்லாம் நாங்கள் ஆடவேண்டுமென்பது உனது விருப்பம்போலும். இந் நாடு உனக்குப் பிடிக்காவிட்டால் வேறெங்கேயாவ தொழிந்து போ. நாங்கள் இனி உன்னை வேண்டிக்கொள்ள மாட்டோம்," என்று கடுகடுத்துக் கூறினான்.

போர்வீரன் இவ்வாறு செய்த குற்றத்திற்கொரு பரிகாரமுஞ் செய்யப்படவில்லை. தேவி கொண்ட சீற்றத்தைத் தணிப்பதற்கொரு முயற்சியும் எவரும் எடுத்துக்கொள்ளவில்லை. நடுக்கத்தால் நாக்குழறி நின்ற நகரத்தார், தத்தம் வீடேகி வாளா விருந்தார்கள். அன்று அவர்கள் கண்ட சகுனங்களால் நாட்டிற்கும் நகரத்திற்கும் என்ன நேரிடுமோவென்ற அச்சம் அவர்களை யடக்கி யொடுக்கிற்று. அன்றியும், விசும்பெங்கும் முகிற்றிரள் குவிந்து இருண்டதாற் கடிதிற் பெரிய புயலடித்து மழைபெய்து நகரத்திற்கு யாதாயினும் பேரின்னல் விளையலாமென்று அவர்கள் எண்ணினார்கள். இவை யாவுந் தேவியின் சினத்தால் வந்தன வென்பதில் அவர்களுக்கு அணுவளவும் ஐயமில்லை.

இளஞ்சேய்க் கொல்லி அன்று நகரத்திற் காணப்பட்டிலன். வெளிநாட்டானாதலால், நகரத்தில் அன்று நடந்த தேவி திருவிழாவில் அவன் கலந்துகொள்ளவில்லை. முந்திய நாள் அவன் செய்துகொண்ட தீர்மானத்திற்கேற்ப விடியற்காலையி லெழுந்து மலைகளில் வேட்டையாடச் சென்ருன். காலைப்பொழுது கழிந்து நண்பகல் வேளையான போது ஆகாயத்திலெங்கும் மேகங்கள் திரண்டெழுவதை அவன் கவனித்தான். மழையின் பொருட்டு ஓர் ஒதுக்கிடந் தேடிப் போகுங்கால், மற்ருெரு காட்சி இவன் கண்ணிற் பட்டது. கிழக்கே வெகு தூரத்தில் நெருப்புப்பற்றி யெரிவதை அவன் பார்த்தான். கொஞ்சநேரத்தில் அந்த நெருப்பு நாற்புறமும் பரவுவதைக் கண்டு, இஃது ஒன்ருரிட்ட தீயா யிருக்க வேண்டுமென்று இளஞ்சேய்க் கொல்லி துணிந்தான். அக்கணமே, அவன் நகருக்கோடிவந்து பகைவர் செய்த கொடுஞ் செயலைத்தடுக்க, யாதாயினும் முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டதோ வென்று ஆராய்ந்தான். நடுக்கம் பிடித்தவர்களாய் யாவரும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டிருந்தார்களேயன்றி, நாட்டில் எதிரிகள் வந்து, பயிர்களைக் கொளுத்தி அழிப்பதை ஒருவரும் உணர்ந்தாரில்லை. தேவியின் வெகுளியைப்பற்றிய அச்சம் அவர்களுள்ளத்தில் ஓங்கி நின்று, படையெடுத்து வந்த பகைவரின் பயத்தை யொழித்தது. நகரத்திற் சண்டமாருதம் வீசி மக்களை முன்னினுமதிகமாய் நடுங்கச் செய்தது. மன்பதையெல்லாம் இங்ஙனம் உளம் மடிந்து வாளாவிருக்க, இங்கு மங்கும் இளஞ்சேய்க் கொல்லி திரிந்து, இளங் காளைகள் சிலரைச் சேர்த்து, நாடு பாழாய்ப் போகிறதை அவர்களுக்கு எடுத்துக் காட்டி, பகைவரை எதிர்ப்பதற்கேற்ற தைரியத்தை அவர்களுக்குண்டாக்கினன்.

பகலிற் றொடங்கிய பெரும்புயல் இரவெல்லாம் வீசிற்று. நள்ளிரவில் அதன் வலி சிறிதடங்கி யமைதி பிறக்குமுன், குதிரைகள் பாய்ந்து வருஞ் சத்தம் நகர வாயிலைக் காவல் செய்துகொண்டிருந்தவர்கள் காதில் விழுந்தது. வரவரப் பெருகிய இவ்வோசை வாயிலை நெருங்கிவந்தது. நாற்கால் பாய்ச்சலில் குதிரைகள்மேல் வந்த மக்கள் பலர் கதவிற்கு வெளியே நின்று உரக்கக் கூவி, பேரொலி கிளம்புமாறு கதவின்மேல் மோதினார்கள். சற்றும் இரக்கங்காட்டாத வலிய பகைவர் படையெடுத்து வந்து நாட்டைப் பாழ்படுத்துகிறார்களென்றும், தப்பி யோடிவந்த தங்களுக்குப் புகலிடம் பிறிதில்லாமையால் வாயிலைத் திறந்து தங்களை யுள்ளே அழைத்துக்கொள்ள வேண்டுமென்றும் அவர்கள் கெஞ்சினார்கள். நகர வாயிலைக் காவல் செய்த மக்கள் தீரமற்ற பதடிகளா யிருந்தமையால், அவர்கள் கதவைத் திறவாது வாய் மூடிக்கொண்டிருந்தனர். தப்பியது தம்பிரான் செயலென்று ஓடிவந்து வெளியே நின்றவர்கள் கதறி, இரந்து, வணங்கி முறையிட்ட தெல்லாஞ் சிறிதும் பயன்படாமற் போயிற்று. நல்ல வேளையாய் இளஞ்சேய்க் கொல்லி அப்பொழுது அவ்விடத்தில் வந்து சேர்ந்தான். நடந்த செய்தியைக் கேட்டவுடன் அவன் காவலாளிகளைக் கடிந்துகொண்டு வெளியே நின்றவர்களை யுள்ளே கொணர்ந்து சேர்த்தான். தப்பியோடி வந்தவர்கள் ஒருவர்மேலொருவர் விழுந்து, வாயிலில் நுழைந்து உள்ளே சேர்ந்தபின் தாங்கள் கண்டதையும் கேட்டதையும்பற்றிப் பேசலாயினர். குரூரமே உருவெடுத்து வந்ததென்று சொல்லத் தகுந்த ஒரு கூட்டத்தார் நாட்டை அழிக்கின்றனரென்றும்; ஆடவர், மகளிர், குழவிகளென்று பாராது யாவரையும் பட்டயத்திற்கு இரையாக்குகின்றனரென்றும்; கோவில் குளங்களையெல்

லாம் இடித்துத் தகர்க்கின்றனரென்றும்; துர்க்கா தேவி யின் ஆலயங்கள் யாவும் ஒன்று தவறுமலொழிந்தனவென் றும்; இங்ஙனம் பழிக்கஞ்சாது மதச் செயல்புரியும் பகை வர் பெண்ணினத்தைச் சேர்ந்தவர்களென்றும் அவர்கள் எடுத்துரைத்தனர்.

அவ்விடத்திற் கூடி, செய்தி கொண்டு வந்தவர்களைச் சூழ நின்று கேட்டவர்களில் ஆண்மையென்பது அணு வளவுமில்லாத சிலர், படையெடுத்துவந்து தேசத்தைப் பாழாக்கியவர்கள் பெண்களென்று கேட்டமாத்திரத்திற் சிறிது தைரியமடைந்தனர். ஆனல், இப் பெண்கள் சாதா ரண மகளிரைப் போன்றவரா யிராமல், உருவத்திலும் செய்கையிலும் பேய்களை யொத்தவரா யிருக்கின்றன ரென்று கேட்டு, தைரியமடைந்த ஆண் பிள்ளைகள் தவிக்க லாயினர். இவை யாவையுங் கூர்ந்து கேட்ட இளஞ்சேய்க் கொல்லி, அப்பொழுதே பகைவரைப்போய் எதிர்க்கத் துணிந்து கலகலவென்று பேசிக்கொண்டிருந்த காவலா ளியை வெறுப்புடனேக்கி வாயடக்கி, கையிலிருந்த குழ லொன்றை யெடுத்தூதினன். அவ்வோசை கேட்டு இளஞ் சேய்க் கொல்லியின் ஆணைப்படி நடந்துகொள்ள உறுதி செய்துகொண்ட போர்வீர ரெல்லோரும் வந்து திரண்ட னர்.

## ௬. வெம்மனப் பெண்படையை வென்றது

"நாட்டை நடுங்கச் செய்யும் பகைவருடன் வெஞ்சமர் செய்ய இப்போர்வீரரை யான் உடனழைத்துச் செல் கின்றேனென்று வேந்தன் ஒப்பிலானுக்கு விளம்பிடுக" என்று இளஞ்சேய்க் கொல்லி, விலவிலத்த நெஞ்சுடனே நின்ற காவலர் தலைவனுக்குக் கட்டளையிட்டுப் பரிமீ

தமர்ந்து தன் போர்வீரருடன் நகர வாயிலைக் கடந்து காரிருளில் மறைந்தான்.

பொழுது விடிந்தபின், சுற்றுப் புறங்களிலிருந்து அடைக்கலந்தேடி அரசனிடம் வந்த மக்கள் கூறியவை, நகரத்திலுள்ளாரை முன்னிலும் பன்மடங்கதிகமாய் அஞ்சச் செய்தன. நிறைந்த செல்வமுடையவர்கள் பலர் ஒன்று கூடித் துறைமுகத்திலுள்ள தோணிகளைக் கூலிக் கமர்த்திக் கொண்டு, மனைவி மக்க ளுடைமைகளுடன் கடலிற் சென்றனர். பணம் படைத்தவர்கள் இவ்வாறு நகரத்தினின்று நீங்கித் திரைகடலிற் செல்வதைக் கண்ட ஏழை மக்கள் மிகவுந் திடுக்கிட்டு என்ன செய்வதென்றறியாது, தாங்களுங் கடற்கரை நோக்கி யோடினார்கள். நகரத்துள்ளோ ரெல்லாரும் இங்ஙனம் போய்விடின் என்ன நேருமோவென்று வேந்தன் வெருவி, நீர்மேல் யாருஞ் செல்லலாகாதென்று விளம்பரம் செய்ததுமன்றி, மீறிச் செல்வோரைத் தடுப்பதற்குச் சேவகர்களையும் அனுப்பினான். அன்று நடந்த குழப்பத்தில் அரசன தாணைக்கு ஒருவருங் கட்டுப்படவில்லை. எல்லோரையும் பிடித்த நடுக்கம் வேந்தனையும் விடவில்லை. மன்னனுங் குடிகளும் இங்ஙனங் கலங்கி அறிவிழந்து நிற்க, பூங்கோதைமாத்திரம் நிலை பெயரா நம்பிக்கையுடன் முகமலர்ந்திருந்தாள். அன்றியும் அவள், உளம் விதிர்த்த மக்களைக் கண்டெள்ளி நகையாடி, அரண்மனையிலுள்ள தன் தோழிகளுடன், தன் வழக்கமான வேலைகளை அமைதியாய்த் தொடங்கலானாள்; இந்நிலையில் இரண்டு மூன்று நாட்கள் கடந்தபின், இளஞ்சேய்க் கொல்லியிடமிருந்து அஞ்சல் வந்தது.

சாலக் களைத்துத் தளர்வுற்ற ஒருவன், தெருக்களில் தன்னைச் சுற்றிக் கூடிய மக்களை விலக்கிக்கொண்டு வந்து

நடந்து அரண்மனைக்கு வந்து, கடிதமொன்றை ஒப்பிலா னிடங் கொடுத்தான்.

அது, "வேந்த னொப்பிலானையும் அவனைச் சார்ந்தோ ரனைவரையும் வாழ்த்தி, இளஞ்சேய்க் கொல்லி வரைவது. எல்லோருங் கவலை யகற்றிக் களிப்பெய்துவீராக! நமது நிலத்தை யழித்த வெம்மனப் பெண்படை சிதறுண்டது. சண்டையில் மாண்டொழியாது சிறையாக்கப்பட்ட பெண் பேய்களுடன் சின்னாளில் நகரத்திற்கு வருவேன்," என்பது.

இக்கடிதத்தின் பொருள் வெளியானவுடன் நகரமெங் கும் மாந்தர் மகிழ்ச்சிகொண்டு குதித்துக் கூத்தாடினர். ஆலயங்களெங்கும் ஆராதனைகள் நடந்தன. கோவிலுக்குட் போய்ச் சேராது வெட்டவெளியில் நின்ற துர்க்கையின் தேரின்முன் தீபதூபங்காட்டி, முன்போல எருதுகளைப் பூட்டி இழுத்தபோது, எளிதாகத் தேர் நகர்ந்தது. யாவ ரும் இது கண்டு கழிபேருவகை யெய்தி, நாட்டுப்புறங்களி லுள்ள துர்க்கைகோவிலைப் பெண்பேய்கள் வந்தழித்ததாற் சீற்றங்கொண்ட தேவி, அப்பெண்க ளிப்பொழுது முறி யடிக்கப்பட்டதால், மனங்குளிர்ந்து தன் உறைவிடஞ் செல்ல உடன்பட்டாள். இளஞ்சேய்க் கொல்லி இல்லா விடின் நாடும் நகரமும் என்னபாடு பட்டிருக்குமோ?" என்று கூறி, அங்கிகாரற்ற வீரனின் திறமையையும் பெரு மையையும் புகழ்ந்து கொண்டாடினர். மிக நல்லவனும் நனி வல்லவனுமாகிய இளஞ்சேய்க்கொல்லி, சிறைபிடிக்கப்பட்ட பருத்த மகளிரை நடத்திக்கொண்டுவந்த தன் போர்வீர ருடன் நகர வாயிலிற் புகுந்து தெருக்களில் தோன்றிய போது, என்றுமில்லா ஊக்கத்துடனும் உவப்புடனும் எல்லோராலும் வரவேற்கப்பட்டான். பாடுவோரும் ஆடு

வோரும் முன்செல்ல, அணிவகுத்த படைகள் பிறகே போக, வெருவத்தக்க உருவமும் அருவருக்கத்தக்க ஆடையுமுடைய பெண்படைகள் பின்வர, அமர்முகத்தில் ஒன்னார் செருக்கறுத்து வாகை சூடிய குமரன் ஊர்வலம் வந்தான். பயிர் பச்சைகளையும் கோவில் குளங்களையும் எரித்திடித்த தறுகண் மடந்தையரின் தலைவி, கையிலொரு கண்டக்கோடரியுடன், குருதிக் கறைபட்ட முகத்தின ளாய்ப் பித்தளைத் தேரொன்றில் அமர்ந்திருந்தாள்.

பவனி வருகின்ற வீரனைப் பார்க்கும்பொருட்டுப் பூங் கோதை அரண்மனையின் மேன்மாடத்தில் வந்து நின்றாள். போர் புரிந்து ஆடவரைக்கொல்லும் ஆற்றலுடைய பெண் களி லொருத்தி, தன்னிடையில் மண்டையோடொன்று தொங்க நடந்தாள். சூழ நின்ற மக்கள் தன்னைக் கண்டு அஞ்சுவதை அவள் பார்த்துக் கத்திச் சிரித்தாள். உள் ளத்தி லாசியுருவியதைப்போல் இக்காட்சி பூங்கோதையை வருத்திற்று. அவள் தன் கண்களை இறுக மூடிக்கொண் டாள். இதற்குப்பின் ஓர் ஆரவாரங் கிளம்பிற்று. பூங் கோதை தன் கண்களைத் திறந்து பார்த்தாள்; ஒரு கரிய பரிமீதிவர்ந்து சொல்லரிய மாட்சியுடன் இளஞ்சேய்க் கொல்லி தெருவிற் போவதைக் கண்டாள். இருவர் கண் களுஞ் சந்தித்தன; தன் உள்ளத்திலே கொழுந்து விட் டெரிந்த காதலாகிய நெருப்பு அவள் நெஞ்சிலும் எரிவது, உள்ளங்கை நெல்லிக்கனியென இளஞ்சேய்க் கொல்லிக்கு விளங்கிற்று. சிறிது பிரிந்து ஒருவரையொருவர் மறுபடி யும் பார்த்ததில் எத்துணைப் பெருமகிழ்ச்சி இருவருக்கும் உண்டாயிற்றென்பதை அவர்கள் காட்டிக்கொள்ளவில்லை. அரண்மனையில் அன்றுமாலை, நடத்திய விருந்திலுங்கூடப் பூங்கோதை தன் காதல் வெளிப்படா வகையில் நடந்து கொண்டாள்.

## ரு. பகரோனு நெடுவிலங்கு

ஈழநாட்டில் மன்னனுக்காயினும் குடிகளுக்காயினும் வருத்தத்தைத் தரக்கூடிய நிகழ்ச்சிகள் நேராமற் சில திங்கள் சென்றன. இலையுதிர் காலத்தி லொருநாட் காலையில் அரசன் நியாய விசாரிப்பு மண்டபத்திலமர்ந்து, குடிகள் தன்முன் கொணர்ந்த வழக்குகளைக் கேட்டுக்கொண் டிருக்கையில், திடீரென்று ஒரு கூக்குரல் வெளியே கிளம்பிற்று. உடனே மண்டபவாயிற் காவலாள னொருவன் வந்து, "மன்னவ! சிற்றூர்களிலிருந்து வந்திருக்குஞ் சில மனிதர் இங்கு வந்து தங்கள் குறையைச் சொல்ல அனுமதி கேட்கின்றனர்," என்று அறிவித்தான். இங்ஙனம் வந்தவர்களி லொருவனை உள்ளே விடும்படி அரசனுத்தரவிட, அவனும் வந்தான். அரசன் முன்னிலையில் வந்து நின்ற மகன் வெருண்டு விழித்து வாயெடுத்துப் பேசக்கூடாத நிலைமையிலிருந்தான்: அவனுடம்பு முழுவதுந் துடித்தது. பன்முறை அவன் பேசமுயன்று தன்னுதடுகளை அசைத்துப் பார்த்தும் ஓசையொன்றும் பிறக்கவில்லை.

ஒப்பிலான் இவனைச் சிறிதுநேரம் உற்றுநோக்கி, "இவன் சொல்ல முயல்வது மிகக் கொடிய செய்தியாயிருக்குமென்று எனக்குத் தோன்றுகிறது. இவன் தொண்டையை நனைத்தற்கு யாதாயினும் இவனுக்குக் கொடுங்கள். அதைக் குடித்தபின் இவன் தன் மனத்திலிருப்பதைத் தெளிவாக வெளியிடக் கூடும்," என்று கூற, அருகில் இருந்தவர்கள் அங்ஙனமே செய்தார்கள். அதன் பிறகு அவன் பின் வருமாறு பேசலானான் :—

"நாங்கள் இருக்குமிடத்தில் எங்களை நெருங்கி வந்த மிகப் பிரமாண்டமான விலங்கொன்றைப் பற்றி நாங்கள் செய்தி கொண்டுவந்தோம். எங்ஙனம் அதனுருவத்தைப்

பற்றி நான் எடுத்துரைக்கப் போகின்றேன்? அதைப் பற்றி நான் உறுதியாகச் சொல்லக்கூடிய தென்னவெனின், அதன் மூக்கிலிருந்து எரிகின்ற நச்சுக் காற்று வெளிவந்து, பட்டவிட மெல்லாங் கருகும்படி செய்தது; அதன் பெரிய உருண்ட கண்கள் கொழுந்துவிட் டெரியுந் தீப்பிழம்பு களாயிருந்தன; எண்ணிறந்த பாம்புகள் சீறுவதற்கிடையே ஒரு வாளின் முனைமேல் மற்றொரு வாளை வைத்திழுத் தாற் பிறக்குமொலி எப்படி யிருக்குமோ, அப்படி அத னிரைச்சல் இருந்தது; அதன் தலையுந் தோளுஞ் சிங்கத் தைப் போலவும், இடையும் ஒருபகுதி யுடலும் வெள் ளாட்டைப்போலவும், மிகுந்து நின்ற பகுதியும் வாலும் பாம்பைப் போலவு மிருந்தன. சேய்மையில் அது தோன் றியதை வயலில் வேலை செய்துகொண்டிருந்த நான் நிமிர்ந்து பார்ப்பதற்குள், மனோவேகத்துடன் அஃது அண் மையில் வந்தது; அது வந்த நெறியில் நின்று வேலை செய்துகொண்டிருந்தோரெல்லாரும் அதன் மூச்சுப்பட்டு, நின்றநிலையிலேயே உயிரொடுங்கி வீழ்ந்தனர். எவருங் கண் டுங் கேட்டுமிராத இக்கொடிய பெரிய தனி விலங்கு என்னை அடுத்து வருமுன் நான் அறிவிழந்து சாய்ந்தேன். என் னுயிர் எங்ஙனந் தப்பிற்றென்று எனக்கே தெரியவில்லை. எவ்வளவு நேரம் நான் மதிமயங்கி அவ்விடத்திற் கிடந்தே னென்பதும் எனக்குத் தெரியாது. எனக்குத் தன் னுணர்ச்சி தோன்றியபோது, நான் கண்ட காட்சி என் னைத் திகைக்கச் செய்தது. கனவிலுங்கூட, யாண்டும் எவ ரும் இதற் கொப்பான பாழுங் காட்சி கண்டிராரென்று நான் துணிந்து கூறுவேன். என்னைச் சுற்றி ஓர் உயிரா தல், செடியாதல் புல்லாதலில்லை. நீண்ட நிலப்பரப்பெல் லாந் தீய்ந்து கரிந்துபோயிருந்தது மன்றி, எங்களூரில் உள நெருப்பு எங்கணும் பரவி எரிந்துகொண்டிருந்தது.

முடைந் தொடங்கி நின்ற நான் எழுந்து நிற்க முயன்ற போது, நடுக்கங்கொண்ட என் கால்கள் அதற்கு இடந் தரவில்லை; ஆயினும் அவ்விடத்தி லிருப்பதைவிட இறப்பது நன்றென்று எனக்குப் புலப்பட்டதால், எத்தனையோ முறை விழுந்தெழுந்தும் ஓடி, அவ் வல்விலங்கின் பயங்கரச் செயல்களின் குறி தோன்றாத ஓரிடத்தை யடைந்தேன். ஆண்டுச் சில மனிதர் வந்து என்னை கண்டனர். அவர்களென்னை யழைத்துக் கொண்டுவர, அரசே, நான் ஈண்டு வந்து கண்டதைக் கூறினேன்," என்று இவ்வாறு பேசி முடித்தபின், அம்மகன் களைத்துக் கீழே விழுந்தான்.

இதுகேட்டு, வியப்புந் திகிலு மடைந்த ஒப்பிலான், தான் கண்டதைச் சொன்னபின் களைத்து விழுந்த மகனுடன் வந்த மற்றவர்களைக் கூப்பிட்டு விசாரித்தான். அவர்கள், மேலே சொல்லப்பட்ட அத்துணை விரிவாக ஒன்றுங் கூறுவிடினும், யாவற்றையும் எரிக்கிரையாக்கும் அக்கொடிய விலங்கின் தன்மையைப்பற்றிச் சிறுசிறு சான்றுகள் பகர்ந்தனர். தங்களுருக்கு மேற்கிலுள்ள குன்றில் பெருந்தீ கண்கண்ட தூரமளவும் பிடித்தெரிவதைத் தாங்கள் முந்திய நாள் பார்த்ததோடு, உடலெல்லாம் பொசுங்கிய ஒருவன் தங்களுருக்கு ஓடி வந்ததைக் கண்டதாகவும் அவர்கள் சொன்னார்கள்.

இன்னும் அவர்களி லொருவன், மலைகளில் எதிரொலியுடன் கிளம்பிய, காது செவிடுபடுந் தகைமைத்தான உரைத்த உறுமுதலைக் கேட்டதாகவும்; மற்றுமொருவன், ஊர்ப்புறமெல்லாம் வீசிய, முடை நாற்றமுடைய சுடுகின்ற காற்றை முகர்ந்ததாகவுஞ் சொன்னான். இவைகளிலிருந்து, முதலிற் பேசியவன் சொன்னவையாவும்

உண்மையென்று வேந்தன் அறிந்துகொண்டான். நினைவிற் காணவும் அஞ்சத்தகுந்த இக்கொடிய விலங்கை எவன் சென்று கொன்று வீழ்த்தக்கூடும்? இக்கடாவிற்கு விடையாக, மன்னன் மனத்தில் இளஞ்சேய்க் கொல்லியைப் பற்றிய நினைவு வந்தது. பூங்கோதையின் காதலாற் கட்டுண்ட இளஞ்சேய்க் கொல்லி, இன்னும் ஒப்பிலானது சேவகத்திலிருந்தான். ஆனால் இந்த வேளையில் அவன் ஈழநாட்டாரின் வாணிபத்திற்குப் பேரிடையூறு செய்த ஒரு கடற்கொள்ளைக்காரர் கூட்டத்தை மடக்கிப் பிடிக்கச் சென்றிருந்தான். ஆதலின், குவலயத்தோர்க்கு இறும்பூதாய்த் தோன்றிய இம்மிருகத்தைத் தொலைக்க வேறொரு வீரனை வேந்தன் கண்டுபிடிக்க வேண்டியது அவசியமாயிற்று.

படையிற் சிறு தலைமை வகிப்பவனும், அஞ்சா நெஞ்சுடன் போர் புரிபவனென்று புகழ் பெற்றவனுமாகிய ஒரு மகனை அரசனழைத்து, திண்டோளுடைய எண்பது வீரரை அவனோடு போக்கி, நாடு காடாகும்படி செய்த விலங்கைக் கொல்லும்படி விடுத்தான். மன்னன் விடுத்த இவர்களின் ஆற்றல் மறுநாளே வெளியாயிற்று, அடுத்த நாள் விடிந்தவுடன், எரிமாவை அழிக்கச் சென்ற எண்பதின்மரில், முதியவனாகிய ஒருவன் நகரத்திற்குத் திரும்பினான். தன்னுடன் சென்ற தன் மகனது பிணத்தை அவன் குதிரைமேலேற்றிக்கொண்டு வந்து சேர்ந்தான். ஒழிந்த எழுபதிற்றெண்மரும் எவ்வகையில் மாண்டனரென்று தெரியவில்லை. ஏனெனின், பிணத்தோடு திரும்பிய முதியவன், துன்பப் பரவையிலாழ்ந்து, வாய்திறந்து பேச வியலாது மூன்று நாளிருந்து நான்காம் நாள் உயிர் துறந்தான்.

## கா. ஒப்பிலான் விளம்பரமும் கொல்லி துணிபும்

சிங்கமும் ஆடும் பாம்பும் ஒன்றுகூடிய உருவினதாகவும், ஈழநாட்டிற்கொரு கூற்றுவனாகவும் வந்த சுடுமாவை அடல்வேண்டி எடுத்த இம்முதன் முயற்சி சிதறியபின், வேறொன்றுஞ் செய்யப்படவில்லை. நாட்டின் நாற்புறமுமிருந்து நகரில் அடைக்கலந் தேடிவந்த மக்கள் பலர் குழுமி, எங்கும் அழிவுண்டாக்கிய கொடிய விலங்கின் பண்பையும் வடிவையும் பற்றி வெவ்வேறு செய்திகள் சொன்னார்கள். மிக உறுதியான அரணுடைய நகரத்திற்குள்ளிருந்தவர்களும் என்ன நேருமோ வென்ற அச்சத்துடன் ஒவ்வொரு வினாடியும் ஏங்கினார்கள். கோவுங் குடிகளும் இங்ஙனம் உளங் கலங்கி நிலை தடுமாறி அங்கலாய்த்திருக்குங்கால், காலைக் கதிரவனொளி பாய்மரங்களிற்பட, அழகிய அமைதியான நீனிறக் கடலில் வகையுடன் மிதந்து, இளஞ்சேய்க் கொல்லி ஏறிச்சென்ற கப்பல் துறைமுகத்திற்குத் திரும்பி வந்தது. சங்கதி கேட்டு, நகரத்திலுள்ள ஆணும் பெண்ணும், குழவிகளும் கிழவரும் எல்லாருங் கழிபேருவகை பூத்தனர். கப்பலின் பாய்மரங்களில் எங்கு நோக்கினுங் கடற்கொள்ளைக்காரருடைய கவசங்கள் தொங்கிக்கொண் டிருந்தன. எல்லாவற்றிற்கும் உயர ஓர் ஈட்டியின் முனையில் கொள்ளைக்காரர் தலைவனது தலை நின்றது.

நிலம் வந்து சேர்ந்த இளஞ்சேய்க் கொல்லி, தான் பெற்ற வெற்றியின் பொருட்டு இறைவனை வாழ்த்தி வணங்க ஒரு கோயிலுக்குட் சென்று, கள்ளரிடமிருந்து பறித்த கொள்ளைப்பொருளிலொரு பகுதியை அக்கோவிற் பணிவிடைக்கு அளித்தான். கோவிலிலிருந்து திரும்பிவந்த கோமகனைக் கண்டுகளிக்கச்சென்ற பல மக்களில் ஒருவரோ

னும், நாடு பாழாக நாற்புறமுந் திரிந்து, நகர மக்களை அலறச் செய்த விலங்கைப்பற்றி அவனிடங் கூறவில்லை. கடலிற் சென்று கடும்போரியற்றி வாகைசூடி மீண்ட நன்மகனை யணுகி, "உவரித் திருடரை வேருடன் களைந்த உத்தம, நாட்டை நலியச்செய்த மற்றென்று கேட்டிலையோ?" என்று வினவ எவரும் விரும்பவில்லை. கோவில் மதிலைக் கடந்து வெளியே வருமளவும் இளஞ்சேய்க் கொல்லிக்கு நகரத்திலுள்ளவர் படும் இடும்பையைப்பற்றி ஒன்றுந் தெரியவில்லை. வெளியே வந்தபின், கோவிலையடுத்த பைம்புல் வெளியில் ஒருவன் நின்று கீழ்க்காட்டிய முறையிலொரு விளம்பரஞ் செய்வது இளஞ்சேய்க் கொல்லியின் காதிற்பட்டது.

அஃது, "இதனால், யாவரு மறிய ஈழக் கோமான் ஒப்பிலான் தெரிவிப்பது: இன்னதென்று கூறுதற்கியலாதவொரு கொடுமாவால் நமது நாடு ஆற்றெணுத் துயருறுவதாலும், வயது முதிர்ந்தவனாகிய யான், படை தாங்கி வெம்போர் செய்ய ஆற்றலற்றிருப்பதாலும், நாட்டைக் கலங்கச் செய்யும் விலங்கைக் கொல்லும் வீரனுக்கு என் மகளை மணஞ் செய்து கொடுப்பதன்றி என் அரசிற் பாதியும் அவனுக்கு அளிக்க உடன்படுகின்றேன்," என்பது.

இவ்விளம்பரத்தை முதலிலிருந்து கடைசிவரை மூச்சுவிடாமல் இளஞ்சேய்க் கொல்லி நின்றுகேட்டான். இதுகாறும் அவன் அறியாத நம்பிக்கையொன்று இப்பொழுது அவன் உளத்திற் றோன்றிற்று. மிக அரிதென்று தான் கருதியது கைகூடுதற்கு இத்தகைய நற்றருணம் வாய்த்ததை நினைந்து மிக மகிழ்ந்து அவன் தன் வழியே சென்றான். கள்ளுண்டாற்போற் களித்த இளஞ்சேய்க் கொல்லி, நினைத்தவளவில் நெஞ்சை யுடைக்குங் கொல்

விலங்கின் நச்சுத் தன்மையையும் பெருவன்மையையும் பற்றி எவர் பாலுஞ் சென்று வினவ விழையவில்லை. அக் கடுமா தொலைந்தால் பூங்கோதையைத் தான் மணந்து கொள்ளலாமென்ற இனிய நினைவே அவன் உள்ளத்தைக் கொள்ளையாடிற்று.

இன்ப வெள்ளத்தில் நீந்திய இளஞ்சேய்க் கொல்லி ஒப்பிலானிடஞ் சென்று திரைகடற் கள்வரைத் தான் வீழ்த்திய வகைபற்றிப் பேசினான். இப்பேச்சு ஒரு முடிவிற்கு வந்தவுடன், நிலத்திலும் நீரிலும் மாற்றார் புறங் கண்ட வீரனை வேந்தன் நோக்கி, "கடற் றிருடர் தொல்லை ஒழிந்ததுபற்றி யானெவ்வாறு மகிழ்கின்றேனோ அவ் வாறே அனைவரும் மகிழ்வரென்பதில் ஐயமின்று. ஆனால், இளஞ்சேய்க்கொல்லி! நமது தொல்லைகள் இன்னும் முடிய வில்லை. உலகிலுள்ள துன்பங்களெல்லாம் நம்மீது வர வேண்டு மென்ற விருப்பத்தால் ஏவப்பட்டு, ஒன்றின்மே லொன்றாய்த் தேவர்கள் நம்மீது தீமைகளைக் குவித்தார்க ளென்று கருதும்படி, இன்னல்கள் நம்மைச் சூழ்ந்தன. செய்வது யாதென்றறியேன்," என்றிசைத்தான். இதற்கு எதிர்மொழி இயம்புமுகத்தான் இளஞ்சேய்க் கொல்லி எவரும் அணுகவொண்ணு வன் மிருகத்தைக் குறித்து, மன்னன் அறிந்ததைத் தன்னிடங் கூறுமாறு வேண்டினான். மன்னன் அவ்வாறே செய்ய, "கடுவிலங்குடன் அடுபோர் விளைத்து இரண்டிலொன்று பார்த்துவிடுவல்," என்று கொலையுணற் பொருட்டுச் சிறுமலை நாட்டு மருமகனால் ஈழமாமன்பால் விடுக்கப்பட்ட தோன்றல் தீர்மானித்தான்.

நெஞ்சிற் கொண்ட இவ்வுறுதியை வெளிப்படுத்து முன், இளஞ்சேய்க் கொல்லி பூங்கோதை தாதையை யுருவப் பார்த்து, "பொழிலும் பழமும் நீர்நிலையும் ஊர்களும்

வெந்து நீறுக எங்குந் திரிந்து அல்லல் செய்யு மொரு தனி விலங்கை எதிர்த்து மாய்ப்பவனுக்குப் பெறுதற்கரிய பெரும் பரிசளிப்பேனென்று விளம்பரப்படுத்தினே. உயிரையொரு பொருட்டாக மதியாமலொருவன் சென்று வெம்மாவைக் கொன்று, நீ கூறிய பரிசைப்பெற உன் முன் வருங்கால், அவனுக்கு அப்பரிசை நல்குவதால், முன்பு நீ வேறொருவர்க்குச் செய்த வாக்குறுதியை மீறுமாறு நேர்ந்திடுமாயின், யாது செய்வை? பழைய உடன்பாட்டைப் பற்றி நிற்பையோ, புதியதைத் தழுவி நடந்து கொள்வையோ? பகர்வாய்,'' என்றான்.

இவ்வுரை செவியிற் புகுந்தவுடன், ஈழக்கிழவோனுக்கு மலைவு தோன்றி முகம் வேறுபட்டது. "கைக்கொண்ட கருமத்தை இனிது முடித்து நீ திரும்புவையாயின்,—கரும முடிவில் நீ பெறுதற் குரியதை உறுதியாய்ப் பெறுவை.'' என்று ஒப்பிலான் தெற்றித் தெற்றிப் பேசினான். அவன் கொடுத்த விடையில் ஒரு நய வஞ்சகமிருப்பதை இளஞ்சேய்க் கொல்லி நன்கறிந்தனன். ஆயினும் இது பற்றி அவன் இவ்வேளையில் தடை யெழுப்பி விடை கேட்க விரும்பினானல்லன். கருதிய கருமத்தைச் சுணக்கமின்றித் தொடங்கி முடித்தபின், பிறவற்றைத் திருத்தி யமைத்துக் கொள்ளலாமென்ற துணிபோடு காதலாற் கண்டுண்ட நன்மகன் ஒல்லை வெளியே செல்வதற் கேற்ற திட்டங்களை அக்கணமே ஆரம்பித்தான்.

## ஏ. ஒப்பிலான் செய்த சூழ்ச்சி

நவிலுதற்கரிய நன்மைகள் பல நாட்டிற்குச் செய்த உயர்மகனை வழியனுப்பிய பிறகுதான் ஒப்பிலான் சிறிது ஆறியிருந்தான். பிறர்க்குக் கேடு சூழ்வார் மனம் நீடித்த அமைதி பெற்றிருப்பதில்லை. குற்றமுள்ள நெஞ்சு குறு குறு வென்னும் என்பது உண்மையாதலின், வேந்தனுக்கு வரவரக் கவற்சி மிகுந்தது. இருதலைக் கொள்ளியினிடை யகப்பட்ட எறும்புபோல அவன் துடித்தான். இளஞ் சேய்க் கொல்லியை வழியனுப்பிச் சில நாழிகைகளான பின், மன்னன், தன் மெய்காவலாளரின் தலைவனை விளித்து, "நகர வாயிலில் நமதாட்களை வைத்து, விலங் கைப் பற்றிய செய்தி யாதாயினும் கிடைக்குமாயின் உடனே எனக்கு அதை அறிவிக்க ஒழுங்குகள் செய்வா யாக. வெளியிலிருந்து வரும் ஒவ்வொருவனையும் நன்கு விசாரித்து உண்மை அறிய வேண்டும். இக்காரியத்தில் இளஞ்சேய்க் கொல்லி இறங்கி யிருப்பதால் இரண்டி லொன்று கடிதிற் தெரிந்துவிடுமென்று நான் கருதுகின் றேன். அவன் வெற்றிபெற்று மீள்வானென்று உனக்குத் தோன்றுகிறதா?" என்று கேட்க, தலைவன், "இதுகாறும் அவனைப்பற்றி நாமறிந்தவற்றைக் கொண்டு தீர்மானிக்கு மளவில், அவன் சயத்துடன் திரும்புவா னென்றுதான் நினைக்க வேண்டியதா யிருக்கிறது. இறப்பதைப்பற்றி அவன் எள்ளளவும் அஞ்சுவதில்லை. உயிரைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு எவராயினும் போர் முனையிற் பின் வாங்குவாராயின், அவர்களைப் பற்றித் தான் இழிவாய் நினைப்பதைத் தன் பார்வையாற் காட்டிவிடுகிறான். பல ருடைய நெஞ்சை இம்முறையில் அவன் புண்படுத்தி யிருக்கின்றான். அவன் நம்மைப் போல் மக்கட் பிறப் பினன் அல்லனென்று சில வேளைகளில் நாங்கள் நினைத்த

தூண்டு. இவ்வாறு நான் பேசுதலால் வேந்தே! அவன் மீதெனக்குப் பற்றுண்டென்று நினைக்கவேண்டாம். அவன் நமது நகரில் வந்திருப்பதை நான் வெறுக்கிறேன்; இங்கு அவன் வந்தபின், பல்வேறு செயல்களாற் குடிகளுடைய உள்ளத்தைக் கவர்ந்து எங்களது பெருமையை அழித்தான்; இந்நகர்க்கு அவன் வந்தது முதல் துன்பமே தவிர இன்பம் நமக்குண்டோ?" என்று விடையிறுத்தான்.

"நம்மனைவரையுஞ் சிறுமைப்படுத்த வந்த அக்காளை மீது உனக்கு எரிச்சலுண்டென்று உன் கூற்றால் விளங்குகிறது! அவ்வெரிச்சலைத் தணித்துக் கொள்வதற்கு ஒரு தருணம் உனக்கு வாய்க்குமாயின் அதை விடாமற் பற்றிடு. இப்பொழுது அவன் கைக்கொண்டிருக்கும் இந்த மதியற்ற முயற்சியிலிருந்து உயிர்தப்பித் திரும்புவானாயின், எந்த வகையிலாயினும், அவனைக் கூற்றுவனுக்கு இரையாக்க நீ உறுதி செய்துகொள். இந்நகரில் வாழ்கின்ற குடிகள் அவனைப் புகழ்ந்து கொண்டாடுகின்றனர். திடீரென்று, அவனை நாம் ஒழித்து விடுவோமாயின், பெரிய கூப்பாடுங் குழப்பமு முண்டாகும். அறிவில் ஏழைகளாகிய இந்நகர மக்கள் எளிதில் நம்பக்கூடிய ஒரு கதையைக் கட்டி அவர்களை ஏமாற்றவேண்டும். நமக்கு வந்த இன்னல்களைக் கண்டு இரங்கித் தெய்வமே இளஞ்சேய்க் கொல்லியின் வடிவமாக வந்ததென்றும், நாமடைந்த தொல்லைகளை நீக்கிய பின், மக்கள் வடிவத்தை அகற்றி அத்தெய்வம் விண்ணுக்கு ஏகிற்றென்றும், ஒரு கதையைக் கட்டிக் கிளப்பி விடுவோமாயின், பொதுமக்கள் அதை விரைவில் நம்பிவிடுவார்கள். உனது கருத்தென்ன!" என்று வேந்தன் தன் மெய்காவலாளர் தலைவனது மனத்தைச் சோதித்துப் பார்த்தான்.

மன்னன் மொழிந்ததைக் கேட்ட தலைவன், அங்ஙனஞ் செய்வது மிகப் பொருத்தமா யிருக்குமென்று கண்சிமிட்டி யுரைத்து, "அவனை யான் விண்ணுலகுக் கேற்றி விடுவேனாயின், அழற்கண்களை யுடைய விலங்கைக் கொன்றதற்காக அவன் பெறவேண்டிய பரிசு எனக்குச் சேரவேண்டுமன்றோ?" என்று மெதுவாக வினவினான். அவன் கூறியது கேட்டு வேந்தன் திருப்தி அடைந்தவனாகி, "இன்றைக்கு இவ்வளவு போதும், நாளைக் காலையில் இங்கு வருவாயாக. இன்னும் இதைப்பற்றி நாம் ஆராயலாம்," என்றியம்பித் தலைவனை அனுப்பிவிட்டான்.

இஃதிவ்வாறாக, அரண்மனையிலிருந்து வெளிப்பட்ட இளஞ்சேய்க் கொல்லி துரகமேறி நெடுந்தூரஞ் சென்றான், புறப்படுவதற்கு முன் அவன் பூங்கோதை யிருக்கும் இடத்தை அணுகி அவளைத் தனியே பார்த்தான். கடற்கொள்ளைக்காரரை வென்று அழித்து, சில நாழிகைகளுக்கு முன்புதான் நகருக்குத் திரும்பிய இளஞ்சேய்க் கொல்லி, மறுபடியுங் கவசமணிந்து படையேந்தி நிற்பதை அவள் கண்டு மிகுந்த வியப்படைந்தாள். நானிலத்தை நடுங்கச் செய்கின்ற நீள் விலங்கை ஒழிக்கத் தான் செல்வதை இளஞ்சேய்க் கொல்லி பூங்கோதைக்கு எடுத்துரைத்தான். இன்னதென்று எவரும் உரைக்கலாகாத வடிவும், கணப்பொழுதில் எதிர்ப்பட்டவர் உயிரை வாங்கும் வலியுமுடைய ஒப்பற்ற வெம்மாவுடன் அடுபோர் விளைக்கச் செல்லுங் கோமகன், தனதாற்றலுக்கு விஞ்சிய ஓர் அருஞ்செயலைக் கைக்கொண்டானென்று பூங்கோதை நெஞ்சில் அச்சந் தோன்றிற்றாயினும் முகமலர்ந்து அவள் இன்சொற் கூறித் தன் காதலனை வழியனுப்பினாள். அவளது இனிய முகத்தையும், இன்சொல்லையுங் கருத்திற் பதித்தவனாய்ச் செலவு பெற்றுவந்த இளஞ்சேய்க்

கொல்லி, அலங்குளைப் புரவிமேலேறித் தாவிச் செல்லும்படி அதைத் தூண்டி வருங்கால், "உரைத்தற்கரிய இனிமையும் அன்பும் நிறைந்த இம்மழைக்கண் மங்கையைப் பெறுதற்கு எத்தகைய துன்பத்தையும் இடரையும் எவரும் பொருட்படுத்த லாகாது," என்ற கருத்துடையவனானன்.

மறுநாட் பொழுது புலர்ந்தது. மெய்காப்பாளர் தலைவன், மன்னனைக்கண்டு உரையாடியபின், நகரவாயிலிற் போய் நின்று, இளஞ்சேய்க் கொல்லியைக் குறித்த செய்தி யாதாயினுங் கிட்டுமோவென்று அறியக் காத்திருந்தான். பற்பல திசைகளிலிருந்து வெவ்வேறு கோலத்துடன் மக்கள் நகரத்திற்கு ஓடிவந்தவண்ணமா யிருந்தனர். முப்பது கல்லுக் கப்பாலுள்ள ஒரு கோவிற் பூசாரியுந் திகிலாற் கண் விரிந்து அறிவழிந்து வந்து சேர்ந்தான். ஆனால், இளஞ்சேய்க் கொல்லியைப்பற்றி ஒன்றும் அவனிடமிருந்து அறியக்கூடாமற் போயிற்று. பழுத்துச் சிவந்த கதிர்களுடன் பகலவன் சாய, இருள்வந்து சூழ்ந்தது. மெய்காப்பாளர் தலைவன் இன்னும் அசையாமல் வாயிலருகே நின்றுகொண்டிருந்தான். இரவி லொரு பகுதியுஞ் சென்றது. இன்னும் அவன் தன்னிடம் விட்டுப் பெயராது நின்றான். இரவுங் கழிந்தது. உதயத்திற்குச் சற்றுமுன் கவசமணிந்து குதிரையில் அமர்ந்த ஒருவன் தோன்றினன். புதுக்கலத்திற் பெய்த நீர் பொசிவதுபோல், அவனுள்ளத்திலிருந்த நற்செய்தி அவன் முகத்தில் விளங்கிற்று; காத்துநின்ற காவலர் தலைவன், வந்தவனை அணுகி நயமொழி பகர்ந்து, "விலங்கைப்பற்றிய செய்தியை ஈண்டு நீ தெரிவிக்கவேண்டாம் என்னோடு வருக," என்றிசைத்து, வேந்தன் அரண்மனைக்கு அவனை அழைத்துச் சென்றான்.

## அ. நெடுவிலங்கை மாய்த்தது

தன் பள்ளியறையில் துயில் செய்துகொண்டிருந்த வேந்தனை அவன் போய் எழுப்பி, "மன்னவ! நற்செய்தி கிட்டிற்று," என்று கூறி, உடன் வந்த கவச மணிந்தவனை நோக்கி, "நீ அறிந்ததை நமது மன்னர்க்கு உரைப்பாயாக," எனப் பணித்தான். அவன் பின் வருமாறு இயம்பினான் :—

"யானும் வேறு இருவரும் கண்முன் பட்டதையெல்லாம் சாம்பராக்குகின்ற மிருகத்தைத் தாக்கும் நோக்கத்துடன் சென்றோம். இப்பொழுது யான் அணிந்திருக்கும் இப்போர்க் கவசத்துடன் யான் புறப்பட்டேன். இக்கவசத்தில் ஒரு மந்திரசத்தி யுண்டென்று என் தந்தை மொழியக் கேட்டிருக்கின்றேன். இரண்டு நாட்களுக்கு முன் நாங்கள் மூவரும் வீட்டைவிட்டுப் புறப்பட்டோம். அந்த மிருகம் போனவிடமெல்லாம் அழிவே தோன்றினமையால், அவ்வழிவையே குறியாகக்கொண்டு தொடர்ந் தேகுங்கால், அஃது ஒரு கோவிலுக்கருகில் ஒளித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தோம்.

"நாங்கள் நடந்துபோய்க் கோவிலைச் சேர்வதன்முன், பொழுது போயிற்று. அங்குள்ள குருக்களைப் பார்த்து எங்களுடைய துணிபை அவருக்கு அறிவித்தோம். அவரோவெனின், தம்முடைய பொருளையெல்லாம் ஒன்றாகத் திரட்டி வைத்துக்கொண்டு மறுநாள் விடியற்காலையில் அவ்விடத்தைவிட் டோடிப்போக ஏற்பாடு செய்து கொண்டிருந்தார். இத்துடன் அமையாது, எங்களையுந் தம்மோடுகூடவே ஓடிவிடும்படி அவர் தூண்டினார். இதற்கு யாங்கள் ஒருப்படவில்லை. அன்றிரவு அவர் கொடுத்த உணவை அருந்தியபின், நாங்கள் மூவருந்

கோவிலின் வடகோடிச் சுவரை யொட்டி அமைக்கப்பட்ட அறையொன்றிற் படுத்துக்கொண்டோம்.

நடுயாமமாவதற்குச் சிறிது முன் உள்ளம் பிளக்கச் செய்யுமொரு கூக்குரல் என் செவியைத் துளைத்தது. நெஞ்சு துடிக்கச் செய்யுமொரு பேரோசையுமுண்டாயிற்று. பெரிய கொல்லனுலையில் விரிந்து விம்முகின்ற துருத்திகளை வைத்தூதுவதுபோன்ற இரைச்சலுங் கிளம்பிற்று. நான் குதித்தெழுந்து நின்றேன். என்னோடு துயில் கொண்ட இருவரி லொருவன் படுத்த இடத்திலேயே மாண்டவன் போல் விழுந்து கிடந்தான்; மற்றொருவன் திகிலால் தடுமாற்றமடைந்து சுற்றிச்சுற்றி யோடிக்கொண்டிருந்தான். நானிருந்த அறையின் சாளரத்தின் வழியாய்ப் பயங்கரமான ஒரு வெள்ளொளி நுழைந்தது. அந்த மிருகம் கோவிலுக்குள் வந்துவிட்டதென்பது இதனால் எனக்கு நன்கு தெரிந்தது.

"இதற்கு முன்னொரு நாளும் நானறியாத பெருமிதம் அவ்வேளையில் எனக்கு வந்தது. கவசத்தை அணிந்து கொண்டு நான் வெளியே கிளம்பினேன். மூச்சை யொடுக்கச் செய்யுமொரு கந்தகப்புகை கோவில் முழுவதும் பரவி யிருந்தது. முழுவதும் உயிர் துறந்தவர்களாகவுங் குற்றுயிருடையவர்களாகவும் எங்குப் பார்த்தாலும் மக்கள் விழுந்து கிடந்தனர். அக்கோவிலிலுள்ள தேவியின் சிலையைக் கட்டிப்பிடித்துக்கொண்டு சிலர் புலம்பினர். அவர்களது நோவையுந் தவிப்பையும், மன்னவ! என்னால் எடுத்துரைக்க முடியாது. வேறு சிலர் மண்டபத்திலுள்ள பெரிய கம்பங்களின் பின் தவழ்ந்து சென்றொளிக்க முயன்றனர். எங் கணும் கனத்த புகை மூடியிருந்ததாயினும், நான் என்

னிடத்தை விட்டுப் பெயர்ந்து முன்னேறி வெளிவாயிலை யடைந்தேன். அப்பொழுது நான் படுத்திருந்த அறையின் சாளரத்தின் வழியாக வந்த வெளிச்சம் மறுபடியுந் தோன்றிற்று. சிறிது நேரம் அது மறைந்து பின்னும் வெளிப்பட்டது.

"சடுதியில் அக்குரூர மிருகத்தை நேரே பார்த்தேன். அதன் விழிகளிரண்டும் பெரிய தீப் பிழம்புகளாய் எரிவதைப் புகையூடே கண்டேன். அதன் தலை பாரமானதாயும், கம்பிகள்போன்ற உரோமங்கள் நிறைந்ததாயு மிருந்தது. சால அகன்றுயர்ந்த அதன் தேகமெங்குங் கொத்துக் கொத்தாய் மயிர் வளர்ந்திருந்தது. ஒரு கணமேனும் அது வாளா விருக்கவில்லை. ஒரு வினாடியில் அது குமுறி மேலெழுந்தது ; மறு வினாடியில் அது முன்னாற் பாய்ந்தது. அதனுருவமும் ஓரளவினதா யிருக்கவில்லை. இமைப் பொழுதில் அதனுருவம் முன்னிருந்ததைவிட இருமடங்கு அதிகமாய்த் தோன்றிற்று. அதன் பக்கங்களிலிருந்து கறுத்து நீண்ட நகங்கள் வளர்ந்த கால்கள் பளிச் சென்று வெளிப்பட்டு, எட்டிய மனிதரைப் பற்றி இழுத்துக் கிழித்து வாயிற் போட்டன. நான் நின்ற இடத்துக்கு அண்மையில் ஆயுதந் தாங்கிய மகனொருவன் விழுந்து கிடந்தான். கோர மிருகத்தை நான் கவனித்துக்கொண்டிருக்கையில் அவன்மேல் ஒரு பலத்த அடி விழு மோசை கேட்டது. மறுவினாடியில் அம்மகன் மிருகத்தின் விரிந்த வாயி லிருப்பதைக் கண்டேன்.

"இக்காட்சியைப் பொறுக்கமுடியாதவனாய் நான் வாளை யுருவி விலங்கின்மேற் சாடப்போகுந்தருவாயில் எனக்கு உடல் சோர்ந்து மயக்கம் மேலிட்டது. என் கையிலிருந்த வாள் நழுவிக் கீழே விழுந்தது. அதைக் குனிந்

தெடுக்க முயன்றேன். எனது கால்கள் தள்ளாடின. அப்பொழுது ஒரு குழலோசை எழும்பிற்று. நான் உணர்வொடுங்கித் தரையில் விழுந்தேன். இதற்குமேல் நடந்தவற்றைச் சொல்கிறேன்; வேந்தே, கேட்டருள்க.

"எத்தனை நாழிகை யான் தன்னறிவின்றிக் கிடந்தேனே அறியேன். இனிய குரலால் ஒருவரென்னைக் கூப்பிட்டு, 'அன்பனே, கவற்சி கொள்ளற்க. தேறுதலடைந்தெழுக. நீ வெல்ல முயன்ற தனி விலங்கு மாண்டு வீழ்ந்தது,' என்று சொன்னது என் செவியிற் பட்டது. என்முன் ஓர் அழகிய நல்ல வீரன் மலர்ந்த முகத்துடன் நின்றான். அவனது காட்சி எனக்களித்த இன்பத்தை யான் என்னென்றுரைப்பேன்! வயதில் இளையவனாய்த் தோன்றினும், எண்ணிறந்த துன்பங்களை வாழ்க்கையில் அனுபவித்து இடையூறுகள் பலவற்றை மேற்கொண்டு, அஞ்சாநெஞ்சமும் தாளாண்மையும் பெற்றவனாய் அவனிருக்கவேண்டுமென்று அவன் முகத்தால் நானறிந்தேன்.

"நள்ளிரவில் அவன் விலங்கிருக்குமிடத்தைத் தேடிக்கொண்டு கோவிலருகில் வந்து கோவிலி லுள்ளவர்களுக்குத் தன் வரவை அறிவிக்கும்பொருட்டுக் குழலையெடுத்து ஊதியதாக அவ்வாண்மகன் மொழிந்தான். இதுவே எனது காதிற்பட்ட குழலோசையாகும். நான் மதிகலங்கிக் கீழே விழுந்த சமயத்தில் அவன் பதுங்கிப் பாய்ந்து விலங்கைக் கொன்று வீழ்த்தியதாகக் கூறினான். ஆயினும், கூற்றினுங் கொடிய அவ்விலங்கைக் கொல்வது எளிதாய் முடிந்ததென்று நீங்கள் கருதவேண்டாம். அம்மாய மாவை மாய்ப்பதற்கு முன் வீரன் அடைந்த காயங்கள் கொஞ்சமல்ல. அவன் தேகத்திற் பலவிடங்களில் இன்னும் இரத்

தம் பெருகி வழிந்துகொண்டிருந்தது. இதற்குட் கங்குல் நீங்கிக் கதிரவனெழும் வேளை அணுகிற்று. நாற்புறமும் நான் சுற்றிப் பார்த்தபோது, இரத்தமயமாயிருந்த உரோமங்களால் மூடுண்ட மிகப் பெரிய திரளொன்றைக் கண்டேன். செதில் நிறைந்த நீண்ட பாம்பு வாலால் அத்திரள் மூடப்பட்டிருந்தது. அப்புலாற் குன்றை என்னாற் கண்ணெடுத்துப் பார்க்க முடியவில்லை. ஆதலின், நான் காயமடைந்த வீரனைக் கவனித்தேன். அவனுடல் எல்லாங் குருதி வடிந்துகொண்டிருந்தது. ஐயோ பாவம்! அவன் உயிர் தப்பிப் பிழைத்தது வியப்பினும் வியப்பே. எவ்வாறு அவன் விலங்கைக் கொன்றானென்பது நினைத்தற்கும் அரிதாகும். உதிரம் பெருகுவதை நிறுத்தி ஒருவாறு அவன் காயங்களை நான் கட்டியபின், நாங்கள் இருவருங் கோவிலைச் சுற்றிவந்து, வேறு யாராயினும் உயிருடனிருக்கிறாரோவென்று பார்த்தோம். என்னுடன்வந்த நண்பரிருவரும் படைப்புண் ஒன்றுமின்றியே செத்துக் கிடந்தனர். அவ்வாறே பிறரும் பிணங்களானமை கண்டோம்.

"செஞ்சுடர்ச் செல்வன் கிழக்கி லெழுந்து பொன்னொளி யெங்கும் வீச, நாங்க ளிருவரும் அங்கு மாண்டு கிடந்த விலங்கைப் பார்வையிடச் சென்றோம். அது விழுந்து கிடந்த இடத்தைச் சுற்றி அதன் கறுத்த குருதி வெள்ளம் பரவியிருந்தது. இவ்வெள்ளத்தின் நடுவில், ஆழ மில்லாக் கடற் பகுதியில் மணலிற் பதிந்த கப்பலைப் போல் மிருகத்தின் பிணம் உயர்ந்து தோன்றிற்று. அதன் விலா வெலும்புகள் புடைத்து வெளிவந்திருப்பதை நாங்கள் கவனித்து, அதன் காரணமென்ன வென்று அறிய அருகிற் சென்றோம். அதன் ஊனுங் கொழுப்பும் உருகிப்போய் வெறுந்தோலும் என்பும் மட்டும் மிகுந்திருப்

பதை உணர்ந்து, வேந்தே! நாங்களிருவரும் அடைந்த வியப்பைச் சொல்லவும் போமோ! அதன் பற்களுந் தாடையிலிருந்து உதிர்ந்து விழுந்து கிடந்தன. காலனினும் அஞ்சத் தக்க அப்பெரு விலங்கு, ஐயகோ! இறந்த நிலையிலும் மெய் விதிர்ப்புண்டாக்குந் தன்மையதா யிருந்தது. அதனுயிரை வாங்கிய சுத்த வீரன் என்னை நோக்கி, 'நல்ல நண்ப, ஒன்றுமில்லாமல் இது சிறிது போதில் உருகிப்போயினும் போகலாம். இதன் தலையையாவது கொய்தெடுத்துக்கொண்டுபோய் வேந்தனுக்குக் காண்பிக்க வேண்டும். இம்மிருகத்தை நீ அச்சமின்றி எதிர்த்துவந்ததை நான் பார்த்தேன். ஆதலின், இப்பொழுது நீ அதன் சிரசை வெட்டி யெடுத்து மன்னன் ஒப்பிலானிடங் கொண்டு காட்டு. காட்டியபின், இம்மிருகத்தினுயிரைப் போக்கியவன் திருவுறை நகரினின்று வந்த திக்கற்றவனென்றும் அவன் தனது பரிசைப்பெற விரைவில் வந்து சேருவானென்றுங் கூறு,' என்று இயம்பினன்.

"அவன் மொழிந்தவாறே நான் மிருகத்தின் சிரசைச் வெட்டியெடுத்து எனது குதிரையின் சேணத்திற் கட்டிக் கொண்டு வீரனிடஞ் செலவுபெற்றுப் புறப்பட்டேன். எனது வழியில் எங்கு நோக்கினும், பெருஞ் சேனை படை யெடுத்து வந்து யாவற்றையும் மிதித்து அழித்துக் கொளுத்தி யிருப்பின், வயலும் வெளியும் என்ன நிலையி லிருக்குமோ அந்த நிலையே என் கண்ணிற் பட்டது. இரவாவதற்குமுன் நானிங்கு வந்து சேர்ந்து விடலாம் என்று நினைத்திருந்தேன். ஆனால், நடுப்பகலாவதற்குமுன் என்னால் தாங்கலாகாத அயர்ச்சி எனக்குண்டாயிற்று. ஆதலின், வழியில் ஓரிடத்திற் குதிரையின் கடிவாளத்தைக் கையிற் பிடித்துக்கொண்டு படுத்துறங்கினேன்.

"தூங்கி யெழுந்து நான் விழித்துப் பார்க்கையில் விண்ணில் திங்கள் எழுந்து வெண்ணொளி வீசிக்கொண் டிருந்தது. நித்திரை செய்கையிற் கையிலிருந்த கடிவாளம் நழுவி விட்டதால் எனது குதிரை சற்று அப்பாற் சென்று மேய்ந்துகொண் டிருந்தது. அதை நான் கூப்பிட, அது விரைந்து என்னிடத்திற்கு வந்தது. அதன் சேணத்தில் நான் கட்டி எடுத்துக்கொண்டு வந்த தலை அங்கில்லாதது கண்டு வியப்புற்று அங்குமிங்குந் தேடிப்பார்த்தேன். எங் கும் அஃது அகப்படவில்லை. கூர்ந்து கவனித்தபோது, குதிரை புல்மேய்ந்து கொண்டுபோன இடமெல்லாஞ் சாம்பலொழுகிக் கிடந்ததை நான் கண்ணுற்றேன். மிரு கத்தின் தலை நீறாகிப் போயிற்றென்பது அதனால் எனக்கு நன்கு தெளிவாயிற்று. வேந்தே! இதன் பிறகு, அடை யாளம் ஒன்றுமின்றி இவண் வந்து விலங்கு மாண்ட தென்று கூறுவதிற் பயனொன்றுமில்லை யென்று எனக்குத் தோன்றிற்று. ஆனால் அதை வெட்டி வீழ்த்திய வீரன் எங்ஙனமாயினும் நான் அரண்மனைக்குச் சென்று விலங்கி னழிவை விளம்பரப் படுத்த வேண்டுமென்று சொன்ன தைக் கருத்திற் கொண்டு நான் இங்குவந்தேன். நான் கூறிய இவ்வரலாற்றை நீங்கள் நம்பாவிடினுங் குற்றமில்லை. ஏனெனின், அம்மிருகம் மாண்டொழிந்த தென்பதை விரைவில் நீங்கள் நன்குணர்ந்து கொள்வீர்கள்."

இது கேட்ட வேந்தனுங் காவலர் தலைவனும் ஒரு வரை யொருவர் பார்த்து விழித்தனர். விலங் கொழிந்த தால் இருவரும் மகிழ்ந்தனராயினும் அவர்கள் உள்ளத்தில் அமைதி பிறக்கவில்லை. எங்ஙனமாயினும் இளஞ்சேய்க் கொல்லி மிருகத்திற்கு இரையாய்ப் போவானென்று எதிர் பார்த்த வேந்தன், அவ்வீரன் உயிரைப் போக்குவதற்கு

வேறு சூழ்ச்சிகள் இனிச் செய்ய வேண்டுமேயென்பதை நினைத்து வருந்தினன்.

இந்த நிலையில் மெய்காவலர் தலைவன், "இவ்வரிய செயலைச் செய்து முடித்தவன் இளஞ்சேய்க் கொல்லி தானென்பது உறுதி. நாடும் நகரமும் இப்பேருதவியின் பொருட்டு இளஞ்சேய்க் கொல்லிக்கு நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றன. இனி, பிறர் கண்டு அஞ்சியதுபோல் அஞ்சாமல், உயிர் கொடுத்தாயினும் புகழ் பெறக் கருதி, விலங்கை வென்ற வெந்திறலோன் பெற வேண்டிய பரிசைக் கொடுப்பது நமது கடனு யிருக்கிறது," என்று மிக அகமகிழ்ந்து பேசுகின்றவன்போல மொழிந்தான்.

இதற்குள் வேந்தனும் தன் விலவிலத்த நெஞ்சை யொருவாறு தேற்றிக்கொண்டு இளஞ்சேய்க் கொல்லியின் ஏவலால் தன்முன் வந்த மகனை நோக்கி, "நீ கூறியவை நம்பத் தகாதவையென்று விலக்குதற்குக் காரணமொன்று மில்லை. இந்நற்செய்தியை நீ கொணர்ந்ததன்பொருட்டு ஏற்ற சன்மானம் உனக்கு அளிக்க விரும்புகின்றேன். நீ விழைவதை யெடுத்துச் சொல்" என்று நவில, அவன் எத்துணையும் மயக்கமின்றி, "விலங்கொழித்த வீரரிற் சிறந்தோனுக்குப் பணிவிடைசெய்யும் பாக்கியம் எனக்கு வேண்டும்," என்று பதிலிறுத்தான்.

ஒப்பிலான் அவனைப் பார்த்து, "அம்மிருகத்தைப்பற்றிய பல உண்மைகளை நீ மொழிந்தாயாயினும் அதன் வடிவத்தைப்பற்றி நீ தெளிவா யொன்றுங் கூறவில்லை யென்று நான் நினைக்கின்றேன். அதனுருவத்தையும் அளவையுங் குறித்து உனக்குத் தெரிந்தவற்றைக் கூறுவாயாக," என்றான். இக்கட்டளையைக் கேட்ட அம்மகன், நேற்றிரவெல்

லாம் அதன் உருவம் என் மனத்தைவிட் டகலாதென்று நினைத்து வருந்தினேன். ஆயினும் இப்பொழுது அதன் வடிவத்தை என் மனத்தில் அமைக்கவும் என்னாற் கூட வில்லை. வெவ்வேறான பல மிருகங்களி னுருவங்களை நான் கண்டேனென்று நினைக்கின்றேன். இறந்தபின் எங்ஙனம் அதனுடல் உருகிப்போய் மறைந்ததோ, அங்ஙனமே அதைப்பற்றிய நினைவுஞ் சிதைந்து போகின்றது. எத்துணை முயன்றாலும் அதன் வடிவத்தை நான் தெளிவாய் எடுத்துரைக்க இயலாதவனா யிருக்கின்றேன். எனினும் அது மாண்டு மறைந்ததென்று நான் திட்டமாய்ச் சொல்கிறேன்," என்று சிறிது திகைப்புடன் சொன்னான்.

## கூ. கொல்லியைக் கோதை காத்தது

இங்ஙனம் பேச்சு நிகழ்ந்துகொண்டிருக்கையில், பெரு மகிழ்ச்சியின் ஆரவாரம் அரண்மனைக்கு வெளியே கிளம் பிற்று. இளஞ்சேய்க் கொல்லி நகரத்தில் வந்து சேர்ந்ததை அறிந்து உவகை பூத்த உளத்தினராய் யாவரும் அவனை எதிர்கொண் டழைத்து, ஆரவாரத்துடன் பெருந்திரளாய் அரண்மனை நோக்கி அவனுடன் வந்தார்கள். ஆவலுடன் அவர்கள் கேட்ட பல வினாக்களுக்கு இளஞ்சேய்க்கொல்லி விடை யளித்துக்கொண் டிருக்கையில், மெய்காப்பாளர் தலைவன் அங்கு வந்து, வேந்தன் எவ்வளவு நன்றி யுடைய வனாயிருந்தான் என்பதைத் தெரிவித்தான். சிறிது பொழுதில் மன்னனும் அவண் வந்தான். பூங்கோதையும் அவனுடன் தோன்றினாள். அங்கிருந்த எல்லோருக்கு முன்பாக, "யாம் செய்த உடன்பாட்டிற் கிணங்க, எமதருமைச் செல்வியாகிய பூங்கோதையை, ஈழநாட்டிற்கு வந்த பேரிடரைத் தொலைத்த வீரன் இளஞ்சேய்க் கொல்லிக்கு நாளை மணஞ் செய்து கொடுப்போம். நாளை முதல் எம்முடன்

இந்நாட்டிற்கு இளஞ்சேய்க் கொல்லி வேந்தனு யிருப்பான்," என்று ஒப்பிலான் சாற்றினுன். இதைச் செவியேற்ற பூங்கோதை கழிபேரின்பமெய்திக் கண்ணீர் சொரிந்தாள். அவளது இனிய முகத்தை உற்று நோக்கிய நகரத்து மாந்தர், அவள் கண்களிற் காதலொளி வீசுவதைக் கண்டு நனிமகிழ்ந்து, "கோதை வாழ்க; கொல்லி வாழ்க," என்று ஆர்ப்பரித்தனர்.

இக்காட்சி ஒரு கனுப்போல் இளஞ்சேய்க் கொல்லிக்குத் தோன்றிற்று. ஒப்பிலான் அளித்த விலையில்லா வெகுமதிக்காக அவன் நன்றி செலுத்திப் பேசுங்கால், அவனது குரல் அவனுக்கே வேருெரு குரலாய்க் கேட்டது. இம்முறையில் அவன் இன்பத்தி லாழ்ந்தானுயினும், அவனுள்ளத்தில் ஓர் அமைதி யின்மையுந் தீங்கு நேரப்போகிறதென்ற உணர்ச்சியும் பிறந்தன. கடல்போற் குழுமியிருந்த மக்களை அவன் நாற்புறமுஞ் சுற்றிப் பார்த்து அவர்களுடைய மலர்ந்த முகங்களைப்போல் வேந்தனது முகமில்லாதிருப்பதைக் கண்டு, ஒப்பிலானும் அவன் மெய்காப்பாளர் தலைவனும் வெளிக்கு ஒரு வகையாய் நடித்து, நயவஞ்சகஞ் செய்யப் போகிருர்களென்று அவன் நன்குணர்ந்தான். இன்னும் அவனுயிருக்கு ஆபத்திருந்தது போலும்!

வெஞ்சுடர்ப் பரிதி பொன்னெளி சிந்தி மேற்றிசையடைந்தான். கங்குலும் வந்தது. மறுநாட் காலையில், பிறந்த இடம் விட்டு வந்து, இடர் பல கடந்து, இடுக்கணுற்று, எவரும் வியக்கும் வகையில் எல்லாவற்றையும் மேற்கொண்ட இளஞ்சேய்க் கொல்லிக்கும், குளிர்ந்த பார்வையும் கனிந்த சொல்லும் இனிய உளமுமுடைய அழகுமிகுந்த பூங்கோதைக்கும், திருமணம் நிகழ வேண்டும்.

அன்றிரவு பூங்கோதை துயில் கொள்ளாது விழித்திருந்தாள். பெறற்கரிய தன் காதலனுக்கு யாதோ தீங்கு நேரப் போகிறதென்ற உணர்ச்சி அவளுக்கும் பிறந்தது. எவ்வளவு முயன்றும் இந்நினைவை அகற்ற அவளாற்கூடவில்லை. நடுச்சாமமாயிற்று. யாது செய்வதென் றறியாமல் அவள் அரண்மனை நடுவிலிருந்த அன்னபூரணி கோவிலுக்குப் போய்த் தேவியை வணங்கித் தன் காதலனைக் காக்குமாறு வழிபாடு செய்யலாமென்று விரைந்து சென்றாள்.

வழியில் எவர் விழியிலும் அகப்படாமற் சென்ற பூங்கோதை கோயிலை அணுகியபோது ஆயுதங்களினொலியையும், யாரோ சிலர் மெல்ல நடக்கு மோசையையுங் கேட்டாள். ஐயுறுவதற்குரிய இக் காட்சியைக் கண்ட அளவிற் பூங்கோதை ஒரு தூணருகிலோடி மறைந்து கொண்டாள். ஒரு வினாடியில் அருகிலுள்ள தோப்பிலிருந்து ஆயுதபாணியாகிய ஒருவன் நிலவுகாய்ந்த வெளியைக் கடந்து கோயிலுக்குள் ஓடினான். இவனுக்குப் பின் மற்றொருவன் அங்ஙனமே தோன்றி மறைந்தான். இப்படி யொருவர் பின் ஒருவராய்ப் பதின்மர் கோவிலுக்குட் சென்றனர். இவர்கள் செய்யத் துணிந்தது யாதா யிருப்பினும் அது தீதா இருக்கவேண்டுமென்று பூங்கோதை கருதி, கொஞ்ச நேரமானபின் மெதுவாக நடந்து கோவிற் கதவை நெருங்கிப் படைகள் கூடுமிடத்திலுள்ள சிற்றிடையின் வழியாய் உள்ளே பார்த்தாள்.

உள்ளிருந்த பதின்மர் ஒருவரை யொருவர் புனை பெயர்களாற் கூப்பிட்டுப் பேசிக்கொண்டார்கள். இதற்குப் பின் அவர்களுடைய தலைவன், "எல்லோருமொன்று கூடிவிட்டோம்; இனி நமது வேலையைச் சுணக்கமின்றி முடிக்க வேண்டும். அரண்மனையிலுள்ள தந்தத்தால் அலங்கரிக்கப் பட்ட அறையில் இளஞ்சேய்க் கொல்லி இன்று துயில்கின்

ருன். அவனருகிலிருந்து வேலை செய்வோர்க்கெல்லாம் உணவொடு கலந்து ஒரு மருந்து கொடுக்கப்பட் டிருக்கிறது. அவர்கள் பிணங்கள்போல் விழுந்து கிடப்பார்கள். இந்த இளஞ்சேய்க் கொல்லி எத்துணைப் பெரிய வீரனுயினும் கையிற் படையில்லாமல் நம்மை வென்றுவிட முடியாது. அவன் துயில்கொள்ளும்போது அவனை நாம் எளிதிற் கொன்றுவிடலாம். எவராலும் வெல்ல முடியாதவனென்று பெயர்பெற்ற இந்த இராசகுமாரனை நாம் கொன்றபின், நம்மிலொருவன் அவன் உடலை எடுத்துக் கொண்டு போய்ப் படகிலேற்றிக் கடலிற் கல்லைக் கட்டி ஆழ்த்திவிட வேண்டும். கொலை செய்த இரத்தக்கறையொன்றும் இல்லாதபடி நாம் பார்த்துக்கொள்ள வேண்டும். வெளிச்சமானவுடன் கலியாணத்தை நடத்துவதற்காக மாப்பிள்ளையைத் தேடுவார்கள். அப்பொழுது நாம், 'அவர் மறைந்தார்; அவரைத் தேடுவதில் பயனென்றுமில்லை. நமது இன்னலை நீக்க வந்த சாலப் பெரிய வீரர் தேவர்களிலொருவரேயன்றி, மக்களிலொருவரல்லர். நமது துன்பங்களை அகற்றியபின் அவர் விண்ணுலகுக்கு ஏகிஞர்,' என்று சொல்வோம். இளஞ்சேய்க் கொல்லியைப்பற்றி இவ்வாறு சொன்னுல் எல்லோரும் நம்பிக்கொள்வார்கள். ஒருவேளை அவர்கள் அவன் பொருட்டு ஒரு கோவிலெழுப்பிக் கும்பிடினுங் கும்பிடுவார்கள்,'' என்று நகைப்புடன் கூறினுன்.

மறைந்து நின்று இவற்றைக் கேட்ட பூங்கோதை மெய்ம்மறந்து நின்ருள். ஆயினும் அவள் சிறிது போழ்திற் தனது கடமை இது வென்றறிந்து, கோவிலை விட்டு விரைவில் நீங்கி வந்த அரசகுமரியும் ஓடாத வேகத்துடன் இளஞ்சேய்க் கொல்லி கண்வளர்ந்த இடத்திற்கு வந்து சேர்ந்தாள். அங்கிருந்த வேலைக்காரர் அனைவருங் கடுமயக்

கத்தி விருந்ததால் ஒருவரையும் நோக்காமல் அவள் அறைக்குட் புகுந்து சுவரிற் பலவிடங்களில் தொங்கிக் கொண்டிருந்த தன் காதலனுடைய தலைச்சிரா, மார்க் கவசம், வாள், ஈட்டி முதலியவற்றைச் சேர்த்து அவன் பக்கத்தில் வைத்து, அவனைத் தட்டி யெழுப்பி, "படை யேந்திய பகைவர் உம்மைக் கொல்ல வருகின்றனர். எழுந்து ஆயுதமணிந்து அவரை யெதிர்கொள்க," என்று காதிலோதி மறைந்தான். அவனுந் தன் தூக்கம் நீங்கித் தன்னுயுதங்களை அணிந்து கொண்டான். திங்களொளியிற் காற்று வீசி, மரங்களின் இலைகளை அசையச் செய்யு மொலியுடன் மக்கள் அடிவைத்து நடக்குஞ் சத்தமும் இளஞ்சேய்க் கொல்லியின் செவியிற்பட்டது. அறையின் கதவை வெளியிலிருந்து ஒருவர் திறப்பதை அவன் உள் ளிருந்து பார்த்துக்கொண்டு நின்றான். உருவின ஒரு வாளினொளி வீசிற்று. கதவு நன்றாய்த் திறந்தவுடன் இளஞ்சேய்க் கொல்லி ஆரவாரஞ் செய்து தன் ஈட்டியைச் செலுத்தினன். முதலில் வந்து நின்றவனின் மார்பை அஃது ஊடுருவிச் சென்றது. அவன் வாயிற்படிக்கு அப்பால் விழுந்து உயிர்விட்டான்.

சூழ்ச்சி செய்து இளஞ்சேய்க் கொல்லியைக் கொல்ல வந்தவர்களின் நகைப்புத் திகைப்பாக மாறிற்று. சிறிவந்த வர்கள் ஆறியொடுங்கினர். தலைவன் மாண்டு விழுந்ததைக் கண்டவர்க ளெல்லோரும் பதுங்கி யொளித்துக் கொண்ட னர். இளஞ்சேய்க் கொல்லி மறுபடியும் ஆரவாரஞ் செய்து தன் வாளை யோங்கினன். அக்கணம் ஓர் எக்கா ளத்தொனி யெழுந்தது. அரசனுக்கு ஆபத்து நேர்ந்த காலத்தில் மாத்திரம் இந்த எக்காளம் ஊதப்படுவது வழக் கம். கொலையாளிகள் இதைக் கேட்டு நடுங்கி நாலா பக்கங்களிலும் சிதறியோடிப் போனார்கள்.

தன்னறையின் வாயிலில், மாண்டுகிடந்த கவச மணிந்த போர்வீரனை இளஞ்சேய்க் கொல்லி பார்த்து, அவன் அரசனுடைய மெய்காப்பாளர் தலைவனென்றறிந்து, புன்முறுவல் செய்தான். மறுபடியும் எக்காளத் தொனி கிளம்பிற்று. நூற்றுக்கணக்காய் மக்களோடிவந்து, "இளஞ்சேய்க் கொல்லி எங்கே? எங்கே?" என்று கதறினார்கள். அவன் தன்னறையைக் கடந்து வெளியேவந்து, நகரத்து நன்மக்களைக் கண்டு பேசப் போகுமுன் மெல்லிய பட்டுடை யுடுத்த நங்கை யொருத்தி எதிர்ப்பட்டு, "எல்லோரும் உம்மைத் தேடிக் கூப்பிடுகின்றனர்; கோமகனே! நீர் அவர்களிடஞ் சென்று உமக்கொரு தீங்கும் விளையவில்லையென்று சொல்லும் காதலா! தம் பொருட்டு நான் எக்காளத்தை யெடுத்தூதினேன். எனினும், எவருதவியுமின்றி நீரே உமது உயிர் கவரவந்த மக்கள் கையிலிருந்து தப்பிக்கொண்டீர். எல்லாம் இறைவன் செயல்," என்றிசைத்தாள். இவ்வாறு மொழிந்தபின் பூங்கோதை அந்தப்புரஞ் சென்றாள். மாந்தரெல்லாருந் திரண்டுவந்து தங்களருமைக் கோமகனாகிய இளஞ்சேய்க் கொல்லிக்கு நேர்ந்ததைத் தாங்கள் அறியவேண்டுமென்று இரைச்சலிட்டனர். இளஞ்சேய்க் கொல்லியைக்கண்டவுடன் அவர்கள் அச்சந் தவிர்ந்து அமைதி யடைந்தனர். அவன் அவர்கள்முன் வந்து நின்று, "சில அறிவிழந்த போர்வீரர் செய்த அமளியைத் தவிர வேறொன்றும் நிகழவில்லை. அவர்களில் ஒருவன் என் அறைமுன் உயிர் நீத்துக் கிடக்கின்றான். நீவிர் வீணாய்க் கலங்காதீர். இல்லமேகி இனிது துயில்கொள்க," என்று நயந்துரைப்ப, எல்லோரும் அரண்மனையைவிட்டுத் தங்கள் தங்களுறைவிடஞ் சென்றனர். இளஞ்சேய்க் கொல்லி மறுமுறை தன்னறைக்கு வருமுன் மெய்காப்பாளர் தலைவனின் பிணம் அங்கிருந் தகற்றப்பட்டது.

வைகறையளவும் இளஞ்சேய்க் கொல்லி பூங்கோதையைப் பற்றிய நினைவில் ஆழ்ந்திருந்தான்.

## கo. அரசுரிமை பெற்றுக் கொல்லி கோதையை மணந்தது

காலையில் இளஞ்சேய்க் கொல்லி முடிமன்னர் உடை தரித்து ஒப்பிலானுடன் அரசு புரிய அரியாசனமீது அமர்ந்தான். அண்மையிலுஞ் சேய்மையிலுமுள்ள பலநாடுகளிலும் நகரங்களிலுமிருந்து வணிகருங் கடலோடிகளும் அவன்முன் வந்து பணிந்து, கடலிலும் நிலத்திலுந் தங்கள் வியாபாரத்திற்கு இருந்த இடையூறனைத்தையும் நீக்கிய பேருதவியின்பொருட்டுப் பொன்னும் மணியும் அவனுக்குக் காணிக்கையாக வைத்து வாழ்த்தினார்கள். இவர்களது வணக்கத்தையும், காணிக்கையையும் ஏற்றுக் கொள்வதில் இளஞ்சேய்க் கொல்லி கருத்தாயிருந்ததும், ஒப்பிலான்வந்து தன்னுடன் அமரவில்லையென்பதுபற்றிக் கவலை கொள்ளலானான். இறுதியில் ஒரு பணியாள் சித்திரப் பேழையொன்றைக் கையிலேந்திவந்தான். சிறுமலை நாட்டரசனிடமிருந்து ஒப்பிலானுக்குத் தான் கொணர்ந்து கொடுத்த பேழை அஃது என்பதை இளஞ்சேய்க் கொல்லி உடனே யறிந்தான்.

ஏவலாளன் வந்து இளஞ்சேய்க் கொல்லியை வணங்கி, "மன்னவா! இப்பெட்டியிலுள்ள கடிதத்தைத் தாங்கள் படித்துப் பார்க்கவேண்டும். படித்தபின், அதிற் குறித்திருக்கும் ஒப்பந்தத்தின்படி செய்ய முயன்றவன் குற்றமுடையவனா என்று சீர்தூக்கிப் பார்க்கவேண்டும். இங்ஙனம் வேந்தர் ஒப்பிலானார் பிரார்த்திக்கின்றார். இஃதன்றி, நேற்று நடந்த உடன்படிக்கைக் கேற்ப,

எங்கள் வேந்தனின் செல்வியை மணந்து ஈழத்திற் பாதியை ஆண்டு, ஈண்டு நிகழ்ந்த சிற்சில வெறுக்கத் தக்கனவாகிய செயல்களைத் தாங்கள் மறந்துவிடுதற் கிசைவீர்களோ என்றறிய விரும்புகின்றார்,'' என்று மொழிந்தான்.

இளஞ்சேய்க் கொல்லி சித்திரப் பெட்டியைத் திறந்து பார்த்தான். ஒப்பிலானுக்குச் சிறுமலை நாட்டு வரம்பனெழுதிய கடிதம் அதற்குள் ளிருந்தது. பின்வருமாறு அது தீட்டப்பட்டிருந்தது :

" ஈழக்கோன் ஒப்பிலானுக் கெழுதுவது :—

ஒரு காலத்தில் உம்மைக் கொல்லச் சீறிவந்த சிங்கங்களினின்றும் உம்மைத் தப்புவித்தேன். இதற்குக் கைம்மாறாக நீர் எனக்குச் செய்ய வாக்களித்தவை இரண்டு. முதலாவது, நும் முதல்மகளை எனக்கு மணம் புரிந்து கொடுக்க இசைந்தீர். அக்காலத்தில் இதை நான் பெறுதற்கரிய வரமென்று கருதினேன். ஆனால் அதுபற்றி ஈண்டு நான் பேசப் புகவில்லை. இரண்டாவது, நான் எப்பொழுதாவது கேட்கும் எதையுஞ் செய்ய நீர் வாக்களித்தீர். இவ்வாக்கு நிறைவேற்ற வேண்டிய காலம் இப்பொழுது வந்தது. நான் சொல்லுமாறு நீர் விரைவில் செய்ய வேண்டும். இப்பேழையை உம்மிடங் கொண்டு வருகிற திருவுறை நகரத்து இளஞ்சேய்க் கொல்லி சிறிது நாள் என் பெரிய நண்பனாய்த் திகழ்ந்தான். அவனது அகவொழுக்கம் மிக இழிவானதென்பதை நான் பின்னரிற் கண்டேன். அவன் இயற்ற முயன்ற பழிச் செயலின் பொருட்டு அவனுயிரை வாங்கினால் அன்றி என் மனம் ஆறாது. எனது நாட்டில் அவனைக் கொல்வதற்குத் தடைகள் பல உள. ஆதலின், ஈழ

நாட்டில் அவன் உயிரை உடனே போக்கவேண்டும். செய்யவேண்டியதைத் தாமதமின்றிச் செய்க. எற்றிற்கெனின் நெடுநாட் செல்லுமாயின், என்னைப்போலவே நீரும் இவ்விளஞ்சேய்க் கொல்லியை வெறுப்பதற்குப் பதிலாக விரும்பிக் கொண்டாட, நேரினும் நேரும் பகைவரை எதிர்க்கும்படி விடுத்தாயினும் வேறு வகையிலாயினும் உடனே அவனைக் கொலை செய்யவேண்டும். இது நிறைவேறிய பின்நீர் சுகம் பெறுவீராக."

இக்கடிதத்தை நன்கு நோக்கியபின், "தான் செய்த வாக்குறுதியை நிறைவேற்றும் பொருட்டு வேந்தன் ஒப்பிலான் நடந்துகொண்ட வகையைப்பற்றி யான் வருந்தவில்லை. வரம்பனுக்காக வேந்தன் எனக்கு நயவஞ்சகஞ் செய்ய வேண்டியதாயிறறு. எல்லாப் பிழைகளையும் பொறுத்து விட்டேன். இனி நான் பெறவேண்டியதை எனக்கு அளிக்குமாறு வேந்தனுக்குச் சொல்," என்று இளஞ்சேய்க் கொல்லி வேலைக்காரனுக்குரைத்தான்.

இளஞ்சேய்க் கொல்லி கூறியதை வேந்தன் ஒப்பிலான் அறிந்தபோது, அவன் அயர்வு நீங்கி யெழுந்து இன்னிசைக் கருவிகள் முழங்கத் தன் மகள் பூங்கோதையுடன் அரசவைக்கு வந்தான். மணக்கோலத்துடன் விளங்கிய பூக்கோதையி னழகு கொல்லியினுள்ளத்தைக் கொள்ளைகொண்டது. சிறிது போழ்திற் கலியாணம் நிறைவேறிற்று. ஈழ நாட்டில் அரசுபுரியும் உரிமை பெற்ற இளஞ்சேய்க் கொல்லி, வரம்பன் மனைவியால் தானடைந்த துன்பங்கள் யாவற்றையும் மறந்து, பூங்கோதையின் மாறாத நேசமாகிய மதிப்பரிய செல்வத்தில் இன்புற்றிருந்தான்.